www.padippakam.com

# புதிய கோடாங்கி

அக்டோபர்
2005
ரூ.15



பர்னாட் பாத்திமா
நேர்காணல்



படிப்பகம்


கோ-ஆப்டெக்ஸ் காலத்திற்கேற்ற புதுமையுடனும்
பாரம்பரியப் பெருமையுடனும்...
1935 முதல் மிகச் சிறந்த இரகங்களை
உங்களுக்காகவே வழங்குகிறது.
★ காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள்
★ சேலம் தரமிக்க பட்டு சேலைகள்
★ ஆரணி தரமிக்க பட்டு சேலைகள்
★ கோயமுத்தூர் உயர்ரக பருத்தி சேலைகள்
★ உறையூர் பருத்தி சேலைகள்
★ சேலம் உயர்ரக பருத்தி சேலைகள்
★ மதுரை சுங்கடி புடவைகள்
★ சென்னிமலை ஏற்றுமதி தரம் வாய்ந்த படுக்கை விரிப்புகள்
★ கோவை ஏற்றுமதி தரம் வாய்ந்த எரலை துண்டுகள் (டவல்கள்)
★ குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி தரம் வாய்ந்த லுங்கிகள்
★ தாத்தையங்கார்பேட்டை வேட்டிகள்
NATURAL SILK
கோ-ஆப்டெக்ஸ்
Visit us at: www.tn.gov.in
www.cooptex.com
இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.
வாருங்கள். பாருங்கள். வாங்குங்கள் - முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.
ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள்
10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்
படுகின்றன. டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை,
திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.
தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

www.padippakam.com



புதிய
கோடாங்கி

மலர் 5 - இதழ் 4
அக்டோபர் 2005

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு ஓவியம்*
வி. ஜி. அந்தானி

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம் - ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ்: **US $ 2**

ஆண்டுக் கட்டணம்
**US $ 20**

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 10,000/-
முழுப்பக்கம் ரூ. 20,000/-
பின்/உள் அட்டை ரூ. 50,000/-

*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டார்
கே.கே. நகர்
சென்னை 600078
Mobile : 98404 - 49204
puthiakodangi@yahoo.co.in

**சு**மார் 50 வருட காலமாக தலித் மக்களுக்கான சேவையில் ஈடுபட்டிருந்த எல். இளையபெருமாள் அவர்கள் மறைந்தார். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான தலித் மக்கள் திரண்டு வந்து காட்டுமன்னார்கோவிலில் வைக்கப்பட்டிருந்த அவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். பல அரசியல் தலைவர்கள் வந்திருந்து நல்லடக்கம் செய்தனர். தலித் மக்களின் உரிமைக்காக போராடியவரும், நாடாளுமன்றம் [illegible] தலித் குரலை ஒலித்தவரும், தொடர்ந்து கல்விப் பணியில் ஈடுபட்டவ[illegible] அவருக்கு புதிய கோடாங்கி தனது வீர வணக்கத்தைச் செலுத்துகிறது. இதழில் காட்டுமன்னார்கோவில் ஆறுமுகம், எல். இளையபெருமாள் [illegible] சிறப்புக் கட்டுரையை எழுதுகின்றார்.

தலித் நில உரிமை பிரச்சாரங்களை சில அரசியல் இய[illegible] தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. அதைத் தொகுத்து வழ[illegible] சென்ற இதழில் கோரிக்கை வைத்திருந்தோம். நமது கோரிக்கை[illegible] தி. ஸ்டாலின், கடலூர் பகுதியில் மேற்கொண்டுள்ள செயல்பா[illegible] தொகுத்து எழுதியுள்ளார் இவ்விதழில். குறுகிய காலத்தில் 450 கிரா[illegible] (விவரங்கள் இல்லை) பிரச்சாரம் நடந்திருப்பது வியப்படைய வை[illegible]

தொடர்ந்து மாநில தலித் நில உரிமை போராட்டக் குழு [illegible] உரிமை கோரிக்கை தினத்தை டிசம்பர் 12-ஆம் தேதி அனுசரி[illegible] செய்துள்ளது. இதன்படி 21 மாவட்டங்களில் நில உரிமை கோ[illegible] அடிப்படையில் மக்களைத் திரட்டும் பணி நடந்து வருகிறது. இது[illegible] மாவட்டங்களில் மாவட்ட அளவிலான கூட்டம் நடைபெற்[illegible] அடுத்தடுத்து ஏனைய மாவட்டங்களிலும் கூட்டம் நடைபெற உ[illegible] தலித் நிலவுரிமைக் குழு அறிவித்துள்ளது. தலித் நில உரிமை கோரி[illegible] வலியுறுத்தி அனைத்து இயக்கங்களும் இதில் பங்கு கொள்ள [illegible] எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

அக்டோபர் 15-ஆம் தேதி திண்டிவனத்தில் இருளர் பாதுகாப்பு சங்கம் முன்னின்று நடத்தும் பழங்குடி மக்களின் நில உரிமை மாநாடு நடக்கவிருக்கிறது. 36 பழங்குடிகளின் பிரதிநிதிகள் திரளாகக் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். தலித் ஆர்வலர்கள் இதில் பங்குகொள்ள வேண்டும் என புதிய கோடாங்கி அழைப்பு விடுக்கின்றது.

நமது நிலவுரிமை விழிப்புணர்வு செயல்பாடுகள் ஏற்படுத்திய தாக்கம் விடுதலைச் சிறுத்தைகளையும் ஈர்த்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அக்டோபர் 10 அன்று அவர்கள் நடத்தவிருக்கும் மாநாடு ஒருநாள் விஷயமாக இருந்துவிடாமல் தொடர் நடவடிக்கையாக இருந்தால் நல்லது.

உரிய நேரத்தில் வந்து சேராததால், சிவகாமியின் 'வரலாற்றில் யூகங்கள்' என்ற தொடரை பிரசுரிக்க இயலவில்லை. அடுத்த இதழில் அது இடம்பெறும்.

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...


| | | |
|---|---|---|
| ஜனநாயகத்தின் இரட்டை அச்சுறுத்தல்கள் | ஐ.ஜா.ம. இன்பகுமார் | 3 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் | சந்திரன் | 5 |
| பர்னாட் பாத்திமாவுடன் ஒரு நேர்காணல் | | 8 |
| வரலாற்றை முன்மொழிதல் - தொடர் | ஸ்டாலின் ராஜாங்கம் | 12 |
| மருவாதி - சிறுகதை | நெல்லை வசந்தன் | 16 |
| ராவ்சாகிப் ரெட்டமலை சீனிவாசன் | | 19 |
| கரிசனம் - சிறுகதை | எ.மு. ராதா | 21 |
| தச்சூர் சாதித் தேரோட்டம் - தொடர் | கௌதம சன்னா | 27 |
| காங்கீரிட் காடுகளில் - கவிதை | புதிய மாதவி | 32 |
| ஒற்றைப் பனை - கவிதை | பாக்கி உமாநாத் | 32 |
| தலித்துகளுக்குள் மூளும் உட்சாதி மோதல் | ப. முருகன் | 33 |
| வரலாறு யாரை விடுதலை செய்யும் - தொடர் | அ. ராமசாமி | 35 |
| சாமிக்கண்ணு என்றொரு மனிதன் - சிறுகதை | விழி. பா. இதயவேந்தன் | 38 |
| நிலப்போராட்டக் களத்திலிருந்து | தி. ஸ்டாலின் | 45 |
| மாறுவேசம் - தொடர்கதை | சந்திரன் | 47 |
| மண்பாரம் - நூல் மதிப்புரை | சிவகாமி | 55 |
| போதை - சிறுகதை | கலாமோகன் | 56 |
| கேள்வி பதில் | முனிமா | 57 |
| அம்பட்டன் - அன்றைய மருத்துவர் | கோ. ரகுபதி | 59 |
| கணிதம் நம் உடைமை - தொடர் | சந்திரன் | 62 |

www.padippakam.com

# ஜனநாயகத்தின் இரட்டை அச்சுறுத்தல்கள்

ஐ.ஜா.ம. இன்பகுமார்
inbame@yahoo.co.in

*உண்மையான ஜனநாயக அமைப்பாக மாற்றுவதற்கான திறன் இருக்கின்றது என்ற நம்பிக்கையே மக்களை இங்கு செயல்பட வைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் இங்கு 'மாற்றம்' என்பது அரசை ஜனநாயக அமைப்பாக மட்டும் மாற்றினால் போதாது. சமூக - கலாச்சார அமைப்புகளும் ஜனநாயக அமைப்பாக மாற்றப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு இல்லை என்பதே இன்றைய நிர்வாணமான உண்மையாகும்.*

'உலகமயமாதல்' என்ற பொருளாதார கோட்பாடும், உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற 'கலாச்சார தேசியம்' (Cultural Nationalism) என்கின்ற கலாச்சார கோட்பாடும், ஜனநாயகத்தின் கருவறுக்கும் ஆயுதங்களாக காணப்படுகின்றன. குறிப்பாக, நமது நாட்டில் கலாச்சார தேசியம் என்கின்ற கலாச்சார கோட்பாடானது, 'இந்துத்துவா' என்ற பெயரில் பழமைவாதிகளால் மதம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டதின் விளைவாக கோவை மதக் கலவரம், மும்பை மதக் கலவரம் கோத்ரா மதக் கலவரமென இத்துத்துவா பயங்கரவாதம் வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.

### இந்துத்துவாவின் செயல்திட்டம்

இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்துத்துவா என்ற கோட்பாடு ஆதிக்க சாதி என்ற திமிர், மேட்டுக்குடி என்ற வர்க்க பேதம், ஆணாதிக்கத்தின் உச்சம், அதிகாரம் கையிலிருக்கிறது என்கின்ற ஆணவப்போக்கு ஆகியவற்றின் உள்ளடக்கமாகும். சமூக-பொருளாதார-அரசியல்-கலாச்சார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களான தலித்துகள் மற்றும் பழங்குடியினர், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோருக்கு எதிராகவே இந்துத்துவா கொள்கையின் செயல்திட்டம் அமைந்துள்ளது.

இந்துத்துவாவின் வரலாற்று புள்ளிவிவரங்களாக வெண்மணி, முதுகளத்தூர், கொடியங்குளம், புளியங்குடி, காரணை, மேலவளவு, சிறுவாச்சி, பொன்னூர், கூத்திரம்பாக்கம், சங்கரலிங்கபுரம், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்களம், கொட்டக்கச்சியேந்தல், புலவன்பாடி, புலிவலம், காளப்பட்டி, வடுகசாத்து என்பதோடு, கீழ்குமாரமங்கலம் விக்டோரியா, மேலப்பாலையூர் வசந்தா, கோ. ஆதனூர் பொன்னருவி, சிறகிழந்த நல்லூர் மாலதி, செல்லஞ்சேரி சிவகாமி, கருக்கை அம்சவல்லி, செங்கமேடு காந்திமதி, விழப்பள்ளம் நிர்மலா, சிதம்பரம் பத்மினி, திண்டிவனம் ரீட்டா மேரி என தமிழக அளவிலும், 1971-இல் சந்த்வாருபாஸ்பூரில் 14 பழங்குடியினர் கொல்லப்பட்டதும், 1977-இல் பெல்ச்சியில் தலித்துகள் படுகொலை, 1996-இல் போஜ்பூர் மாவட்டம் பதானி தோலா கிராமத்தில் 22 தலித்துகள் படுகொலை, 1997-இல் ஜெகனாபாத் மாவட்டம் லக்ஷ் மன்பூர் பாதே கிராமத்தில் 68 தலித்துகள் படுகொலை, மணிப்பூர் பெண்களின் நிர்வாணப் போராட்டம், நாக்பூர் பெண்கள் நீதிமன்றத்தின் நீதிக் கூண்டில் நடத்திய கொலை, உத்திரப்பிரதேசம் முசாபர் நகர் மாவட்டம் சர்த்தாவல் கிராமத்தில் இம்ரானாவுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதி, அரியானா மாநிலத்தில் காவல் நிலையத்திற்கு அருகே அடித்துக் கொல்லப்பட்ட அய்ந்து தலித்துகள் என இத்துத்துவாவின் பெயரால் நடைபெறும் 'வன்முறை ஜனநாயகம்' தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

### இந்துத்துவாவின் தன்மை

இந்துத்துவா என்பது கலாச்சார தேசியம் என்ற பெயரில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக சொல்லப்பட்டாலும், பெரும்பான்மை என்ற பெயரில் சிறுபான்மை மக்களின் சுதந்திரம் கேள்விக்குட்படுத்தப்படுவது தொடர்வது மட்டுமின்றி, அவர்களை அச்சுறுத்தும் நிலையிலேயே வைத்திருப்பதோடு அடித்தட்டு மக்களின் ஜனநாயக பங்கேற்பையும் விலக்குகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை கலாச்சார தேசியம் மதத்தோடு பலமான இணைப்பைக் கொண்டிருக்கிறதே ஒழிய, உலகலாவிய முதலீட்டை (capital investment) எதிர்ப்ப தில்லை. இக்கொள்கை மேற்கத்திய பெண்களைப் போலன்றி நவீன பெண்கள் என்ற தத்துவத்தை அடிப் படையாகக்கொண்டு பெண்களை வீட்டிலேயே இருத் தலை அனுமதிப்பதில்லை.

### குடிமைச் சமுதாயம்

இன்றைய சூழலில் ஒருவருடைய வருமானத்தில், குடும்பத்தை நடத்துவது என்பது இயலாத காரியம் என்பதால், ஆணும் பெண்ணும் சேர்ந்து வருவாய் ஈட்ட வேண்டிய அவசியத்தை உருவாக்குகின்றது. ஒரு பெண் தனியாக, ஆணின் துணையின்றி, வேலைக்குச் சென்று வருவாய் ஈட்டுகின்ற நிலை இருந்தாலும், கலாச்சார தேசி யம் பெண்களை வீட்டிலேயும், வேலை செய்யும்


படிப்பகம்

www.padippakam.com

இடங் களிலேயும் அடக்கி வைக்க செய்யும். எனவே, குடிமை சமுதாயமே (civic communities) அனைத்து பிரச்சினை களுக்கும் தீர்வாகும்.

குடிமை சமுதாயம் என்பது அரசை குறிப்ப தாகாது. ஆனால் கம்பெனி மற்றும் அனைத்து தனிப் பட்ட செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும். அதா வது, எந்த ஒரு இடத்தில் பாலியல், சாதி, வகுப்பு, வர்க்கம் ஆகி யவை உருவாக்கப்படுகின்றதோ அல்லது விருத்தி செய் யப்படுகின்றதோ அத்தனை பிரிவுகளையும் உள் ளடக் கியதே குடிமை சமுதாயம்.

**ஒருங்கிணைக்கப்படும் அதிகாரமும், நிதி அதிகாரமும்**

குடிமை சமுதாயத்தில் 'அரசு' அதிகாரமிக்க ஒரு அமைப்பாகும். குடிமை சமுதாயத்தில் உழைப்பிற்கு 'ஒருங்கிணைக்கப்படும் அதிகாரமும்', அரசுக்கு 'நிதி அதிகாரமும்' காணப்படுகிறது. ஒரு நிறுவனத்தில் முதல் (capital) அதிகரிக்கின்றபொழுது அரசு பலவீன மடை கிறது. எனவே, உழைப்பு ஒருங்கிணைக் கப்பட முடி யாமல் போய்விடுகிறது. இதனால், இன்றைய அமைப்பில் 'சவால்' என்று எதுவும் இருப்பதில்லை. நிறுவனங்கள் அதிகாரத்தைப் பெறுகின்றபொழுது, அவை அரசையே கட்டுப்படுத்துகின்றன. அரசும் நிறுவனமும் இணைந்து செயல்படுகின்றபொழுது, உழைப் பாளிகளுடைய ஒருங் கிணைப்பு என்பது கானல் நீராகின்றது. எனவே, நிறு வனங்கள் சமூகத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றது. நுகர்வு கலாச்சாரத்தின் ஆதிக்கத்தால், நிறுவனங்கள் முக்கிய பங்கை வகிப்பதற்கு உலகமயமாதல் அடித்தள மாய் விளங்குகின்றது.

**இந்துத்துவாவும், உலகமயமாதலும்**

நமது இந்திய சூழலில் உலகமயமாதலோ இந்துத் துவாவை ஆதரிக்கின்றது (விஷ்வ இந்து பரிஷத் அமைப்பு (VHP), ஐ.நா. சபையில் உள்ள பொருளாதார, சமூகக் கவுன்சிலில் (ECOSOC) தன்னை ஒரு அரசு சாரா நிறுவன மாக (NGO) பதிவு செய்யும்படி விண்ணப்பித்து இருப்பது இங்கு நினைவில் கொள்ள வேண்டிய விசயம்) என்ற அபாயகரமான உண்மையை பெரும்பான்மையான செயல்பாட்டாளர்கள் (Activists) உணராமல் இருக்கின் றார்களோ என்ற அய்யப்பாடு எழுகின்றது. உலகமய மாதல் என்பது, கலாச்சார மற்றும் சமூகக் காரணிகளை சார்ந்திருப்பதால் சாதி மற்றும் பாலியல் வேறுபாடு களை ஆதரிக்கின்றது. எனவே, இந்துத்துவா என்ற கலாச் சார கோட்பாடும், உலகமயமாதல் என்ற புதிய பொருளா தார கோட்பாடும் ஒன்றையொன்று பலப்படுத்திக் கொள்கின்றன.

இந்துத்துவா என்ற கலாச்சார கோட்பாடும், உலக மயமாதல் என்ற பொருளாதார கோட்பாடும் ஒன்றை யொன்று சார்ந்து செயல்படும் நிலையில் இவை வர்ணா சிரம தத்துவத்தை ஆதரிப்பதாகவே இவற்றின் செயல் பாடுகளும் அமைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

**சமூக - அரசியல் - பொருளாதார - கலாச்சார அமைப்புகளில் ஜனநாயகம்**

குடிமை செயல்பாடு அதன் அரசியல் இணைப்பை சார்ந்தே அமையும். மக்கள் தங்கள் தலையெழுத்தை மக்களாலேயே கட்டுப்படுத்தச் செய்வதே ஜனநாயகத் தின் அரசுக்கு இருக்கின்ற மிகப்பெரிய சவால் ஆகும். மாற்றத்தைக்கொண்டு வருவதற்கான தகுதி அரசுக்கு இருந்தால் மட்டுமே மக்களை செயல்பட வைக்க முடி யும். வறுமையில் இருந்தபோதிலும், இன்னும் நாம் ஜன நாயகத்தில் இருக்கின்றோம் (ஜனநாயகத்தை தலித் பார்வையில் கேள்விக்குட்படுத்த வேண்டும் என்பதும் இன்றைய அவசியமும், தேவையும் கூட.) ஜனநாயக செயல்பாட்டிற்காக அரசை மாற்றுவது என்பது மக்கள் முன் இருக்கின்ற மிகப்பெரிய சவால். எனவே, உண்மை யான ஜனநாயக அமைப்பாக மாற்றுவதற்கான திறன் இருக்கின்றது என்ற நம்பிக்கையே மக்களை இங்கு செயல்பட வைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் இங்கு 'மாற்றம்' என்பது அரசை ஜனநாயக அமைப் பாக மட்டும் மாற்றினால் போதாது. சமூக - கலாச்சார அமைப்புகளும் ஜனநாயக அமைப்பாக மாற்றப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு இல்லை என்பதே இன்றைய நிர்வாணமான உண்மையாகும்.

> **நீதிக்குத்தலை வணங்க மறுப்பவர்கள் ஆட்சிக்கு வருகின்ற அபாயம் உண்டு. ஒருவேளை, நீதிக்கு தலை வணங்க மறுப்பவர் கையில் அதிகாரம் சென்றால் என்ன நடக்கும்? மீண்டும் ஒரு புரட்சி வெடிக்கும் வரை அராஜகம் நடக்கும்.**

சமூக - கலாச்சார அமைப்புகள் ஜனநாயக அமைப் பாக மாற்றப்படும்போது மட்டுமே பொருளாதார அமைப்புகளும் ஜனநாயக அமைப்பாக மாற்றப்படும். இந்நிலை ஏற்பட்டால் மட்டுமே மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் என்பது சாத்தியமாகும். இங்கு அரசியல் அமைப்புகளில் பெயருக்காகவாவது ஜனநாயகம் இருக்கிறது. ஆனால், சமூக - கலாச்சார - பொருளாதார அமைப்புகள் ஜனநாயகமாக்கப்படவில்லை. எனவே, அரசியல் ஜனநாயகத்திற்கு மானபங்கம் ஏற்படுகின்றது.

**மர வளர்ச்சியா? அல்லது புல் வளர்ச்சியா**
**(Vertical Growth or Horizontal Growth)**

ஜனநாயகம் மட்டுமே நம்மை நடத்துகின்ற சரி யான வழி என்றபோதிலும், நாம் 'முதலாளி - அடிமை' உறவை விட்டுவிட்டு குடிமக்களாக செயல்பட வேண் டும். மர வளர்ச்சி அல்லது செங்குத்தான வளர்ச்சியை (vertical growth) புல் வளர்ச்சி அல்லது பரவல் வளர்ச்சியை (horizontal growth) முன்னிலைப்படுத்துவதே இன்றைய தேவையாகும். உலகமயமாதல், இனவெறி, இந்துத்துவா ஆகிய முக்கிய பிரச்சினைகளை அலட்சியப்படுத்திவிடக் கூடாது. ஆனால் அதே நேரத்தில், ஜனநாயக அரசியலின் நிலைப்படுத்துதலில் நாம் அதிக கவனம் செலுத்த வேண் டும். ஏனென்றால், நீதிக்கு தலை வணங்க மறுப்பவர்கள் ஆட்சிக்கு வருகின்ற அபாயம் உண்டு. ஒருவேளை, நீதிக்கு தலை வணங்க மறுப்பவர் கையில் அதிகாரம் சென்றால் என்ன நடக்கும்? மீண்டும் ஒரு புரட்சி வெடிக் கும் வரை அராஜகம் நடக்கும்.

■



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் அறியாத அம்பேத்கர்




**அரசியலில் ஓர் அணியின் வெற்றி அதன் எதிர் அணியின் தோல்வியாக வெளிப்படுகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் தங்களின் தோல்வி ஒட்டுமொத்த மக்க ளின் தோல்வியாகவே முடியும். எனவே நீங்கள் எதிலும், எக் காலத்திலும் வெற்றிபெற வணங்கி வாழ்த்துகிறேன்.**

## 25

சந்திரன்

nalanda1956@yahoo.co.in

இது அம்பேத்கரின் ஆங்கில நூல்களைத் தொகுத்த திரு. வசந்த் மூன் அம்பேத்கருக்கு பிறந்த நாள் வாழ்த்தில் அனுப்பிய செய்தி.

அந்த வாழ்த்தின் முதற்பகுதியை புரிந்து கொள்ள முடிகிறது. இரண்டாம் பகுதி முரணாகத் தோன்று கிறதே என்று திரு. நானக் சந்த் ரட்டு அவர்களிடம் கேட்ட போது, “அரசியல் என்பது வியாபாரம். அதில் ஓர் அணியின் பலம் எதிரணியின் பலவீனமாகக் கொள் ளப்படுகிறது. அம்பேத்கர் மக்களுக்கானவர். அவர் இயற்கையைப் போல அனைவருக்கும் உவப்பானவர். வான் பொய்த்தால் அனைவருக்கும் நட்டம்தானே. விளைச்சல் அற்றுப்போனால் எல்லோருக்கும் துன்பம் என்பதே முடிவு. இதற்கு உதாரணமாக அம்பேத்கரின் அரசியல் சாசன சட்டத்தை எடுத்துக் கொள்ளலாம். மொழிவழி மாகாணங்கள், அவரின் அரசியல் அணுகு முறைகள் என்று அனைத்தையும் குறிப்பிடலாம். பவுத் தம் இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு” என்றார்.

வசந்த் மூன் அம்பேத்கர் நூல்களை தொகுத்தவர் மட்டுமல்ல. அம்பேத்கரின் கருத்துக்கள் வெளிவர அதி கார மையங்கள் தடையாக இருந்தபோது, அதைக் கண்டு அச்சம் கொள்ளாது தன் கடமையை உறுதியாகச் செய்த வர். அவர்போல உள்ள ஓரிருவருக்கும் இக் கட்டுரையின் முகப்பு பொருந்தும். (காண்க - கணிதம் நம் உடைமை, இந்த இதழில்)

அம்பேத்கர் மிகச் சிறந்த பொருளாதார நிபுணர் என்ற உண்மை வெகுமக்கள் யாவரும் அறிந்ததே. அவரின் பொருளாதார கருத்துக்கள் வெகுமக்களை சென்றடையவில்லை என்பது படித்தவர்கள் செய்யத் தவறிய கடமையாக கொள்ளப்பட வேண்டும்.

மொஹர் என்ற நாணய வகை இந்தியாவில் ஆங்கி லேயரின் வருகைக்கு முந்தைய பணப் புழக்கமாக இருந் தது. பிரிட்டிசார் இந்த மொஹர் நாணயத்திற்குப் பதிலாக சவரன் என்ற தங்கம் மதிப்பிலான பணத்தை அறிமுகப் படுத்த முயற்சிகள் மேற்கொண்டனர்.

இதன் மூலம் மொஹர் என்ற நாணயத்தின் புழக் கத்தை தடுக்கவும், ஆங்கிலேயரின் நாணயம் வழக்கில் வரவும் ஏற்பாடு செய்யும் வகையில் ஒரு கல்லில் இரண்டு பறவைகளை குறி வைத்தனர். இந்தியாவில் சவரன் அறிமுகப்படுத்தப்பட்டால் சர்வதேச அளவில் நாணய ஓர்மை ஏற்படும் வகையில் இந்தியாவின் பொருளா தாரம் அணுகப்படும் என்பது ஆங்கிலேயரின் எதிர் பார்ப்பாக இருந்தது. மொஹர் என்ற நாணயப் பணம் நாடு முழுமையும் பரவிய வழக்கத்தில் இல்லாமல் இருந்ததால், சவரனின் நுழைவு கூடுதல் பயன் தரும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. இருப்பினும் சில மாதங்களுக்கு மொஹர் என்ற பணத்தை தொடர்ந்த நாணயமாக வழக்கில் வைக்கவும் ஆங்கில அரசு தயா ராக உள்ளதாக அறிவித்தது. உலக நாடுகள் அனைத்தும் ஏதேனும் ஒரு வகையில் தங்கத்தை தங்களது நாணயப் பணமாக நடைமுறையில் உள்ளபோது, இங்கு மட்டும் சவரன் என்ற தங்கத்துடன் நேரடித் தொடர்பு கொண்ட பணம் புழக்கத்தில் வருவது கூடுதல் பலன் தரும் என்று ஆங்கில அரசு மேலும் ஒரு வாதத்தை முன்வைத்தது. இந்த வாதங்கள் எல்லாம் 1846-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து பெருகிக்கொண்டே வந்தது.

சர் சார்லஸ் ட்ரேவேல்யன் கூறுகையில், “பல ஆண்டுகளாக பல்வேறு நாணயங்களை புழக்கத்தில் கொண்டிருந்த மக்களை ஒருமைத் தன்மை வாய்ந்த நாணயத்தை நாடு முழுமையும் ஏற்றுக்கொள்ளச் செய் வது சற்று கடினமாக இருந்தாலும், அந்த நுழையும் புதிய நாணயம் தங்கத்துடன் நேரடி விகிதமாக இருப்பின் சாத்தியப்படும். இது இன்றியமையாததாக இருப்ப தால் தீர்வு சாத்தியம்” என்றார்.

இந்த நாட்டின் நாணயம் உள்நாட்டிலேயே தயாரிக்க வேண்டி வருவதால்., நாணயத்தில் ஏதேனும் ஒரு நிலையையாவது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வ தென முடிவு எட்டப்பட்டது. (Print என்ற சொல் எழுத் துக்களை அச்சடிக்க பயன்படுத்தப்படும் சொல்; Mint என்ற சொல் நாணயம்/பணம் அச்சடிக்கப் பயன்படும்


படிப்பகம்

www.padippakam.com

சொல், தங்க சாலை எனப்படும் mint-இல் நாணயத்தின் ஒரு நிலை உற்பத்தி செய்யப்பட்டதாக அம்பேத்கரின் 'தங்கத்தின் நிலைத்த தன்மை' என்ற கட்டுரையிலிருந்து அறிகிறோம்.)

மாறாக தங்கம் என்பதை உலோகங்களின் அளவை எனக் கொண்டு நாணயங்கள் தயாரித்தால்,

(i) தங்கத்தின் நிலை மாறாதபோது, வெள்ளியின் நிலை வீழ்ச்சியடையும் நிலை;

(ii) வெள்ளியின் விலை மாறாதபோது, தங்கத்தின் விலை உயரும் நிலை;

(iii) தங்கத்தின் விலை உயரும்போது, வெள்ளியின் விலை வீழ்ச்சியடையும் நிலை;

(iv) இரண்டு உலோகங்களின் (தங்கம் மற்றும் வெள்ளி) விலையும் உயர்ந்து, இதில் தங்கத்தின் விலை வெள்ளியின் விலையைவிட கூடுதலாக உயரும் நிலை;

(v) இரண்டு உலோகங்களின் (தங்கம் மற்றும் வெள்ளி) விலையும் சரிந்து இதில் வெள்ளியின் விலை தங்கத்தின் விலையைவிட கூடுதலாக சரியும் நிலை;

என ஐந்து வகை நிலைகளை அம்பேத்கர் ஆய்வு செய்துள்ளார். இந்த ஆய்வின் முடிவாக தங்கம் பிரிதொரு உலோகமான வெள்ளியின் மீது எவ்விதத்திலும் பொருத்தி, நாணயத்தை பழக்கத்தில் செயல்படுத்துவதென்பது சாத்தியமில்லாத நிலையாகவே அவர் காண்கிறார்.

இதை எளிய உதாரணம் ஒன்றின் மூலம் காணலாம்.

A: 3, 4, 5, 6, 7, 8, . . . .

↓ ↓ ↓ ↓ ↓ ↓ ↓ ↓ ↓ ↓

B: 8, 9, 10, 11, 12, 13, . . . .

ANB: 5, 5, 5, 5, 5, 5, . . . .

இங்கு A & B என்ற இரண்டு தொடர்களில் A-யானது 3, 4, 5, ...... என்று செல்கிறது. B-யானது 8, 9, 10, ...... என்று செல்கிறது. A-க்கும், B-க்கும் இடையான பேதம் (பொது வித்தியாசம்) (N) இங்கு பொதுவாகவே உள்ளது. அதாவது ANB = 5 என தொடர்ச்சியாக உள்ளது. A-யின் தொடர் எவ்வளவு நீண்டாலும், B-யின் இணை உறுப்பின் மீதுள்ள பேதம் பொதுமையான எண்ணாக 5 என்றே உள்ளது. எனவே A-யையும், B-யையும் இணைக்கும் விகிதம் சாத்தியமாக உள்ளது. மாறாக,

C: 1, 2, 3, 4, 5, . . . . .

D: 5, 10, 15, 20, 25, . . . . .

CND: 4, 8, 12, 16, 20, . . . . .

என்ற வகையில் C-க்கும், D-க்கும் உள்ள பேதம் பொதுமையாக இல்லை. இவை 4, 18, 12, ...... என்ற மாறும் எண்களாக அதாவது இது ஒரு தொடராக உள்ளது. இந்த தொடருக்கு பொது வித்தியாசம் இல்லாவிடினும், பேதத்திலும் ஓர் இசைவு உள்ளது. அதாவது பேதங்கள் 4 என்ற எண்ணை கூட்டி பெறப்படுகின்றன.

மூன்றாம் உதாரணமாக,

E: 1, 2, 3, 4, 5, 6, 7, . . . . .

F: 1, 4, 9, 16, 25, 36, 49, . . . . .

ENF: 0, 2, 6, 12, 20, 30, 42, . . . . .

இங்கு பேதம் மிகுந்து சென்றாலும், பேதத்தில் வெளிப்படையான இசைவு இல்லை. காரணம் E & F ஆகியன தங்களுக்குள் வர்க சார்பைக் கொண்டுள்ளன.

இந்த மூன்றாம் வகை சார்பைப் போல பல காரணிகளை தங்கம் பிற உலோகங்களுடன் கொண்டுள்ளது. துவக்கத்தில் ஒரு கிலோ தங்கத்திற்கு ஒரு கிலோ வெள்ளி ஈடாக; தங்கத்தின் முழுமைப் பயன் அறியா காலம் கொண்டிருக்கலாம். அன்று தங்கம் தன் மதிப்பில் நாணயங்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம். காலம் பரவ பரவ தங்கம் தன் பயனை நீட்டித்து, பிற உலோகங்களுடன் பன்முக காரணிகளை இணைத்துக் கொண்டுள்ளதால், தங்க நாணயம் என்பது சாத்தியமற்றதாக மாறியதாக அம்பேத்கர் ஆய்வு செய்துள்ளார்.

எனவே பிற உலோகங்களின் சரிவு அதன் இணை உலோகங்களின் உயர்வாக மாறும்; மாறாக தங்கத்தின் சரிவு என்பது ஒட்டுமொத்த உலோகங்களின் சரிவாக வெளிப்படுகிறது.

தங்கம் பல்வேறு காரணிகளை தன்னுடன் பன்முக வடிவில் பொருத்திக் கொண்டுள்ளது. இருப்பினும் வெகுமக்களின் பயன்பாட்டில் வெள்ளியும் ஒரு தவிர்க்க இயலாத அங்கமாக இருப்பதாலும், தங்கம் தனித்து நாணயமாக அறிவிக்கப்பட்டால், அதன் தட்டுப்பாடு நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்து விடும். அதன் மிகுதி, அது கிடைக்கும் பகுதியை செல்வம் ஓங்கிய பகுதியாக மாற்றி விடும். இந்த உலோக முரணை கணக்கில் கொண்டு, தங்கம், வெள்ளி ஆகிய இரண்டு உலோகங்களை ஏதேனும் ஒரு விகிதத்தில இணைத்து பொருளாதாரத்தை நிறுவ அமெரிக்கா மூன்று சர்வதேச ஆய்வு அரங்கங்களை நடத்தியது. முதலாவதாக 1878-இல் பாரிஸில் இவ்வாய்வரங்கம் நிகழ்த்தப்பட்டது. இதற்கான அழைப்பை அமெரிக்க அரசே முன்மொழிந்தது. 1881-ஆம் ஆண்டு பிரான்ஸ் மற்றும் அமெரிக்க அரசுகள் இணைந்து பாரிஸில் இரண்டாம் சர்வ தேசிய ஆய்வரங்கம் நிகழ்த்தியது. இறுதியாக (அம்பேத்கர் இந்த கட்டுரையினை தயார் செய்த 1910-ஆம் ஆண்டு வரை) புருஸ்ஸல்ஸ்-இல் 1892-ஆம் ஆண்டு அமெரிக்க அரசு கூட்டியது.

இதன் முடிவு எவ்வித பலனையும் தோற்றுவிக்கவில்லை. ஆனால் வெள்ளியையும் நாணய மதிப்பீட்டில் பயன்படுத்த வேண்டும் என்ற வாதம் மட்டுமே முன்வைக்கப்பட்டது. அதற்கான வழிமுறைகள் மற்றும் சட்ட திட்டங்கள் உறுதியாக நிறைவு செய்யப்படவில்லை.

தங்கத்தின் நிலையைக் கொண்டு பிற காரணிகளையும் நாட்டின் பொருளாதாரத்தில் தங்கம் வகிக்கும் பங்கினையும் பற்றிய அம்பேத்கரின் கருத்துக்களை வருங்கட்டுரையில் காண்போம். - தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

க. கலாமோகன், *பாரீஸ்.*

# வளவு

வேலி கோடிக்கும் முற்றத்திற்கும் இடையில்.

அவளது முற்றம்.

கோடி எனது.

முற்றத்தில் சில தென்னைகள். அவைகளின் சில தலைகள் கோடிவரை.

கோடிக்குள் பனைகளும் இல்லை, தென்னைகளும்.

ஓர் சாணிக்கும்பம்.

பசுக்களினதும் நாம்பன்களினதும் எச்சங்களை நான் சேகரித்தேன். இந்த எச்சங்கள் ரூபிகளாக மாறியது.

பசுவும் நாம்பனும்.

எனது அம்மம்மா வீட்டில் நாம்பன்கள் இருந்தன.

சில பசுக்களும்.

எங்களது பசுக்களை நாங்கள் வெளியே கொண்டு சென்றதில்லை. பசுக்களிற்காக எங்கள் வீட்டுக் கதவு திறக்கப்பட்டதுண்டு. ஆம்! எங்களிடம் நாம்பன்கள் இருந்தன.

பசுவின் நடையில் பெண்மையையும் நாம்பனின் பார்வையில் ஆண்மையையும் நான் வாசித்தேன்.

ஆண்மைக்குள் பெண்மை. பெண்மைக்குள் ஆண்மை.

இலையான்கள்.

அவைகளது யோனியும் லிங்கமும் பெரிய கண் களிற்குக் கண்ணாமூச்சி விடுவன.

2. இலையான்கள் ஒட்டிக்கொண்டிருந்தபோது அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கின்றாய்."

"பார்!"

நான் இலையான்களைப் பார்த்தேன்.

"என்னைப் பார்!"

நான் அவளைப் பார்த்தேன்.

காமம் அவளது விழிகளை உடைத்துக்கொண் டிருந்தது.

அவள் முற்றத்தில்.

நான் கோடிக்குள்.

அவளது முற்றத்தின் தென்னையில் இருந்து ஓர் தேங்காய் விழுந்தது. எனது தலையில் அல்ல. கோடிக்குள்.

"காயப்பட்டாயா?"

"இல்லை. தேங்காய் உடையவில்லை."

"உரி"

நான் உரிக்கத் தொடங்கினேன். எனது நகம் கிழிந்தது.

"இரத்தம்!" நான் கத்தினேன்.

"நான் கன்னி!"

வேலி உடைந்து அவள் எனது கோடிக்குள் விழுந்தாள்.

வளவை நனைத்தது இரத்தம்.


## தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

நாள் : 5.10.2005
நேரம் : காலை 10 மணி முதல் 1 மணி வரை
இடம் : எசனை கிராமம்,
பெரம்பலூர் மாவட்டம்

நிகழ்ச்சி ஏற்பாடு
**ராமர்**
தொடர்புக்கு
04328-278798

நாள் : 5.10.2005
நேரம் : மாலை 3 மணி முதல் 6 மணி வரை
இடம் : லாடபுரம் கிராமம்,
பெரம்பலூர் மாவட்டம்.

நிகழ்ச்சி ஏற்பாடு
**மோகன் ராஜ்**
தொடர்புக்கு
04328-278798




படிப்பகம்

www.padippakam.com

நேர்காணல்

தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம்

# பர்னாட் பாத்திமா

○○

அப்போது எனது வயது 20.
திருச்சபையை எதிர்த்தேன்.
ஆலய வழிபாட்டின்போது, பிரசங்க
நேரத்தின்போது ஆலய வாசலில் நின்று
கோஷமிட்டோம். ஆலய வழிபாட்டினை
நடத்தவிடாமல் நிலப் பிரச்சினைக்காக
போராடினோம். என்னை இழுத்துச் சென்று
ஒரு குடிசையில் வைத்து பூட்டி விட்டனர். அந்த
குடிசையை கொளுத்துவதற்கு முயற்சித்தனர்.

○○



**உங்களைப் பற்றிச் சொல்வதானால்.....**

வேலூர் மாவட்டம், அரக்கோணம் அருகில் உள்ள பெருமூச்சி என்கிற கிராமத்தில் ஒரு ஏழை ஆசிரியர் குடும்பத்தில் தலித் பெண்ணாகப் பிறந்து படித்து வளர்ந்தவள். 8-ஆம் வகுப்பு வரை அரக்கோணத்திலும் பின்பு 11-ஆம் வகுப்பு வரை சென்னையில் உள்ள நார்த்துவிக் மகளிர் பள்ளியிலும் படித்து இறுதி ஆண்டு முடித்தேன். 1972-இல் இருந்து 1977-ஆம் ஆண்டு வரை கிராமப் பகுதிகளில் கிராம அரிசன முன்னேற்ற சங்கத்தை துவக்கி தலித் மக்கள் மத்தியில் பணியாற்றினேன். 1978-ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று மேற்படிப்பை முடித்தேன். 1980-ஆம் ஆண்டு திரும்பி வந்து தனியாக கிராம கல்வி வளர்ச்சி முன்னேற்றச் சங்கத்தை (SRED) அரக்கோணம் பகுதியில் சமூக ஆர்வலர்களோடு இணைந்து ஆரம்பித்தேன்.

எண்பதாம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் ஆராய்ச்சியாளராக ஒரு வருடம் படித்து மூன்றாம் உலகப் பெண்களின் நிலையை குறித்து எனது ஆராய்ச்சி கட்டுரையை எழுதினேன். பின்பு நான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட அமைப்பு அதனை கட்டுரையாக வெளியிட்டது.

பள்ளியில் படிக்கும்போது கைவிளக்கு ஏந்திய காரிகை (Lady with the Lamp) என்று என்னை கேலி செய்வார்கள். இரவு நேரங்களில் நான் தங்கியுள்ள விடுதியிலிருந்து நோயுற்ற மாணவிகள் தங்கியிருக்கும் மற்றொரு கட்டிடத்திற்கு (sick room) தனியாக செல்வேன். நோயுற்றவர்களுக்கு உதவிகள் செய்வேன். கல்லூரியில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் சேரிப் பகுதிகளுக் குச் சென்று அங்கு பிள்ளைகளோடு எனது நேரத்தை செலவிடுவேன்.

பள்ளி முதல் கல்லூரி வரை அரசு உதவித்தொகை பெற்று படித்தேன். எனக்கு பொதுப் பணியில் உற்சாகத்தை ஊட்டியது எனது தந்தை. அவரும் கிராமப்புறங்களில் ஆசிரியராக பணியாற்றி பல பொதுப் பிரச்சினைகளை தீர்த்து வைத்தவர். அவருக்குப் பின் எனது 5-ஆம் வகுப்பு ஆசிரியை 5-ஆம் வகுப்பு படிக்கும்போதே சமூக சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் பிறந்தது. பள்ளி முடித்ததும் எனது வீட்டைச் சுற்றியுள்ள தலித் குழந்தைகள், குறிப்பாக தலித்துகளாலேயே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கிராம மக்களின் துணிகளை துவைக்கும் குடும்பங்களில் உள்ள தலித் குழந்தைகளை எங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார வைத்து பாடம் கற்பிப்பேன்.

நான் ஆறாம் வகுப்பு படிக்கும்போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எனது கிராமத்தில் ஆசிரியர் ஒருவர் வீட்டில் வீட்டுப் பணிகளைச் செய்த, எனக்கு சமமான வயதுடைய சிறுமி அவளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை தினந்தோறும் என்னோடு பகிர்ந்து கொள்வாள். நாங்கள் இருவரும் தினந்தோறும் கிணற்றில் தண்ணீர் எடுக்கச் செல்கையில் தனக்கு நிகழும் கொடுமைகளை அழுதுகொண்டே கூறுவாள். தனக்கு சூடு வைத்ததையும் காட்டுவாள். அடித்ததை காட்டுவாள். சாப்பாடு போடாமல் பசியோடு இருப்பதைக் கூறி அழுததை இன்றளவும் என்னால் மறக்க முடியாது. அப்பிரச்சினை உச்சகட்டத்திற்கு சென்றபோது எனது தந்தையிடம் வந்து ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்தே தீரவேண்டும் என்று கேட்டேன். அவர் என்னை எங்கள் வீட்டின் பின்புறம் உள்ள திண்ணையில் உட்கார வைத்து, காவல் நிலையத்திற்கு மனு எழுதச் சொல்லிக் கொடுத்து காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தார். அப்பொழுது எனக்கு வயது 11. ஏற்கனவே கூறியதுபோல் அரக்கோணத்தில் உள்ள தூய அந்திரேயர் பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்து வந்தேன். காலை பள்ளிக்கு செல்வதற்கு முன் காவல் நிலையத்திற்குள் புத்தகப் பையோடு மனு எடுத்துக் கொண்டு நுழையும் போது எழுந்த அங்குள்ளவர்களின் ஆச்சரியப் பார்வையை இன்றும் என்னால் மறக்க முடியாது. அன்று மாலை வீடு திரும்பியதும் எங்கள் தெருவில் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர். எங்கள் கிராமத்திற்குள்



படிப்பகம்

www.padippakam.com

**நிலங்களை ஆதிக்க வகுப்பினர் கைப்பற்றிவிட்டதாலேயே அவைகளை நம்முடையதல்ல என்று கைவிட முடியாது. நிலம், அதிகாரம், அடையாளம் எனும் பொருத்தத்தை புரிந்துகொள்ள வேண்டும். இப்படியே பண்டிதரால் 'இந்திரர் தேச சரிதம்' சரியான வரலாறாக எழுத முடிகிறது.**

வற்றைப் பற்றியும் பேசுவது என்பது தலித்துகளுக்கு நேர்ந்து விடுகிறது. இதுவே ஒருவகையில் தனித்த அம்சமாகவும், மறுவகையில் சிக்கலானதாகவும் இருக்கிறது. எல்லாவற்றைப் பற்றியும் பேசியாக வேண்டியிருக்கிறது. இந்திய அளவில் அம்பேத்கருக்கு இருந்த இத்தகு பாத்திரம் தமிழகத்தில் அயோத்திதாசருக்கு அமைந்திருப்பதை பார்க்கலாம். வரலாற்றையும், மரபுகளையும் ஓயாமல் பரிசீலித்தவராக இவர்கள் காணப்படுகிறார்கள். நிலவும் சமூக நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் தலித்துகள் வகித்த/வகிக்கும் பங்கினைப் பற்றிய ஆய்வு அவசியம் என்பதை உணர்ந்தால் இவர்களின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளலாம்.

பொதுவாக தீண்டாமை ஒழிப்பைப் பற்றி தலித்துகளிடம் பேசும் யாரும் தீண்டாமை என்பது தலித்துகளின் குறை என்பதைப்போலவும், எனவே அவர்கள் இக்குறையை போக்கிக்கொண்டால் தீண்டாமை தீரும் என்னும் பொருள்பட பேசி வந்திருக்கிறார்கள். இக்கேடு கெட்ட போக்கை அம்பேத்கரும் விமர்சித்து இருக்கிறார். இதனை வரலாற்று ரீதியாக மறுத்து எழுதியவராக முதலில் அயோத்திதாசரையே சந்திக்கிறோம். 'பிராமணர்களின் சாதிய-அதிகார மேலாண்மையை ஏற்க மறுத்து, பிராமண எதிர்ப்பை வெளிப்படுத்திய சமூகங்கள் மீது திணிக்கப்பட்ட தண்டனையே தீண்டாமை. இத்தண்டனையின் மூலம் இம்மக்கள் ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கப்பட்டு வீதி, குடிநீர், கோயில், பிற தேவைகள் என யாவும் மறுத்தொதுக்கப்பட்டனர். இறுதிவரை எதிர்த்த படியே வாழ்ந்தாலும் இப்போக்கு நாளடைவில் மக்களைப் பற்றிக்கொண்ட பௌதீக சக்தியாக மாறிப் போனது உள்ளபடியே தீண்டாமைக்கான காரணமும் ஆதிக்க சாதிகளுக்குப் பிறகு கிடைத்து விட்டது' என்று அயோத்திதாசர் எழுதுகிறார். சமூகம் பின்னடைந்த வரலாற்றை சாதியின் தோற்றத்திலிருந்து இவர் காண் கிறார். இதன்மூலம் சாதியம், தீண்டாமை பற்றிய மரபான விளக்கங்களை மறுப்பதோடு தலித்துகளுக்கு கண்ணியம் பொருந்திய விளக்கத்தை அளிக்கிறார். அதாவது பிராமணர்களின் காலங்காலமான புனிதத்தை/பூர்வத்தை இல்லையென மறுப்பதோடு, தலித்துகள் என்போர் எப்போதுமே தாழ்ந்தவர்களாக இருந்ததில்லை, அண்மையில்தாம் தாழ்த்தப்பட்டார்கள், அதுவும் பிராமணர்களின் பொய்க் கதைகளாலும், வஞ்சகத்தாலுமேயாகும் என்னும் புதிய அர்த்தத்தை உருவாக்குகிறார். தலித்துகள் காலங்காலமாகவே அடிமையுற்றவர்கள் இல்லை. மாறாக இடையிலே அவர்கள் வீழ்த்தப்பட்டார்கள். அவர்களின் செழுமையான மரபுகள் அழிக்கப்பட்டன/உள்வாங்கப்பட்டன என்னும் செய்தி தலித்தாகிய ஒருவரை இன்றைய நிலைமைக்கு எதிராக போராடத் தூண்டுகிறது. பறிக்கப்பட்ட நிலம், அதிகாரம் போன்றவற்றிற்காக சுய விழிப்புணர்வு கொள்வதை வேண்டுகிறது. இது இவ்வரலாற்று எழுதியலின் முக்கியம் எனலாம். ஏதோ பலரும் இதனை நியாயமான கற்பிதம் என்று கரிசனம் காட்டுகிற பார்வையைப் போன்று உளவியல் பலம் அளிக்கிற இவ்வெழுத்துகளை நாம் நியாயப்படுத்தவில்லை. அதனை அயோத்திதாசரே நிராகரிக்கும் வண்ணம் தாம் எழுதும் வரலாற்றுக்கு ஆதாரங்களை நிறுவுகிறார். உண்மை வரலாற்றை சாத்தியமாக்குகிறார்.

தமிழில் முன்வைக்கப்பட்டிருந்த பதிவுகள் யாவும் அயோத்திதாசரை அதிருப்தியுற வைத்தது. உருவாக்கப்பட்ட தத்துவங்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட சிந்தனை முறைகளை தொடர் ஆய்வுக்குட்படுத்தினார். மண்ணின் பூர்வக்குடிகள் சுயமான அடையாளமே இல்லாமல் இருந்திருக்க முடியுமா? அவ்வடையாளங்கள்மீது உயர்வு/தாழ்வு என்பதை தீர்மானிப்பது யார்? அச்சமூகக் குழுக்களின் அறிவு வகைமை என்னவாயின? எனும் கேள்விகளிலிருந்து அவர் ஆய்வு தொடங்குகிறது. சில முக்கிய முடிவுகளை கண்டடைந்து அறிவிக்கிறார். அடையாளங்கள் எவை? எவற்றை மீட்டெடுப்பது? அதே வடிவிலா? மாற்று வடிவிலா? என்பது குறித்த தனித்துவமான கருத்துகளை முன்வைக்கிறார். நிலவும் சூழலில் எல்லாவற்றையும் நிராகரிக்கக்கூடிய எதிர்நிலை பாடமாக இல்லாமல், தலித்துகளின் பூர்வமான, சாதி பேதமற்ற அடையாளத்தை கையெடுக்கிறார் எனலாம். பௌத்தத்தை அவர் முன்னெடுத்தார். பௌத்த சமயம் பெருவாரியான தமிழக மக்களின் சமயமாக இருந்ததை சுட்டிக்காட்டி அதனை மீட்கிறார். வைதீகம் உள்வாங்கிய வைதீகமல்லாத கூறுகளை விளக்கிக் கூறுகிறார்.

அடையாளங்கள் கையெடுப்பது தொடர்பாக அயோத்திதாசரின் பார்வை முக்கியமானதாகும். நம் அடையாளங்களை எதிர் சக்திகள் கையாளுவதாலேயே அவைகளை விட்டு விலகிவிட வேண்டும் என்பது நோக்கமில்லை. மாறாக அவைகளை நவீன பார்வையோடும், பூர்வத்தின் தன்மையோடும் எடுக்க வேண்டும் என்பது அவரது பார்வையாக இருந்தது என்று சொல்லலாம். நிலங்களை ஆதிக்க வகுப்பினர் கைப்பற்றிவிட்டதாலேயே அவைகளை நம்முடையதல்ல என்று கைவிட முடியாது. நிலம், அதிகாரம், அடையாளம் எனும் பொருத்தத்தை புரிந்துகொள்ள வேண்டும். இப்படியே 'இந்திரர் தேச சரிதம்' அவரால் சரியான வரலாறாக எழுத முடிகிறது. அதோடு அரிச்சந்திர புராணம், நந்தன் கதை, அம்மன் கதை, கிருஷ்ண அவதாரம் என்ற வைதீக கறைபடிந்த வரலாறுகளை மீட்டெடுத்து மாற்று வரலாற்றை எழுதுகிறார். திருவிழாக்கள், வழிபடும் முறை பற்றியும் சொல்லிச் செல்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

**தலித்துகளின் இரட்டை வாக்குரிமையை பறித்த காந்தியை அம்பேத்கரோடு எதிராக நிறுத்தும் போக்கு ஆபத்தானது என்று சூழையும் அறிவுஜீவிகளால் ஒருபோதும் மாற்றான உண்மையான வரலாற்றை உருவாக்க முடியாது. அத்தகு மாற்று வரலாற்றை இங்கு தலித்துகளால் தான் உருவாக்க முடியும் என்பதை மறுப்பது யார்?**

அயோத்திதாசர் சாதி காப்பாற்றாத பௌத்த அடையாளங்களையே மாற்றாக பேசுகிறார். இன்றைக் கும் கூட தமிழில் பக்தி தொடர்பான நூல்கள் மட்டும் இருக்கவில்லை. (பக்தி என்றாலே பார்ப்பனியம் என்று பெயர் சூட்டும் கயமையை கை விடுவோம்.) பக்தி மறுப் பும் உண்டு. அந்த வகையில் வைதீகமல்லாத அவைதீக நூல்களையே அயோத்திதாசர் கையாண்டார், பதிப்பித் தார். கண்டெடுத்து பேசும் பழைய அடையாளங் களுக்கு நவீன அர்த்தத்தை அவர் கொடுக்கிறார், பழைய செய்யுள்களுக்கு வைத்திய பூர்வமான பொருளை வழங்கு கிறார். குடி கணக்கெடுப்பின்போது (1891) 'சாதி பேத மற்ற திராவிடர்கள் அல்லது தமிழர்கள்' என்று பதிவு செய்யக்கோரும் அயோத்திதாசர் 1880-களின் மத்தியில் தாழ்த்தப்பட்டவர்கள் (பறையர்கள்) ஆதித்தமிழர் (திராவிடர்கள்) என்றும், சாதி இந்துக்கள் அல்ல என்றும் கருத்திற்கு வந்து சேர்கிறார்.

இப்படித்தான் இந்தியா முழுமைக்குமான தலித் வர லாற்றில் தமிழ்நாட்டு தலித்துகளுக்கு தனியான இடமுண்டு என்று சொல்கிறோம். சாதிமுறையின், தீண்டாமையின் தோற்றம், வளர்ச்சி, வேஷ பிராமணர் களால் யதார்த்த பிராமணர் கள் வீழ்த்தப்பட்டமை, பௌத்தத்தை தேர்ந்தெடுப்பது, வரலாற்றை சரி செய்தல் எனும் போக்குகளில் அயோத்திதாசருக்கும், அம்பேத்கருக் கும் ஒற்றுமை உண்டு.

அயோத்திதாசர் இயக்கமாக செயற்பட்டவர். அவர் இயக்கமாக செயற்பட்டாரில்லை என்று பேசும் யாரும் அவரது செயற்பாடுகளைப் பற்றி அறியாதவர்களாகவே இருக்க முடியும். 1870-களிலேயே தொடங்கும் அவரது அரசியல் வாழ்க்கை அவர் இறக்கும் வரை உயிர்ப்போடு விளங்கியது. தீவிரமான செயற்பாட்டை எடுக்க விரும்பிய அவரால் அதனால்தான் முதன்முதலாக 1880-களிலேயே சாதி யற்ற அடையாளத்தையும், பௌத்தம் பற்றிய புரிதலையும் அடைய முடிந்தது. கூட்டம் சேருவதும், ஆட்கணக்கு காட்டுவதும்தான் இயக்கம் என்றால் இன்றைக்கு ரஜினியும், விஜயகாந்தும்தான் இயக்கம். அயோத்திதாசரின் கால கட்டத்தை பார்ப்பது முக்கியமானது என்பேன். காங்கிரஸ் இயக்கம் 1885-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டாலும் 1920 வரை அதனை மக்கள் பங்கேற்ற இயக்கமாக கூற முடியாது. ஆங்கிலேயரின் நவீன கருத்துகள், நவீன அமைப்புகள் அறிமுகமாகும் காலகட்டம். அச்சூழலில் ஆதிக்க வகுப் பினர்கூட பெரும் இயக்கம் என்று மாற முடியாத சூழல். அன்றைக்கு புரிதலும், தேவையும் வரையறைக்குட்பட்ட தாகவே இருந்தது. பாரதியும், வ.உ.சி.-யும் ஆங்கிலேய எதிர்ப் பில் முக்கிய பாத்திரம் வகித்தபோதிலும் பெரும் மக்கள் திரள் இயக்கத்தினை கண்டாரில்லை. 1925 - இடதுசாரி, சுய மரியாதை, இந்துத்துவ அமைப்புகள் தோன்றின. பத்தி ரிக்கை பலமும் பொருளியல் பலமும் கொண்ட பெரியார் ஈ.வெரா. கூட பெரும் மக்கள் இயக்கமாக மாறியது ஏற்கனவே தொடங்கப்பட்டிருந்த நீதிக் கட்சியின் தலைவரான பின்பு தான். அண்ணாதுரை போன்ற புதிய தலைமுறை இளைஞர் களோடு உருவான திராவிட இயக்கம் தமிழகத்தின் ஆதிக்க சாதிகளின் அதிகாரம் சார்ந்த கூட்டணியால்தான் சாத்திய மானது. இத்தகைய வாய்ப்புகளையும், காலகட்டத்தையும் அப்படியே அயோத்திதாசருக்கு பொருத்தக்கூடாது.

அயோத்திதாசர் பௌத்தம் தழுவிய பின் (1894) தீவிர மாக செயற்பட்டார். ஹென்றி ஸ்டீல்ஆல்காட்,(1832-1907) உடன்சேர்ந்து தீண்டாதார் பள்ளிகளை தொடங்குவதில் உதவியிருக் கிறார். 1901-இல் தென்னிந்திய சாக்கைய பௌத்த சங்கத்தை சென்னையில் நிறுவினார். தமிழகம் மட்டுமன்றி கர்நாடகம், பர்மா, தென்னாப்பிரிக்கா, இலங்கை, சிங்கப்பூர், பினாங், இந்தோ னேஷியா, ஜாவா போன்ற இடங்களிலும் இவர் ஆலோசனை யின் பேரில் பௌத்த சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இச்சங்கங்களை ஒருங்கிணைப்பதற்காக தமிழன் (1907-1914) இதழை 'வாரந்தோறும் வெளி யிட்டார். அயல் நாடு களிலும் இதற்கான வாசகர்கள் இருந்தனர். பௌத்த சங்கக் கூட்டங்களில் சைவ சமயத்தினர் புகுந்து கலகம் செய்யுமளவுக்கு தாக் கத்தை இச்சங்கங்கள் ஏற்படுத்தியுள்ளன. உ.வே.சா. போன்றோர் கடுமையாக விமர்சிக்கும் அளவுக்கு வளர்ந்து இருந்தன. சொந்தமாக அச்சகம் அமைத்து, ஏராளமான சமூக சீர்திருத்த முன்னோடி நூல்களை வெளியிட்டன. 'கௌதம அச்சகம்' என்று சென்னை யில் அமைக்கப்பட்டு, அயோத்திதாசர் மறைவிற்குப் பிறகு எம்.ஓய்.எம். அச்சகம் என்று மாற்றப்பட்டு, பிறகு தங்கவயலில் 'சித்தார்த்தா அச்சகம்' என்று இயங்கி நூல்களை வெளியிட்டுள்ளனர். பெரியார் ஈ.வெரா. வட ஆர்க்காடு திருப்பத்தூர் உறவினர் சாமி நாயுடு வீட்டிற்கு வரும்போது பௌத்த கூட்டங் களை தேடிச் சென்று கேட்டிருக்கிறார். அயோத்தி தாசரின் பௌத்த குழுவினர் அவர் காலத்திலும், அவர் காலத்திற்குப் பின்னரும் தொடர்ச்சியாக இயங்கியுள்ளனர். பௌத்த சங்க மாநாடுகள் 10-க்கும் மேற்பட்டு மேலைநாட்டு பௌத்த அறிஞர்களின் உரைகளோடு நிகழ்ந்திருக்கிறது. 1950 வரை சீர் திருத்த நூல்களை பல பதிப்புகள் வெளியிட்டனர். அயோத்திதாசரின் மறைவிற்குப் பிறகே அதிக நூல் கள் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக ஞான. அலாய்சியஸின் தகவல்கள் இக்கூற்றை மேலும் வலுப்படுத்தும். திராவிட இயக் கத்தின் கொள்கைகள் யாவும் இங்கிருந்து எடுக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டவை என்பதை சொல்லித் தெரிய வேண்டிய தில்லை. திராவிட இயக்கம் வளர்ந்தபோது இவர் களின் செயற்பாடுகளை, ஆதிதிராவிடர்களை உள் வாங்கித் தான் வளர்ந்திருந்தது. அத்தகு அரசியல் சூழலை பௌத்த சங்கத்தினர் உருவாக்கி சென்றிருந்தனர். சமய இயக்கமாக தோன்றி சமூக சீர்திருத்த இயக்கமாகவும், அரசியல் இயக்கமாகவும் செயற்பட்ட இவைகள் தொடர்பான தனி ஆய்வுதான் தலித் வரலாற்றிற்கு மேலும் பலத்தினை தர முடியும்.

பகுத்தறிவு, கடவுள் மறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு, இட ஒதுக்கீடு, இந்தி எதிர்ப்பு, ஆங்கிலம் பற்றிய சாதகமான மதிப்பீடு இவை யாவும் அயோத்திதாசர் எழுதி பரப்பிய கோட்பாடுகளாகும். பொருளியல் பலமும், ஆதிக்க சாதி பலமும் இல்லாத தாழ்த்தப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்த இவர்களின் இத்தகு செயற்பாடுகளும், 20-ஆம் நூற்றாண்டு முழுவதும் செயற்பட்ட கருத்தியலும் ஆற்றல் மிகு இயக்கமாகவே கருத முடியும். பிற எந்த சமூகத்திற்கும் இத் தகு பெருமை கிடையாது. 1909-இலேயே அனைத்து துறையிலும் எல்லா வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று எழுதினார் அயோத்திதாசர். இதனை 'தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் அதன் பாரம்பரியமும்' என்னும் நூலில் ஏ.என். சட்டநாதன் "சென்னை மாநிலத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கை பார்ப்பனரல்லாத திராவிட இயக்கத்திற்கு முற்பட்டது" என்கிறார். 1810-இலிருந்து 1892 வரை ஆங்கிலேய அரசிடம் விண்ணப்பங்களை தலித்துகள் அளித்து வந்தனர். அவைகளை மொத்தமாக இன்று தொகுத்து பார்த்தாலே சமூக நீதி கொள்கைக்கான முன்னோடிகள் தலித்துகளே என்பதை அறிய முடியும். "ஒரு முறை பெரியாரிடம் நான் உரையாடிக் கொண்டிருக்கும்போது தன்னுடைய ராமாயணப் பாத்திரங்கள் என்ற பேச்சும் எழுத்தும் அயோத்திதாசப்பண்டிதரின் 'பைசாத் தமிழன்' பத்திரிக்கை யில் வந்த கட்டுரைகளின் தாக்கம் என்று என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்" (தினமணி 12.9.2005) என்கிறார் இரா. செந்தாமரை என்பவர். இத்துணை ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தியவர் அயோத்திதாசர் என்பதனை இங்கு சுட்ட முடியும்.

அயோத்திதாசப் பண்டிதரின் செயற்பாடுகள். கருத்துகள் முன்முடிவுகளற்ற தன்மையோடு கொணரப்பட வேண்டும். அவர் முன்வைக்கும் விவாதபூர்வமான கருத்துகள் உரிய முறையில் எதிர்கொள்ளப்பட வேண்டும். சாதிய மனோபாவத்தால் அரிக்கப்படாத அறிவாளிகளின் குறுக்கீடுகள் அவசியமாகிறது. அயோத்திதாசரை குறுகிய குற்றச்சாட்டுகளால் புறந்தள்ளிவிட்டு, தலித்துகளின் இரட்டை வாக்குரிமையை பறித்த காந்தியை அம்பேத்கரோடு எதிராக நிறுத்தும் போக்கு ஆபத்தானது என்று குழையும் அறிவுஜீவிகளால் ஒருபோதும் மாற்றான உண்மையான வரலாற்றை உருவாக்க முடியாது. அத்தகு மாற்று வரலாற்றை இங்கு தலித்துகளால் தான் உருவாக்க முடியும் என்பதை மறுப்பது யார்?

- தொடரும்


## சமூக விழிப்புணர்வு மற்றும் தலித் நிலவுரிமை கருத்தரங்கம்

**நாள் : 9-10-2005**

**நேரம் : காலை 10.30 மணி முதல்**

**இடம் : CSI தூய சிலுவை ஆலயம், காமராஜ நகர், ஆவடி, சென்னை.**

### உரைகள்

*கிறித்துவமும் சாதியமும்*
**தலித் ஞானசேகரன்**

*தலித் நிலவுரிமை*
**சிவகாமி**

**நிகழ்ச்சி ஏற்பாடு**
Rev. **டானியல்**

**தொடர்புக்கு**
**044-26550750**

## தலித் நிலவுரிமை மாவட்ட ஆலோசனைக் கூட்டம்

நாள் : 12.10.2005

நேரம் : காலை 10 மணி

இடம் : 40 முதல் தெரு, ராயர் தோப்பு, ஸ்ரீரங்கம், திருச்சி.

**தொடர்புக்கு**
**ராதா (வீட்) : 0431-2432803**



படிப்பகம்

www.padippakam.com

நெல்லை வசந்தன்

# மருவாதி

**அம்மனே அச்சு அசலா கோயிலுக்கு உள்ள வந்து ஒக்காந்த மாதிரி நேர்த்தியா உருவம் புடிக்கிறதுல அந்த ஏரியாவுல குப்புசாமிய விட்டா எவனுமில்ல. சுடலை சாமி குதிரையில ஒக்காந்து கொண்டு, ஒரு கையில வெட்டறுவாவும், இன்னொரு கையில ஈட்டியும் வச்சிக்கிட்டு, நாக்க நீளமா துருத்திக்கிட்டு இருக்கிறத பாக்கவே பயமா இருக்கும்.**

இன்னும் நாலு நாளுதான் இருக்கு. அம்மங் கோயில் கொடை விழாவுக்கு. சேந்தாங்குளம் ஊரே அல்லோல கல்லோலப்பட்டது. எங்க பாத்தாலும் ஒரே கும்மாளந்தான். ஒரு பக்கம் வீடுகளுக்கு வெள்ள அடிச்சிக்கிட்டு இருந்தாங்க. இன்னொரு பக்கம் தெருவெல்லாம் துப்புரவு பண்ணிக்கிட்டு இருந்தாங்க.

அந்த ஊருல அம்மங் கோயில் கொடை ரொம்ப விசேஷமா இருக்கும். மூணு வருஷத்துக்கு ஒரு வாட்டிதான் கொண்டாடுவாங்க. அந்தச் சமயத்துலதான் வெளியூருல வேல பார்க்குற சொந்தக்காரங்க எல்லாம் நெறய பேரு வருவாங்க. ஊரே வானம் பாத்த பூமி கணக்கா பூரிப்படஞ்சி போகும்.

ஊருக்கு வடக்கேதான் ரோட்டோரமா அம்மங் கோயில். முத்தாரம்மன், பேச்சியம்மன் காமாட்சியம்மன்னு மூணு சாமி இருக்கும். பக்கத்துல சொடலை மாடன் பூடம். அவருக்குப் பக்கத்துல முண்டன் ஒக்காந்துக்கிட்டு இருப்பாரு.

ஊருக்கு மேக்கே நாடாக்கமாருக இருந்தாங்க. வடக்குப் பக்கம் தேவமாருக இருந்தாங்க. தேவமாருக வயக்காடுகளுலதான் இந்தப் பறையனுக எல்லாம் வேல செஞ்சானுக. நாடாக்கமாருக தெருவுலதான் பள்ளிக்கூடம் இருக்கு. எட்டாங் கிளாசு வரைக்குந்தான் அங்க படிக்க முடியும். மேல படிக்கனுமின்னா சேத்துப்பட்டிக்கு ஏழு மைலு சைக்கிளுல போய்தான் படிக்கனும். அதனால இந்தப் பறப்பிள்ளைகளுல பொம்பளப் பிள்ளைகளையெல்லாம் எட்டாங்கிளாசோட நிப்பாட்டிருவாங்க. பறப்பசங்கதான் ஒன்னு ரெண்டு பேரு சேத்துப்பட்டிக்கு சைக்கிளுல போயி படிச்சிப்புட்டு வருவானுக.

மாயாண்டி தாத்தாதான் அந்தூருல பெரிய சாமி கொண்டாடி சொடல சாமி ஆடுறவரு. அவரு ஆடுனார்னா பூமியே குலுங்கும்: அந்தமானிக்கு குதிச்சி குதிச்சி ஆடுவாரு. ஆக்ரோசமா அவரு ஆடுற ஆட்டத்துல சின்னப் புள்ளைங்க எல்லாம் பயப்படுவாங்க.

சாமியாடிக எல்லாம் கோயிலுக்கு கால் நாட்டுன பிறகு வெரதச் சோறுதான் சாப்பிடனும். கோயிலுலதான் படுத்து தூங்கனும். கொடைக்கு கோயிலுல வெள்ள அடிக்கனுமுன்னா சாமியாடிகதான் அடிக்கனும். வெள்ளையோட பெரிய பெரிய காவிப்பட்டையா போடுவாங்க. மாயாண்டி தாத்தாதான் காவிப்பட்டைய அடிக்கிறதுல கை தேர்ந்த ஆளு. சும்மா ஸ்கேலு வச்சி அளந்த மாதிரி அம்சமா அடிப்பாரு. அவரு காவிப் பட்டய அடிக்கிறத பாக்கிறதுக்குன்னே ஒரு கூட்டம் வரும். சின்னப் பசங்க எல்லாம் அவருக்கு ஒத்தாசை செய்வாங்க.

மாயாண்டி தாத்தா வேல மும்முரத்துல இருந்தாரு. அந்நேரம் ரோட்டுல கருப்பத்தேவரு பையன் மூர்த்தி சைக்கிளுல போய்க்கிட்டு இருந்தான். அவனுக்கு சுமார் இருவத்தி மூனு வயசிருக்கும். மாயாண்டி தாத்தாவ பாத்ததும் டக்குன்னு பிரேக்க போட்டான். ஒத்த கால தரையில ஊனிக்கிட்டே ரொம்ப தோரணையா,

"ஏ... மாயாண்டி... என்னடே! கொடை வேல மும்முரமா நடக்குது போல"ன்னான்.

"யாரு... மூர்த்தி பாண்டியனா? வாருங்க. என்ன சேத்துப்பட்டி போய்ட்டு வாரியளா? கால் நாட்டியாச் சில்ல, அதான் வெள்ள அடிச்சிக்கிட்டு இருக்கோம்" அப்படின்னாரு தாத்தா.

"சரீடே.... இந்த வருஷம் கொடை ரொம்ப செழிப்பா இருக்கும் போல"ன்னான் மூர்த்தி.

"ஆமா... கும்பாட்டமெல்லாம் இருக்கு. தஞ்சாவூருலருந்து கூட்டியாறோம். நீங்க கண்டிப்பா வந்துரனும்" - இது தாத்தா.

"க்கும்... தஞ்சாவூருல இருந்து வாராளுக, திருச்சியில இருந்து வாராளுகன்னு சும்மா புளுகுவிங்க, கடைசியில பாத்தா திருநெல்வேலியில இருந்து, காஞ்ச கருவாடாட்டமா ஒரு ஆட்டக்காரிய புடிச்சிட்டு வருவீங்க. போங்கடே... செத்த மூதிகளா... நீங்களும் ஒங்க ஆட்டமும்" வித்தாப்பா சொல்லிக்கிட்டே சைக்கிள மிதிச்சான் மூர்த்தி.

நாளும் நெருங்கிருச்சி. அன்னக்கி ஆறாவது நாளு. கோயிலுள அலங்கார பூச நடக்கிற நாளு. களி மண்ணுலயும், கிழங்கு மாவிலயும் சாமியோட உருவத்தச் செஞ்சு பூச செய்யுற நாளு. இப்படி உருவம் புடிக்கிறதுன்னா வாஞ்சாங்குளம் குப்புசாமி பூசாரிதான் கைதேர்ந்த ஆளு. அவரு உருவம் புடிச்சாருன்னா சும்மா சாமியே நேருல எறங்கி வந்த மாதிரி இருக்கும்.

அம்மனே அச்சு அசலா கோயிலுக்கு உள்ள வந்து ஒக்காந்த மாதிரி நேர்த்தியா உருவம் புடிக்கிறதுல அந்த



படிப்பகம்

www.padippakam.com

காவல் துறையினர் வந்து அந்த சிறுமியை மீட்டு அவளது வீட்டில் ஒப்படைத்தனர். மறக்க முடியாத இந்த நிகழ்வு நான் செய்து வரும் பணிக்கு ஒரு அடித்தளமாக அமைந்ததாக கருதுகிறேன். அந்த சிறு வயதில் எனக்கு ஏற்பட்ட அந்த அனுபவம்தான் என்னை மேலும் மேலும் சமூகப் பணிகளில் ஈடுபட அடித்தளம் அமைத்ததாக கருதுகிறேன். அதற்குக் காரணம் எனது தந்தையும், எனது குடும்பத்தினருமே.

இதற்கிடையில் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு உடனடியாக 30 ரூபாய் சம்பளத்தில் சி.எஸ்.ஐ. பெண்கள் பள்ளி விடுதியில் பெண் விடுதி காப்பாளராக பணியாற்றினேன். மேற்படிப்பு படிப்பதற்கு வசதியில்லை என்பதால் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு எனது தந்தையோடு எனது கிராமத்திற்கு வெளியே சென்று கால்நடைகளுக்கு புல் அறுத்து வருவது எனது தினப் பணியாக இருந்தது. எனது முதல் சம்பளம் ரூபாய் 30. எனது தாய்க்கு எல்லா வீட்டு வேலைகளையும் நான் செய்துள்ளேன். எனது பெற்றோர் மூச்சில் எனது பெயர் தான் ஒலிக்கும். எந்த வேலையானாலும் என்னைத்தான் அழைப்பார்கள். நான் கடின உழைப்பாளி. தென்னிந்திய திருச்சபை ஏற்பாடு செய்த 'சமூக ஒருங்கிணைப்பாளர்' (Community Organiser) பயிற்சியில் கலந்து கொண்டேன். அந்த பயிற்சியின்போது கருத்தியல் (Theory) மட்டுமல்லாது செயலிலும் ஒரு பிரச்சினையை எடுத்து அதை எப்படி அணுகுவது, தீர்ப்பது என்பதற்காக எனது தந்தை ஆசிரியர் பணி செய்த அரக்கோணம் அடுத்த செய்யூர் கிராமத்தில் நிலப் பிரச்சினையை கையில் எடுத்தேன்.

செய்யூர் கிராமத்தில் உள்ள (அருந்ததி) தலித் மக்களுக்கு வெளி நாடு கிருத்துவ போதகர்களால் (Missionary) கொடுக்கப்பட்ட 49 ஏக்கர் நிலம் அவர்களிடமிருந்து அவர்களை அறியாமலேயே அங்குள்ள சபையினரால் பிற சாதியினருக்கு விற்கப்பட்டிருந்தது. இந்த பிரச்சினையை என் தந்தையின் ஆலோசனையுடனும், அனைத்து அம்பேத்கர் மன்றத் தலைவராக செயல்பட்ட எனது அக்காவின் கணவர் திரு. அகன் ஏழ்மைவாணன் அவர்கள் உதவி யோடும் கையில் எடுத்தேன். அப்போது எனது வயது 20. திருச்சபையை எதிர்த்தேன். ஆலய வழிபாட்டின்போது, பிரசங்க நேரத்தின்போது ஆலய வாசலில் நின்று கோஷமிட்டோம். ஆலய வழிபாட்டினை நடத்தவிடாமல் நிலப் பிரச்சினைக்காக போராடினோம். செய்யூர் கிராமத்தில் திருச்சபை தலைவர்களுடன் நடந்த கூட்டத்தில் அடிதடி நடந்தது. அதில் என்னை இழுத்துச் சென்று ஒரு குடிசை யில் வைத்து பூட்டிவிட்டனர். அந்த குடிசையை கொளுத்துவதற்கு முயற்சிக்கையில் என்னுடைய பெயரைச் சொல்லி அழைத்துக்கொண்டு எனது மாமாவும், கிராமத்து இளைஞர்களும் வந்தனர். அவர்கள் என்னை காப்பாற்றினார்கள். எங்களது கிராமத்து தலித் இளைஞர்கள் மட்டு மல்லாது பிற சாதி இளைஞர்களும் ஆயுதங்களோடு என்னைத் தேடி வருகையில் வழியே சென்ற திருச்சபை தலைவர்களது வாகனங்கள் தாக்கப்பட்டன. அவர்களை உடனே சென்னைக்கு அனுப்பி வைத்தோம். பெரிய நிலப் போராட்டம். வெளிநாடுகளிலும் கிருத்துவ வட்டங்களில் இந்த பிரச்சினை பேசப்பட்டது என்று அதன் பிறகு சந்தித்த நண்பர்கள் கூறினர்.

**தலித் விடுதலை பற்றி பேசுபவர்கள்**
**தலித் பெண் கள் விடுதலை**
**பற்றி பேசுவதில்லை.**
**தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம்**
**ஏழு மாநில மாநாடுகளை நடத்தி**
**தலித் பெண்கள் ஒன்று கூடுவதற்கும்,**
**பிரச்சினைகளை பகிர்ந்து கொள்வதற்கும்,**
**தலித் பெண்களின் சக்தியை**
**வலுப்படுத்தவும் தளமாக இருந்தது.**
**ஒவ்வொரு மாவட்டத்திலும் தலித் பெண்கள்**
**தலைவிகளாக உருவாக்கப்பட்டுள்ளனர்.**
**தலித் பெண்ணியம் தலித்துகளால்,**
**குறிப்பாக தலித் ஆண்களால்**
**பேசப்படவேண்டும்.**

**தலித் பெண்ணிய முயற்சிகள் வீச்சாக உள்ளனவா?**

தலித் பெண்களுக்கு விடுதலை வேண்டும். தலித் பெண்கள் பலவித அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். சாதி, வர்க்கம், ஆணாதிக்கம், அரசியல்வாதிகள், கலாச்சாரம், கல்வி, சுகாதாரம், பன்னாட்டு நிறு வனங்களின் இந்திய சந்தை ஆக்கிரமிப்பு, நுகர்வோர் மற்றும் மேல்நாட்டு கலாச்சாரம் போன்ற பல்முனை தாக்கங்களால் இன்று தலித் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தலித் விடுதலை பற்றி பேசுபவர்கள் தலித் பெண்கள் விடுதலை பற்றி பேசுவதில்லை. தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம் ஏழு மாநில மாநாடுகளை நடத்தி தலித் பெண்கள் ஒன்று கூடுவதற்கும், பிரச்சினைகளை பகிர்ந்து கொள்வதற்கும், தலித் பெண்களின் சக்தியை வலுப்படுத்தவும் தளமாக இருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தலித் பெண்கள் தலைவிகளாக உருவாக்கப்பட்டுள்ளனர். தலித் பெண்ணியம் தலித்துகளால், குறிப்பாக தலித் ஆண்களால் பேசப்படவேண்டும். மக்கள் இயக்கங்களும் தலித் பெண்கள் பிரச்சினைகளை கையில் எடுக்க வேண்டும். தலித் பெண்ணியம் வீழ்ச்சியடைய வாய்ப்பு இல்லை. ஆனால் தொடர்ந்து பரிமளிக்க வாய்ப்புகள் உண்டு. ஆதிக்க சக்திகள் இருக்கும் வரை எல்லா இயக்கங்களும் சந்திக்கக்கூடிய பிரச்சினைகளை இன்று தலித் பெண்கள் அமைப்புகளும் சந்தித்து வருகின்றன.

**உலக பெண்ணிய இயக்கங்களோடு தலித் பெண்கள் இணைந்து செயல்படுவது சாத்தியமா?**

இது சாத்தியமே. உலக அளவில் தலித் பெண்கள் ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். குறிப்பாக டர்பனில் நடந்த சாதி, இன வெறிக்கு எதிரான உலகளாவிய மாநாட்டில் 10 தலித் பெண்கள் கலந்துகொண்டு அங்கு நடைபெற்ற பல கூட்டங்களில் தலித் பிரச்சினைகளை எடுத்து வைத்தனர்.

ஜப்பானிலுள்ள புராக்குமின் பெண்கள் தாங்களும் புராக்கு விடுதலை இயக்கத்திலிருந்து தனித்தன்மையுடன் புராக்கு பெண்களுக்கான இயக்கத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாவதற்கு தமிழ்நாடு


படிப்பகம்

www.padippakam.com

**பெண்கள் அரசியலில் பங்கேற்க வேண்டும். சமுதாயத்தில் முடிவெடுக்கும் எல்லா இடங்களிலும் பெண்களின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அரசு கொள்கை, திட்டங்களில் பாலின சமத்துவம் உருவாகும்.**



தலித் பெண்கள் இயக்கமே ஒரு காரணமாக இருக்கிறது என்று கூறி வருகின்றன. புராக்குமின் இனம் ஜப்பான் நாட்டின் பின்தங்கிய சமூகம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிய அளவிலும் தலித் பெண்களின் பிரச்சினைகள் பல அரங்குகளில் எடுத்து பேசப்பட்டுள்ளது. பாங்காக்கில் நடைபெற்ற பெய்ஜிங் +10 கூட்டத்திலும் தலித் பெண்கள் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. தலித் பெண்கள் மீது இழைக்கப்படுகின்ற கொடுமைகள் குறித்து பல நாடுகளின் பத்திரிகைகளில் செய்திகளாக வெளியிடப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் பெண்கள் மீது இழைக்கப்படும் வன்முறைக்கு எதிரான சிறப்பு அறிக்கையாளர் (Special reporter) அவர்களிடம் தொடர்ந்து தலித் பெண்கள் பிரச்சினைகள் எடுத்துரைக்கப்பட்டு வந்துள்ளது.

சமீபத்தில் ஆசிய அளவில் நடைபெற்ற சுனாமி பாதித்த ஆசிய பெண்களின் கருத்தரங்கில் தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கத்தில் இருந்து பெண்கள் கலந்து கொண்டு தலித் பெண்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டு, அரசால் எந்தவித பயனும் பெறவில்லை என்று பேசினர்.

கோபனகனில் (Cophenhagen) 15 நாட்கள் நடைபெற்ற கூட்டத்தில் தலித் பெண்கள் இயக்கத்தின் சார்பில் தலித் பெண்களை பங்கேற்கச் செய்து தலித் பெண்கள் பிரச்சினைகள்பற்றி பேசப்பட்டது.

டென்மார்க்கில் இமேஜ் ஆப் ஏசியா (Image of Asia) ஏற்பாடு செய்த கலைக்குழுக்களோடு தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்க விடுதலை கலைக்குழுவினர் தலித் பிரச்சினைகளை கலை நிகழ்ச்சிகளாக நடத்தினர்.

தலித்துகள், தலித் பெண்கள் மீது இழைக்கப்படும் சாதிய வன்கொடுமைகள், தீண்டாமைக் கொடுமைகள் வேரோடு தூக்கியெறியப்பட வேண்டுமானால் உலகளாவிய பிற இயக்கங்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை உணர்ந்து தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம் கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் தலித் பெண்களின் பிரச்சினைகளை முன் வைக்கின்றது.

ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பியா நாடுகளிலும் தலித் பெண்ணியம் தலித் பெண்கள் இயக்கத்தின் மூலம் பேசப்பட்டுள்ளது.

**தலித் அரசியலுக்கு தலித் பெண்கள் இயக்கம் எப்படி பங்களிக்க முடியும்?**

தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம் தலித் பெண்களை நிலம் மற்றும் அரசியல் உரிமைகளுக்காக போராட வைக்கிறது. தினசரி வாழ்க்கையில் பிற சாதியினருடனான பிரச்சினைகளை எதிர்கொள்வதும் ஒரு அரசியல் தன்மையே. கிராம அளவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம பஞ்சாயத்துகளில் தலித் பெண்கள் திறம்பட செயல்பட தலைமைத்துவத்தை வளர்த்துவிட வேண்டும்.

பெண்கள் அரசியலில் பங்கேற்க வேண்டும். சமுதாயத்தில் முடிவெடுக்கும் எல்லா இடங்களிலும் பெண்களின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அரசு கொள்கை, திட்டங்களில் பாலின சமத்துவம் உருவாகும். அரசியல் தலைமை பொறுப்புகளில் பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். குடும்பத்திலும், சமுதாயத்திலும் பெண்கள் தலைமைப் பொறுப்பை கையில் எடுத்துள்ளனர். ஆகவே, அரசியல் தலைமைத்துவத்தை அதிகாரபூர்வமாக பெண்கள் கையில் எடுத்தால் அவர்கள் அதிகாரத்தையும், தகவல்களையும் பெற வாய்ப்புள்ளது. அரசியல் தலைமையை எடுத்து பதவிகளில் பெண்கள் இருந்தால்தான் பெண்கள் பிரச்சினைகள் அரசியலாக்கப்படும்.

**தலித் பெண்ணாக நீங்கள் உணர்வதால் தலித் அரசியலுக்கு பயனேதும் உண்டா?**

தலித்துகள் தலித் பெண்கள் அரசியலை கையில் எடுக்காவிடில் அர்த்தமே இல்லை. தலித் என்று சொல்வதே ஒரு அரசியல் அடையாளம். தலித் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். தலித் அரசியலை கையில் எடுத்தாலொழிய தலித்துகளின் நிலைமையை மாற்ற முடியாது. தலித் பெண்கள் அரசியலில் சுதந்திரமாக செயல்படவும், திறமைகளை வளர்ப்பதும், பொருளாதார ரீதியாக மேம்படச் செய்வதும், சமூக அந்தஸ்து கிடைக்கவும் செய்வதே எங்களுடைய முக்கியப் பணி.

**தற்போதைய நடவடிக்கைகள், எதிர்காலத் திட்டங்கள் என்ன?**

தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம் மாநில அளவில் தலித் பெண்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு சட்டம் சம்பந்தப்பட்ட பயிற்சிகள், பஞ்சாயத்து ராஜ் பயிற்சிகள், பஞ்சமி நிலம் குறித்த கருத்தரங்குகள், மாநில மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், பேரணிகளில் பங்கேறகச் செய்தல், கூட்டுத் தலைமைத்துவத்தை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தலித் பெண்களை அரசியல் அதிகாரம் பெறச் செய்வது, அவர்களின் பெயரில் நிலம் கிடைக்கச் செய்வது, தலித் பெண்களை மாபெரும் சக்தியாக உருவாக்குவது, அரசு சலுகைகள், நலத் திட்டங்கள் முழுமையாக தலித்துகளுக்கு கிடைக்கச் செய்வது, பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றமடையச் செய்வது போன்றவற்றிலும் தீவிரம் காட்டி போராடி வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

**பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு அவசியமா?**

பெண்களுக்கான இட ஒதுக்கீடு 33% அல்ல, 50% இட ஒதுக்கீடு அவசியம் என்பது எங்களது நோக்கம். உடனடியாக இட ஒதுக்கீடு கிடைக்க வேண்டும். எல்லா துறைகளிலும் பெண்கள் இட ஒதுக்கீட்டை பிரயோகித்து வாழ்க்கையில் முன் வரவேண்டும். 10% கொடுத்தால் போதும் என்கிற அரசியல் தலைவர்களை வன்மையாக கண்டிக்கிறோம். தலித் பெண்கள் அடிமட்டத்திலிருந்து தலைமைத்துவத்தை கையில் எடுத்து, தற்போதுள்ள தனித்தொகுதிகளில் (Reserved Constituency) போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும். அடிமட்டத்திலிருந்து அரசியல் விழிப்புணர்வு கொடுப்பதுதான் அவசியமானது.

உள் ஒதுக்கீடு உருவாக்கப்பட்ட பிறகும் தலித் பெண்கள் எப்படி இன்று அரசு பணிகளில் இட ஒதுக்கீடு இருந்தும் அதை முழுமையாகப் பெற முடியவில்லையோ, அதேபோன்று தலித்துகள் அரசியலில் வந்தாலும் பிற சாதியினருடைய பினாமிகளாக, ஆண்களின் தலையீடுகளுடன் அதிகாரத்துக்கு அடிமைப் பட்டவர்களாகவே இருப்பார்கள்.

ஆகவே தலித் பெண்கள் அரசியலுக்கு வரவேண்டுமானால் தனித் தொகுதிகளை ஏற்று செயல்படும் வரை, பெண்களுக்கான இட ஒதுக்கீடு முழுமையாக செயல்படுத்துவதை தள்ளிப்போடக் கூடாது.

**இதனால் தலித் பெண்களின் அரசியல் பலம் உயருமா?**

கிராமப்புற அளவில் தலித் பெண்கள் அடி மட்டத்தில் அரசியல் ஈடுபாடு, போராட்ட உணர்வு, எதிர்க்கும் சக்தி, போராட்டங்கள், பொதுக் கூட்டங்களில் பேசுதல் போன்ற குணாதிசயங்களோடு சாதிய வன்கொடுமைகள், தீண்டாமைகளிலிருந்து விடுபட்டால்தான் தலித் பெண்களின் அரசியல் பலம் உயரும். அரசியல் பலம் உயரும் என்ற நம்பிக்கையோடு அரசியலை கையில் எடுத்துள்ளோம்


**தலித் நிலவுரிமையில் உங்கள் அணுகுமுறையும், எதிர்காலத் திட்டங்களும்....?**

பஞ்சமி நிலங்களை மீட்டெடுப்பதில் எங்கள் இயக்கம் சிறந்த பங்காற்றியுள்ளது. அரக்கோணம் தாலுகா முள்வாய் கிராமத்தில் 35 ஏக்கர் நிலத்தையும், பாலகிருஷ்ணாபுரத்தில் 21/2 ஏக்கர் நிலத்தையும் மீட்டெடுத்துள்ளோம். தொடர்ந்து முதூர் கிராமத்தில் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். காவனூர் அருகில் மக்கள் தாங்களாகவே போராடியும், வழக்குப் போட்டும் 7 ஏக்கர் நிலத்தை வென்றெடுத்துள்ளனர். எங்கு மக்கள் விழிப்புணர்வுடன் உள்ளனரோ அங்கே போராடுவது சுலபமாக உள்ளது. ஆகையால் தலித் நிலவுரிமை பற்றிய விழிப்புணர்வு அவசியம். தலித் பெண்கள் இயக்கம் தலித் நிலவுரிமை பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம்களைத் தொடர்ந்து நடத்தும்.

**சென்னை ஆஷா நிவாஸில் நடந்த தலித் நிலவுரிமை கலந்துரையாடல்**



வி. பாஸ்கரன் NCDHR, ஜாய்ஸ் ரோஸ்லின்



இன்பகுமார்



கருப்பன் இ.ஆ.ப. (ஓய்வு), வெரோணிக்கா, வேலுச்சாமி (லீட்)

www.padippakam.com

3

# வரலாற்றை மொழிதல்

# அயோத்திதாசப் பண்டிதர் என்ற இயக்கம்



ஸ்டாலின் ராஜாங்கம்

சென்னையிலே நூறாண்டுக் கப்பால் வாழ்ந்தார்!
திருவள்ளுவர் மீண்டும் உதித்தார் என்றே
மன்னர்களும் மாந்தர்களும் போற்றும் சித்தர்!
வரமிக்க திரு.வி.க. வணங்கும் முத்தர்!
பன்னூறு பகுத்தறிவு நூல்கள் தந்தார்!
வாழ்சாதி மதபேதம் எரித்தார்! இன்பக்
கன்னல் நிகர் 'தமிழன்' இதழ் முதலில் தீட்டிக்
கண்மூடி வைதிகத்தை நடுக்க வைத்தார்!

- மதுரகவி வீ.வே. முருகேச பாகவதர்
(பௌர்ணமி இதழ் 13.8.1992)

நிலவும் வரலாற்றை மாற்றியமைப்பது என்பது நம் வாழ்வை புதிதாய் மாற்றுவது என்று அர்த்தப்படுகிறது. இந்திய சமூக அமைப்பை, அதன் வளர்ச்சியை, அதன் பல்வேறு பிரச்சினைப்பாடுகளை நுட்பமாக ஆராய்ந்து வெளிப்படுத்தியவர்களாக தலித் சமூக முன்னோடிகள் செயற்பட்டு இருக்கிறார்கள். இந்தியாவில் இப்படியான அறிவுஜீவியாக அம்பேத்கர் இருந்தார் என்பதை அவரை வாசித்த யாவரும் அறிவர். சமூகமே காந்தியாரை கொண்டாடியபோது, அவரை தனி மனித துவேஷம் ஏதுமின்றி 'காந்தியும், காங்கிரசும் தீண்டாத மக்களுக்கு செய்த தென்ன?' என்னும் நூலை எழுதி கட்டுடைத்தார். சமூகம் முழுமையும் கொண்டாடும் ஒன்றின் பின்னால் ஒளிந்து கிடக்கும் முழுமையை கொணருவதும், அதன் மீது அறம் சார்ந்த விமர்சனத்தை நிறுவுவதுமே அறிவு ஜீவியின் பணியாக இருக்க முடியுமேயன்றி சமூகத்தின் பொதுப்புத்திக்கு வாய்ப்பாகிப்போன ஒன்றையே பிரதிபலிப்பது சரியானதாய் இருக்க முடியாது.

ஆனால் இந்தியாவில் எழுதப்பட்ட எத்தகைய வரலாற்று, சமூக ஆய்வுகளிலும் அம்பேத்கரின் மேற்கோளையோ அவரின் கோட்பாட்டு அடிப்படையில் அமைந்த ஆய்வுகளையோ பார்க்க முடிவதில்லை. சமூகத்தின் பிற்போக்கு அம்சங்களை செயற்பாடுகளில்/கருத்துகளில் பிரதிபலித்தவர்களைக்கூட சூழல் கருதியாவது குறிப்பிடும் நமது அறிஞர்கள் முழுக்க தலித்துகளின் சிந்தனை வழியமைந்த கருத்துகளை கையாண்டதில்லை. தலித்துகளைப் பற்றி எழுத நேரும்போதும், பிற தலித்துகளை மறுக்க முனையும்போது தலித்துகளையே எதிராக நிறுத்தி விமர்சிக்கும்போதும் தவிர பிற சூழல்களில் தலித்துகளின் சிந்தனைகளை கையாளுவதில்லை. சான்றாக அயோத்திதாசரை மறுக்க இரட்டைமலை சீனிவாசனை எதிராக நிறுத்துவார்கள், திருமாவளவனை மறுக்க டாக்டர் கிருஷ்ணசாமியை எதிராக நிறுத்துவார்கள். பொது சமூகத்தின் எல்லாவற்றைப் பற்றி பேசும்போது கூட தலித் சிந்தனையாளர்களை/கருத்துகளை மையமாக கொள்ளும் போக்கு இங்கு எழ வேண்டும். சில வேளைகளில் திட்டமிட்டு மறைப்பது என்பதை பார்க்கிறோம். 'இந்திய வரலாற்றில் பகவத் கீதை' என்னும் நூலில் பிரேம்நாத் பசாஸ் கீதையை விரிவாக கட்டுடைத்த போதும் பகவத்கீதை பற்றிய அம்பேத்கர் கருத்துகளை பேசுவதில்லை. இதேபோல டி.என். ஜா எழுதிய 'பசுவின் புனிதம்' என்ற நூலும் அமைந்திருப்பதை பார்க்கலாம். முற்போக்கு சாதி இந்துக்கள் பல நேரங்களில் தங்களை காத்துக்கொள்ள தலித்துகளின் துயரங்களை மேற்கோள்களாகக் காட்டி தப்பிக் கொள்வதுண்டு. அண்மையில் பிராமண சமூகம் யூதர்களாக் ஆக்கப்பட்டதாக தம் சாதிப் பற்றை வெளிப்படுத்திய பார்ப்பனர் அசோகமித்திரனை மறுத்து பிராமணரல்லாதோர் கட்டுரைகள் காட்டமாக வெளியாகியிருந்தன (குமுதம் ரிப்போர்ட்டர், தீராநதி, புதிய காற்று). அக்கட்டுரைகளில் பிராமணர் இன்னமும் அதிகாரத்தில் கோலோச்சுவதையும், பிராமண நிறுவனங்களில் இட ஒதுக்கீடு மறுக்கப்படுவதையும் சுட்டிக் காட்டியிருந்தனர். ஆனால் அசோகமித்திரனோ, பிற பிராமணரல்லாத எழுத்தாளர்களோ பிராமணரல்லாதோர் நிறுவனங்களில் தலித்துகளுக்கு நிரப்ப வேண்டிய இடங்கள் எத்தனை என்பதையோ, இட ஒதுக்கீடு பின்பற்றாத சாதி இந்து நிறுவனங்களையோ, இடங்களை நிரப்பாத சமூக நீதி காக்கும் திராவிட அரசுகளையோ சுட்டிக்காட்ட முடிகிறதா? இப்படியாக பிராமணர்களுக்கு எதிராக எழுதும் யாரும் தலித்துகள் பிரச்சினையை ஒட்டு மொத்த பிராமணரல்லாதோர் பிரச்சினையாக காட்டி விட்டு மறுமுனையில் தலித்துகள் மீது சாதியை கடைப்பிடிக்கவும் தொடங்கி விடுகிறார்கள். அல்லது பிராமணர்களை குற்றம் சாட்டும் அளவிற்கு பிராமணரல்லாத ஆதிக்க சாதியினரை குற்றம் சாட்டுவதில்லை.

சமூகத்தின் எல்லாவற்றையும் கவனிப்பது, எல்லா



படிப்பகம்

www.padippakam.com

ஏரியாவுல குப்புசாமிய விட்டா எவனுமில்ல. சுடலை சாமி குதிரையில ஒக்காந்து கொண்டு, ஒரு கையில வெட்டறுவாவும், இன்னொரு கையில ஈட்டியும் வச்சிக்கிட்டு, நாக்க நீளமா துருத்திக்கிட்டு இருக்கிறத பாக்கவே பயமா இருக்கும். அவருக்கு அடியில ஒரு கெடா ஈட்டியால குத்தி ரெத்தம் சொட்டச் சொட்டக் கிடக்கிற மாதிரி இருக்கும். சின்னப் புள்ளங்கள்லாம் இதப்பாத்தா கண்ண மூடிக்கிடுவாங்க.

சாயந்தரம் ஏழு மணி. அலங்காரப் பூசைக்கான நேரம் நெருங்கிருச்சி. ஊரு மக்க எல்லாரும் கோயிலுள கூடி இருந்தாங்க.

பூசாரி வந்து சாமிக்கு எண்ணை அபிசேகம் செஞ்சாரு. எல்லா சாமிக்கும் சந்தனம் குங்குமம் வச்சு மால போட்டாரு. எல்லாரும் பயபக்தியா அமைதியா நின்னுக் கிட்டிருந்தாங்க. பூசாரி சாம்பிராணி தட்டெடுத்து மணி ஆட்டுனாரு. எல்லாரும் சாமிய கையெடுத்து கும்பிட் டாங்க.

திடீர்னு 'ஓ'ன்னு ஒரு ஊளச் சத்தம். பாலையா மாமா அம்மஞ்சாமி ஆட ஆரம்பிச்சிட்டாரு. பொம்பளைங்க எல்லாரும் குலவ போட ஆக்ரோசமா ஆட ஆரம்பிச்சிட்டாரு.

பாலையா மாமாவோட ஆட்டம் ஒரு தினுசா இருக்கும். பல 'ஸ்டெப்' வச்சி ஆடுவாரு. மேளத்தோட தாளத்துக்கு ஏத்த மாதிரி கையயும் காலயும் தூக்கி வச்சி ஆடுறத பாக்கவே ஒரு ரசிகர் மன்றம் உண்டு. ஒக்காளி.. கையி காலு வலிக்குமோ வலிக்காதோ. மேளத்த நிப்பாட்டுற வரைக்கும் நிக்காம ஆடுவாரு.

இன்னும் மாயாண்டி தாத்தாவுக்கு சொடலசாமி எறங்கல. மேளத்த பக்கத்துல கொண்டுபோயி இன்னும் வேகமா அடிக்க ஆரம்பிச்சாங்க. அப்பதான் சாமி எறங்குமாம். நாயனத்த கொண்டு காதுக்குப் பக்கத்துல ஊதுனாங்க. பொம்பளைக எல்லாம் குலவ போட ஆரம்பிச்சாங்க.

மாயாண்டி தாத்தாவோட கையும் காலும் லேசா ஒதற ஆரம்பிச்சிச்சு. 'படார்'னு பூடத்து முன்னால குத்தி வச்சிருந்த ஈட்டிய உருவினாரு. 'ஏய்ய்ய்...'னு சத்தம் போட்டுக்கிட்டே உறும ஆரம்பிச்சாரு. சாமி எறங்கிரிச்சி. சந்தனத்த அவரு ஒடம்பெல்லாம் தடவி மால போட்டாங்க. குதிச்சி குதிச்சி ஆட ஆரம்பிச்சிட்டாரு.

திடீர்னு மேளத்த நிப்பாட்ட சொன்னாரு மாயாண்டி தாத்தா. "நாளக்கி என்னைய சரியா 12 மணிக்கு மயான குழிக்கு வேட்டைக்கு அனுப்பிருங்கப்பா. 'லேட்' பண்ணீராதீங்கப்பா"ன்னாரு. திடீர்னு சாமி இங்கிலீசும் பேசுவாரு. பக்கத்துல நின்ன வேலுசாமி "அதெல்லாம் லேட் ஆவாது. சரியா 12 மணிக்கு அனுப்பிருவோம்"ன்னான். "அடிப்பா மேளத்த"ன்னு தாத்தா சொல்ல திரும்பவும் துள்ளித் துள்ளி ஆட ஆரம்பிச்சிட்டாரு.

கொஞ்ச நேரத்துல எல்லாரும் வந்து சாமிகிட்ட தங்கடம் (குறி) கேக்க ஆரம்பிச்சிட்டாங்க. கையத்தூக்கி, சைகை காண்பிச்சி மேளத்த நிப்பாட்டிய சிங்காரம், மாயாண்டி தாத்தாவ நெருங்கி, "சாமி, மூனு வருசமா வெளச்சலே இல்ல, இந்தா வருசமாவது வெளச்சல் இருக்குமா?"ன்னு ரொம்ப பவ்யமா கேட்டான்.

**வயசுக்கு வந்த**
**பொண்ணுகளப் பாத்து**
**நக்கலடிக்கிறதும்**
**சைகை காட்டுறதும்னு**
**ஒவரா போவானுக.**
**ஆட்டக்காரி ஆடுனான்னா**
**இவனுகதான் அவளத்**
**தொட்டு ருவா குத்துவானுக.**
**அதுக்கப்புறம்தான்**
**பறப் பயலுகள குத்தச்**
**சொல்லுவானுக.**
**மேளக்காரங்ககிட்டச் சொல்லி**
**அவனுக சாதி பாட்ட படிக்கச்**
**சொல்லுவானுக.**

கொஞ்ச நேரம் அவனையே பாத்தாரு மாயாண்டி தாத்தா. "அடிப்பா மேளத்த"ன்னாரு. ஒரு ஆட்டம் போட்டாரு. "நிப்பாட்டு"ன்னு கைய காண்பிச்சாரு. இப்ப சிங்காரத்தப் பாத்து, "இந்த வருசம் செழிப்பா மழைய தாரேன். ஊரு மக்க யாரும் கவலைப்பட வேண் டாம். ம்... புடி திருநீர!"ன்னாரு. மேளம் அடிக்க திரும் பவும் ஆட ஆரம்பிச்சிட்டாரு.

"ஆமா... அதயே வருசா வருசம் சொல்லுங்க. இங்க அவனவன் இத்து இடியாப்பமாகி, நொந்து நூடுல் சாகிக்கிட்டு இருக்கான். அவனவன் கடன உடன வாங்கி கிட்டத்தட்ட அம்பதாயிரம் செலவழிச்சி பொங்கலு வைக்கிறான். அட போங்கப்பா! மழை பேஞ்சா வெளயும்" கூட்டத்துக்குள்ளே கருப்பசாமி முணுமுணுக்கிறான்.

இவன் எப்பவும் இப்படித்தான் எகத்தாளமான ஆளு. வெடுக்குன்னு பேசிப்புடுவான். நல்லது கெட்டது தெரியாது. இடம், ஏவல் அறிஞ்சி பேச மாட்டான். ஆனா அவன் பேச்சில நியாயம் இருக்கும். நல்ல வேள... எவனுக்கும் கேட்கல. இல்லன்னா சாமியையே கொற சொல்லுறயான்னு கண்டந் துண்டமா ஆக்கிப்புடுவானுக.

திடீர்னு கூட்டத்துக்குள் சலசலப்பு. கந்தசாமி பொஞ்சாதி ஆவுடையம்மா ஆட ஆரம்பிச்சுட்டா. அப்படியே மாயாண்டி தாத்தாகிட்ட கொண்டு வந்தாங்க. தாத்தா திருநீர போட்டு "நீ யாரு? இங்க எதுக்கு வந்த! நீ சாமியா? பேயா? என்ன வேணும்? சொல்லு!"ன்னாரு.

ஆவுடையம்மா வாய தொறக்கல. மாயாண்டி தாத்தாவும் விடல. மேளத்த அடிக்கச் சொல்லி ஆடிக்கிட்டே, ஆவுடையம்மா தலையில ஓங்கி ஒரு அற வுட்டாரு. அவ்வளவுதான். "நான்தான் செத்துப்போன மாடத்தி"ன்னு அழ ஆரம்பிச்சிட்டா ஆவுடையம்மா.

"யாரு? நம்ம மாடத்தி அத்தையா? அத்த ஒனக்கு என்ன வேணுமோ வாங்கிகிட்டு இந்தப் பொண்ண உட்ரும்மா"ன்னாரு மாயாண்டி தாத்தா ஆடிக்கிட்டே


படிப்பகம்

www.padippakam.com

"இவரு சாமி ஆடுறாரா? இல்ல ஒறவு மொற கொண்டாடுறாறா? ஒரு எழவும் புரியலே"ன்னுகிட்டே கருப்பசாமி ரேடியோ செட்டுக்காரனை நோக்கிப் போனான்.

கொஞ்ச நேரத்துல மாயாண்டி தாத்தா சாமி ஆடு றத நிறுத்திட்டாரு. ஊரு மக்களும் அவங்கவங்க வீட் டுக்கு சாப்பிடப் போயிட்டாங்க.

"நேரம் 10 மணி ஆகிட்டு. ஆட்டக்காரங்க எங்கிருந் தாலும் ஒடனடியா ரெடியாகி மைதானத்துக்கு வர வும்"ன்னு மைக்குல கத்த ஆரம்பிச்சான் கருப்பசாமி.

கும்பாட்டம்னு சொன்னா பக்கத்து ஊருகளுல இருந்து வேற சாதி ஆம்பளைகளும் வருவானுக. நாடாக் கமாருக பசங்க வந்தா செவனேன்னு பார்த்துப் புட்டு போயிருவானுக. இந்த தேவமாரு பயலுக வந்தா தான் அழிச்சாட்டியம் பண்ணுவானுக.

ஊரு மக்களெல்லாம் கீழே ஒக்காந்திருப்பாங்க. இந்தப் பயல்களுக்கு மட்டும் தனியா 'சேர்' போட்டுக் கொடுத் திரனும். அவனுகளுக்கு எதிரா யாரும் 'சேர்' போட்டு ஒக் காரக் கூடாது.

வயசுக்கு வந்த பொண்ணுகளப் பாத்து நக்கலடிக் கிறதும் சைகை காட்டுறதும்னு ஓவரா போவானுக. ஆட் டக்காரி ஆடுனா்ன்னா இவனுகதான் அவளத் தொட்டு ரூவா குத்துவானுக. அதுக்கப்புறம்தான் பறப் பயலுகள குத்தச் சொல்லுவானுக. மேளக்காரங்க கிட்ட சொல்லி அவனுக சாதி பாட்ட படிக்கச் சொல்லுவானுக.

இப்படியே அன்னிக்கி ராத்திரி முழுக்க இவனு களுக்குத்தான் விசேசம் நடக்கும். அவனுக வயக்காட்டுல வேல பாத்து வயித்த கழுவுறதுனால இந்தப் பறப்பயலு களால அவனுகள எதிர்த்தும் பேச முடியறதில்ல.

மணி 11 நெருங்கிருச்சி. கூட்டஞ் சேர ஆரம்பிச் சிருச்சி. மைதானத்தச் சுத்தி ஒவ்வொரு குடும்பமா பாய போட்டு ஒக்கார ஆரம்பிச்சாங்க. ஒரு ஓரமா 10, 15 சேரு கள போட்டு வச்சிருந்தாங்க. ஆட்டம் ஆரம்பமாச்ச

அந்த மேக்குடிப் பயலுக எல்லாம் ஒவ்வொருத் தனா வந்து சேருகள்ள ஒக்காந்தானுக. ஆட்டம் சூடு பிடிக்க ஆரம்பிச்சதும் இவனுகளோட 'ஆட்டம்' தாங்க முடியல. கும்பக்காரிய தொட்டுத் தடவி காசு குத்துறதும், விசிலடிக்கிறதும், கைத்தட்டுறதும்னு ஏகபோகமா நடந் துக்கிட்டு இருந்திச்சி.

இத எல்லாத்தையும் ஒரு ஓரமா சில பசங்களோட ஒக்காந்து பாத்துகிட்டு இருந்தான் கருப்பசாமி. 'சுரு சுரு'ன்னு ஏற ஆரம்பிச்சிருச்சி. கூட இருந்த பசங்கள கூப் பிட்டான். நேராக வீட்டுக்குப் போனான்.

வீட்டுல கெடந்த நார் கட்டில எல்லாருமா சேர்ந்து தூக்கிக்கிட்டு வந்தானுக. நேரா அந்தப் பயலுக முன்னால கொண்டு வந்து போட்டானுக. கால் மேல கால் போட்டுக்கிட்டு கட்டிலுல ஒக்காந்தானுங்களே பார்க்கலாம்.

அவ்வளவுதான்... நமக்கு முன்னால இந்தப் பறப் பயலுக ஒக்கார்றதான்னு விறுவிறுன்னு எல்லா பயலு களும் எழுந்திருச்சானுக. ஊர நோக்கி நடய கட்டிட் டானுக.

அதுக்கப்புறம் இன்னக்கி வரைக்கும் எந்தப் பயலுகளும் கும்பாட்டம்னா எட்டிக்கூடப் பாக்குற தில்ல.


**தலித் நிலவுரிமை**

**மாவட்ட ஆலோசனைக் கூட்டம்**

நாள் :
12.10.2005

நேரம் :
பிற்பகல் 2.30 மணி

இடம் :
8560/6ஹெஷ் பாரத் நகர்,
திருமயம் சாலை, புதுக்கோட்டை

தொடர்புக்கு
மருத்துவர் ஜெயராமன்
(04322-262620/223322)



**தலித் மனித உரிமை மாநாடு**

நாள் : 16.10.2005

நேரம் : காலை 10 மணி முதல்

இடம் : அரசப்ப கவுண்டர் திருமண மண்டபம் *(தாசில்தார் அலுவலகம் அருகில்),* மேட்டூர், சேலம் மாவட்டம்.

**நிகழ்ச்சி ஏற்பாடு**
**தலித் மக்கள் இயக்கம்,**
**சேலம்**

**தொடர்பு**
**வழக்கறிஞர் முத்துசாமி**
**(94432-01806)**
**வழக்கறிஞர் பிரதாபன்**
**(94432-01807)**




படிப்பகம்

www.padippakam.com



# ராவ்சாகிப் ரெட்டமலை சீனிவாசன்

## அறிமுகம்

தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் சனநாயகத்திற்காக தமிழகத்தில் குரல் கொடுத்தவர் ரெட்டமலை சீனிவாசன். பொது இடங்களில் நடக்கவும், பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கவும், கோயிலினுள் அனுமதிக்கவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அவர் போராடினார். தாழ்த்தப்பட்டோரின் வாழ்வு நிலை உயர நிலங்கள் பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும் போராடினார்.

## இளமைப் பருவம்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் கோழியங்குளம் கிராமத்தில் ரெட்டமலை, ரங்கநாயகி இருவருக்கும் 7.7.1860-இல் மகனாகப் பிறந்தார். ரெட்டமலை என்பது தந்தையின் பெயர். இதனால் இவர் ரெட்டமலை சீனிவாசன் என அனைவராலும் அழைக்கப்பட்டார்.

தமிழக தலித் மக்களின் முன்னோடியாக விளங்கிய இவர், தலித் மக்களிடையே முதல் பட்டப்படிப்பு படித்தவர். தனது கல்வி ஆற்றல் மூலம் மற்ற தலித் மக்களும் படிக்க வேண்டும், கல்வியின் மூலம் தனது நடைமுறை வாழ்விலிருந்து மாற்றம் கொண்டுவர வேண்டும் என்பதற்காக தலித் மக்களுக்கு விழிப்புணர்வு அளித்தவர். இதற்காக பல கல்வி நிலையங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கல்விக் கட்டணம் வசூலிக்கக்கூடாது என வாதிட்டார்.

## சமுதாயப் பணியும், அரசியல் பணியும்

ஒளிவு மறைவின்றி உண்மையைப் பேசி நல்வினையாற்றுதலையே கொள்கையாகக் கொண்டவர். இறந்தும் வாழ்வார்கள், அப்பெருமைக்கு பழங்குடி மக்களின் முதுபெரும் சமுதாயத் தலைவர் ரெட்டமலை சீனிவாசன் உரியவராவார். சாதிக் கொடுமைகள், சாத்திர சம்பிரதாயம் விரட்ட பல இன்னல்களை ஏற்று கல்லூரிப் படிப்பை படித்தவர். இவர் நீலகிரியில் வணிகத்துறை கணக்காளராக பணியாற்றினார். பிறகு சென்னையில் குடியேறி, 1882-இலிருந்து 1885 வரை பல அரசாங்க குறிப்பேடுகளையும் வரலாற்று நூல்களையும், கல்வெட்டுகளையும் ஆராய்ந்தார். தென்னிந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து தலித் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமைகளை நேரில் கண்டறிந்தார்.

1884-இல் தியோசாபிகல் சொசைட்டியின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு எதிர்காலத்தில் இவ்வமைப்பு பழங்குடி மக்களுக்கு பயன்படாது என்பதை உணர்ந்து அப்பேரவையிலிருந்து விலகினார். பழங்குடி மக்கள் வாழும் பகுதிகள்தோறும் சென்று கல்வி கற்பதின் அவசியத்தையும், சுகாதாரத்துடன் இருத்தல், சுத்தமான ஆடைகளை அணிதல், ஒழுங்காக பேசுதல் போன்றவைகளை கடைப்பிடித்து வாழ வேண்டுமென்று மக்களை வற்புறுத்தினர்.

1891-இல் ஆதிதிராவிடர் மகாசன சபையில் பணியாற்றினார். 1892-இல் பறையன் என்ற பத்திரிக்கையைத் தொடங்கி மக்கள் விழிப்படையும் வகையில் பல அரிய கருத்துக்களையும், ஒவ்வொரு மாவட்டம் மற்றும் மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்படும் கொடுமைகளையும் பறையன் பத்திரிக்கை மூலம் வெளிக்கொண்டு வந்தார்.

ரெட்டமலை சீனிவாசன் அவர்கள் காந்தியின் அரசியல் தோற்றம் உருவாவதற்கு முன்பே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபட்ட தலைவர் ஆவார். காங்கிரஸ் தோன்றிய சில ஆண்டுகளுக்குள் 1891-இல் பறையர் மகாசனசபை எனும் அமைப்பை தோற்றுவித்துப் பணியாற்றத் தொடங்கினார். தாழ்த்தப்பட்டோரின் குறைகளை நீக்கும்பொருட்டு வைசிராய், கவர்னர்/வைசிராய் லார்டு எல்ஜின், கவர்னர் லார்டு வென்லாக்கிடமும் ரெட்டைமலை சீனிவாசன் மனுக்களை கொடுத்து குறைகளை நீக்க கேட்டுக்கொண்டார்.

1904-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றார். அங்கே நோட்டாலில் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக பணியிலமர்ந்தார். அப்போது அங்கு காந்தியடிகள் வழக்கறிஞராக பணியாற்றிக் கொண்டிருந்தார். காந்தியடிகளின் மோ.க. காந்தி என்கிற தமிழ்க் கையெழுத்து உருவாகக் காரணமாக இருந்தவர். 1920 வரை அப்பணியில் தொடர்ந்து இருந்தார். கிழக்கு ஆப்பிரிக்காவிலும் இரண்டு ஆண்டுகள் வாழ்ந்தார். இவர் அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய பிறகு 1921-இல் இந்திய அரசியலில் பங்குகொண்டார்.

ரெட்டமலை சீனிவாசன் 1923-38 வரை சட்டமன்ற நியமன உறுப்பினராக இருந்தார். இக்காலகட்டத்தில் பல சமுதாயப் பணிகளை செய்தார். 1935-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 429 சாதிப்பிரிவுகளைக்கொண்ட தாழ்த்தப்பட்டோர் இருக்கின்றனர். சென்னை ராஜதானியில் மட்டும் 74 சாதிப் பிரிவுகள் இருந்தன. இவர்கள் எல்லா மக்களுக்கும் சமமாக பொதுச் சாலைகள், பொது இடங்கள், கட்டிடங்களில் நடக்கவும், பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கவும் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்கிற தீர்மானத்தை 1924-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25-ஆம் நாள் கூடிய சட்ட நிர்ணய சபையில் கொண்டு வந்தார். இதற்கான அரசாணை 1925-ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர்களிலேயே முதன் முதலாக கல்லூரிப் படிப்பை முடித்தவராதலால் கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்தார். அதனால் தாழ்த்தப்பட்டோர் கல்வி கற்பிக்கப்பட, தாழ்த்தப்பட்டோர் கல்விக் கழகத்தை ஏற்படுத்தினார். சென்னை மாகாணம் தழுவி தாழ்த்தப்பட்டோர் 'பெடரேசனை' ஏற்படுத்தினார்.


படிப்பகம்

www.padippakam.com

ரெட்டமலை சீனிவாசன் பணிகளுக்காக பிரிட் அரசு 1926-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ஆம் நாள் 'ராவ்சாகிப்' பட்டத்தை அளித்து சிறப்பித்தது.

இலண்டனில் முதலாம் வட்ட மேசை மாநாடு 1930-இல் நடைபெற்றது. இம்மாநாட்டில் 89 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டை புறக்கணித்தது. 89 பிரதிநிதிகளில் 16 பிரதி நிதிகள் மூன்று பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளைப் பிரதி நிதித்துவப்படுத்தினர். 53 இந்திய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் தாழ்த்தப்பட்டவர்களின் சார்பாக டாக்டர் அம்பேத்கரும், ரெட்டமலை சீனிவாசனும் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் ஒவ்வொரு பிரதிநிதியும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரிடம் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர். அவ்வாறு செய்துகொண்டபோது ரெட்டமலை சீனிவாசன் "நான் இந்தியாவில் தீண்டப்படாத மக்கள் சமுதாயத்திலிருந்து வந்தவன்; சாதியில் பறையன்" என்று கூறிக்கொண்டார். தனது கோட் பாக்கெட்டில் 'ரெட்டமலை சீனிவாசன் பறையன், தீண்டப்படாதவன்' என்கிற அட்டையை அணிந்திருந்தார்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் கைகுலுக்க முனைந்த போது சீனிவாசன் மறுத்து தன்னை தொட்டால் தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்ற நிலை உள்ளதை உணர்த்தினார். ஆனால் மன்னரோ அவரை அருகே அழைத்துக் கை குலுக்கினார்.

முதலாவது வட்டமேசை மாநாட்டில் ரெட்டமலை சீனிவாசன் பேசுகிறபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கினால்தான் தீண்டாமைக் கொடுமை ஒழியும் என்றார். சட்டமன்றத்தில் ஆதிதிராவிடர்களுக்கு போதிய அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

1931-ஆம் ஆம் ஆண்டு ரெட்டமலை சீனிவாசன் அவர்களுக்கு திவான் பகதூர் பட்டம் வழங்கப்பட்டது. மேலும் இவர் இரண்டாவது வட்டமேசை மாநாட்டிலும் கலந்து கொண்டார். இம்முறை காங்கிரசின் சார்பில் சரோஜினிதேவியும், காந்தியும் கலந்து கொண்டனர். வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர்கள் இந்தியர்களின் கையில் ஆட்சியை ஒப்படைப்பதைக் கடுமையாக எதிர்த்தனர். இம்மாநாட்டில் காந்தியடிகள் பின்வருமாறு உரையாற்றினார்.

"இந்து, முஸ்லிம், சீக்கியர் என்ற முக்கோணத்தை விரும்பாமல் இருந்தபோதிலும், அதை காங்கிரஸ் வேற்றுமை அகற்றி ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்குச் சரித்திரப் பூர்வமான சில காரணங்கள் உண்டு. ஆனால் இந்தக் கோட்பாட்டை, எக்காரணம் கொண்டும் எந்தப் பாணியிலும் வடிவத்திலும் விரிவுபடுத்த இசைய மாட்டோம்.

தீண்டப்படாதவர்களைப் பொறுத்தவரை டாக்டர் அம்பேத்கர் கூறுவதை நான் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் காங்கிரஸ் அவருடன் சேர்ந்து தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினையைக் கவனித்துக் கொள்ளும். இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள எல்லா மக்களைப்போலவே தீண்டப்படாதோர் பிரச்சினையும் காங்கிரசின் முக்கிய கவனத்தில் உள்ளது. ஆகவே மேற்கொண்டு எவ்வித சிறப்புப் பிரதிநிதித்துவத்தையும் நான் கடுமையாக எதிர்ப்பேன்."

காந்தியின் இவ்வுரை மாநாட்டில் கலந்து கொண்ட டாக்டர் அம்பேத்கர், ரெட்டமலை சீனிவாசன் போன்ற தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகளுக்கு விட்ட சவாலாக இருந்தது. டாக்டர் அம்பேத்கர் "இந்திய மக்களைக் காங்கிரசும் காந்தியும் பிரதிநிதித்துவப்படுத்தலாம். ஆனால் எவ்விதத்திலும் தீண்டப்படாதாரை அவர்கள் முடிவு கட்டுப்படுத்தாது" என்றார். ஆனாலும் பிரிட்டிஷ் பிரதமர் இந்திய சமூகங்களுக்கான தீர்ப்பை வழங்கினார். இதன்படி முஸ்லிம்கள், சீக்கியர்கள், தாழ்த்தப்பட்டோர், ஐரோப்பியர்கள், கிறிஸ்தவர்களுக்கான தனித் தொகுதிகள் வழங்கப்பட்டன. தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதிகள் என வழங்கப்பட்டதில் காந்தி தமது எதிர்ப்பைக் காட்டினார். இந்துக்களிலிருந்து தாழ்த்தப்பட்டோரைப் பிரிக்கக்கூடாது என்றார். அதனால் காந்தி இங்கிலாந்திலிருந்து இந்தியா திரும்பியதும் கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார்.

அங்கும் அவரது எதிர்ப்பைக் கைவிடாமல் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். உயர் வகுப்பின் ஊதுகுழல்களாக விளங்கிய பெரும் பத்திரிக்கைகள் எல்லாம் டாக்டர் அம்பேத்கரையும் தாழ்த்தப்பட்ட தலைவர்களையும கடுமையாகத் தாக்கின.

"தனித் தொகுதி என்பதைத் தாழ்த்தப்பட்டோருக்கு மட்டும் அளிக்கவில்லை. இந்தியக் கிறிஸ்தவர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர், முஸ்லிம்கள், சீக்கியர் ஆகியோர் அனைவருக்கும் அளித்துள்ளனர். அவ்வாறிருக்க ஏன் காந்தி தாழ்த்தப்பட்டவர்களை மட்டும் பிரித்து இந்த நிலையை எடுத்துள்ளார் என்பது விசித்திரமாக இருக்கிறது" என்றார் டாக்டர் அம்பேத்கர்.

பூனா ஒப்பந்தத்திற்குப் பிறகு ரெட்டமலை சீனிவாசனின் பணிகளைச் சிறப்பிப்பதற்கு அடையாளமாக 1926-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1-ஆம் நாள் அவருக்கு 'திவான் பகதூர்' பட்டம் அளிக்கப்பட்டது. சென்னை இராஜதானிக்கு இராஜாஜி பிரதமர் ஆனபோது சமீன்தார்களின் நிலங்களை உழவர்கள் கைப்பற்ற வேண்டும் என முழங்கினார் ரெட்டமலை சீனிவாசன். இவருக்கு அளிக்கப்பட்ட ஒரு பாராட்டில் திரு.வி.க. அவர்களால் 'திராவிடமணி' எனும் பட்டம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இராஜாஜி அவர்களும் கலந்து கொண்டார்.

மாவட்ட மாநிலத் தாழ்த்தப்பட்டோர் ஆலோசனைக் குழுக்களிலெல்லாம் ரெட்டமலை சீனிவாசன் நியமன உறுப்பினராக இருந்து பணியாற்றினார். அது மட்டுமல்லாமல் பெரியார் அவர்கள் 1939-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8-ஆம் நாள் காங்கிரஸ் அல்லாதார் இயக்கங்களைக்கொண்ட ஒரு கூட்டத்தை நடத்தினார். அதில் ரெட்டமலை சீனிவாசன், எம்.சி. ராஜா, ராவ் சாகிப் என். சிவராஜ் போன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சற்றேறக்குறைய 50 ஆண்டுகள் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக உழைத்த ரெட்டமலை சீனிவாசன் செப்டம்பர் 18-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

**(தகவல் தொகுப்பு,**
**அதேகொம் பின்னகம்,**
**பாண்டிச்சேரி)**



படிப்பகம்

www.padippakam.com

எ.மு. இராதா

# கரிசனம்

பெருமையோடும், உற்சாகத்தோடும் அம்மா, அண்ணன், அண்ணி செவிகளுக்கு குளிர்ச்சியாக ஒரு செய்தியை நிகழ்கால எதிர்கால இருட்டிற்கெதிராய் மின்னலாய்த் தோன்றிய ஒளிக்கொடியின் முனையை எகிறித்தாவி தை நழுவிப் போகாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்ட கர்வத்தோடும் வெற்றி மிதப்போடும் பழனி தெரிவித்தான். தேனாய் இனித்திட்ட அச்செய்தியை, புதினம்பட்டி கிசாமணி மாமா கஞ்சாவைப் பற்ற வைத்து புகையை இழுத்து அவசரமாக உள்ளுக்கு விழுங்கி வெகு நேரம் வெளியே வரவிடாமல் நெஞ்சி இதயம் நரம்பு மூளை இவைகளில் பாத்தி கட்டி எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் தேக்கி வைத்து பரவசம் காண்பதுபோல், மனசும் புத்தியும் ஒன்றிப்போய் செவி மடுத்தார்கள் - 'வேலைக்கு தேர்வாயிட்டேன்' என்று பழனி வாயிலிருந்து வந்த ஒற்றைச் சொல்லைக் கேட்டு.

பெருமை இருக்காதா பின்ன. நூற்றி ஐம்பது தலைக்கட்டு இருக்கிற இந்த புதினம்பட்டி சேரியில கண்ணனுக்கும் காமராஜிக்கும் அடுத்தது மூணாவதாக பழனி கவர்மெண்ட் வேலைக்கு தேர்வாகி இருக்கான். ரெண்டு வருஷத்திற்கு முன்பே கண்ணன் அரசு போக்கு வரத்து கழகத்தில் டிரைவரா சேர்ந்து தான் இந்த ஊருக்கு ஒரு சீனியர் என்பதை நிரூபித்தவர். காமராஜ் பலமான அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு இருந்த ஒரு ஏக்கர் புஞ்சைய வித்து பின்னாடி சம்பாரிச்சுக்கலாம்ங்கிற துணிச்சல்ல நாற்பதாயிரம் ரூபாய நன்கொடையா கொடுத்து கடும் போட்டியை சமாளித்து கிராம தோட்டி வேலையை தனதாக்கிக் கொண்டவர். அதற்கு அடுத்து பழனி... யாருடைய சிபாரிசும் இல்லாமல்.

"அவன் ஒனக்கொரு வழியைக் காட்டிட்டாம்பா! வெய்யிலுன்னும் பார்க்காம மழையின்னும் பார்க்காம களைக் கட்ட தூக்கித் தூக்கி காப்புக் காய்ச்ச கையிக்கும் களஞ்சாரி களஞ்சாரி இத்துப்போயி தொடப்பக் கட்டையா தேஞ்சிப்போன விரலுக்கும் விடிவுகாலம் வந்துடிச்சி." அம்மா தன் இரண்டு கைகளையும் பார்த்து ஐந்து விரல்களையும் ஒன்றாக நெருக்கி 'எவ்வளவோ களஞ்சாரிப் பார்த்தும் வூட்ல கால் படி தாங்க மாட்டேங்குதே' என்று யார் மேலேயும் காட்ட முடியாத கோபத்தை ஒழுகிப்போன தன் ஓட்டை விரல்களை நெனச்சி வருந்தினாங்க.

அம்மாவின் மனசு அப்பாவை நினைத்து ஒரு பெருமூச்சு இழுத்து சன்னமாய் வெளியேற்றி "ம்... ஒப்பன் மட்டும் இந்நேரம் இருந்திருந்தார்னா ஒன்ன இந்த வேலைக்கா போவ உட்ருப்பாரு. எம் பையன பெரிய வாத்தியாராக்கிக் காட்றேன் பார்ன்னு கோணாருக் கிட்ட போட்ட சபதத்தல்லவா நிறைவேத்திருப்பாரு! ஏதோ ஆட்டுக்கும் வால அளந்து வச்சது மாதிரி ஒனக்குனு ஒரு வேலை அந்த பகவான் கண் தொறந்தானே."

"இதையே அந்த ஆத்தா கடைசி வரைக்கும் நிலைக்க வச்சிட்டாவே, ரெண்டு வேளைக் கஞ்சியாவது குண்டி காயாம குடிக்கலாம். நாசமாப் போனவனுவ தூங்கிக்கிட்டிருந்த மனுஷன தட்டி எழுப்பி நடுராத்திரி யில 'வேலைக்கு வாடா'னு கூட்டுட்டுப் போயி உசுர மாய்ச்சிட்டானுவ். 'ஒங்குடும்பம் நடுத்தெருவுல நிக்குமே என்ன பண்ணுவே இந்தா பத்து காசுன்னு' கொடுத்தானு வளா நன்றிகெட்ட நாய்வ. பரம்பரை பரம்பரையா பண்ணை வேலை செஞ்சி உசுர விட்டதுதான் மிச்சம். அவன் பார்த்து கூலி கொடுப்பான். நீங்க நின்னு தவிச்ச மாதிரி அவனுவ பொண்டாட்டி புள்ளைவ நின்னு தவிக்கும். நான் ஓரி. என் வாயால சொல்லக்கூடாது." அம்மாவின் உடலை ஆஸ்த்துமாவோடு சேர்த்து உருக்கிக் கொண்டிருந்த ஏமாற்றம், துக்கம், ஆற்றாமை பனிக் கட்டியாய் உருகி கண்களின் கடைக்கோடியிலிருந்து கவலை முகச் சுருக்கங்களில் முதன் முதலாக ஆனந்தக் கண்ணீராய் வழிந்திறங்கியது. அண்ணன் மாணிக்கத்தின் கோபப் பார்வை அம்மா மீது திரும்பியது.

"எத எப்ப நெனைக்கணும்ங்றது தெரியாதாம்மா? நாசமாப்போவ கீசமாப்போவனு இந்த நேரத்துல கூடவா நெனைக்கணும்? இதோட ஆயிரத்து ஒன்னாவது முறை சொல்லியிருப்ப, 'தெருவுல நின்னு தவிப்பானுவ'ன்னு. அப்புறம்... நான் ஓரி, என் வாயால சொல்லப்படாதும்ப"

'இந்த ஊருல நம்ம குடும்பத்துக்கும் இப்படியொரு சந்தோஷமான சந்தர்ப்பம் வாய்ச்சதே! எதிர்ப் பேச்சுக் கொடுத்து மற்ற வழக்கமான நாட்களைப்போல் மாறி விடக்கூடாது' என்பதையுணர்ந்த அம்மா தோட்டிக் களத்துக்கு பனை மட்ட அஞ்சாறு பொறுக்கிட்டு வரலாம்னு மெதுவா நகர்ந்தாங்க.

"சூரியன் மறைஞ்சி வௌக்கு வைக்குற நேரமாச்சி. இன்னுமா தழை மிதிச்சீங்க? கால்ல சேறு காத்துல காய்ஞ்சி போயி வரவரன்னு இருக்கு. வந்து கை கால கழுவிட்டு குந்து. த்தே.. சின்னத்தம்பி (பழனி) உளுந்தூரு விருந்துதான வர்ற! ஒரு பொரி பொட்டுக்கல்லை வாங்கிட்டு வந்திருந்தா வீரனாருக்கு ஒரு செறப்பு கொடுத்துருக்கலாமா?"

"அம்புட்டு தெரிஞ்சிருந்தா அப்புறம் என்னவாம்! தொரைக்கு கலெக்டர் வேலையல்லவா கெடைச்சிருக்கும். டாஸ்மாக்ல கலர் சாராயம் விக்கிறதுக்கா தேர்வாகியிருப்பாரு?"

அண்ணி தாழ்வாரத்தில் உள்ள செங்கல் அடுப்பில் சுள்ளி விறகு வைத்து அது மேல செதா விறகும் கூடவே



படிப்பகம்

www.padippakam.com

கருப்பாஞ்சருகை கசக்கி சுள்ளிக்கு அடியில் திணிச்சி வத்திக்குச்சி கிழிச்சி பத்த வச்சாங்க. அது கொஞ்ச நேரம் எரிஞ்சி சின்னச் சின்ன நெருப்பு உண்டானது. பின்னர் ஊதாங்குழல் தேடி எடுத்து ஊதி ஊதிப் பார்த்தும் அடுப்பு எரிஞ்ச மாதிரி தெரியல. கண்ண தேச்சி தேச்சி தண்ணி வரவச்சிக்கிட்டதுதான் மிச்சம். சிறுது யோசனைக்குப் பின் துரித ஏற்பாடாக கொலாப்பில் இருக்கும் சீமெண்ணெயில் கொஞ்சம் மூடியைத் திறந்து சொலுக்குனு ஊத்தி திக்குன்னு பத்த வச்சாங்க - பழனிக்கும் சேர்த்து.

"இப்ப என்ன குடிமுழுகிப் போச்சுங்கறீங்க? நாளைக்கே உளுத்தூர்பேட்டை டவுனுக்குப் போயி பொரி பொட்டுக்கடலை கூடவே வாழப்பழமும் சேர்த்து வாங்கியாந்து வீரனாருக்கு படைச்சி மறுநாளே கலெக்டராயிட்டுப் போறேன்."

"இந்த கிண்டலு கீவுட்டுக்குத்தான் நாலஞ்சி வருஷமா கேரளா, பெங்களூர், மெட்ராஸ்னு ஓடி ஓடி நாய்ப்படாத பாடுபட்டுக்கிட்டு இருந்த ஏதோ 'அந்தம்மா' புண்ணியத்துல இதுவாவது கெடைச்சுதே. அதுவும் பன்னண்டாவது பெயிலா போனவனுக்கு"

"நீங்க மட்டும் ஏ.சி. ரூம்ல வேலை, ஏ.சி. கார்ல பயணம்னு குளுகுளுனு வேலை செஞ்சிக்கிட்டு இருந்தீங்களாக்கும்"

"இப்படி குதர்க்கமா பேசி பேசித்தான் குடும்பம் கோபுரத்துல இருக்கு. இன்னும் பேசு, வானத்த தொட்டுடலாம்." அண்ணியும் தனக்கொரு வாய்ப்ப ஏற்படுத்திக்கிட்டு புத்தி சொல்ல ஆரம்பிச்சாங்க. மேலும் வாயக் கொடுத்து ஏன் வம்ப வாங்குவானேன்? மௌன மானான் பழனி. வேலை விஷயமா பேச்சு திசை மாறியது. "ஆமா... டெபாசிட் எவ்வளவு?" ஏற்கனவே காத்து வாக்குல தெரிஞ்சி வச்சிருந்தாலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மாணிக்கம் அண்ணன் கேட்டார்.

"பதினஞ்சாயிரம்" - பழனி.

"ஏ... அப்பா! அவ்வளவு பணமா? கடைசில இத திருப்பித் தந்துடுவாங்கதான?"

"ம்... தந்துடுவாங்க!"

"சம்பளம்?"

"ரெண்டாயிரம்."

பே ,துமென்ற மனம் புன்னகையை வரவழைத்தாலும் கார்த்திகை மாதத்து பகல் சீக்கிரம் மறைந்து விரைவாக இரவு வந்தது போல் திடீரென கவலை தொற்றிக் கொண்டது அண்ணனுக்கு. 'டெபாசிட் பணத்துக்கு என்ன பண்றது? யாருடைய கை கால்ல விழலாம்?'

அம்மா தோட்டிக் களத்துல இருந்து அஞ்சாறு பனை மட்டைகளை தலைல அடுக்கித் தூக்கிக் கொண்டு, கையில ரெண்டு மூனு கவ்விப் பிடிச்சி பாரம் தாங்க முடியாம ரோட்ல கிடத்தி 'டர்ர்ர்...ருனு' இழுத்துக்கிட்டு வந்தாங்க. அதே வேளையில் 'சுருக்கி' பாட்டியும் நெருப்பெடுக்க கரண்டிய எடுத்திக்கிட்டு வந்தது. முன்ன மாதிரி இல்லாம காலமும், அது ஏற்படுத்தித் தந்த வசதி வாய்ப்பையும் பாராட்டாம இருக்க முடியல. இந்த கம்ப்யூட்டர் யுகத்துலயும் இருவது முப்பது வருஷத்துக்கு முன்பிருந்த மாதிரி ஆப்பையு எடுத்துக்கிட்டா நெருப்பு எடுக்க வர முடியும்? தாங்கறாவுல சோத்தக் கொட்டியா கும்பலா குந்தித் திண்ண முடியும்? கட்றா சட்டியிலேயும் அடைச்சட்டியிலேயுமா தண்ணி குடிக்க முடியும்? கரண்டியில நெருப்பெடுக்கிற அளவுக்கு புதினம்பட்டி போன்ற குக்கிராமம் வளர்ச்சியடைஞ்சிருக்குன்னா... அந்த காலத்துக்கு நாம நன்றி சொல்லணுமா வேணாமா? அதே மாதிரி ஒரு வளர்ச்சியின் வாய்ப்புதான் பழனிக்கு டாஸ்மாக்ல விற்பனையாளர் பொறுப்பு. அத சுருக்கிப் பாட்டியிடம் அம்மா சொன் னாங்க. வேலை கிடைச்ச விசியத்த சொல்லி முடிச்சதும் அம்மாவின் முகத்தில் ஒரு எட்டு கிராம் பவுன் அளவுக்கு பிரகாசம் குடிகொண்டிருந்தது. அதுவே ரெண்டு மூனு நாளைக்கு மொத்தமா சேர்த்து ருசியான சாப்பாடு சாப்பிட்ட மாதிரி வயிற்றுலயும் மனசுலயும் 'திம்'முனு ஒரு திருப்தி.

"அப்படியா ரொம்ப சந்தோஷம்! அந்த பகவான் தான் தாங்கிருக்காரு. அவன் மனசு வச்சிட்டானா எல்லாமும் தலைகீழா மாறிப்புடும். நான் சொல்லல, எஞ்சின்ன பேரனுக்கு கண்டிப்பா வாத்தியார் வேலை கெடைக்கும்னு. இந்நேரம் செத்துட்ட எம்மருமவன் இருந்திருந்தா..." நெசமாலும்மே அழ ஆரம்பிச்சாங்க பாட்டியும்.

"அத ஏன் பெரியம்மா ஞாவகம் மூட்ற? நடந்தது நடந்து போச்சு. இனிமேவா வரப் போறாங்க?" ஆனாலும் அம்மாவால அழுவாம இருக்க முடியல. கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக்கொண்டு விசியத்துக்கு வந்தாங்க. "ரெண்டு ஆட்டுக்குட்டி வித்தேனு கேள்விப்பட்டேன். மொத மொத ஒங்கிட்டதான் கேக்குறேன். இல்லன்னு மட்டும் சொல்லிடாத. யாருகிட்ட கேக்கப் போனாலும் கடைசிவரைக்கும் அப்படியே ஆயிடும். ஒன்னால முடிஞ்சத ஏதோ ஆயிரம், அய்நூறு இந்த நேரத்துல கொடுத்து ஒத்தாச பண்ணினா ரொம்ப புண்ணியமா இருக்கும். சம்பளம் எடுத்ததும் மொத மொத ஒனக்குத்தான்."

"என்னா புள்ள அப்படி பல்லக் கெஞ்சற? நீங்க யாரு எவரு? எம்பாட்டி பொறந்த எடம் இது. ஒங்களுக்கே இல்லன்னுட்டு வேற யாருக்கு கொடுக்கப் போறேன் சொல்லு? மதவு மூக்கனுக்கு ஆயிரத்து எரநூறு கொடுத்தது போவ மீதி ஒரு நோட்டு இருந்துச்சி. அதுல இன்னிக்கு ரேஷன் கடைல நூறு ரூவாய்க்கு அரிசி வாங்கினது போவ மீதி ஒம்போது நூறு ரூபாய் இருக்கு. அத வேணாத் தர்றேன். கூடமாட இன்னும் வேற யாரு கிட்டயாவது பொறட்டிக்கோ. ஏதோ என்னால முடிஞ்சது. நாளைக்கு கண்ண மூடினா கிழக்குப் பக்கமா எம் பேரன் பழனி தோள்லதான் நான் ஊர்வலமா போவணும். எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்." பாட்டி கையைத் தூக்கி ஆசீர்வாதம் கொடுத்துவிட்டு நெருப்பெடுத்துக் கொண்டு அதுக்கு ஆக வேண்டிய காரியத்தப் பார்க்கப் போய்ட்டாங்க. எடுத்த எடுப்புலயே சுருக்கிப் பாட்டி சுனங்காம பணம் தர்றேன்னு ஒத்துக்கிட்டதுல எல்லோருக்கும் கொஞ்சம் சந்தோஷம். ஆனா பழனிக்கு மட்டும் லேசா உறுத்தல். நான் படிச்ச +2 பெயிலுக்கு இந்த வேல கெடைச்சதே குதிரைக் கொம்பு. எனக்கு வாத்தியார் வேலை கெடச்சுட்டதா பீத்திக்கிட்டு போவுது. அப்பனப் போலவே சுருக்கிப் பாட்டிக்கும் வாத்தியார் வேலை மேல அவ்வளவு பெரிய மரியாதை போலிருக்கு. அதான் அதுவா நெனச்சிக் கிட்டு... சரி, சரி... இருக்கட்டும். மேற்கொண்டு பழனிக்கு வேறு எதுவும் நினைக்கத் தோணல



படிப்பகம்

www.padippakam.com

இரவு சாப்பாட்டு நேரம். பன்னக் கீரைக்கும், ரேஷன் கடை பொன்மணி அரிசி சோத்துக்கும் ரவக்கூடம் நல்லாவே இல்லை. மத்த நாளா இருந்திருந்தா குடும்பத் தலைவனான மாணிக்கத்துக்கு அப்பனப் போலவே நற நறனு பல்லு கடியோட கோபம் வந்து சாப்பாட்டுத் தட்டோட தலைகீழ கவுத்துருப்பாரு. 'தெனமும் சாணிய தின்ற மாதிரி இருக்கிற இந்தக் கீரையைத் தவிர வேற எழவு எதுவும் கெடைக்கலையா'னு. ஆனா இப்ப அதுக்கு தோதான நேரங் கிடையாது. கை தட்டுல இருக்கிற அன்னத்த பிசைஞ்சி எந்திரத்தனமா அள்ளி வாயில வைக்குது. சிந்தனை மட்டும் டெபாசிட்டாக கட்ட வேண்டிய பதினைந் தாயிரம் ரூபாய்க்கு என்னடா பண்றதுன்னு மாடாய் அசை போடுது. அம்மா சொன்னார்.

"நடவு நட்ட காசையும் களைவெட்டுன காசையும் இட்லி தோசை வாங்கித் தின்னுட்டடதா ரெண்டு பேரும் எசிறிக் குதிச்சி ஏறிப் பாய்ஞ்சிங்க. களவனூர் மொடா மூக்கியம்மாகிட்ட ஆயிரத்து முந்நூறு ரூபா கொடுத்து வச்சிருக்கேன். வாங்கி ஆவ வேண்டிய காரியத்த சட்டு புட்டுனு பாருங்க."

அண்ணன், மனைவியைப் பார்த்து "பாருடீ... சீமாட்டியம்மா ஆயிரத்து முந்நூறு கோடி வட்டிக்கு வுட்ருக்காங்க. அத வாங்கி அவங்க சின்ன ஜமீன்தாரருக்கு சட்டுபட்னு ஆவ வேண்டிய காரியத்த பார்க்கணுமாம். மீதி பணத்த எந்த பேங்குல போட்டு வைக்கணும்?" தாய்க்கு தலப்புள்ள உசுர வாங்கும்ங்றத இந்த வீட்டு மாணிக்கம் செயல்படுத்துறவர்.

அம்மாவின் முகம் வழக்கம்போல வாட்டமாயிடுச்சி. "என்னால முடிஞ்சது அவ்வளவுதாண்டா. இதக் கூட பல்லக் கடிச்சிக்கிட்டு ரெண்டு மூணு வருஷமா சேர்த்து வச்ச பணம். மத்தவளாட்டம் ஒரு நல்லத பொல்லத வாங்கித் துன்னுப் பார்த்திருப்பேனா, இல்ல ஒரு மாங்கா பழம் பட்டாணியாவது வாங்கி துப்பிப் பார்த்திருப்பேனா"

மனுஷப் பிறவின்னு நாமளும் பூமியில பொறந்திருக்கிறோமே எதுக்கு? கேள்வி வெளியே வருமுன்னே விசும்பும் ஓசை. வீட்டை துக்கமாக்கியது. பர்ழாப்போன பட்டாணிக்கு கூடம் வெறும் பல்ல கடிச்சி வெறுப்பத் தீர்க்க வேண்டிய ஈனப்பிறவியடா நாம? எத்தனை ஆண்டுகள்தான் மரத்துப்போன மனசோடு மரித்துப் போறது? பழனி கூட இப்படிநெனச்சானோ என்னவோ. அவனும் தாயப் போலவே கண் கலங்கினான்.

"ஒனக்கு இதே பொழப்பா போயிடுச்சி, நேரங் காலம் தெரியாம எல்லோரையும் நோகடிச்சிக்கிட்டு. இப்ப நம்மகிட்ட எவ்வளவுதான் பணமிருக்கு?" பத்து பத்து ரூபாயா சில்லரை மாத்தி சில நூறு ரூபாய்களை அண்ணிக்கிட்ட கொடுத்து எவ்வளவு இருக்குனு எண்ணிக் கணக்கு சொல்லுனு கேட்டா திருதிருன்னு மரியாதையா முழிக்கிற அப்பிராணி. அப்புறம் ஏன் அவங்க எவ்வளவு பணம் இருக்குனு கேக்க மாட்டாங்க? ஆனாலும் மாணிக்கம் இப்படித்தான் பதில் சொல்வாரு.

"அது... கணக்கு வழக்கு தெரியில. நம்ம மேனேஜரைக் கூப்பிட்டுத்தான் தெரிஞ்சிக்கணும்"னு உசுப்பேத்துவாரு. சடார்னு கோவம் வந்துடும் அண்ணிக்கு. "இந்த நோணிப் பேச்சுக்குத்தான் வாயக் கொடுக்காம அக்கடானு கெடக்கறது"

அம்மாவும் ஆவலோடு "பணம் கையில எவ்வளவு தாம்பா இருக்குனு கேட்டாங்க" கோபத்தை மறந்து.

"கையில மூவாயிரத்தைநூறு ரூவா இருக்கும்மா. அதுவும் இந்தப் பொட்டப் பசங்களுக்கு காது குத்துறதுக்காக உருட்டி தெரட்டினது. மேங்கொண்டு செலவெல்லாம் சேர்த்து பதிமூணு பதினாலாயிரம் தேவைப் படும்மா"

"அந்தப் பணமும் சேர்த்துக்கப்பா"

"எந்தப் பணம்?"

"மொடாமூக்கிக்கிட்ட கொடுத்து வச்சிருக்கிறதும்"

"சரி... ஆயிரத்து முன்னூறும் ஒரு மூவாயிரத் தைனூறும் நாலாயிரத்தெட்னூறு. சுறுக்கிக் கெழவி கொடுக்குறத சேர்த்தா ஐயாயிரத்து எழுநூறு. எங்கிட்ட ரெண்டு மோதிரம், கால் பவுன் தோடு, கால் பவுன் தாலி. மொத்தம் ஒரு பவுனு. அடகு வச்சி ரெண்டாயிரத் தைநூறு வரை தேத்தனா, எட்டாயிரத்து எறநூறு வருது. கொறைக்கும் என்ன பண்றது? ஏண்டி... ங்கொம்மா வூட்லயாவது பணம் கிணம் இருந்தா வாங்கிட்டு வாயேன்."

"அவங்கள்ட்ட ஏது இப்ப? அஞ்சாறு பொட்டப் புள்ளகள பெத்து கட்டிக் கொடுத்து கலகலத்து போயிருக்குற அவங்க கஸ்ட்டம் யாருக்குத் தெரியும்? எதுக்கும் ஒருவாட்டி போய் விசியத்த சொல்லி வாங்கிட்டு வர்றேன். நீயும் பெருங்கழனிக்கு ஒந்தங்கச்சிகிட்ட போயி மொய்யில ஏதாவது கெடைச்சிருந்தா ஒந்தம்பிக்கு வேலை வந்துருக்கிறத சொல். நானூறு ஐநூறு கெடைக்குமான்னு காத கடிச்சிட்டு வா"

"இப்பதான் குடும்பத்தோட திருப்பதிக்கு போயிட்டு வந்தாங்க"

"அதனால...?"

"போனாலும் புரோசனமிருக்காதுங்கறேன்"

"அதான் வசனமே சொன்னான். தனக்குமின்னா ஏதுவோ சேர்ந்தும் களை வெட்டும்பாங்களே, சரியாதான் இருக்கு"

"பத்து ரூவா சில்லரைய ஒழுங்கா எண்ணத் தெரியாது. இதுல வசனம் ரெண்டு கிழிக்குதோ? சூத்து வாய மூடிக்கிட்டு வேலையப் பாருடி. காலைல விடிஞ்சதும் ஊருக்கு கௌம்பி சாயந்திரத்துக்குள்ளே டாண்ணு வந்துடணும், புரியுதா?"

பெரும்பாலான இந்தியக் குடும்பங்களில் குடி கொண்டிருக்கிற ஆணாதிக்கத்தைப்போல புதினம்பட்டி மாணிக்கத்தின் குடும்பமும் விழுதூன்றி தழைத்தோங்கியிருக்கிற ஆலமரமாட்டம் அந்த பண்பாட்டில் மட்டும் யாருக்கும் விட்டுக்கொடுக்காமல் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனாலும் அதைப்பற்றியெல்லாம் அண்ணி ஒரு பொருட்டா எடுத்துக்கல. காரணம் அவங்களுடைய கவனமும் டெபாசிட் பற்றிய சிந்தனையிலேயே இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

"நம்ம தொண்டர் ஐயாக்கிட்ட இல்லாத பணமா... அவருகிட்டயாவது..."

"கேக்கலாம்தான். ஆனா தருவாங்களான்னு அச்சமா இருக்கு"

"ஏன்"

"நீ இந்த ஊர்ல இருந்துகிட்டே ஏன்னு கேக்க றியே. நீயெல்லாம் ஒரு குடும்பக்கார பொம்பளையா?"

"ஒங்கிட்ட நல்லதுக்கும் பேச முடியாது, கெட்ட துக்கும் பேச முடியாது. ஒன் நாதாரிப் பேச்சை யாரு கிட்டயாவது வச்சிக்க. நான் நல்ல சாதி பொம்பள. ஏன்னும் கேக்கப்படாது, கேக்காட்டியும் இருக்கப் படாது. அதான் ஒம்புத்தி"

"பின்ன என்னடி இந்த கம்மனாட்டிப் பயதான் நாலைஞ்சி தருதலைகளோட சேர்ந்துகிட்டு கட்சி ஆரம் பிக்கறேன்னு அவங்களுக்கு எதிர்ப்பா கொடி யேத்தி போர்டெல்லாம் வச்சுட்டானே!"

"குதிரைக்காரய்யா?" பின்ன என்னடின்னதும் சமாதானமான அண்ணி தொடர்ந்தார். இப்பொழுது பழனி பதில் சொல்ல முந்திக்கொண்டான்.

"அவங்க கண்டிப்பா தரமாட்டாங்க"

"ஏண்டா... மாணிக்கம்?"

"விருத்தாசலத்துல மருந்துக் கடை வச்சிருக் கிறாரே..."

"ஆமாம் சின்னையா தங்கதுரை"

"ஒருநாள் அவங்கள அவசியம் வந்ததால 'ஏங்க தங்கதுரை'னு பேரச் சொல்லி கூப்பிட்டேன். பக்கத்துல வாழையிலை அறுத்துக்கிட்டிருந்த அவரு அப்பா குதிரைக் காரய்யா 'பேரைவுட்டு கூப்பிடுற அளவுக்கு வளர்ந்துட் டீங்களாடா'ன்னாரு. நான் 'ஒங்களையா கூப்பிட்டேன். எஞ்சோட்டு வயசுள்ளவரத்தானே கூப்பிட்டேன்'னேன். 'ஆமாண்டா... கீழ்வரப்பு, மேல் வரப்புனு எதுக்குடா இருக்கு'னு கத்தி தாம் தூம்னு குதிச்சாரு. 'நாளைக்கே கணபதினு என்னையே தலையிலடிச்சி சொன்னாலும் சொல்லுவீங்கடா. இப்ப காத்து ஒங்க பக்கம்தாண்டா வீசுது'ன்னு பொளம்பிக்கிட்டு நகர்ந்தவருதான். அதுல ருந்து அவரு என்னைப் பார்த்தாலும், நான் அவரப் பார்த்தாலும் ஒதுங்கியேதான் போவோம். ஆனா அந்த எட்டத்துல தங்கதுரை ஒரு வார்த்த சரின்னும் பேசல, தவறுன்னும் பேசல. இதுக்கே அஞ்சாவது வரைக்கும் என் கூடப்படிச்சவரு. அன்னிலருந்து அவருட்டயும் வச்சிக் கிறது கெடையாது. இதோட ஒன்றரை வருஷம் ஆவுது."

"சின்னய்யாங்கறதுல என்னடா சின்னம் வந்து ஒட்டிக்குது?" மாணிக்கம் நடப்பியலை உணராத தம்பி யின் அறிவின்மைக்காக ஆதங்கப்பட்டார்.

பழனி "நான் தெரியாமத்தான் கேக்கறேன். குதிரைக்காரருடைய பேரன் அவனுக்கு ஏழு அல்லது எட்டு வயசுதான் இருக்கும். அவன் ஒன்ன கூப்பிடல 'டேய் மாணிக்கம், தாத்தா ஒன்ன கூட்டிக்கிட்டு வரச் சொன்னாருடா'னு. அதுக்கு நீ கோபப்பட்டு அவன் கிட்ட சண்டைக்கா போன? ஞாயம்னா எல்லாருக்கும் சமமில்லையா? தன்மானம்ன்னா எல்லாருக்கும் ஒண்ணு தான் நாமளும் மனுஷங்கதான?"

"நல்லா பொழச்சிக்குவே. நாலு பேருக்கிட்ட வணக்கம் சனக்கமா இருந்தாத்தான் இந்த புதினம்பட்டி யில குப்பை கொட்ட முடியும். இதுக்கும் கீவுட்டுத்தனமா யோசிக்காதே! குப்பைக் கொட்டறதுக்கு வணக்கம் சனக் கமின்னு. குதிரைக்காரர் சாதி பேதம் பார்க்காம ஊருக்கே வட்டிக்கு உடுறவர். இப்ப அந்தாளு மொகத் துல எப்படி முழிக்கிறது? வெண்ணெய கடைய போற நேரத்துல ஏற்கனவே சட்டிக்கு அடியில ஓட்டையப் போட்டு வச்சிருக்கேயடா" அண்ணன் புலம்பினார்.

யாரிடம் பணம் பொரட்டலாமென்பதில் உரு வான சிந்தனையோட்டத்தில் சோறு வயிற்றுக்குள் இறங் கியதுகூட தெரியாமல் காலியான பாத்திரத்தை கழுவ மறந்து மீண்டும் புதினம்பட்டியை உலா வர...

அம்மா குறுக்கிட்டார். "இன்னும் நாலு நாளு குறுக்க இருக்கு. நாளைக்கு பாக்கலாம். இப்ப ஏனம் பானத்த எடுத்து ஏறகட்டிட்டு சோத்துக் குண்டான்ல தண்ணிய ஊத்தி மூடி வச்சிட்டு மொடங்குறதப் பாருங்க! 'அவன் நமக்கு வழி காட்டாம போவ மாட்டான்.' ஆறுதல் தேற்றி அம்மாவுக்கென்று விட்டுக் கொடுக்கப்பட்ட பழைய ஜமக்காளத்தை தேடி எடுத்துக்கொண்டு சுறுக் கிப் பாட்டி வீட்டுக்கு வழக்கமா படுக்க நடந்தாங்க. ஒட ம்பு ஓய்வெடுக்க நெனச்சாலும் மனசு மட்டும் புதினம் பட்டி சேரி சனங்க வீடுகளையும், ஆண்டைமார்வ வீடுகளை யும் பணத்தைத் தேடி எற வானத்த சுற்றியிருக்குற பழங்க யிறாட்டம் காவல் காக்க விழிச்சிக்கிட்டு இருக்கு. திரு டன் குபேர் வேறயா திக்கு திக்குனு ஒதைக்குது. போன வருஷமும் அதுக்கு முந்தின வருஷமும் திருடுபோன போது சாதாரணமாத்தான் எடுத்துக்க முடிஞ்சது, ஆனா அது நம்ம வீட்ல நடக்கலைங்கற காரணத்தால. இப்ப அது மாதிரி நெனைக்க முடியல. யாரு வீட்லயும் களவு நடக்கக் கூடாதுன்னு மனசு கெடந்து தவிக்குது. 'நானே திருட னுக்கு வாரிக் கொடுத்துட்டு நொந்து கெடக்கி றேன். நீ வேற வந்து பணம் கொடு, பணம் கொடுன்னு நச்சரிக் கிறியே'ன்னு இத ஒரு சாக்கா வச்சி கைய விரிச் சிட்டா என்ன பண்றது? சுயநலம்னு ஒண்ணு வரும் போதுதான் பொது நலத்தைப் பத்தி யோசிக்க முடியுது. பார்ப்போம். இப்படியேவா இருந்திடுவோம் இதுவரை எத்தனையோ பொழுதுகள் வழக்கமாதிரிதான் விடிஞ் சிருக்கு. இனி விடியப்போற பொழுதுகள்ல ஏதாவ தொண்ணு கொஞ்சம் மாறுதலா இருக்கும்ங்ற எதிர்பார்ப் போடுதான் பல பேரு... ஒரு வேளைக் கஞ்சியும் ரெண்டு வேளை நம்பிக்கையும் சாப்பிட்டு காலந்தள்ளிக்கிட்டு ருக்காங்க..."

இரண்டாம் நாள் இரவு அண்ணியோட தாய் ஊரான பூங்குன்று போய் அரை பவுன் மோதிரமும் ஐநூறு ரூபாய் பணமும் கொண்டு வந்ததா சொன்னாங்க அண்ணன் பெருங்கழனிக்கு செப்புள் பிரியாம பொறப் பட்டு, தங்கை லட்சுமியிடம் பழனிக்கு வேலை வந்துருக் குற விசயத்த சொல்லி 'இன்னும் ஒரு ஆயிரம் ரூவா இருந்தா போதும்மா'னு தலைய சொறிஞ்சிருக்காரு. தங்கச்சி லெட்சுமியோ 'யார் யாருக்கோ ஏங்கனா தாங் கனா நூத்தப் பத்தக் கொடுத்து ஒதவியிருக்கேன். இந்த நேரத்தில நமக்குனு வரும்போது கைல ஒண்ணுமில்லாம



படிப்பகம்

www.padippakam.com

போயிடுச்சே. என்ன பண்ணுவேன். பத்து நாளைக்கு முன்ன வந்துருந்தா கோவிலுக்கு போறதக் கூடம் தள்ளி வச்சிருப்போமே! இருண்ணா, சின்ன மாமனார் வீட்டுக்கு போயிட்டு வர்றேன்'னு ரெண்டு மணிக்கு பக்கத்துத் தெருவுக்கு போயி மூணு மணிக்கு கால் பவுன் தோடும், முன்னூறு ரூபாய் பணமும் இந்தாண்ணு கண்ணத் தொடச்சிக் கிட்டே வந்து கொடுத்து 'என்னை என்ன குபேரன் குடும்பத்திலியா கட்டிக் கொடுத்திங்க! நானே ஒரு அண்ணக்காவடிக்கு அடிமைப்பட்டு பொழுத ஓட்டிக்கிட்டிருக்கேன். ஏதோ மொதமொத் இல்லன்னு சொல்லாமா...' அந்த அனுபவத்தை பழனி காதுக்கும் எட்ற மாதிரி சொன்னார் மாணிக்கம். தங் கச்சி லெட்சுமியின் மொகத்த பார்த்துட்டு இந்த கால் பவுன், தோட்ட கையில வாங்குறதுக்கு ஆயிரம் மனப் போராட்ட மாயிடுச்சி. ஆனாலும் அந்த சமயத்துல வாங்காம இருக்க முடியல. அந்த ஒரு மணி நேரத்துல உதவிக்கு வராதவன் வந்துட்டேன்னு யார் யார் வீட்ல எப்படி யெப்படி பல்ல கெஞ்சியிருக்குமோ! நெனச்சிப் பார்க் கும்போது அண்ணன் மாணிக்கத்தின் மனசும் ரொம்ப சங்கடப்பட்டுத்தான் போச்சி.

அண்ணி வாங்கியாந்த அரை பவுனு தோடும், அய்நூறு ரூபாய் பணமும் சேர்த்து லெட்சமி கொடுத்த கால் பவுன் தோடும், முன்னூறு ரூபாய் பணமும் சேர்த்து, மூணாம் நாள் விடிஞ்சதும் மொத ஆளா சேட் டுக் கடைக்குப் போயி அடகு வச்சி கெஞ்சி கூத்தாடி அதிக பட்சமா ரெண்டாயிரம் ரூபாய் வாங்க பொறு மையில்லாம அந்த ராத்திரியிலேயே ரயில்வேயிலிருந்து ரிட்டையர்மென்ட்டான சவுரிநாதன் பொண்டாட்டி இருளாயி வீட்டுக்குப்போயி திரும்ப வந்தார் மாணிக்கம்.

“எங்க போயி வர்ற இந்த நேரத்துல?”

“பென்ஷன் ஆயாகிட்ட போயிட்டு வர்றேன்”

“எதுக்கு?”

“இதக்கொடுத்து பணம் வாங்கிட்டு வர்றத்தான்”

“நொய்யரிசி கொதி தாங்காது நோனிமாடு சொம தாங்காதுங்கறது சரியாத்தான் இருக்கு. ஏன் காலைல கேட்டா கொடுக்க மாட்டாங்களா?”

“அய்யய்ய! நேத்தே கேட்டிருக்கப்படாதா? பென் ஷன் பணத்துல நாராயணனுக்கு ஆயிரம், சன்னி யாசிக்கு ஆயிரம்னு வட்டிக்கு விட்டுட்டேன்னு கைய விரிச்சிட்டா என்னப் பண்றது. அதான் இப்பவே போ யிட்டு வந்தேன்!”

“ம்... ஹூம்... ரொம்ப எச்சரிக்கைதான். இந்த யோசனையும் இந்த பரபரப்பும் அப்பவே இருந் திருந்தா இப்படி லோலோனு அலைய வேண்டியதில்ல. சரிதான்.” இப்ப எல்லாத்தையும் கூட்டிக் கழிச்சிப் பார்த்தாரு. அடகு வச்சதும், வைக்கப் போறதும், பணத் தையும் கணக்கு சேத்தாரு. இப்போது முகத்தில் முக் கால் வெற்றிக்குரிய சந்தோஷம். பதினோரா...யிரம் கையிருப்பு. அப்பா! மேங்கொண்டு செலவுக்கெல்லாம் சேர்த்து இன் னும் ஐயாயிரம் தேவை. என்ன செய்ய லாம்? திடீரென ஒரு ஆயிரம் ரூபாய்க்கு தோதான ஐடியா பளிச்சிட்டது. வீட்ல முப்பது படி நெல்லு அவிக்கிற மாதிரி ஒரு பெரிய பித்தளை போவுனி, ஒரு அண்டா. கண்ண மூடிக்கிட்டு ஆயிரம் ரூபாய் கொடுப் பானுவ. ஆக பன்னண்டாயிரம் லம்பா இருக்குது. தோ... புடி... தா... பிடின்னு இன்னும் ஒரு நாலாயிரம்தான் தேவை. கண்ணன் டிரைவர்ட்ட போனாலும் இப்ப எடு படாது. ஏன்னா இப்பதான் அவரும் ஒன்னபுடி, என்ன புடின்னு பிச்சிப்புடுங்கி வேலைக்காக போக்யம் போட்ட ஒரு ஏக்கர மூட்டுருக் காரு. காமராஜ்? அய்யோ பாவம்! தோட்டி வேலை கெடைச்சும் யாருக்கும் நூத்த பத்த கொடுக்க முடியாத அளவுக்கு இன்னு கஷ்ட ஜீவனம்தான்.

புதன்கிழமை காலை ஆறு மணி. அந்த நேரத்துல தான் அதுக்க மொத நாள் நடந்த சங்கதிகளை குப்பன் கடை டீயக் குடிச்சிட்டு, பக்கத்திலேயே உள்ள திண் ணையில செத்த நேரம் குந்தி, பேப்பர்ல பிரிண்டிங் போடுவதற்கு முன் சுடச் சுட புதினம்பட்டியினுடைய லோக்கல் செய்திய வயசு வித்தியாசம் இல்லாம எல்லோ ரும் பகிர்ந்துக்குவாங்க - நேத்து நொள்ளயனுக்கு அண்டைக் கழிக்கப்போயி பெரிய இம்சையாயிடுச்சி மாமா. காலைல ஆறு மணியிலிருந்து நாலு மணி வரை வளைச்சுக் கட்டி வாங்கிட்டான். இனிமே ஏறு ஓட்ட எழுபத்தஞ்சி ரூபாய்ன்னுதான் வாங்கனும். இந்த லாரி காரனுவ நம்மூருக்கு கல்லு ஏத்தவர ஆரம்பிச்சதி லிருந்து நடு நட, களை பறிக்க பொம்பளைவ்வ வர மாட்டேன்ங்கறாளுவ. வண்டில போய் போய் ருசி கண்டுட்டாளுவ. இந்த மொறை எங்கம்மாதான் ஆட்சிக்கு வருவாங்க. இல்லை,இல்லை. எங்க கலைஞர்தான் ஆட்சிக்கு வருவாரு. எந்தக் கட்சி ஆட்சிய புடிச்சாலும் வெந்தக் கஞ்சிக்கு வழியப் பாருங்கடா. அந்தக் கல் லாக்குத்து மேட்டர் என்னாச்சி. அதுல அவன் மேல தப் பில்ல. அவதான் நச்சரிச்சாளாம். இந்த வருஷம் எப்படி யாவது காம்பொண்டு சுவர் வச்சுடணும். அப்பனாத் தான் ஐயனார் ஒரு மதிப்பா தெரிவார்.

“என்ன மாமா, பழனிக்கு வேலை வந்துடுச்சாமே! உட்றாத மாமா! கழுதை மேய்ச்சாலும் கவர்மெண்ட் டுல மேயினு பழமொழி. சம்பளத்தவிட ரெண்டு மடங்கு சைடுல சம்பாதிக்கலாம்னு சொல்றாங்களே! எலக் ஷனுக்கு அப்புறம் ‘அந்தாளு’ வந்தா ‘அந்தம்மா’ பத்தாயிரம் பேரத் தூக்கின மாதிரி, இவரும் பிராந்திக் கடையில இருக்கறவங்கள தூக்கிடுவாரு. பணமெல் லாம் தயாராத்தான் இருக்கா? கூத்தக்குடி புள்ள... என்ன டீ போடுற? ஒரு கொழாங்கல்ல எடுத்து டீயிலப் போட்டா அந்தக் கல்லு டீயில மெதங்கணும். அவ்வளவு கெட் டியா போடணும்.” இப்படி ஏதாவது பேச்சுக்கள் விதவிதமா தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். அந்த நேரத்துல ‘டொட் டொட் டொட்டுனு புல்லட்ல தொண்டரய்யா வருவாரு’ன்னு எல்லோருடைய பார்வை யும் எச்சரிக்கையா இருக்கும்போதே வந்தாங்க. ‘பிலி பிலி’னு சொல்லி வச்ச மாதிரி எல்லோரும் எழுந்து குனிஞ்சி வளைஞ்சி கையக்கட்டி பவ்யமா வணக்கம் ‘ஸ்வாம்மி’ன்னாங்க. “கதிரேசா... நாளைக்கு நெல்லு அவிக்கணும். ரெண்டு மூணு சொம பன மட்ட கட்டிக் கிட்டு வந்துடு. ராசா, கரும்பு கொத்துக் கொத்த முப்ப தாளுவ வேணும். கூட்டிக்கிட்டு வந்துடு. சன்னியாசி, சனிக்கிழமை கட்சி மீட்டிங். லாரி வரும் சாயந்திரம் நாலு மணிக்கு. அது நெறைய ஆளுவள அனுப்பி விடு.



படிப்பகம்

www.padippakam.com

என்ன மாணிக்கம், பழனிக்கு டாஸ்மாக்ல வேலை வந்துருக்குனு கேள்விப்பட்டேன். பணத்துக்கு அங்க இங்க பீராய்ஞ்சிக்கிட்டு இருக்கிறதா முத்து சொன்னான். பணம் கிணம் வேணும்ன்னா என்னக் கேட்டிருந்தா நான் முடியாதுன்னா இந்த நேரத்துல சொல்லுவேன். எவ்வளவு வேணும்?" "நாலாயிரங்கையா" "சரி, சரி. நான் தர்றேன். சாயந்திரம் வந்து வாங்கிக்க. இந்த வருஷமாவது ஒருத்தருக்கொருத்தர் பிரிவினையில்லாம தேர்தல் வேலையைப் பாருங்க!" சொல்லி விட்டு பறந்தார் வண்டியில்.

சாயந்திரம் ஆறு மணி. தொண்டர் அய்யா வீட்டு தலைகடை வாசலிலேயே பழனி காலில் அணிந்து வந்த செருப்பை அண்ணன் மாணிக்கம் வலுக்கட்டாயமாக கழட்டி ரெண்டு மூணு செங்கல்ல எடுத்து செருப்பு மேல அடுக்கி பதுக்கி வச்சிட்டு குடியிருப்பு வாசல்ல வந்து கையக்கட்டி பவ்யமாக நின்னாரு. பழனியும் அது மாதிரியில்லாததால கொஞ்சம் வருத்தமானாலும், அதை பெரிசா காட்டிக்காம வீட்டினுள்ளே இருந்து வரக் கூடிய தொண்டர் அய்யாவுக்காக காத்திருந்தாரு. செத்த நாழிக்குள்ள அவரும் வெளிய வந்தாரு.

"வெள்ளிக்கிழமைதான பணம் கட்டணும்?"

"ஆமாங்கையா"

"எத்தனை மணிக்கு?"

"ரெண்டு மணிக்குள்ள பேங்ல கட்டணும்"

"சரி, சரி. வெள்ளிக்கிழமை காலை என்ன வந்துப் பாரு. பணம் வரவேண்டியது கொஞ்சம் இருக்கு. அநேகமா இன்னிக்கு ராத்திரி வந்துடும். வேற யாருமில்ல. நம்ம குதிரைக்கார கணபதி.. ஒரு இருவது ரூபாத் தரணும். இன்னிக்கு மதியானங்கூட ஒங்க விசியத்த எடுத்து சொல்லி கேட்டுருக்கேன்னு பணத்த பத்தின பேச்சிக்கு ரெண்டொரு நிமிஷத்தில் முடிவு கட்டிட்டு, மத்த விசியத்தப்பத்தி ஒரு மணிநேரம் பேசினாரு. வெள்ளிக் கிழமை வான்னு சொன்னப்பவே லீப் வருஷ பிப்ரவரி 31-ஆம் தேதி வான்னு சொன்ன மாதிரி பழனிக்கு கேட்டுருக்கு. ஏன்னா.. எப்படியோப்பட்ட உசுரு போற விசியமானாலும் வெள்ளிக்கிழமை ஒரு நயா பைசா ஈய மாட்டாருன்னு பக்கத்தூரு உட்பட எல்லோ ருக்கும் புரியும். பழனியும் சரி வர்றேங்கையானுட்டு வீட்டுக்கு வந்துட்டான். மாணிக்கமும் வழக்கமான கும்புடு போட்டுட்டு வந்துட்டாரு. தீவிர யோசனைக்குப் பிறகு பழனி சொன்னான் "தொண்டரய்யா பணம் தருவாரா மாட்டாராங்கறது ரெண்டாவது பிரச்சனை. நம்மக் கிட்ட இருக்குற ஒரேயொரு பசு மாட்ட விக்க லாம்னு சொல்றதுக்கு யாரும் எம்மேல கோபப்படக் கூடாது. அதுவும் செனை மாடு. பதினைந்து வருஷத்துக்கு முன்ன பால்மாடு. ஒரு ஜதை வச்சிருக்கிறவன் எவ்வளவு சந்தோஷமும், பெருமையும் பட்டிருப்பானோ அப்படியோர் சந்தோஷமும், பெருமையும் இப்ப இந்த மாடால கெடைச்சிருக்குனு நாம எல்லாரும் நம்பறது உண்மைதான். ஆனாலும் இந்த நேரத்துல படகும் இதுதான் துடுப்பும் இதுதான். செனைமாட்ட யாரும் விற்கலையா என்ன? வர்ற வெலைக்கு வித்தாலும் நாலாயிரம் ஐயாயிரத்துக்கு கண்ண மூடிக்கிட்டு கொடுப்பானுவ. இருசால்வழி, சந்தையும் இன்னிக்குத்தான். ஒண்ணும் யோசிக்காம மாட்டயோட்டிகிட்டுப்போயி வித்து பணத்த கையில வச்சிகிட்டு நாம தயாரா இருப்போம். தொண்டர் அய்யா வேற வேறொரு இடத்துலருந்து பணம் வரணும்ங்கறார்.

கணபதியும் நம்மள பத்தி தெரிஞ்சி வச்சிருக்கிறவர் தான். ஏற்கனவே ஒருமுறை லெட்சுமியக்கா மகளுக்கு மஞ்ச தண்ணி சுத்தறதுக்காக பணத்துக்காக அவர் 'தலைகடைக்கு' போயி மொக்கையாகிப் போயிருக்கோம். நீ கேக்கறபடி கேட்டுக்கிட்டே இருண்ணா... ஒரு வேளை அவங்க பணம் நாலாயிரம் கொடுத்தாங்கன்னா கொடுக்கட்டும். அது மனுஷாளுவள தெரிஞ்சிக்கறதுக்கு ஒரு வாய்ப்பா இருக்கும். இல்லன்னாலும் பரவாயில்ல. இந்த நிமிஷம்வரை நம்முடைய தன்மானத்துக்கு உயிர் கொடுக்க நம்ம பசுமாடு ஆதாரமாக இருக்கு. இதுவே ஒரு வெற்றிதான். இதுல பெருமையும் பட்டுக்கிறதுல ஞாயமான காரணமும் இருக்கும்."

இப்படி பேசி முடிச்சதும் அண்ணனுக்குக்கூட ஆச்சரியம் உண்டானது, பழனி இப்படிக்கூட பேசுவானான்னு. என்ன பண்றது. நெருக்கடினு வரும்போது தான் உருப்படியான பேச்சும் வந்து தொலைக்கும்ங்கறது நடைமுறை எதார்த்தம். ஒரு பருக்கையும் தண்ணியும்பாங்களே இப்ப வரைக்கும் அது இந்த மாடுதான்.

ஒருத்தன் எவ்வளவுதான் சொரணையத்து போயி வளைஞ்சி கூன் விழுந்தவனா இருந்தாலும், அவனுக்குள் ளும் ஒரு கோபப்பொறி எங்கியாவது ஒரு மூலைல இருக்கும். அப்படியானதொரு கோபம் மாணிக்கத்துக்குள்ளும் இருந்து வெளிவந்துருக்குன்னா, அதுக்கு காரணம் தொண்டர் ஐயாவினுடைய சுத்தமான சுயநலம் கலந்த தந்திரமான அந்த ஒரு மணி நேர பேச்சுதான். சுருக்கமா சொல்லணும்னா 'ஒத்துமையா இருக்குற ஊருல அந்தக் கட்சிக் கொடின்னும் இந்தக் கட்சிக் கொடின் னும் ஏண்டா மாணிக்கம் நமக்குள்ள பிரிவு? மொதல்ல அவனை அந்தப் போர்ட எடுக்கச் சொல்லுடா. கணபதி கூடம் அவன்மேல் லேசா மன வருத்தமாகத்தான் இருக்கிறார்போல இருக்கு. மதியானம் அவர் பேசுன பேச்சிலிருந்து தெரிஞ்சிகிட்டேன்' என்று சொன்னபோது 'ஆதாயமில்லாதவன் ஆத்தக்கட்டி ஊத்த எறைக்க மாட்டான்'ங்கறது அண்ணனுக்கு சரியாகப்பட்டதினால் 'சரி... சரி... நான் சொல்லி கண்டிச்சி வக்கிறேங்கய்யா'னுட்டு வெள்ளிக்கிழமை வர்றதா சொல்லிட்டு வீட்டுக்கு வந்து 'நீ வந்த பிறகு இதுக்காகத் தாண்டா சுத்தி வளைச்சி அந்த ஒருமணி நேர பேச்சி' என்று பழனியிடம் சொன்னார் மாணிக்கம் ஒருவிதமான முடிவுக்கு தானும் வந்தவராய்.

அரசு மதுபானக்கடையில் பழனி விற்பனையாளராய் சேர்ந்து கிட்டத்தட்ட ஒன்றரை வருஷத்த ஒப்பேத்திட்டாலும் அந்த நாட்கள் மட்டும் பசுமரத் தாணி போலதான் இதுவரை முறியடிக்கப்படாத சாதனையாய் காத்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



கௌதம சன்னா

# தேர் சேரி(ஊர்)வலம் வருமா?

தச்சூர் தேவாலயம் கிறித்துவ வேடம் கட்டிய சாதி இந்துக்களின் நடவடிக்கைக்கு சிறந்த சான்று என்பதை கடந்த இரு இதழ்களில் கண்டோம். இனி அதன் தொடர்ச் சியைப் பார்ப் போம்.

1980-களின் துவக்கத்திலேயே தச்சூர் பிரச்சினை தீவிரப்படத் துவங்கியது. உதாரணத் திற்கு ஒரு சம்பவம். தேவாலயத்தில் சாமி யாருக்கு உதவியாக இருக்கும் சிறுவர்களில் (Alterboys) முதன் முறையாக ஒரு தலித் சிறுவன் நியமிக்கப்பட்டபோது, ரெட்டியார்களால் அதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அச்சிறுவனை அவர்கள் பலவந்தமாக வெளியே இழுத்து வந்து, அங்கியை (alterboy gown) கிழித் துப் போட்டதோடு, அதை மீண்டும் பயன் படுத்தக்கூடாது என்பதற்காக தீயிட்டு கொழுத் தியும் போட்டனர். இது தலித் கிறித்துவர்களி டையே மிகுந்த கொதிப்பை உருவாக்கி விட் டது. இதன் தொடர்ச்சியாக தேர் சேரிக்குள் வலம் வர வேண்டும் என்ற கோரிக்கையை உறுதி யாக முன்வைக்கத் துவங்கினார்கள். இப்படி வெளிப்பட்ட பிரச்சினையானது பங்கு பணம் ஏலம் விடும் கதையாக மாற்றப்பட்டது.

1995சென்னை ஆர்ச் பிஷப் திருவிழா விற்கு தடை விதித்த பிறகு திருவிழாவை நடத்து வதற்கு ரெட்டியார்கள் கையாண்ட முறை இயேசு கூட நினைத்துப் பார்க்காத வழிமுறை போலத் தெரிகிறது. கோவிலின் வழக்கப்படி கொடி ஏற்றப்பட்டுவிட்டால் எக்காரணம் கொண்டும் திருவிழா தடைபடாது என்பது பல காலமாக(?) நடைமுறையிலிருக்கிறது. 1995-ஆம் வருடம் தேவாலயப் பங்குத் தந்தை யாக இருந்த நாயுடு சமுகத்தைச் சேர்ந்தவர் ரெட்டியார்களுக்கு சாதகமாகவே இருந்து வந்தவர். அப்போது பிஷப் தடையுத்தரவு போட்டிருந்ததால் அவருக்கு கொடி ஏற்ற மனம் வரவில்லை. எனவே கடமைக்கு கட்டுப் பட்டு மறுத்து விட்டார். இதனால் ஆத்திரம் அடைந்த ரெட்டியார்கள் தமது பங்குத் தந்தையை ஒரு வாயில்லா ஜீவனை இழுத்து வருவது போல தேவாலயத்திலிருந்து இழுத்து வந்து அவருக்கு சுயமரியாதையும், கடமையுணர்வும் தெளியும் வரையில் சில-பல அடிகள் விழுந்தவுடன், பங்கு தந்தை கொடியை ஏற்றி விட்டார். இச்சம்பவம் அவரது வாழ்வில் ஒரு மாற்றத்தை உண்டாக்கி விட்டது. அன்றிலிருந்து அவர் ரெட்டியார்கள் பக்கம் சாய்வதை நிறுத்தி விட்டார். ரெட்டியார்களின் அதிர்ச்சி வைத்தியம் செய்த ஒரே நன்மை இது. இந்த சம்பவம் நடைபெறுவதற்கு முன்னால், தங்களுக்கு உரிய பாதுகாப்பு தர வேண்டும் என் ரெட்டியார்கள் காவல் நிலையத்தில் மனு கொடுத்தார்கள். தலித்துகளும் மனு கொடுத்தார்கள். இதற்குப் பிறகு அமைதிக் குழு (Peace Committee) ஒன்று போடப்பட்டு பேச்சுவார்த்தை துவங் கியது - ஆனாலும் இரவு 9 மணிக்கு கொடியேற்றப் பட்டு விட்டது.

கொடியேற்றப்பட்டதை காரணம் காட்டி பிஷப் தடையை மீறி சென்னை உயர் நீதிமன்றத்தில் தற்காலிக உத்தரவு ஒன்றை பெற்றுத் திருவிழாவை துவக்கி விட் டார்கள். தலித்துகள் நீதிமன்றத்துக்கு போக முடிய வில்லை. அன்றைக்கு நீதிமன்ற விடுமுறை காலம் என்ப தால் அவர்களால் முடியாமல் போய்விட்டது. பிறகு அந்த வருடத்திலிருந்து தேவாலயம் மூடப்பட்டது. அடுத்த இரண்டு வருடமும் பிரச்சினையில் முடிந்தது. 1997-இல் மாவட்ட கண்காணிப்பாளர் கிறிஸ்டோபர் நெல்சன் முன்னிலையில் தேவாலயம் பூட்டப்பட்டது.

1998-இல் நீதிமன்றம் தடைவிதித்து உத்தரவிட மேல்முறையீட்டில் உயர்நீதி மன்றம் கோவிலை திறக்க முத்தரப்புக் குழு அமைத்து பேசி முடிக்கலாம் என்று தற்காலிக முடிவை அறிவுறுத்தியது. அதன்படி குழு அமைத்து பேசி முடிப்பதற்குள் ரெட்டியார்கள் பூட்டை உடைத்து விட்டார்கள். தலித்துகள் புகார் மனு அளித் தும் அரசு தரப்பில் நடவடிக்கை இல்லை. எனவே 1000 பேருடன் சாலை மறியல் செய்தவுடன் அமைதிக் குழு மறுபடியும் போடப்பட்டது. அதன்படி கோவிலுக்கு சீல் வைப்பதாகச் சொன்னார்கள். அப்படி எதுவும் நடக்கவில்லை. ஆனால் மறியல் செய்த தலித்துகள் மீது பொதுச் சொத்தை சேதப்படுத்தியதற்காக வழக்கு போடப்பட்டது.

இருப்பினும் மே மாதம் 21-ஆம் தேதி தலித் குழு பிஷப்பை சந்தித்தது. இதில் சுமார் 3000 பேர் கலந்து கொண்டனர். தலித்துகள் தங்கள் கோரிக்கையை உறுதி யாக முன்வைத்தனர். அவை

- ரெட்டியார்கள் தீண்டாமை கடைப்பிடிக்கக் கூடாது.
- கலந்து உட்கார வேண்டும்.
- மொழி, சாதி பெயரால் வேற்றுமை கூடாது.
- அனைத்து வீதிகளிலும் தேர் வரவேண்டும்.
- தமிழர், தெலுங்கர்களில் கோவில் தர்மகர்த்தா நியமிக்கப்பட வேண்டும்.
- கோவில் நடவடிக்கைகளில் சம பங்கு.



படிப்பகம்

www.padippakam.com

- கோவிலுக்கு சொந்தமான 20 ஏக்கர் 98 சென்ட் நிலத்தை நிலமற்ற அனைத்து சாதியினரும் குத்தகையில் பயிர் செய்ய அனுமதி.

இவற்றை முன்வைத்தவுடன் ரெட்டியார்கள் தங்கள் கோரிக்கையை முன்வைத்தனர். அவை

- தேவாலயம் ரெட்டியார்களின் சொத்து.
- எங்களுக்கு சாமியார், பேராயர், பேராயம் எதுவும் தேவையில்லை.
- தேவாலய நிர்வாகத்தை நாங்களே பார்த்துக் கொள்வோம்.
- எங்கள் தெலுங்கு மொழியிலேயே பூசை செய்வோம்.

இதற்குப் பிறகுதான் பேராயத்திற்கு சிறிது உரைக்கத் துவங்கியது. ரெட்டியார்கள் கொள்ளைக்காரர்களைப்போல தேவலாயத்தை சுருட்ட நினைப்பது புரிந்தது. பிறகு தேவாலயம் பூட்டப்பட்டது.

இருந்தும்கூட தேவாலயத்தை சுத்தம் செய்வது என்ற பெயரில் பூட்டு திருட்டுத்தனமாகத் திறக்கப்பட்டு தெலுங்கில் பூசை நடக்கிறது. சாமியார் அருளப்பா ரெட்டியார் இந்த திருட்டு பூசைகளை நடத்துவதில் கை தேர்ந்தவர். இத்தனைக்கும் தேவாலய சாவி கோட்ட வருவாய் அலுவலர் (RDO) வசம் இருக்கும்போது தேவாலயம் திறக்கப்படுவது ஆச்சர்யமான விஷயம். அரசு நிர்வாகம் இப்படி சட்டரீதியான, ஒழுக்கரீதியான முறைகேடுகளுக்குத் துணை போகிறது.

## சில சாதிப் புள்ளிகள்

தச்சூரைப் பொறுத்தவரையில் ரெட்டியார்களின் பலம் அவர்களிடம் இருக்கும் கிறித்துவ பதவிகளினால் தான். அரசியல் கட்சிகளில் அவர்களுக்கு எந்த பொறுப்பான பதவிகளும் இல்லை. இருந்தும் இப்பிரச்சினையை அணையாமல் காத்து முன்னெடுத்து வரும் சில புள்ளிகளை பார்க்கலாம்.

சக்கரியாஸ் மகன் ஆரோக்கியசாமி ரெட்டியார்: மனித சிறுநீரகங்களை விற்பதற்கு ஆள் பிடிக்கும் ஏஜெண்ட். இதனால் இவருக்கு கிட்னி வியாபாரி என்ற பெயரும் உண்டு. தற்போது வெளியூரில் வசித்தாலும் கலவரங்களை திட்டமிடுவதில் இவரது கை உண்டு.

- லூர்துசாமி ரெட்டியார்: ஊரின் பொது கணக்கை பராமரிப்பவர். கடந்த 100 வருட கணக்கு முழுவதும் இவர் வசம் உள்ளது. கோவில் வருவாயிலிருந்து கிராம வருவாய் கணக்கு வரை அனைத்தும் இவர் வசம் உள்ளது. தச்சூரில் உள்ள தனது நிலத்தை விற்றுவிட்டு பிற ஊர்களில் சொத்துக்களை குவித்துள்ளார். தலித்துகள் மீது வழக்குகள் தொடுப்பதில் முன்னணியில் இருப்பவர்.

- ரோக்: தலித்துகளை அடிக்க ஆந்திராவிலிருந்து அடியாட்களை அழைத்து வருபவர்.

மேலும் பெரியண்ணன், லூர்துசாமி, உடுமலை, சிங்கராயர், ஏர்வை சின்னப்பா, ஆரோக்கியசாமி, ரெக்ஸ் உட்பட பலர். இங்கு குறிப்பிடப்பட்டவர்கள் முன்னணிப் படையினர் மட்டுமல்ல, கலவரங்களை திட்டமிடுவதும் இவர்கள்தான். காவல் துறையோ, பேராயமோ இவர்கள் மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மிகவும் சுதந்திரமாகவே இவர்கள் செயல்பட்டு வருகின்றனர் என்பது நிலைமையை இன்னும் பதட்டப்பட வைக்கிறது.

மேலும் இந்த கயவாளிகளில் நடுவரான மிக்கேல் என்பவர் லாரன்ஸ் என்ற அருந்ததியர் மீது திருட்டுப் பட்டம் கட்டி அவரை கடுமையாக தாக்கியுள்ளார். பின்பு மர்மமான முறையில் லாரன்ஸ் இறந்து கிடந்த போது அது மிக்கேலின் திட்டமிட்ட கொலை என்று தலித்துகள் கூறியும் மிக்கேல் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஒரு படுகொலை தற்கொலையாக கருதப்பட்டு மூடி மறைக்கப்பட்டது.

இப்படி சாதிய கொடும்பாவிகளாய் திரியும் ரெட்டியார்களை எதிர்ப்பதற்கு தச்சூர் கிராமத்தின் பறையர்களும், அருந்ததியர்களும் ஒற்றுமையாக செயல்பட்டு வந்துள்ளனர். எண்ணிக்கையில் குறைவாக, மிகுந்த ஏழ்மை நிலையிலுள்ள அருந்ததியர்களால் அதிகம் எழ முடியவில்லை. பொருளாதார பிரச்சினைகளில் இன்னும் ரெட்டியார்களைச் சார்ந்தே வாழ வேண்டிய நிர்பந்தம். மீறி எழ அவர்கள் முயன்றால் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கும், கூலி வேலை தரவும் ரெட்டியார்கள் மறுத்து விடுகிறார்கள். இந்த பொருளாதார தாக்குதலை அவர்களால் சமாளிக்க இயலவில்லை. பறையர்களுக்கும் இந்நிலைமைதான். இருந்தாலும் அவர்களிடம் இருக்கும் சிறிது நிலம், கல்வி, பிற வேலைகள் பொருளாதாரத் தாக்குதலை சமாளிக்க உதவுகிறது.

## முடிவாக

இப்படி வளர்ந்து உள்ள தச்சூர் பிரச்சினையால் தேவாலயம் செய்வதறியாது நிற்கிறது. இயேசுவையும், மரியையும் காப்பாற்றி அவர்கள் முன்வைத்த மானுடத்தை காப்பாற்ற முயலும் தலித்துகள் ஒருபுறம், இயேசுவையும், மரியையும் இந்து சாதி சேற்றினுள் அமிழ்த்தத் துடிக்கும் ரெட்டியார் கிறித்தவ-இந்துக்கள் மறுபுறம் என்பதால் இன்னும் தேவாலயம் பூட்டிக் கிடக்கிறது. கடந்த மே மாதம் தேவாலய திருவிழா என்பதால் பிரச்சினை மறுபடி சூடு பிடித்து இந்த கோலத்தில் நிற்கிறது.

'இருந்தது ஒரே கிறித்து; அவரையும் சிலுவையில் அறைந்து விட்டார்கள்' என்று பிரடெரிக் நீட்ஷே சொன்னது இன்றும் கூட பொருந்துகிறது. தச்சூர் தேவாலயத்தில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசு யூதாஸ் காரியத்தை நினைக்கிறாரோ



படிப்பகம்

www.padippakam.com

இல்லையோ, நிச்சயம் தச்சூர் ரெட்டியார்[illegible] பார். அவர்களுக்காக ஆண்டவரிடம் மன்னிப்பு மட்டும் கேட்க மாட்டார்.

## சில படிப்பினைகளும் எழும் கேள்விகளும்

தச்சூரில் நடைபெறுவது அப்பட்டமான தீண்டாமை வன்கொடுமை. ஆனால் தீண்டாமையை கடைப்பிடிக்கும் கிறித்துவ ரெட்டியார்கள்மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய முடியாது. ஏனெனில் தீண்டாமைக்கு ஆட்பட்ட தலித்துகள் பட்டியலினத்தில் உள்ளவர்கள் அல்ல. அவர்கள் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் (BC) என சட்டம் உள்ளது. ரெட்டியார்களும் தலித்துகளும் பிறபட்டவர்கள் என ஒரே தகுதி - பின்பு எப்படி வன்கொடுமையாக இது அமையக்கூடும். ஒரு சட்டச் சிக்கல் - உண்மையான நடைமுறைச் சிக்கலை தீவிரமாக்கும் போக்கிற்கு இது வலுவான சான்று. ஏனவே அரசு இதை வெறும் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையாகவே அணுகுகிறது - அதற்கு இன்னும் வசதி - இதை தலித் இயக்கங்கள் எப்படி எதிர் கொள்ளப்போகின்றன.

மதமாற்றத் தடைச் சட்டம் வந்தபோது அது இந்து பயங்கரவாதிகள் கிறித்துவர்கள் மீது தொடுக்கும் தாக்குதல் என கூப்பாடு போட்ட பேராயங்கள், கிறித்துவ மிஷனரிகள் இப்பிரச்சினையை எப்படி அணுகுகின்றன. தச்சூர் சாதி இந்துக்களின் கூடாரமாக அவைகளுக்குத் தெரியவில்லையா. சங்பரிவாரங்கள் பல்வேறு [illegible]களில் மறைமுகமாகவும், நேரடியாகவும் செயல்பட்டு இந்து மதத்தை - சாதியை காப்பாற்றி வருவதைப் பேராயரும் ஒரு மறைமுக சங்கராச்சாரியராக செயல்படுகிறார் என்று தலித்துகள் கருத வேண்டும். இல்லையெனில் ரெட்டியார்கள் கிறித்துவர்களே அல்ல என அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இஸ்ரவேலின் தேவாலயங்கள் வியாபாரத் தலங்களாக மாற்றப்பட்டதைக் கண்டு சாந்த சொரூபியாக கருதப்படும் இயேசுவுக்குக் கூட கோபம் வந்தது. தனியொருவராக சாட்டையை எடுத்து தேவாலயத்திற்குள் கடை விரித்திருந்தவர்களையும் மத குருக்களையும் விளாசித் தள்ளினார். அவர் சுழற்றிச் சொடுக்கிய சாட்டை யூதர்களுக்கு மாறாத் தழும்பை உண்டாக்கியது. இன்றும் யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தேவாலயத்தை தூய்மைப்படுத்த சாட்டை எடுத்த இயேசுவை உலகம் ஏற்றுக் கொண்டது.

தச்சூர் தலித்துகள் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள். ஏசு எடுத்த சாட்டையை தச்சூர் தேவாலயத்தை தூய்மைப்படுத்த எப்போது எடுப்பார்கள் தச்சூர் தலித்துகள். சாட்டைதான் எடுக்க வேண்டுமென்பதில்லை. அது அதற்கும் மேலானதாகவும், உறுதியானதாகவும் இருக்கலாம்.

கர்த்தர் சாதிக் கிறித்துவர்களை மன்னிக்காமல் இருப்பாராக.

அவர்கள் செய்வதை இன்னதென்று அறிந்தே செய்கிறார்கள். ஆமென்.

◆

## Cosmosity நூல்வெளியீட்டு விழா




7.8.2005 அன்று பெங்களூர் குருநானக் பவனில் நடைபெற்ற
ஜோதி - ராஜ் தம்பதியினர் இணைந்து எழுதிய
**Cosmosity** என்னும் நூலின் வெளியீட்டு விழாவில்

www.padippakam.com

# துண்டறிக்கைகள்

## வாழ்த்துகிறோம்

இரண்டு முறை குண்டர் தடுப்பு சட்டத்திலும், இரண்டு முறை தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்திலும் கைது செய்யப்பட்டு சிறை சென்று இருப்பினும், தொடர்ந்து ஆரணி வடுக சாத்து பஞ்சாயத்து தலைவராக சின்னபையன் (எ) வெங்கடேசனை தொடர அனுமதிக்கிற திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலை வரை வாழ்த்துகிறோம்.

வடுகசாத்து கிராம குடிதண்ணீர் பிரச்சினையால் பொய் வழக்கு போட்டு கைது செய்யப்பட்ட தலித் மக்களுக்கு விழுப்புரத்திலும், தலித் மக்கள் மீது வன்முறையை ஏவிவிட்டு தாக்குதல் நடத்தியதால் கைது செய்யப்பட்டவர்களுக்கு சொந்த ஊரிலேயும் (ஆரணி) கையெழுத்து போட நிபந்தனை ஜாமீன் வழங்க உறுதுணையாக இருந்த **SP/DSP** ஆகியோருக்கு நன்றி, வாழ்த்துக்கள்.

இவண்
இந்தியக் குடியரசு கட்சி,
வேலூர் மாவட்டம்



### தனியார் கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்

நாள் : 5-10-2005
புதன்கிழமை
காலை 10.00 மணி

இடம் : புழல் பேரூராட்சி எதிரில், சென்னை

### கோரிக்கைகள்

1. *மத்திய மாநில அரசுகள் சமூக நீதிக்கு வேட்டு வைக்கும் வகையில் தனியார் துறை கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டுக்கு எதிரான உச்ச நீதிமன்ற தீர்ப்பை ரத்து செய்ய அப்பீல் செய்.*
2. *தனியார் துறை, பள்ளி, கல்லூரிகள் மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய சட்டம் இயற்று.*
3. *சமூகத்தில் சரி பாதியாக உள்ள பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கிட சட்டம் இயற்று.*
4. *பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் நிலத்தடி நீரை பன்னாட்டு பகாசுர கம்பெனிகளுக்கு தாரை வார்க்காதே.*



படிப்பகம்

www.padippakam.com

5. அரசுத் துறைகள் மற்றும் பள்ளி, கல்லூரிகளில் உள்ள காலி பணியிடங்களை உடனே நிரப்பு.

6. இம்மண்ணின் மைந்தர்களான ஆதி தமிழர் குடும்பங்களுக்கு தலா 5 ஏக்கர் விவசாய நிலங்களை வழங்கு.

7. பஞ்சமி நிலங்களை, ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டு, ஆதிதமிழர்களிடம் ஒப்படை செய்.

8. பொது வளங்களான ஏரி, குளம் மற்றும் பொது சொத்துக்களில் ஆதிதமிழர்களுக்கு சம பங்கு வழங்கு.

9. SC/ST வன்கொடுமை தடுப்பு சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்து.

10. தமிழகத்திலுள்ள அனைத்து கல்லூரி மாணவர் மாணவியர் விடுதிகளை உடனே சீர்படுத்து.

11. தமிழகத்திலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளில் ளுஊளுகூ மாணவர்களுக்கு நிலுவையிலுள்ள உதவித் தொகையை உடனே வழங்கு.

12. கட்டாய நன்கொடை வாங்கி மக்களை கலங்க வைக்கும் பொன்னேரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடு.

இவண்

ஆதிதமிழர் விடுதலை இயக்கம்

## துரும்பர் சமூகச் சகோதரர்களுக்கு எதிராக இழைக்கப்படும் சாதியக் கொடுமைகளை ஒழிக்கும் தீர்மானங்கள்

1. அருந்ததிய, துரும்பர் சமூக சகோதரர்களை சக்கிலியன், வண்ணான் என்று இழிபெயரிட்டு அழைப்பதை நிறுத்துவோம்.
2. அவர்களிடமிருந்து இலவச கட்டாய சேவை பெறுவதை நிறுத்துவோம்.
3. இராச்சோறு (இரவு, காலை வேளையில்) வாங்க வைக்கும் இழிவான வழக்கத்தை நிறுத்துவோம்.
4. திருவிழாக் காலங்களில் பந்தம் பிடித்தல், பெட்ரமாக்ஸ் லைட் பிடித்தல் வழக்கத்தை நிறுத்துவோம்.
5. சாவுச் சடங்கில் பாடை கட்டுதல், ஜோடித்தல் மற்றும் சாவு துணி துவைத்தலை நிறுத்துவோம்.
6. திருமணத்தில் மணை வைத்து துணி போடுதல், பந்தம் பிடித்தலை நிறுத்துவோம்.
7. தலைச்சன் குழந்தை பிறந்தால் சொல்லி அனுப்புதல் (ஊர் சொல்லுதல்) பழக்கத்தை நிறுத்துவோம்.
8. இதுநாள்வரை அவர்களுக்கு இழைத்த வரலாற்று அநீதிகளுக்கு பரிகாரமாக திருச்சபை அளிக்கும் சலுகைகளில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வைப்போம்.
9. அவர்களது பிள்ளைகளை ஊர் பொது பணத்தில் இலவசமாக படிக்க வைப்போம்.
10. திருவிழாவிற்கு ஆகும் செலவை குறைத்து ஆண்டுக்கு ஒரு வீடு என்று கட்டித் தருவோம்.

10\. பறையரென்றும், சக்கிலியரென்றும், வண்ணாரென்றும் பாராமல் நமக்குள்ளேயே சாதிமறுப்பு திருமணங்களை ஊக்குவிப்போம்.

12\. அவர்களுக்கு தலைமைப் பொறுப்பை கொடுத்து கௌரவிப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய மாதவி

# காங்கீரிட் காடுகளில்...

ஒரு நதியின் மரணத்தில்
எங்கள் விதியின் ஒப்பாரி
கடற்கரை நிரப்பிய
கான்கீரிட் காடுகளில்
நாற்றமெடுக்கிறது
எங்கள் நகரத்தின் சுவாசம்.

பதினைந்தாயிரம் கால்நடைகள்
மிதந்து செல்லும்
பலநூறுச் சாக்கடைகள்
காக்கைகள் கூட
அச்சப்படுகிறது
எங்கள் காற்றை சுவாசிக்க.

வெட்டி எறியப்பட்ட
வேர்களின் சாபத்தில்
ஊர்க்கோலம் காணுமுன்பே
உடைப்பட்டுக்கிடக்கிறது
ஒட்டப்பபட்ட கண்பதியின்
ஆனைமுகம்.

கணினி யுகத்தில்
காலம் கணித்து
அமெரிக்காவை வெல்லும்
அக்கினிக் கனவுகளில்
வெந்து போகிறது
எங்கள் வெப்பு பெருமூச்சு.

ஈரத்தில் கிழிந்து கிடக்கிறது
எங்கள் எதிர்காலம்.
இதை எல்லாம் காரணமாக்கி
நாற்காலிச் சண்டைக்கு
ஆயத்தமாகிறது
எங்கள் அரசியல் களம்.

இன்னும்
எங்களுக்காக போராடிக்கொண்டிருக்கிறது
எங்கள் துப்பரவுத் தொழிலாளிகளின்
தோள்கள்.
கழிவுகள் அகற்றும்
அந்தக் கரங்களின் ஈரத்தில்
எழுதப்பட்டிருக்கிறது
இந்த மாநகரின் எதிர்காலம்.
இருந்தாலும்
அந்த ஈரத்தை மட்டும்
எழுத மறுக்கிறது
எங்கள் எழுதுகோலின் ஈரம்.



பாக்கி உமாநாத்

# ஒற்றைப் பனை

அந்த ஏரிக்கரையின்
அத்தனை மரங்களிலும்
உனக்காக
ஏறியிருக்கிறேன்
இப்போது அங்கு அவை இல்லை
நாம் சுட்டுத் தின்ற
பல்லிடுக்கில் சிக்கிய
பனம்பழ நாராய்
பழைய நினைவுகள்
ஆண்பிள்ளைகளுக்கு சமதையாய் நீயும்
மாவலிசுற்ற அடம் பிடிக்க
பனம்பூ பறிக்கும்போது
கடித்த வண்டின்
கடிவாய்த் தழும்பு இன்னுமென் தொடையில்
நெஞ்சில் சிராய்ப்பு
கண்ணில் நீர்
பீய்ச்சியடிக்க குலைகுலையாய்
வெட்டிப்போட்ட நுங்கு இன்னமும்
வண்டிகளாயென் மனதில்
உருண்டோடிக் கொண்டிருக்கின்றன
வற்றிச் சுருங்கிவிட்ட ஏரி
கரையின் தடத்தில் வாகனங்கள் விரையும்
நின்று பார்க்கிறேன்
ஒற்றைப் பனைமரமாய்



படிப்பகம்

www.padippakam.com

# தலித்துகளுக்குள் மூளும் உட்சாதி மோதல்

"இரண்டு முயற்சிகள் தங்களுக்குள் போரிட்டுக் கொள்ளும்போது
இரண்டு லட்சியங்கள்–இவை கிழித்துப்போட்டு விடாமல் காப்பது
பலமான கருப்பு உடல் மட்டுமே"

– டபிள்யூ.இ.பி. துபுவா

*கருப்பு எழுத்தாளர்*

**■ ப. முருகன்**

சாதியானது உலக நாடுகள் பலவற்றிலும் வெவ் வேறு வடிவங்களில் நிலை பெற்றிருந்தாலும், இந்தியாவில் அது வலிமையுடன் தனித்து வியக்கத்தக்க சமூகப் பரி ணாமங்களோடு அமைந்துள்ளது. புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் கூற்றின்படி "சாதி என்பது மரபு இனத்தைக் குறிக்கிறது என்றால் உபசாதிகளின் வேறுபாடு மரபு இனத்தைக் குறிப்பதாக இருக்க முடியாது. ஏனெனில் பல்வேறு உபசாதிகளும் ஒரே மரபு இனத்தின் உட்பிரிவு கள்தாமே. அப்படியானால் உபசாதிகளுக்கு இடையே கலப்பு மணத்துக்கும், சமபந்திக்கும் எதிராக உள்ள தடை இனத் தூய்மையையோ, இரத்த தூய்மையையோ காக்கும் நோக்கம் கொண்டதாக இருக்க முடியாது. உபசாதி களின் தோற்றுவாய்க்கு, மரபு இன மேம்பாடு என்பது அடிப்படையாக இருக்க முடியாது என்ற நிலையில் சாதியின் தோற்றுவாய்க்கும் மரபு இன மேம்பாடே அடிப்படை என்று முடிவு கட்டுவது எந்த விதத்திலும் அர்த்தமற்றது ஆகும்" என்கிறார்.

சாதியத்தைப் பற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் பெரும்பாலோர் அதன் தோற்றத்தினை விளக்கும்போது 1) ஆரிய இனவாத அமைப்பு, 2) நில பிரபுத்துவ வர்க்கப் போராட்ட அமைப்பு, 3) வர்ணாசிரம முறை, 4) தொழில் பிரிவுகள் என நீள்கிறது.

சாதி என்பது தொழிலைக் கொண்டு அமைந்த ஒரு சமூக அமைப்பாக உள்ளதால் சாதி முறையை உருவாக்கி நிலை பெறச் செய்ததில் பரம்பரைத் தொழில் முறைக்கு வலுவான பங்கு உண்டு. பாணன், பறையன், துடியன் கடம்பர் என்பார் ஒருசேர வழங்கப்பட்டனர்.

பாணன், பறையன், துடியன், கடம்பர் 'இந்நான் கல்லது குடியால் இல்லை' என்று இவர்களைப் போர்ச் செயலோடு தொடர்புற்றக் குடிகளாக புறச்செய்யுள் பேசுகிறது. இவர்கள்தான் தொல்குடிகளாக கருதத்தக் கவர் ஆவர் எனவும் கூறுகிறது.

இவர்களை இழிசினர், இழிபிறப்பாளர், புலையன் (பறையன்) என்று கட்டுவது சமூகத் தளத்தில் இவர்களுக் கான நிலைமையைக் காட்ட போதுமான சான்றாகும்.

"துடியெறியும் புலையப்

எரிகோல் கொள்ளும் இழிசன"

எனும் பகுதிகளால் இவர்கள் பிறவியிலேயே இழிந்தோராக கருதப்பட்டமையை அறியலாம். மேலும் சமூகத்தின் மிகக் கீழ்நிலையிலும் இருந்துள்ளனர் என்ப துவும் புலப்படுகிறது.

சாதிமுறையை உருவாக்கி நிலைபெறச் செய்ததில் பரம்பரை தொழில்முறைக்கு முக்கியப் பங்கு உண்டு என் பதை நிருபிக்கும் வகையில் தலித்துகளுக்குள் மூளும் உட்சாதி மோதல்களை காண முடிகிறது. இதன் தொடக் கம் நீண்டு காணப்பட்டாலும் வலுவுள்ளதாக இருக் கிறது என்பதற்கு உதாரணம் விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியில் இருந்து 23 கி.மீ. தொலைவில் ஊர்ப் பகுதியின் விளிம்பில் இருக்கும் கரடிச்சித்தூர் எனும் சிறிய கிராமம்.

12.8.2003-இல் பறையர்களின் மூர்க்கத்தனத்தால் வெள்ளையம்மாள் என்ற அருந்ததியினப் பெண் பாலிய லுக்கு ஆட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

காரணம் 'தலித்துகள் ஆதிக்க சமூகச் சிந்தனையின் வட்டத்துக்குள் தங்களை இணைத்துக் கொள்ளும் போது அவர்கள் தங்கள் சாதிகளுக்குப் பணிக்கப்பட்ட கீழ்நிலைப் பணிகளை நிறைவேற்றுகின்றனர்.' பல மேடை களில் இந்துத்துவத்தைப் பற்றிப் பேசும் தலித் தலைவர் கள் பிறப்பின் தத்துவம் 'தலையில் பிறந்தவன் பிராம ணன், தோளில் பிறந்தவன் சத்ரியன், இடையில் பிறந்த வன் வைசியன், காலில் பிறந்தவன் சூத்திரன்' என்று கூறும் மனுவை மடையன் என்று கூறி உடைத்தெறியும் போது, தலித்துகளுக்குள் ஏற்படும் உட்சாதி மோதல்களைப் பற்றி பேச மறுக்கக் காரணம் என்ன?

காரணம் வேறொன்றுமில்லை. ஒருபடி மேலே இருக்கும் சாதி + படிநிலை கொண்ட சாதிகளாக பிரித் துப் பார்த்தல் = தேர்தல். கரடிச்சித்தூரில் நடந்ததுதான் என்ன? அருந்ததியர் சாதியைச் சேர்ந்த வீரனும், பறையர் சாதியைச் சேர்ந்த பரிமளாவும் ஒருவரை ஒருவர் காதலித் தனர். பெரும்பான்மை பலத்தில் இருந்த அங்குள்ள பறையர்கள் இவர்கள் காதலை ஏற்கவில்லை. காரணம், ஒரு படி மேலே இருக்கும் சாதி என்பதால் 'சக்கிலி நாய்க்கு எங்கப் பொண்ணு கேக்குதா' என்ற ஆதிக்கச் சாதி யினருக்கே உரிய ஆணவத்தை வெளிப்படுத்தி இருக்கின் றனர் பறையர்.

இதன் விளைவு 'வெள்ளை யம்மாள்' பாலியலுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். சாதியம் என்பது எங்கேயோ இருக்கிறது என்று நினைத் துக் கொண்டிருக்கிறோம். இல்லை, அது தலித்துக்குள்ளும்


படிப்பகம்

www.padippakam.com

**"நம்முடைய சமூகமும் சாதியத்திற்கு ஆட்பட்டு, பாதிப்புக்குள்ளாகியுள்ளது. நம் மீது பிறர் இழைக்கும் தீண்டாமையை அகற்ற நாம் போராடும்போது, பட்டியலின சாதிகளிடையே உள்ள உட்பிரிவுகளை உடைத்தெறிய உங்களுக்குள்ள பொறுப்பு மேன்மேலும் அதிகரிக்கிறது"**

மண்டிக் கிடக்கிறது மறைமுகமாக. பறையர்கள் மட்டுமா இதுபோன்ற கீழ்சாதி மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறார்கள் என்று பார்த்தால், இல்லை, பள்ளர்களும் இப்படித்தான் தமது ஆதிக்க சிந்தனையை வெளிக்காட்டுகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியை அடுத்த காட்டு பரமக்குடியில் மீன்வளத்துறையில் பணிபுரியும் அதிகாரி சாம்ராஜ். இவரது மனைவி பிரேமா ஓர் ஆசிரியை. இவர்கள் பள்ளர் சாதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வீட்டில் வீட்டு வேலை செய்து வந்தவள் கருப்பி. இவர்கள் வீட்டில் இருந்த நகை, பணம் காணாமல் போனதாக கருப்பி மீது புகார் செய்து காவலில் அடைக்கப்பட்டு அப்பெண் காவல் நிலையத்தின் பின்புறம் 'வயர்லஸ் டவரில்' தூக்கில் தொங்கவிடப்பட்டாள்.

ஆனால் இது குறித்து எந்த தலித் தலைவர்களாவது அறிக்கை விட்டிருப்பார்களா? என்று பார்த்தால், அவர்களின் சாதி அவர்கள் கண்களை கட்டிவிட்டது.

தலித் விடுதலை பேசும் தலைவர்கள் பறையர்களாக இருந்தால் பறையர்கள் பக்கமும், பள்ளராக இருந்தால் பள்ளர்கள் பக்கமும் வேரூன்றி உட்சாதி உணர்வுடன் இயங்குவது என்பது மிகவும் கேவலமானதாகும்.

பறையன் + பள்ளன் + சக்கிலியன் = தலித் விடுதலை என்பதை உணர வேண்டும்.

"நம்முடைய சமூகமும் சாதியத்திற்கு ஆட்பட்டு, பாதிப்புக்குள்ளாகியுள்ளது. நம் மீது பிறர் இழைக்கும் தீண்டாமையை அகற்ற நாம் போராடும்போது, பட்டியலின சாதிகளிடையே உள்ள உட்பிரிவுகளை உடைத்தெறிய உங்களுக்குள்ள பொறுப்பு மேன்மேலும் அதிகரிக்கிறது" என்றார் அம்பேத்கர். புரட்சியாளர் அம்பேத்கர் நினைத்தது இன்று பகல் கனவாகவே உள்ளது. இது மட்டுமா?

எஸ். காவனூர் - இராமநாதபுரத்தில் உள்ள பரமக்குடி காவல்நிலைய எல்லைக்குட்பட்டது. இந்த குக்கிராமத்தில் பள்ளர்கள் ஆதிக்க சக்தியாகவும், அருந்ததியின மக்கள் அடிமைகளாகவும் காணும் வெக்கம்கெட்ட சூழல் நிலவுகிறது. இதன் விளைவு பள்ளர்களின் காட்டுத்தனம் கட்டுக்கடங்காமல் போனது. இதுகுறித்து பல முன்னணித் தலைவர்கள் புதிய தமிழகத்தின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியை தொடர்புகொண்டு பேசியபோது "எனக்குத் தெரியாது" என்றும், "இவற்றை பெரிதாக்க வேண்டாம்" என்றும் தூபம் போட்டுவிட்டார்.

இந்துத்துவத்தை வேரறுப்போம் என்பதற்கு நமக்கென்ன உரிமை இருக்கிறது. மனு தர்மத்தை எதிர்ப் போம் என்பதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது.

"ஸோம ப்ரதமோ விவிதே
கந்தர்வோ விவித உத்தர
த்ருதியோ அக்நிஷ்டே பதி
துரீயஸ்தே மநுஷ்யஜா"

திருமணத்தின்போது மணமக்களை கூறச் சொல்லி புரோகிதன் மேலுள்ள சுலோகத்தைப் பாடுவான். "சோமன் (சந்திரன்) முதலில் இவளை அடைந்தான். பிறகு கந்தர்வன் இவளை அடைந்தான். உன்னுடைய மூன்றாவது கணவன் அக்னி, நான்காவது கணவன் தான் மனித சாதியில் பிறந்தவன் (சோமன் உன்னை கந்தர்வனுக்குத் தந்தான். கந்தர்வன் அனுபவித்துவிட்டு அக்னிக்குக் கொடுத்தான். அக்னி தேவன் இவளுக்கு செல்வத்தையும், மக்களையும் கொடுத்து பிறகு எனக்குத் தந்தான்)" என்கிறது மேற்காணும் பாசிச வரிகள்.

இவ்வளவு முரண்பாடுகள் மற்றும் அடிமை முறை நிறைந்திருக்கும் மந்திரங்களை ஏற்க மறுத்துதானே சுயமரியாதைத் திருமணம் தேவை என்கின்றனர் தலித் தேசிய(ம்)வாதிகள். ஆனால் உன்னையே நீ மறந்து வெள்ளையம்மாள் போன்றோரை உட்சாதித் திமிரில் கொலை செய்து சாதியத்தின் பிணைப்பில் நசுங்கி மனுவின் நிழலாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாய் தலித் அடையாளத்தோடு.

"ஓ இந்துக்களே! இதுதான் உங்கள் தலைவர்களின் லட்சணம் என்று அங்கலாய்க்க மட்டுமே நம்மால் முடிகிறது." (டாக்டர் அம்பேத்கர்)

தலித்தியத்தை முன்னெடுக்க வேண்டும் என நினைக்கும் தலித் தலைவர்கள் இன்று தலித்துகளுக்குள் பிணைந்து கிடக்கும் உட்சாதி மோதல்களை வலுப்படுத்த நினைக்கிறார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. தங்களின் சாதிப்பற்றை ஓட்டு வங்கியாக பயன்படுத்திக் கொள்வதற்கும், அரசியல் மற்றும் அதிகாரப் பசியை தணித்துக்கொள்வதற்கும் இதுதானே பிடிப்பான வழி.

தமிழகத்தில், ஏன் இந்தியாவில் இன்னும் தீண்டாமைக் கொடுமை நிலவுகிறது. இந்நாட்டில் பல கிராமங்களில் ஒரு தலித் குடிமகன் காலில் செருப்பணிய முடியவில்லை, கோயிலில் நுழைய முடியவில்லை, இரட்டைக் குவளை முறை நடைமுறையிலிருக்கிறது என அங்கலாய்த்துக்கொள்ளும் தலித் தலைவர்கள் தலித்துகளுக்குள் காணப்படும் தீண்டாமையினை தீண்டுவதற்கு ஏன் முன்வரவில்லை. ❤



படிப்பகம்

www.padippakam.com

# மோடி ஆட்டம் : கூத்துக்கலை இன்னொரு பரிமானம்

அ. ராமசாமி

## 10 வரலாறு யாரை விடுதலை செய்யும்?

தமிழ்நாட்டுக் கிராமங்களின் பெயர்களைப் பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள், பெரும்பாலான கிராமங் களின் பெயர்கள் காரணப்பெயர்கள் என்றே சொல் கின்றனர். நல்லாண்பிள்ளை பெற்றாள் என்ற பெயரும் கூட அப்படியொரு காரணப் பெயராகத்தான் இருக்க வேண்டும். நல்ல ஆண்பிள்ளை பெற்ற ஒருத்தியை நினைவு படுத்திக் கொள்வதாகப் பெயரிட்டுக்கொண்ட அந்தக் கிராமம் செஞ்சியிலிருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையிலிருந்து விலகி மலையடிவாரம் ஒன் றில் இருக்கிறது. ஊரின் பெயரையும் அதன் கதையை யும் தனியாகப் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது சொல்ல வந்தது அந்த ஊரில் மறு உயிர்ப்புப் பெற உள்ள கூத்துக் கலையைப்பற்றி...

1970-களிலும் எண்பதுகளிலும் இந்தியாவின் ஒவ் வொரு மாநில அறிவுஜீவிகளும் தங்களின் மாநில அடையாளம் காட்டும் கலைகளையும் இலக்கியங்களையும் முன் னிறுத்திக் கொண்டிருந்தனர். மொழிவாரி மாநிலங்கள் கொண்டதாக இந்தியத் துணைக் கண்டம் பிரிக்கப்பட்டதின் தொடர்ச்சி என்றுதான் அதனைச் சொல்ல வேண்டும். அந்தத் தேடலில் தமிழ் அடையாளமாக முன்னிறுத்தப்பட்டு இந்திய அரசின் கவனத்தையும் நிதி யுதவியையும் பெற்றுக்கொண்ட கலை வடிவம் கூத்து. வடதமிழ் நாட்டின் நிகழ்த்துக் கலை வடிவமான கூத்து இன்று அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அடையாளமாக ஆகியுள்ளது.

நடிப்புக் கலைஞனின் உடலையும் குரலையும் வீரியமிக்க பல சாத்தியங்களுடன் பயன்படுத்தும் கூத்தை தமிழ்நாட்டின் நிகழ்த்துக் கலை அடையாள மாக முன்மொழிதல் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. நிகழ்த்துக் கலையின் அனைத்துப் பரிமாணங்களிலும் - உடை ஒப்பனைகள், பாடலும் வசனங்களும் கலந்த உரையாடல் வடிவம், கட்டியங்காரன் மூலம் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கான கதைக் கட்டமைப்பையும் சொல் முறையையும் உருவாக்கிக் கொள்ளும் நேர்த்தி, நல்லது X தீயது என்ற முரண்சார்ந்து நிறு த்தப்படும் மையக் கதாபாத் திரங்களின் வார்ப்பு, கிராமத்தின சகல தரப்பினரும் பங்கேற்பவர்களாகவும் பார்வையாளர்களாகவும் இருந்திட வாய்ப்பளிக்கும் அமைப்பியல் ஒழுங்கு, சமயச் சொல் லாடல்களையும் நடப்பு வாழ்க்கையின் இருப்பையும் நினைவூட்டிப் பார்வையாளனின் தளங் களைப் புனைவுலகிற்கும் நனவுலகிற்கும் அலையச் செய்யும் படைப்பாக்கச் செயல்பாடு - என அனைத்துப் பரிமாணங்களிலும் கூத்து முழுமையான நிகழ்த்துக் கலை வடிவமாகத் திகழ்கிறது. இத்தகைய முழுமையுடன் கூடிய நிகழ்த்துக் கலை வடிவங்களாகத் தென் தமிழ் நாட்டின் கணியான் கூத்தையோ, வில்லுப் பாட்டையோ சொல்ல முடியாது. தமிழ்நாட்டின் நிகழ்த்துக் கலை அடையாளமாக ஒன்றை முன்னிறுத்துவது என்றால் அதற்குப் பொருத்தமான வடிவம் கூத்துதான் என்பதில் கருத்து வேறுபாடு கொள்ள வாய்ப்பில்லை.

கடந்த கால் நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டில் கூத்து பற்றிப் பேசும் கலை ஆர்வலர்களும் ஆய்வாளர்களும் நவீன நாடகக்காரர்களும் சொல்லும் ஊர்ப் பெயர்கள் சில உண்டு; வந்தவாசிக்கு அருகில் உள்ள புரிசை (கண்ணப்பத் தம்பிரான்), காஞ்சி புரத்திற்கருகிலுள்ள பெருங்களத்தூர் (ராஜகோபால்), தஞ்சை மாவட்டத்திலுள்ள நார்த்தேவன் குடிகாடு என்பன அவை. இந்த ஊர்களில் நடத்தப்படும் கூத்துக்களின் கதைப்பகுதி பெரும்பாலும் பாரதக் கதைகள் என்பது கூட ஆய்வாளர்களின் கவனத்தைப் பெற்றதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் இந்த ஊர்களில் மட்டும்தான் கூத்துக்கலை இருந்துள்ளது என்பதில்லை. வடதமிழ்நாட்டின் பல கிரமங்களிலும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பரவலாக நடத்தப்பட்ட வடிவம் அது.


படிப்பகம்

www.padippakam.com

கோடைகால கிராம விழாக்களின் முக்கியப் பொழுதுபோக்குக் கலை நிகழ்வாக கூத்துக் கட்டுதல் இருந்துள்ளது என்பதைச் சாதாரணமான பயணங்களிலேயே தெரிந்துகொள்ள முடியும். கிராமத்தின் பொருளாதார வளத்திற்கும், நன்கொடையாளர்களின் பெருந் தன்மைக்கும் ஏற்ப கூத்துக் கட்டிய நாட்களின் எண்ணிக்கைகளில் வித்தியாசங்கள் இருந்துள்ளன. எதிரெதிர் கதாபாத்திரங்கள் என்ற நாடக மையத்தை உருவாக்க ஏதுவான கதைகளைப் பாரதக் கதையிலிருந்து உருவாக்கிய கூத்து வாத்தியார்களின் திறனிலும் நடிப்புக் கலை ஞர்களின் குரல் மற்றும் உடல் வீச்சின் வீரியத்தையும் பொறுத்து ஒரு கூத்துக் குழுவின் பிரபலம் இருந்துள் ளது. புரிசை துரைசாமிக் கண்ணப்பத் தம்பிரான் குழு அத்தகைய தேர்ந்த கூத்துக் குழு என்பதுகூட இன்றும் அது பிரபலமாக இருப்பதற்கும், கலையார்வலர்களின் கவனத்தைக் கவர்ந்ததற்கும், அவற்றின் தொடர்ச்சியாக ஊடகங்களின் பார்வைக்குள் வந்ததற்கும் காரணங்கள் எனலாம்.

தேர்ந்த குழுக்கள் பாரதக் கதைகளையே அதிகம் நிகழ்த்தின. பாரதக் கதைளை எத்தனை நாட்களுக்குத் தொடர்ந்து நடத்தக்கூடிய குழு என்பதுவே ஒரு குழுவின் முக்கியத்துவத்திற்குக் காரணங்களாக இருந்துள்ளன. அதனால் ஒவ்வொரு குழுவும் பாரதக் கதையை நிகழ்த்து வதில் அதிகம் கவனம் செலுத்தியிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆங்கிலேயர்கள் வருகைக்கு முன்பு தமிழ் நாட்டின் பெரும்பகுதியில் ஆட்சியதிகாரம் செலுத்திய நாயக்க அரசர்களும் அவர்களுக்குக் கீழிருந்த பாளையக் காரர்களும் ஜமீந்தார்களும் பாரதக் கதை சார்ந்த நிகழ்த் துக்கலை வடிவத்தை ஆதரித்து வளப்படுத்திய ஒன்று இயல்பானதுதான். என்றாலும் கூத்து நடத்த விரும்பும் கிராமத்தின் பொருளாதார நிலை மற்றும் தேவை காரணமாக பாரதக் கதை தவிர்த்த பலவற்றை நாடகங் கள் என்ற பெயரில் அதே கூத்துக் குழுக்கள் நடத்தவே செய்துள்ளன. புராண, இதிகாச உள்ளடக்கங்களோடு அவ்வப்பகுதியைச் சேர்ந்த நாட்டார் கதைப் பாடல்களையும் அவை நிகழ்த்தியுள்ளன. இவையனைத்தும் இது வரை கூத்துக்கலை பற்றி அறியப்பட்ட செய்திகள். இதிலிருந்து இன்னொரு புதிய பரிமாணத்தை நல்லாண் பிள்ளை பெற்றாள் கிராமத்தில் நடந்த மோடியாட்டம் என்னும் கூத்து சேர்த்துள்ளது.

ஆயிரத்தி ஐந்நூறு வீடுகளுக்குள் இருக்கும் அந்தக் கிராமத்தில் சராசரியாக ஒரு வாத்தியார் இருப்பார் என்றே தோன்றுகிறது. இப்பொழுது பணியிலிருப்பவராகவோ அல்லது ஓய்வு பெற்றவராகவோ ஒவ்வொரு வீடும் ஓர் ஆசிரியரைக் கொண்டதாக இருக்கிறது என்று செல்லப்பெருமாள் கூறினார். அவரும் ஓர் ஆசிரியர்தான். பள்ளிக்கூட ஆசிரியர் அல்ல; கல்லூரி ஆசிரியர்; நாட்டார் வழக்காற்றியல் துறை ஆசிரியர். திருநெல்வேலியின் அடையாளச் சின்னங்களான அல்வா, தாமிரபரணித் தண்ணீர், நெல்லையப்பர்-காந்திமதி அம்மன் கோயில், பாளையங்கோட்டை ஜெயில் என்ற வரிசையில் தன்னையும் இணைத்துக்கொண்ட பாளையங்கோட்டை சேவியர் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் துறையின் ஆசிரியர். தனது கல்வி சார்ந்தும், துறை சார்ந்தும் தனது சொந்த ஊருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் பலருக்கும் இருப்பதுண்டு. அப்படியான எண்ணத்தின் நீட்சியாக செல்லப்பெருமாள் காட்டிய ஈடுபாட்டின் விளைவுதான் இந்த மோகினி ஆட்டப் புத்துயிர்ப்பு எனலாம்.

தமிழ்நாட்டின் அடையாளக் கலைவடிவமாக மதிக்கப்படும் கூத்து போன்ற ஒன்று தனது கிராமத்தில் இருந்தது என்பதையும், எல்லோருக்கும் அறிமுகமாகி யுள்ள இந்த வடிவத்திலிருந்து மாறுபட்ட வடிவத்தோடு இருந்தது என்பதையும் சொல்ல விரும்பிய செல்லப் பெருமாள், அந்த வடிவத்தைத் தனது கிராமத்தில் மறு உயிர்ப்பு செய்துவிடுவது என்ற நோக்கத்தோடு சில ஆண்டுகள் முயற்சி செய்துள்ளார். இந்த ஆண்டு அதில் முழுமையான வெற்றியையும் அடைந்துள்ளார்.

மற்ற ஊர்களில் எல்லாம் திரௌபதியம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய வடிவமாகக் கூத்து வடிவம் விளங்க, அந்தக் கிராமத்தில் நடக்கும் மோகினியாட்டமோ வழிபாட்டுச் சடங்காக இல்லாமலும், தொழில் முறைக் கலைஞர்களால் நிகழ்த்தப்படாமல் கிராமத்தின் பொழுதுபோக்கு அம்சமாக இருந்துள்ளது என்பது முதலில் சொல்லப்பட வேண்டிய தனிச் சிறப்பு. மற்றப்படி கூத்துக் கலையின் சாராம்சமான வடிவமும் அழகியல் கூறுகளும் எந்த வகையிலும் மாறவில்லை. கூத்து நடிகர்களின் ஆடைகள், ஒப்பனைகள், இசைக் கோலங்கள், எடுத்துரைப்பு முறைகள், அடவுகள், பார்வையாளர்களோடு லாவகமாக உறவுகொள்ளும் வாய்ப்புகள் என எல்லாம் மோடி ஆட்டத்திலும் இருக் கின்றன. முழு இரவில் நடைபெறும் கூத்தில் நள்ளிரவுக் குப் பின் சொல்லாடல்களாக மாறும் காதல் மற்றும் காமரசம் வெளிப்படும் பகுதிகளும்கூட இதிலும் பின் பாதியில் தொடங்குகின்றன. கதையோட்டம் மட்டும்தான் இதுவரை அறிமுகமாகாத புதுமை.



படிப்பகம்

www.padippakam.com

நல்லான்பிள்ளை கிராமத்தில் நிகழ்த்தப்பட்ட மோடி ஆட்டத்தின் கதையும் நிகழ்முறையும் இதுதான்: இந்த ஊரில் சகல வித்தைகளும் கற்றுத் தேர்ந்த மோடிக்காரன் (ஊர்க்குடுமியும் அவனது சிஷ்யனும்) ஊரைச் சுற்றி வந்து இந்த ஊரில் நான் மோடி வைத்திருக்கிறேன்; அது இந்த ஊருக்குள் நுழையக்கூடிய வேற்று நாட்டு வித்தைக் காரர்கள், நோய்நொடிகள், ஆபத்துக்கள் ஆகியவற்றிலிருந்து இந்தக் கிராமத்தைக் காக்கக் கூடிய மோடி; அதனை யாரும் எடுத்து விட முடியாது; இந்த ஊரில் உள்ளவர்களாலும் வேறு ஊரில் உள்ளவர் களாலும் எடுக்க முடியாத மோடி அது என அறிவிப்பு செய்துவிட்டுக் கோயில் முன்பு மோடி வைக்கிறான். அதை எடுத்துவிட்டு அந்த ஊருக்குள் நுழைய ஒருவன் முயற்சிக்கிறான். அவனது தேசம் மராத்திய தேசம் எனக் கதைப்போக்கில் சொல்லப் படுகிறது. வந்தவன் இதை எடுக்க நான் எதற்கு? எனது கடைசிச் சீடனே எடுத்து விடுவான் என அவனை அனுப்புகிறான்.

வந்த அந்தக் கடைசிச் சீடன் எடுக்க முடியாமல் ரத்தம் கக்கி விழுந்து விடுகிறான். அடுத்து இன்னொரு சீடன் வருகிறான். அவனது முயற்சிகளும் பலிக்கவில்லை. மூன்றாவது சீடனும் முயன்று தோற்கிறான். கடைசியில் அவனே வருகிறான். அவனாலும் முடியவில்லை. ரத்தங்கக்கிக் கி. .க்கும் கணவனையும் அவனது சீடர்களையும் எழுப்ப அவனது மனைவிகள் இருவரும் ஒருவர் பின்னொருவராக வருகின்றனர். இளையவள் மயங்கிக் கிடக்கும் சீடர்களைப் பிழைக்கச் செய்கிறாள். அடுத்தவள் வந்து கணவனை எழுப்புவதோடு வைக்கப்பட்ட மோடியையும் எடுத்து விடுகிறாள். தொடர்ந்து உள்ளூர் மோடிக்காரனுடன் சமரசமும் செய்துகொள்கிறாள். ஆண்களால் இயலாத காரியத்தைப் பெண்கள் சாதிக்கிறார்கள் எனக் காட்டும் பாரம்பரியக் கலைவடிவம் பெண்ணியவாதிகளின் கவனத்திற்குரிய ஒன்று.

நல்லாண்பிள்ளை கிராமம் தமிழ் நாட்டிற்குள் நுழைந்த பிற மொழியாளர்களின் வருகையை எதிர் கொண்ட செஞ்சிக்கருகில் உள்ள ஒரு கிராமம் என்பதையும், மோடி ஆட்டத்தில் உருவாக்கப்படும் உள்ளூர் x வெளியூர் எதிர்வுகளையும், கடைசியில் ஏற்படும் சமரச முடிவையும் இணைத்துப் பார்த்தால் இந்தக் கூத்து நாயக்கர்கள், மராத்தியர்கள் தமிழ்நாட்டிற்குள் நுழைந்த காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட கலைவடிவம் எனக் கருத இடமுண்டு. தொடக்கத்தில் பிறமொழியாளர் களுக்குச் சவால் விட்ட கிராமம் அவர்களின் தொடர்ந்த வருகையினாலும் அதிகாரத்தின் நெருக்கடியினாலும் அவர்களுடன் சமரச நிலைக்குத் தயாரானது என்பதைக் காட்டுகிறது எனக் கூற வாய்ப்புண்டு. அதேபோல தலித் தியப் பார்வையிலும் இம்மோடியாட்டத்தை அணுகும் வாய்ப்புகளும் உண்டு.

உள்ளூர் x வெளியூர் எனவும், சீடர்களின் திறமை, தகுதி பற்றிய விவாதங் களின்போதும் சாதியப்படிநிலைகளை வெளிப்படுத்திய மோடியாட்டம் மேலாய்வு செய்ய ஏற்ற வடிவமாகவே எனக்குப் பட்டது. பழைய கலைவடிவங்களைப் பேணி வளர்ப்பதில் மிகுந்த கவனம் தேவைப்படுகிறது. ஏனெனில் பல நேரங்களில் நாட்டார் கலை வ டிவங்கள் பழைய சாதிக் கட்டுமானத்தைத் தக்க வைக்கும் வேலையை மறைமுகமாகச் செய்யும் ஆபத்துக்கள் கொண்டவை. அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்த மோடி ஆட்டம் நடை பெறும்பொழுது மொத்த ஊரோடும் அக்கலை வடிவம் தொடர்பு கொண்டுள்ளதா? இந்திய சாதி அமைப்பு தலித்துகளை ஒதுக்கி வைப்பதைப்போல இதுவும் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறவர்களாகவோ அல்லது சேவை செய்கிறவர்களாகவோ மட்டும் வைத்துள்ளதா? என ஆய்வு செய்ய வேண்டும்.

இந்தக் கூத்தை மறு உயிர்ப்பு செய்ய மைய அரசின் தென்னகப் பண்பாட்டு மையம் இந்த ஆண்டு நிதி உதவி செய்துள்ளது. அதனால் ஆசிரியர்களாகவும், அரசாங்கப் பணிகள் பலவற்றிலும் இருக்கும் அக்கிராமத்துக் கலைஞர்கள் மறந்துபோன தங்கள் கலை வடிவத்தைத் திரும்பவும் கற்று மேடையேற்றியுள்ளனர்.

அரசின் இந்த நிதி உதவி தொடரும் வரை நிகழ்வு தொடர்ந்து நடக்க வாய்ப்புண்டு. அதன் மூலம் அந்தக் கிராமத்து மக்களுக்கு அதன்மீது ஈர்ப்பும் தங்களின் கலை அடை யாளம் என்ற பெருமையும் ஏற்பட்டுவிட்டால் அதன் பின்னரும் கூட இந்த மோடி ஆட்டம் தொடர்ந்து நடைபெற வாய்ப்புண்டு. மனிதர்களின் களியாட்டம் மற்றும் கருத்தாடல் தேவை கருதித்தான் எந்தக் கலைவடிவமும் உயிர் வாழும். நிதிநல்கைகள் மூலமோ, ஆய்வாளர்களின் ஆர்வம் காரணமாகவோ ஒரு கலை வடிவத்தை உயிர்ப்புடன் இருக்கச் செய்ய முடியாது.


படிப்பகம்

www.padippakam.com

# சாமிக்கண்ணு என்றொரு மனிதன்

**விழி. .பா. இதயவேந்தன்**

அவனது உடல் மெலிந்து சப்பைக் குச்சியாய் இருந்தது. கால்கள் வலுவிழந்து நடக்கவே முடியாத படிக்கு ஆகியிருந்தது. தலைமுடி பரட்டைவிரிகோலத்தில் பறந்து கொண்டிருந்தது. முகம் சவரம் செய்து மாதங்கள் சில ஓடியிருக்கும். அதெற்கெல்லாம் அவசியம் இல்லாத மாதிரி இருந்தான் அவன்.

காய்ச்சல் அதிகரித்து உள்ளுக்குள்ளிருந்து அனல் காற்று வீசியது. கண்கள் தனலாய் எரிய முகத்தில் சோர்வு தட்டியது. காக்கிச் சட்டையின் அழுக்கு வாசம் குப்பென மொப்படிப்பதுபோல வீச்சமெடுத்தது. அருகே போகிற வருகிறவர்கள் தோற்றத்தைப் பார்த்து சற்று விலகியே நடக்க ஆரம்பித்தார்கள்.

அலுவலகத்தின் உள்ளே நுழைந்து யாரையோ தேடுவதுபோல நெற்றியின் மேல் கை வைத்துத் தேடினான். கண்கள் மையம் பூத்த மாதிரி இருள் சூழ்ந்தது. இப்படியும் அப்படியுமாக கண்களை கசக்கிக் கொண்டு உற்றுப் பார்த்தான்.

"யோவ் சாமிக்கண்ணு, யாரத் தேடுற?"

புதிதாய் வேலைக்கு வந்திருந்த 'அலுவலக உதவியாளன்' இராமநாதன் கேட்டான். சாமிக்கண்ணு முப்பது ஆண்டுகளாய் வேலை செய்து ஓய்ந்துபோன நிலையில் அலுவலகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலிருந்தும் அதட்டலும், மிரட்டலும், கூடவே ஏளனத் தொனியுமாக இருப்பது சாமிக்கண்ணு மாதிரியான நகராட்சித் துப்புரவுப் பணியாளர்களுக்கும், மலம் வாரும் மனிதர்களுக்கும் சாதாரணமான விசயமாக இருந்தது.

அவனது கேள்விக்கு பதில் தராமல் கணக்கரின் மேசையை கைத்தாங்கலாய்ப் பிடித்துக்கொண்டு ஒரு காலால் தாங்கியபடி நின்று கொண்டிருந்தான். அலுவலகத்தின் நீண்ட அறையில் பணி செய்யும் அதிகாரிகள் ஒவ்வொருவரின் உருவங்கள் மட்டும் மொத்தமாகத் தெரிகிறதேயொழிய யாருடைய முகம் எனப் பளீரென கண்களுக்கு அகப்படவில்லை. அதிகாரிகளின் குரலும் சலசலப்பும் குழைந்து அலுவலகம் இயங் கும் சூழலை உணர்த்தியது.

"சாமிக்கண்ணு, நான் கேக்குறது காதுல உழலியா?"

நினைவு திரும்பி வந்ததுபோல இருந்தது அவனுக்கு. சுதாரித்துக் கொண்டவன்போல் நிமிர்ந்தான். உடலெல்லாம் புழுதியில் புரண்டு எழுந்த மாதிரி அழுக்கான தோற்றத்தில் அவன் நின்றிருந்தான்.

"ஆங்.. எங்கப் புள்ளயத் தேடுறங்க"

"யாரு அது?"

"அதான் சின்னதொர"

"சின்னதொர சார் உங்கப் புள்ளையா"

"என் கொழுந்தியாப் புள்ளதான், பாக்கணும்"

"அப்படியா, அதோ கடைசில போய்ப் பாரு"

சாமிக்கண்ணு தட்டித்தடுமாறி ஒரு கால் லேசாகப் பின்னுக்கு இழுக்க தத்தித் தத்தி நடந்து வந்தான். கோப்புகளோடு கவிழ்ந்திருந்த சின்னதுரை அவனை நிமிர்ந்து பார்த்தான்.

"வா பெரியாப்பா, எங்க வந்த"

"உங்கிட்டதான் வந்தம்பா"

அவனைப் பார்த்து சில மாதங்கள் கடந்து விட்டது. சாமிக்கண்ணு நகராட்சியின் ஊர்ப்பகுதியில் வேலை செய்துவிட்டு அப்படியே ஊருக்கு வெளியே உள்ள நகராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கான வீட்டிற்கும் போய்விடுவான். சின்னதுரை அங்கிருந்து ஊரைவிட்டு வந்து பல வருடங்கள் ஆகிவிட்டது. அவ்வப்போது போய்ப் பார்த்தால் உண்டு. அல்லது போகிற வருகிற வழியில் வேலை செய்யுமிடத்தில் பார்த்துப் பேசினால்தான் உண்டு.

குச்சிப்பாளையம் கிராமத்திலிருந்து பிழைக்க ஓடி வந்த சாமிக்கண்ணு, பெரியம்மாவை காதலித்து மணந்து கொண்டவர். இருவரும் நகராட்சியில் வேலை செய்யும் போதுதான் அவர்களுக்குள் உறவு ஏற்பட்டது. மேஸ்திரி, ஆய்வாளர்கள் இவர்களைப் பார்த்து கேலியும் கிண்டலு மாகப் பேசுவார்கள். 'என்னடா ரெண்டு பேரும் ஒரு தினுசா இருக்கீங்க. போக்கே சரியில்லையே..' என்பார்கள்.

'அதெல்லாம் ஒன்னுமில்லீங்க...' என்று சொல்லி சமாளிப்பான் சாமிக்கண்ணு. கொஞ்ச நாளில் அவர்களின் திருமணம் ஒரு கோயிலில் வைத்து முடிந்த போது 'நான் சொன்னது சர்தானடா' எனும்போது வேலை வாங்கும் மேஸ்திரிக்கு முன்பு வெட்கத்தோடு பவ்யமாய் பணிந்து நிற்பான்.

பெரியம்மாவைவிட சாமிக்கண்ணு ரொம்ப சுறு சுறுப்பு. வேலையில் சுத்தம் இருக்கும். அதிகாரிகள் பார்க்கும்போது இவன் வேலையைப் பார்த்து ரொம்பவும் அவனுக்கு பாராட்டு கிடைக்கும். எங்காவது சாக்கடை அடைத்துக்கொண்டால் வக்கிலை பந்தாக சுருட்டி சுரண்டியால் நெஞ்சு நோக சேரும் தண்ணீரும் வாய்க்காலுக்கு மேல் வழிய வழிய நெருக்கத் தள்ளிக் கொண்டு வந்து மொத்தமாக வாறி எடுப்பான்.



படிப்பகம்

www.padippakam.com

வாய்க்கால்களின் அடைப்பைப் பார்த்து புழு, பூச்சி, செத்தை, குப்பை என்று வாய்க்கால் மூலைகளில் சுத்தமாக வாரிக்கொட்டி முடிப்பான். அப்பேர்ப்பட்ட வேலைக்காரனாக இருந்தவன்தான் இப்படி ஓடாகிக் காட்சியளிப்பது மனதைப் போட்டு முள்ளால் கீறி இரத்தம் சொட்டுகிறமாதிரி இருந்தது அவனுக்கு.

காலை நான்கு மணிக்கே எப்போதும் எழுந்து விடுவது வழக்கமாக இருந்தது சாமிக்கண்ணுக்கு. தோட்டத்துப் பக்கம் ஒன்றிரண்டு காய்கறிகள் போட்டு வைத் திருப்பான். அவற்றுக்கு கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து செடிகளுக்கு ஊற்றி மண்வெட்டி கொண்டு அணைப்பு கட்டி செடிக்கு பாதுகாப்பாக ஆக்குவான். கத்தரி, வெண்டை, புடலங்காய் என ஆர்வமாய் வளர்ப் பான்.

ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் வேலி காத்தான் முள்ளை வெட்டி வந்து சற்றிலும் வேலியாக நட்டு கிறுக்கிப்படல் கட்டுவான். அய்ந்து மணி ஆன தும் தெருவில் ஒவ்வொருவராய் எழும்பக் குரல் கொடுப் பான். சாமிக்கண்ணுவின் குரல் கேட்டு அடுத்தடுத்த வீடு களில் எழுந்து விடுவார்கள். காலை ஆறு மணிக் கெல் லாம் டவுனுக்கு ரெண்டு மைல் நடந்து வந்து துப்பரவு அலுவலகத்தில் கைரேகை வைக்க வேண்டும். வேலை முடித்து மீண்டும் மாலையில் வீடு திரும்ப வேண்டும்.

சாமிக்கண்ணுவிடம் ஒரு பழைய சைக்கிள் மிகப் பெரிய சொத்தாக இருந்தது. அதை அழகாகத் துடைத்து எண்ணெய் போட்டு பார்ப்பதற்கு மினுமினுப்பாக இருக்கும்படி எப்போதும் வைத்திருப்பான். அவன் தான் காலையில் மனைவி வீராயியோடு முதலில் வந்து நிற்பான். அதிகாரிகளுக்கு முன்னால் வந்து காத்திருப்பது அவனது நன்மதிப்பை மேலும் கூட்டியிருந்தது.

"சொல்லு பெரியாப்பா"

"பாத்து ரொம்ப நாளாச்சு"

"ஆமாம். ஆபிசுல வேல முடியல... வெளிய எங்க யும் அலைய முடியல..."

"பெரியம்மா உன்னக் கேட்டா"

"நல்லாயிருக்காங்களா"

"அவளுக்கும் வொடம்பு முடியல. எனக்கும் ஒரு கை ஒரு கால் சரியா வர்ல. ஒடம்புல வலுவில்ல"

·க்கத்தில் வேலை செய்யும் பணியாளர்களின் பார்வை அவன் மேல் இருந்தது. அவன் விசனத்தோடு ஒவ்வொன்றாய்ச் சொல்லச் சொல்ல சின்னதுரைக்கு துக்கம் தொண்டைக் குழிக்குள் அடைத்தது.

'எப்படி ஓடியாடி வேலை செஞ்ச மனிசன், இப்படி ஒடைஞ்சு போன சட்டிப்பானை மாதிரி நொறுங்கிக் கெடக்குறாரு' என உள்ளுக்குள் மணங்குமைந் தான்.

"ஆசுபத்திரிக்குப் போவலியா"

"போனன். எங்க ஒன்னும் கேக்கல. அவ்ளோதான் எல்லாம் முடிஞ்சி போச்சு. இனிமே சுடுகாட்டுக்குப் போவ வேண்டிதான்..."

சாமிக்கண்ணுவின் வார்த்தைகள் வேதனை களால் மனது இடிந்து நொறுங்கிக் கொட்டியது. கண் களில் ஒரு பக்கம் நீர் கலகலவென மேசைமேல் கொட்டி யது. வாய் விட்டு அழாத குறைதான். சின்னதுரை உட் கார முடியாமல் அவனை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான். அவனுக்கு யாருமற்ற ஒரு நிசப்தமான பகுதி யில் தன்னந்தனியாக நின்று ஓவென்று அழ வேண்டும் போலிருந்தது. சுதாரித்துக்கொண்டு கேட்டான்.

"மாரி இன்னா செய்யிறான் பெரியாப்பா"

"அந்தப் பொட்ட மாரிய புள்ளேன்னு சொல் விக்க வெக்கமாயிருக்குப்பா"

"ஏன் உன்கூட இல்லியா"

"அவென் ஒரு பொண்ண இழுத்துட்டு ஓடிட் டான். அவென்தான் அப்டீன்னா மவ ஒரு பையன இழுத்துட்டு ஓடிட்டாள். இன்னா செய்ய சொல்ற, ம்..."

"அப்பிடியா"

"காசு பணம் வேணும்னா எப்பவாச்சும் வரு வாங்க. கடன் வாங்கித் தரச் சொல்வாங்க. யாரும் கவ னிப்பில்லாம நாங்க இப்ப அநாதங்களா ஆயிட்டம் தெரிமா"

சின்ன வயசுல நாலு பேருக்கு புத்திமதி சொல்ல வும், பெரிய மனுசன் மாதிரி நியாயத்தை எடுத்துச் சொல்லவும் சாமிக்கண்ணுவால் முடிந்தது. இப்போது யாருடைய ஆதரவையாவது பெற்று இருக்கிற மீதி நாளைத் தள்ள அவர்கள் வாழ்க்கை போராட்டமாக இருப்பதை உணர்ந்து கொண்டான் சின்னதுரை.

சாமிக்கண்ணுவைப் போன்றே வீராயியும் வேலை செய்யிறதில அஞ்ச மாட்டா. அப்பெல்லாம் மலம் வாருகிற வேலைதான். காலைல 'பீ வார்ற பக்கெட்டை' எடுத் தாள்னா வெய்யிலு ஏ றதுக்குள்ள தெருவுல இருக்கிற வீடு வீடா நொழைஞ்சி இருக்கிற மலத்தை யெல்லாம் வாரியாந்து பக்கெட்டு பக்கெட்டா பீ டிரம் முல கொட்டிடுவா. வலது கையில மல வாளியும், இடது கையில சாம்பல் நிறைந்த தகர முறமும் சொரண் டியுமா பாக்கறவங்களுக்கு அவளை அருவருப்பாகக் காட்டும்.

ஒரு சந்துபொந்து பாக்கியிருந்தாலும் மேஸ்திரி எல்லாரையும் கேக்குற மாதிரி அவளையும் நிற்க வைத்து அசிங்கமாக திட்டிவிடப் போகிறான் என்ற பயம் உள்ளுக்குள் பரவியிருக்கும். அதிகாரி ஒரு சொல்லு சொல்லிவிடக்கூடாது என்பதில் சாமிக்கண்ணுவைப் போன்று அவளும் எச்சரிக்கையாய் இருப்பாள்.

எல்லாம் பழைய காலமாகிப் போய்விட்டது. இப் போது பழுத்த இலைகளைப்போல உதிர்ந்து சருகாகிப் போய் விழுகிற மாதிரி சாமிக்கண்ணு இருந்தான். அவ னுக்கு கை கால் துவண்டு இனி வேலை செய்ய முடியா தென்று மருத்துவ சோதனைக்கு அனுப்பி ஓய்வுக் கடிதம் கொடுத்து வீட்டிற்கு அனுப்பி வருசம் ஒன்னாகி விட்டது.


படிப்பகம்

www.padippakam.com

வீராயிற்கும் கண் பார்வை மங்கலாகத் தெரிய தெருக்களில் குப்பையும் சேரும் சரியாக வார முடிவ தில்லை எனப் புகார்கள் நிறைய வந்து அவளும் இந்த ஆண்டு மருத்துவ சோதனையில் பணியிலிருந்து நீக்கப் பட்டு ஓய்வுக்கு அனுப்பப்பட்டாள்.

"பணமெல்லாம் கெடைச்சுடுச்சா"

"அதான்பா இன்னும் முடியல. கடன் குடுத்த வங்க தொல்லை தாங்க முடியலப்பா"

"ஒன்னுமே வாங்குலியா"

"அரியரு, பென்சனு எதுவும் கெடைக்குல"

இரண்டு பேர் உழைத்து முடித்தும் கையில் ஒன் றும் மிஞ்சாமல், கடன் கொடுத்த அஞ்சலை மறுபக்கம் பணத்திற்காக சுறுக்கு போட்டு இழுத்துக்கொண்டு இருந்தாள்.

"பேசாம நாங்க ரெண்டு பேரும் வெசம் குடிச்சு செத்துப் போவலாம்பா"

"அப்பிடியெல்லாம் சொல்லாத பெரிப்பா"

"பின்ன, நாங்க வாழ்ந்து இன்னாப் பிரயோஜனம். வொழைச்ச எடத்துல இல்ல மரியாத, பெத்ததுங்களும் வுட்டுட்டுப் பூடுச்சி. கடன் தொல்லையால, நோய் நொடின்னு எம்மா நாளு.."

"நான் அதிகாரிகிட்ட சொல்லி ஒரு வாரத்தில ஒவ் வொன்னா ஏற்பாடு செய்யிறேன்.."

சின்னதுரையின் வார்த்தைகளில் அவனுக்கு நம் பிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. சுருங்கி வதங்கிப் போயிருந்த அவன் முகத்தில் லேசான புன்சிரிப்பின் சாடை தெரிந்தது. "இந்தா சோறு ஆக்கிச் சாப்புடுங்க" என்று நூறு ரூபாயை அவன் கையில் திணித்தான்.

கைகள் வெடவெடவென நடுங்கியது. அம்மா வேலையிலிருந்து வர தாமதமானால் பக்கத்து வீட்டுப் பெரியப்பாவின் வீட்டில்தான் இருப்பான் சின்னதுரை. சாமிக்கண்ணு கையால் பிசைந்த உருண்டைச் சோற் றின் மணம் இன்னும் நெஞ்சு முழுக்க நிறைந்திருந்தது. பள்ளிக்குப் போய்த் திரும்பியதும் புழுதியோடுள்ள கால்களைப் பார்த்து கிணற்றுப் பக்கம் அழைத்துப் போய் தண்ணீர் இழுத்து அழுக்கு தேய்த்து குளிக்க வைத்த கைகள்தான் இரத்த ஓட்டமின்றி நரம்புகள் தெரிய ஆட்டங் கண்டிருந்தன.

அவனால் நம்ப முடியாதபடிக்கு சாமிக்கண்ணு வாழ்க்கையில் பிடிப்பற்றுப்போய் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தளர்ந்துபோயிருந்தான். அவன் குழந் தைப் பிள்ளைகள் போல் தவழ்ந்து தவழ்ந்து அடி யெடுத்து வைப்பதைப் பார்க்க இந்த நிர்வாகத்தின் மேலும், இருக்கிற சமூக அமைப்பின் மேலும் கோபம் எழத் தொடங்கியது. எந்தவித சலனமுமில்லாமல் அலுவலகமே யந்திரமாய்க் கிடப்பதாய் சின்னதுரை உணர்ந்தான்.

அலுவலகத்தினுள் நுழைந்து ஒரு பத்து நிமிடந் தான் ஆகியிருக்கும். சின்னதுரைக்குப் பிறகு பணியாளர் கள் ஒவ்வொருவராய் உள்ளே நுழைந்து கொண்டிருந் தார்கள். ஒருவருக்கொருவர் கைகூப்பி கும்பிட்டும் லேசான புன்சிரிப்போடும் தங்கள் வணங்கங்களைப் பரிமாறிக்கொண்டிருந்தார்கள்.

அஞ்சலைக் கிழவிதான் முதன் முதலில் கண் களை உருட்டியபடி அவனைத் தேடிவருவது மாதிரி தெரிந்தது. சின்னதுரைக்கு அவளைப் பார்க்கப் பிடிக் காமல் போயிருந்தது. அவள் சேரியில் சாராயம் விற்றுக் கொண்டிருப்பவள். அத்தோடு இருந்தால் பரவா யில்லை. சாராயமும் குடிக்க வைத்து, கடனும் கொடுத் தனுப்பி, நகராட்சியில் துப்புரவு வேலை செய்யும் பல குடும்பங்களை நடுத் தெருவில் நிறுத்தியவள். அதில் மாட்டிக் கொண்டவர்களில் ஒரு குடும்பம்தான் சாமிக் கண்ணுவினுடையது என்று எப்போதுமே அவளிடம் அவன் பேச முற்படுவதில்லை.

அருகே வருவதுபோல்தான் இருந்தது. வந்தே விட்டாள். முட்டியளவிற்கு புடவையைத் தூக்கி இடுப் பில் கத்தையாய் இழுத்துச் சொருகியிருந்தாள். வாயில் வெற்றிலை பாக்கு குதப்பியபடி தலையை சொரிந்து கொண்டு முன்னே நின்று கொண்டிருந்தாள். அவன் நிமிர்ந்ததும் அவள் முகம் துக்கத்தில் உம்மென்றிருந்தது.

"செத்த வெளிய வர்றியாப்பா"

ஏன் அவள் தன்னை வெளியே கூப்பிட வேண் டும், சாமிக்கண்ணு கடன் வாங்கிய பிரச்சினையா அல்லது வேறு ஏதேனும் சிக்கலாய் இருக்குமோ என சின்ன துரை யூகிக்க முடியாமல் போட்டுக் குழப்பிக்கொண்டு அலுவலகத்தின் வெளியே வந்தான். அவளும் அருகே வந்து நின்றாள்.

"உம் பெரியாப்பன் நம்பள வுட்டுட்டுப் போயிட் டான்ப்பா"

அவள் சொல்லிவிட்டு புடைவைத் தலைப்பில் கண்களைத் துடைப்பதற்குள் சின்னதுரைக்கு அழுகை பீறிட்டுக் கிளம்பியது. கைக்குட்டை எடுத்து அழுத

**"போயும் போயும் சக்கிலிச்சிய கட்டிக்கிட்டுப் போனவனாச்சே..." என்று உறவே அப்போதிலிருந்து அறுந்துபோன மாதிரி பேசித் திருப்பி அனுப்பியதாக அஞ்சலை விவரமாய் எடுத்துச் சொன்னாள்.**



படிப்பகம்

www.padippakam.com

வாயில் திணித்துக்கொண்டு கட்டுப்படுத்த முயற்சி செய்தவனுக்கு கண்களில் மடை திறந்து விட்ட மாதிரி கண்ணீர் சிதறியது. அழுகையின் காரணத்தை மற்றவர்கள் கேட்டுவிடப் போகிறார்கள் என மற்றவர்களை சுற்றிலும் திரும்பத் திரும்பப் பார்த்தான்.

அஞ்சலை சொல்லிவிட்டுப் போனபிறகு வேலை செய்யாதபடிக்கு நெடுநேரம் யோசித்தபடி அவன் இருக்கையில் அமைதியாக இருந்தான். சாமிக்கண்ணு வாழ்ந்த வாழ்க்கை சின்ன வயது முதல் நெஞ்சில் அலை மோதிக் கொண்டிருந்தது. கடைசிவரை உழைத்து உழைத்து ஒன்றுமே மிஞ்சாமல் போன பரிதாபம் தெருவில் எல்லோரையும்போல் அவனுக்குமிருந்தது.

மேளம் அடிக்கிற சத்தம் நெருங்க நெருங்க அதிகமாகிக்கொண்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் பிணத்தைச் சுற்றி ஒன்றிரண்டு பேர்தான் இருந்தார்கள். அஞ்சலை வழியிலேயே உட்கார்ந்திருந்தவள் கூடவே சின்னதுரையோடு நடக்க ஆரம்பித்தாள்.

ஒரு உடைந்த பழைய பெஞ்சின் மேல் சாமிக்கண்ணுவைக் கிடத்தி மேலே ரெண்டு மாலைகள் போட்டு அருகே வீராயி பெரியம்மாவும் மருமகளும் அழுது கொண்டிருந்தார்கள். மகனுக்கும் மகளுக்கும் அஞ்சலை தகவல் அனுப்பி அவர்களும் வந்திருந்தார்கள்.

வேலை செய்த சக பணியாளர்கள் இரண்டு மைல் நடந்து வரவேண்டும் என்று வருகையை நிறுத்திக் கொண்டார்கள். நகராட்சி கோட்ரஸ் வீடுகளில் முன்பு போல் ஆளில்லை. நகராட்சி சீர் செய்யாமல் இடிந்து கட்டிடங்கள் காரை பெயர்ந்து கிடந்தது. ஒவ்வொரு ஓட்டு வீடுகளிலும் ஓடுகள் விழுந்து நொறுங்கிக் கிடந்தது. நிறைய பணியாளர்கள் நகரத்தின் வேறு பகுதிகளில் குடிபெயர்ந்தாலும் சாமிக்கண்ணு நகராமல் காற்றுக்கும் மழைக்கும் அதிலேயே கிடந்தான். நாலைந்து குடும்பங்கள் தவிர மீதி இடங்கள் ஆள்ரவமற்ற பகுதியாகக் காட்சியளித்தது.

இடிந்துபோன வீடுகளில் கூட ஆட்கள் பிழைப்பிற்காய்ப் போனவர்கள் வந்து சேரவில்லை. அஞ்சலை ஏற்பாடு செய்திருந்த மேளக்காரர்கள் சென்னாகுணத்திலிருந்து வந்திருந்தார்கள். அவர்கள் அடிக்கிற அடிக்கு ஆடக் கூட ஆளில்லாமல் சாவு வெறிச்சோடிக்கிடந்தது. மேலே ஈ மொய்த்துக் கொண்டிருந்தது.

குச்சிப்பாளயத்திலிருந்து வந்த சாமிக்கண்ணுவுக்கு சாதி சனமுன்னு சொல்லி அனுப்பியும் யாரும் சாவுக்கு வரவில்லை.

"போயும் போயும் சக்கிலிச்சிய கட்டிக்கிட்டுப் போனவனாச்சே..." என்று உறவே அப்போதிலிருந்து அறுந்துபோன மாதிரி பேசித் திருப்பி அனுப்பியதாக அஞ்சலை விவரமாய் எடுத்துச் சொன்னாள்.

எத்தனையோ நல்லது கெட்டதுகளிலெல்லாம் சாமிக்கண்ணுவின் பங்கு என்பது கணிசமாகவே இருந்திருக்கிறது. யார் வீட்டு விசேசமானாலும் வெளுத்த சட்டையை மிடுக்காகப் போட்டுப்போய் முடிகிற வரைக்கும் இருந்துவிட்டுத்தான் வருவான். பல காரியங்களில் முந்திய நாளே போய் இருந்து உதவிகள் பல செய்து விட்டுத்தான் திரும்புகிற பழக்கம் அவனுக்கு இருந்தது. தன்னோடு பணியாற்றும் சக பணியாள நண்பர்களுக்கு விடுமுறை போட்டுவிட்டு கூட வேலை செய்திருக்கிறான்.

வீராயி இவற்றையெல்லாம் சொல்லிச் சொல்லிப் புலம்ப ஆரம்பித்தாள். அவள் வைத்த ஒப்பாரியைக் கேட்கக்கூட ஆளில்லாமல் தனக்குத்தானே பாடிக் கொண்டாள்.

மேளம் குலுங்கி குலுங்கி உச்ச கட்டத்தில் ஆக்ரோசமாய் அழ ஆரம்பித்தது.

"தம்பி எடுத்துடலாமா?"

விசனத்தோடிருந்தது அஞ்சலையின் கேள்வி. அருகே கைப்பாடையொன்று புதிய மூங்கில் கழியாய் தயாராகியிருந்தது. ஏகாம்பரம் கடைசியாக சாமிக்கண்ணுவைப் பார்க்க ஓடிவந்து சேர்ந்தான்.

"இன்னாப்பா இது அக்கிரமம்"

ஆளரவமற்ற பிண வீட்டைப் பார்த்து சாமிக்கண்ணு வோடு வேலை செய்த ஏகாம்பரமும் தன் பங்குக்குக் கடிந்து கொண்டான்.

"மனுசனுக்கு சாவு எப்பேற்பட்டது? வாழ்வா முக்கியம்... ம்..."

ஏகாம்பரம் அஞ்சலையைப் பார்த்துக் கேட்டான். அவள்தான் வாழ்நாளில் எவ்வளவோ பணம் கொடுத்து நிறைய வாங்கியிருக்கிறாள். கடைசியாக சாவிற்கு அவள் தான் எல்லா செலவுகளையும் முன்னின்று செய்து கொண்டிருந்தாள்.

"இனிமே யார் வரப் போறாங்க, தூக்கலாம்"

சின்னதுரை சொன்னதும் பாடை அருகே வந்து நின்றது. சேரியிலிருந்து பிணத்தைத் தூக்க ரெண்டு பேரை கூலிக்கு அமர்த்தியிருந்தாள் அஞ்சலை.

எந்தவித சாஸ்திர சம்பிரதாயமும் இல்லாமல் ஒரு செம்பு தண்ணீரை மேலே தெளித்து மஞ்சள் குங்குமத்தை மேலே தூவி வீராயியும் மருமகளும் பேரப் பிள்ளைகளுமாக மூன்று முறை சுற்றி வரச் செய்துவிட்டு பிணத்தைத் தூக்கி பாடையில் வைத்தனர்.

"இனிமே ஆரிருக்கா நானும் வர்றேன் என் சாமி..."

சின்னதுரை ஒரு பக்கம் பிடிக்க பிணத்தை ஆளுக்கொருத்தராகப் பிடித்து மேலே தூக்க வீராயியின் அலறல் விண்ணைப் பிளக்கும்படி இருந்தது. ஊரெல்லாம் யார் யாருக்கெல்லாமோ உழைத்துச் சலித்துக் களைத்து உயிர் துறந்துபோன சாமிக்கண்ணு என்னும் மனிதனின் பின்னால் அய்ந்தாறு பேர் போய்க்கொண்டிருந்தார்கள். சுடுகாட்டுப் பாதையின் பாதி தூரம்வரை வீராயி வாயிலும் வயிற்றிலுமாக அடித்துக்கொண்டு ஓடிவந்து விழுந்தாள்.

◆


படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் பகுதி

நாங்கள் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தாலுக்கா, வடுகசாத்து கிராமத்தில் வசித்து வருகிறோம். இந்து, ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அடிப்படை உரிமையாகிய குடி தண்ணீர் கேட்டதால், தலித் வார்டு உறுப்பினர் முனுசாமி மற்றும் காலனி மக்களை, பஞ்சாயத்துத் தலைவர் வெங்கடேசன் (எ) சின்னப் பையன் என்பவர் 26-8-2005 அன்று இரவு 10 மணியளவில் அடியாட்களுடன் தாக்கினார். நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் செய்ததின்பேரில் SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கும் பதிவுசெய்யப்பட்டது. இதையறிந்த வெங்கடேசன் அடியாட்களுடன் சேர்ந்து 28-8-2005 அன்று மாலை 3.30 மணியளவில் வடுகசாத்து வழியாக தச்சூருக்கு சென்ற தலித்துகளை தாக்கினான். தொடர்ந்து, பால் கூட்டுறவு கடையில் பால் வாங்கவும் கொடுக்கவும் கூடாது, டீ கடையில் டீ தரக்கூடாது, அவர்கள் நிலத்தில் வேலைக்கு எங்களை அழைக்கக் கூடாது, இதுமட்டுமல்லாது அருகில் உள்ள சேப் பாக்கம், ஏரிக்குப்பம் ஆகிய ஊர்களில் வேலைக்கு அழைக்கக்கூடாது என்று பலவிதமான சாதிக்கட்டுப் பாடுகளை போட்டிருக்கிறான். இதற்கிடையில் போலீஸ் எங்கள்மீது வழக்கு போட முயற்சி செய்து வருகிறது. ஆகையால் ஆண்கள் பயந்து வெளியூருக்கு சென்று விட்டார்கள். சின்னப்பையனின் ஆட்கள் "இப்போது உங்கள் வீட்டில் ஆண்கள் இல்லை. எனவே ஒரு பொண்ணுக்கு மூன்று பேர் வீதம் படுக்க வருகின்றோம்" என்று ஆசை வார்த்தைகளால் திட்டியும் மிரட்டியும் கொடுமை செய்து வருகின்றனர். எங்களுக்கு தயவுசெய்து உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**— மகளிர் சுய உதவிக்குழு, வடுகசாத்து.**

### ஆசிரியர் குறிப்பு

வடுகசாத்து மகளிர் குழுவினரின் மனு கிடைக்கு முன்பாக அனிட்ரா இன்பகுமார் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்ததின் அடிப்படையில் போலீஸ் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டோம். இதனால் பொய் வழக்கு போடப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டது. சின்னப்பையன் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து அனிட்ரா, இந்தியக் குடியரசு கட்சி, ORD வஸந்தம், புதிய கோடாங்கி ஆகியோர் இணைந்து 18.9.2005 அன்று வடுகசாத்து கிராம மக்களை சந்தித்து ஆண்கள் ஊரைவிட்டு வெளியேற வேண்டாம் என்று கூறி இணைந்து நின்று சாதிக் கும்பலின் வெறியை முறியடிக்க திட்டம் வகுக்கப்பட்டது. இம்மனு காவல்துறை உயரதிகாரிகளுக்கு தகுந்த நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

---

எங்களுக்குச் சொந்தமான பஞ்சமி நிலம் (சர்வே எண் 198/1, 198/5 - 4 ஏக்கர்) பிறரால் சட்டவிரோதமாகக் கைப்பற்றப்பட்டுள்ளதை எதிர்த்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுகொடுத்தோம். இதுவரை தகவ லில்லை. பஞ்சமி நிலத்தை மீட்டெடுக்க உதவி செய்யவும்.

**— ஆ. சுப்பிரமணி,**
**அணியாலை கிராமம்,**
**பாடகம் அஞ்சல், போளூர் வட்டம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

### ஆசிரியர் குறிப்பு

உங்களது மனு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

---

எனக்குச் சொந்தமான D.C. நிலத்தை அலங்காடி மாரிகளம் சேர்ந்த கோனார் சுப்பிரமணி அனுபவித்து வருகிறார். மீட்டெடுக்க உதவி செய்யவும்.

**— பி. பாக்கியராஜ்,**
அணியாலை கிராமம்,
பாடகம் அஞ்சல், போளூர் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

---

நான் அருந்ததியர் வகுப்பை சார்ந்தவன். என் அப்பாவுக்கு பஞ்சமி நிலம் சர்வே எண் 401/1-இல் இரண்டு ஏக்கர் இருந்தது. அதை சாதி இந்துக்கள் கைப்பற்றிக் கொண்டனர். மீட்டுத் தரவும்.

**— மணி,**
தேவராயன்பாளையம்,
காந்தப்பாளையம் அஞ்சல்,
போளூர் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

---

என் மகன், சந்தியா என்ற மாற்று இனத்துப் பெண்ணை ஒரு வருடமாகக் காதலித்து வந்தான். என் மகன் DCE படித்து முடித்து PWD-இல் பணி செய்கிறான். இருவரும் பிப்ரவரி 7-ஆம் தேதி திருமணம் செய்து கொண்டனர். முறைப்படி 17-ஆம் தேதி பதிவு செய்து கொண்டனர். பெண் வீட்டார் இன்ஸ்பெக்டருக்கு ரூ.40,000 கொடுத்து அவர் மூலம் என் பையனை மிரட்டி அவனிடமிருந்து அவன் மனைவியை அழைத்துச் சென்றதுமில்லாமல் அவனையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். உச்ச நீதிமன்றம் சென்று ஜாமீன் வாங்கினோம். யார் யார் சாட்சிக் கையெழுத்து போட்டார்களோ, அவர்களை



படிப்பகம்

www.padippakam.com

யும் கைது செய்தார்கள். அவர்களையும் ஜாமீனில் எடுத் தோம். இதனால் பெருந்தொகையை நாங்கள் செல விட்டோம். இதற்கிடையில் பெண் வீட்டார் விவா கரத்து கோரி வழக்கு பதிவு செய்ய, வழக்கு கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கிறது. இதற்கிடையில் நான் கூலி வேலைக்கு சென்ற இடத்தில் என்னை "பறத் தேவிடியா" என்று திட்டி அடிக்க வந்து விட்டார்கள் பெண் வீட் டார் முருகேசனும், அவரது மனைவி லட்சுமியும். போலீஸ் நிலையத்தில் புகாரை கொடுக்கச் சென்றால் புகாரைப் பதிவு செய்ய மாட்டோம் என்கிறார்கள். உதவி செய்யு மாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

— அஞ்சலை,
களியம்–அம்பேத்கர் நகர்,
அத்திமூர், திண்டிவனம் ஊராட்சி,
போளூர்.

எங்கள் கிராமத்தில் சமார் 20 தலித் குடும்பங்கள் வசித்து வருகிறோம். மூன்று தலைமுறையாக ஒரே இடத்தில் குடியிருந்தும் எங்களுக்கு வீட்டு மனைப் பட்டா கிடைக்கவில்லை. ஆவண செய்ய வேண்டு கிறோம்.

— பூங்கான்,
கப்பலூர் கொல்லகொட்டா கிராமம்,
பக்கலூர் அஞ்சல், போளூர் தாலுகா.

அருந்ததிய வகுப்பைச் சேர்ந்த 20 குடும்பங்கள் வசித்து வருகிறோம். எங்களுக்கு அரசின் உதவிகள், குழாய் குடிநீர், தொகுப்பு வீடுகள், சிமெண்ட் சாலை, கழிப்பிட வசதி ஆகிய எதுவுமே கிடையாது. பலமுறை மனு கொடுத்தும் பயனில்லை.

க. உளியன் மற்றும்
ஊர்ப்பொது மக்கள்,
காந்தப்பாளையம்,
போளூர் தாலுகா.

நாங்கள் இருளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு ஊர் மக்கள் குடிநீர் தருவதில்லை. வேலை செய்தால் கூலி தருவதில்லை. அடிப்படை வசதிகள் எதுவும் கிடையாது. உதவி செய்ய வேண்டும்.

— காசியம்மாள் மற்றும் இருளர்
சமூகத்தினர்,
சீனந்தல் கிராமம்,
காந்தப் பாளையம், போளூர்.

எனது பூர்வீக சொத்தாக பட்டா எண் 286-இல் 3.50 ஏக்கர் நிலம் உள்ளது. நான் பஞ்சம் பிழைக்க வெளியூர் சென்றிருந்த காலத்தில் வன்னிய வகுப்பைச் சார்ந்த பெரியசாமி மகன் மன்னார்சாமி, மணி, ஏழு மலை ஆகிய மூவரும் U.D.R.-இல் லஞ்சம் கொடுத்து தங்கள் பெயர்களுக்கு மாற்றிக்கொண்டனர். இதை மீட்டுக் கொடுக்க உதவி செய்ய வேண்டும்.

M. ஆறுமுகம், மல்லப்ப
நாய்க்கன்பாளையம்,
கார்க்கோமை, கலசப்பாக்கம்,
திருவண்ணாமலை மாவட்டம்.



தாம்பரத்தில் அமைந்துள்ள இந்து மிஷன் மருத்துவமனையில் தலித்துகள் கீழ்த்தரமாக நடத்தப் படுகின்றனர். பிராமணர்களால் நடத்தப்படும் இந்த மருத்துவமனையில் அதிகாரத்தில் இருப்பவர்கள் அனை வரும் ஆதிக்க சாதி இந்துக்களே. இவர்கள் தலித் ஊழி யர்களை கொடுமைப்படுத்துவதோடு, ஊதியம், பணி நேரம், பணியின் தன்மை அனைத்திலும் உயர் சாதிக் காரர்களுக்கும் தலித்துகளுக்குமிடையே மிகுந்த வேறு பாடு காட்டுகின்றனர். குறிப்பாக, உயர்பதவியில் இருக் கும் சில அதிகாரிகள் தலித் பெண் ஊழியர்களை பாலி யல் பலாத்காரம் செய்கின்றனர். எதிர்த்துக் கேட்டால் எவ்விதக் காரணமுமின்றி வேலை நீக்கம் செய்து விடுகின் றனர். ஊழியர் சங்கம் வைக்க முனைந்த சிலரையும் இப் போது வேலையை விட்டு எடுத்து விட்டனர். இவர்க ளின் எதேச்சதிகாரத்தையும், மனிதாபிமானமற்ற நட வடிக்கைகளையும் பொறுக்க முடியாத நல்ல மனம் படைத்த பல மருத்துவர்களும், நர்சுகளும் ராஜினாமா செய்து சென்று விட்டனர். தற்போது பணிபுரியும் அனைத்து தலித் ஊழியர்களையும் வெளியேற்றிவிட்டு, பிராமணர்களை மட்டுமே பணியமர்த்த வேண்டும் என்பதுவே அவர்களின் நோக்கமாக இருக்கிறது. இதைத் தவிர்க்க ஆவண செய்யவும்.

— தலித் ஊழியர்கள், இந்து மிஷன்
மருத்துவமனை, தாம்பரம், சென்னை.


படிப்பகம்

www.padippakam.com

## தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் அவர்களுக்கு

தமிழகத்தின் பழங்குடியினரான இருளர்கள் தொட்டித்தோப்பு கிராமத்தில் அதிக அளவில் வசித்து வருகிறார்கள். மத்திய அரசு இருளர்களின் பொருளாதார, கல்விப் பின்புலங்களையும், அவர்களின் பூர்வீக விவசாய முறைகளையும், நிலைத்த வசிப்பிடத் தன்மையையும் கருத்தில் கொண்டு, இருளர்களை தமிழ்நாட்டின் பூர்வீக பழங்குடியினர் என்று அறிவித்துள்ளது.

ஒருகாலத்தில் பாம்பு, எலி பிடித்து, விவசாயத்தில் உதவி புரிந்து வந்த இவர்கள், இன்று தமிழகம் முழுவதும் பரவி விவசாயக் கூலிகளாக தொழில் புரிந்து வருகிறார்கள். கல்வியிலும் ஏழ்மையிலும் மிகவும் பின்தங்கி சொல்லொனாத் துயரத்தில் உழன்று வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு ஒன்று இவர்களுக்கென்று தனிப்பட்ட சொத்துக்கள் இல்லையென்றும், அவர்களின் கல்வியறிவு விகிதாச்சாரம் 12 விழுக்காடு என்ற அளவில் மட்டுமே இருக்கிறது என்றும் தெரிவிக்கிறது. தாட்கோ வழங்கும் வீட்டு வசதி சலுகைகள் அவர்களைச் சென்றடையவேயில்லை.இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று சாதிச் சான்றிதழ் வழங்குவதில் அதிகாரிகளின் புறக்கணிப்பு இவர்களை மேலும் கஷ்டத்திற்குள்ளாக்குகிறது.

புதிய கோடாங்கி குழு சமீபத்தில் தொட்டித்தோப்புக்கு சென்றபோது, சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து அனைத்து இருளர்களும் ஒன்றுகூடி கீழ்க்கண்ட குறைகளை முறையிட்டனர்.

1. சாதிச் சான்றிதழ் கோரும் 35 விண்ணப்பங்கள் வெகு நாட்களாக நிலுவையில் உள்ளன.

2. பாரதி நகரில் 93 இருளர்கள் சாதிச்சான்று கேட்டு விண்ணப்பித்துள்ளனர். மாவட்ட நிர்வாகம் இன்னும் அவற்றை வழங்கவில்லை.

3. ஆறு நபர்கள் இலவசமனை கேட்டு விண்ணப்பித்துள்ளனர். மேலும் அவர்கள் தாட்கோவின் தொகுப்பு வீடுகளுக்கும் விண்ணப்பித்துள்ளனர்.

4. பழங்குடியினர் தங்கிப் படிக்கும் பள்ளிகளில் காலியாகவிருக்கும் பதவிகளை நிரப்புவதற்காக இரண்டு விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் தாட்கோவின் நிதி உதவித் திட்டத்தில் ஒரு விண்ணப்பமும், பல்லவநத்தத்தில் மதிய உணவு மையம் கோரி ஒரு விண்ணப்பமும், வன்முறைத் தடுப்பு சட்டத்தின்கீழ் ஒரு விண்ணப்பமும் நிலுவையில் இருக்கின்றன.

5. பழங்குடியினரல்லாதாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நில மீட்பு தொடர்பாகவும், சாலை, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் கோரியும் தலா ஒரு விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ளது.

6. சாதிச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக மாநிலக் குழுவிடமும் ஒரு மேல் முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட நலத் துறையின் செயலாளர் என்ற முறையில் மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்ய ஆவண செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

**புதிய கோடாங்கி**

---

### (துளிப்பாக்கள்)

**விழி. பா. இதயவேந்தன்**

•

இரண்டு சாதிக்கிடையில்
ஒரு சதிக்கோடு
தீண்டாமை

•

படித்தது போதுமென்கிறது
மண்ணெண்ணெய்அற்றத்
திரி விளக்கு.

•

அடிமையின் உழைப்பு
களம் நிறையும் தானியங்கள்
ஆண்டைக்கு மகிழ்ச்சி.

•

வேண்டாம் என்றார்கள்
வேண்டும் என்றேன்
என்றும் வர்க்கப்போர்.

•

ஊருக்குள் வந்தது
சேரியிலிருந்து குயில்
இனிமை.

•

மதியம் ஆனது
வயல் வெளியிலிருந்து ஓட்டம்
பள்ளிக்குச் சிறுவன்.

•

நோட்டுமில்லை எழுதுகோலுமில்லை
எப்படிப் படிக்க
இலவசப் புத்தகத்தை?

•

பகலில் பட்டினி
இராத்திரியில் சோறு
மணக்கிறது குழம்பு வாசம்.

**இது தலித்துக்களின் காலம்**



படிப்பகம்

www.padippakam.com

செய்தி

# நிலப்போராட்டக் களத்திலிருந்து...

○ தி. ஸ்டாலின்

**நிலப் பிரச்சினை மீது இளைஞர்களைக் காட்டிலும் நடுத்தர வயதைக் கடந்தவர்களும், வயது முதிர்ந்தவர்களும்தான் அதிக கவனம் செலுத்துகின்றனர். வயதானவர்கள், வெள்ளையர்கள் தங்களுக்கு நிலம் கொடுத்ததை உறுதிப்படுத்துகின்றனர். பெண்களும் அதிகமாகவே இதில் ஆர்வம் காட்டுகின்றனர்**

சுதந்திரக் காற்றோ, நவீன வளர்ச்சியோ நுழையாத சேரிகளில் மிதிவண்டிகளில் நுழையும் எங்களை சேரி மக்கள் வெறித்துப் பார்க்கிறார்கள். அவர்களின் பார்வையில் நாங்கள் யாராக இருப்போம், எதற்காக வந்துள்ளோம் போன்ற கேள்விகளும், ஒருமிதமான சந்தேகமும் கலந்திருக்கின்றன. எங்களிடம் இருக்கும் துண்டறிக்கைகளை அவர்களிடம் விநியோகிக்கிறோம். அதை அவர்கள் படிப்பதற்கு முன் எங்களில் ஒருவர் அந்த துண்டறிக்கையில் உள்ள செய்தியைப் பற்றி சிறு விளக்கம் கொடுக்கிறார். நாங்கள் விளக்கமளித்த பிறகு அவர்கள் எங்களை நெருங்குகின்றனர். எங்களை ஒரு சொந்தமாகவே (அது உண்மைதானே) பாவிக்கின்றனர். எங்களிடம் பல சந்தேகங்களைக் கேட்கின்றனர். ஒரு முப்பது நிமிடங்களில் அந்த சேரிகளில் நாங்கள் சொன்ன செய்தியைப் பற்றி கூட்டம் கூட்டமாக பேசிக் கொள்கின்றனர்.

நாங்கள் கொண்டு சென்ற துண்டறிக்கையானது பஞ்சமி நிலம் பற்றிய மக்கள் குடியரசுக் கட்சியின் துண்டறிக்கை. கடலூர், பெரம்பலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பஞ்சமி நிலம் மற்றும் நிலத்தில் உழைக்கும் தலித்துகளுக்கு நிலத்தேவை குறித்து தீவிரப் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளது மக்கள் குடியரசுக் கட்சி. கடந்த மே 1-இல் பெ. பொன்னேரியில் மக்கள் குடி யரசுக் கட்சியின் தலைவர் க. திருவள்ளுவன் தலைமையில் நடந்தது தலித் நிலவுரிமை போராட்ட கருத்தரங்கக் கூட்டம். இதில் சிவகாமி ஐ.ஏ.எஸ்., கருப்பண் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), பேராசிரியர் கல்யாணி, சி. துரைக்கண்ணு, மா. வேலுச்சாமி, குடியரசன், கௌதம சன்னா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஜூலை மாதம் பெண்ணாடப்பகுதியில் முதல் பிரச்சாரப் பணி துவங்கியது. தற்போது கடலூர், பெரம்பலூர், விழுப்புரம் மாவட்டம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்பணியில் ஈடுபட்டிருக் கும் நான் அப்பிரச்சாரப் பணி பற்றிய செய்திக் கட்டுரையை இங்கு தர முயல்கிறேன்.

நிலவுரிமைப் பிரச்சாரம் செய்யும்போது தலித்துகளிடம் ஒரு அவநம்பிக்கை காணப்படுகிறது. குறிப்பாக பஞ்சமி நிலங்களெல்லாம் மீண்டும் கிடைக்குமா என்ற கேள்வியை முன்வைக்கின்றனர். அதே சமயம் தங்களுக்குச் சொந்தமான லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பறிபோனதைக் கேட்டவுடன் கொதித்தெழுகின்றனர். சாதாரண பாமர தலித்துகள்கூட இந்த நிலப் பிரச்சினை பற்றிப் பேசும்போது கம்யூனிஸ்டுகளைத்தான் அதிகம் தாக்குகின்றனர்.

பஞ்சமி நிலம் பற்றிய செய்தி போலவே சேரி மக்களுக்கு ஆச்சர்யம் தருகிறது அயோத்திதாசர் பற்றிய செய்திகள். இப்படிப்பட்ட சமூகத் தலைவர்களின் வரலாறு தெரியாமல் போனது பற்றி அவர்கள் கொள்ளும் வெறுப்பும் கோபமும் தலித் வரலாற்றை மீட்டெடுக்கும் முயற்சிக்கு வலு சேர்ப்பதாகவே உள்ளது. தலித் நிலப் பிரச்சினை, இன்னும் பிற தலித் பிரச்சினைகளில் ஈடுபடும் கருப்பன், சிவகாமி, ரவிக்குமார் போன்ற எழுத்தாளர்கள், வழக்கறிஞர்கள், அறிவுஜீவிகள் பற்றிக் குறிப்பிடும்போது படித்த நம் சாதியினரெல்லாம் நமக்காக போராடுபவர்களாக இருப்பார்களா என்று அவர்கள் கேட்கும் கேள்வி, படித்து உயர்ந்து சமூகத்திலிருந்து விலகி நிற்கும் நம் சொந்தங்களை தலைகுனிய வைக்கிறது.

பூலாம்பாடி எனும் ஊருக்குச் சென்று பிரச்சாரம் செய்யும்போது அங்கிருந்த தலித் வழக்கறிஞர் சேதுபதி, வேப்பூர் அருகில் உள்ள சிறுநெசலூர் கிராமத்தில் உடையார் சாதிக்காரர் ஒருவரிடமிருந்து பஞ்சமி நிலம் எட்டு ஏக்கரை ஒரு தலித் குடும்பத்திற்கு வழக்காடி மீட்டுக் கொடுத்ததாகக் கூறினார். மேலும் தொடர்ந்து அப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதாகவும் கூறினார்

சித்தூர் எனும் கிராமத்தில் பிரச்சாரம் செய்தபோது அந்த கிராமத் தலித்துகள் தங்களின் பஞ்சமி நிலங்களை (இப்பகுதிகளில் பஞ்சமி நிலங்களை காடுதிருத்தி நிலம் என்கின்றனர்.) 1000-க்கும், 2000-க்கும் ஏமாற்றி அந்த ஊரிலிருக்கும் சர்க்கரை ஆலை நிர்வாகம் வாங்கியிருப்பதாக எங்களிடம் கூறினர். சித்தூருக்கு அருகில் இருக்கும் விளாங்காட்டூர் எனும் ஊரில் நிலவுரிமைப் பிரச்சாரம் செய்தபோது சீட்டாடிக்கொண்டிருந்த ம.க.இ.க.-வினர் (அவர்களும் தலித்துகள்தான்) எங்களிடம் பேசுவதையே தவிர்த்தனர். இருந்தும் அவர்களுக்கு பஞ்சமி நிலம் குறித்



படிப்பகம்

www.padippakam.com

தும், பொதுவாக நிலப் பிரச்சினை குறித்தும் விளக்கி விட்டு சிவகாமியின் தலித் நிலவுரிமைப் போராட்ட நூல் ஒன்றையும் கொடுத்துவிட்டு வந்தோம். புரட்சி பேசும் அமைப்புகள் தங்களின் தோழர்களை எப்படி வளர்த்தெடுக்கின்றன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அதேவேளை பெரும்பாலான சேரி களில் இளைஞர்கள் சீட்டாடிக் கொண்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கொட்டாரம் எனும் ஊரில் சீட்டு விளையாடிக் கொண்டிருந்த விடு தலைச் சிறுத்தைகள் எங்களை உடனே வெளி யேறும்படி வற்புறுத்தினர். பெரம்பலூர் மாவட்டம் நத்தக்குழி, செந்துறைப் பகுதிகளில் நிலப்பிரச்சினை குறித்து பிரச்சாரத்தில் ஈடுபட்ட மக்கள் குடியரசுக் கட்சியினரை அங்குள்ள விடுதலைச் சிறுத்தைகளின் பொறுப்பாளர்கள் சிலர் கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளனர். பஞ்சமி நிலப் பிரச்சாரம் யாருக்கு எதிரானது என்பதைக் கூட அவர்கள் அறியவில்லை யென்றே தோன்றுகிறது. திருமாவளவன் இப்பிரச்சி னையை கவனம் கொள்ள வேண்டும்.

---

நிலப் பிரச்சினை மீது இளைஞர்களைக் காட்டி லும் நடுத்தர வயதைக் கடந்தவர்களும், வயது முதிர்ந் தவர்களும்தான் அதிக கவனம் செலுத்துகின்றனர். வயதானவர்கள் வெள்ளையர்கள் தங்களுக்கு நிலம் கொடுத்ததை உறுதிப்படுத்துகின்றனர். பெண்களும் அதிகமாகவே இதில் ஆர்வம் காட்டுகின்றனர் என்பது நமக்கு பன்மடங்கு உற்சாகத்தைக் கூட்டுகிறது.

பிரச்சாரம் முடிந்த கிராமங்களை ஒருங்கிணைக் கும் விதத்தில் பத்து அல்லது இருபது சேரிகளுக்கு ஒரு மையத்தை தேர்வு செய்து தலித் நிலவுரிமை கருத் தாய்வுக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். இதுவரை (மூன்று மாதத்தில்) 450 கிராமங்களுக்கு மேல் பிரச்சாரம் போய் உள்ளது. ஆகஸ்ட் 21-ஆம் தேதி திட்டக்குடி வட்டம் கோயிலூரில் கோயிலூர் வீர. மேகராஜன் தலைமையிலும், எரப்பாவூர் மா. சுடர் மணி முன்னிலையிலும், ஆகஸ்ட் 28 அன்று ஆவினங் குடியில் பட்டூர் துரை. சண்முகம் தலைமையிலும், க. கவியரசன் முன்னிலையிலும் நிலவுரிமைக் கருத்தாய்வுக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. க. திருவள்ளுவன் கருத்துரை வழங்கினார். தலித் நிலவுரிமைக் கோரிக்கை யானது தலித் மக்களையும், தலித் இயக்கங்களையும், தலித் அறிவுஜீவிகளையும் ஓரணியில் திரட்டும் என்ற நம்பிக்கை இந்தப் பிரச்சாரப் பணியில் தெளிவாகத் தெரிந்தது. குவிந்த நிலங்களை கூறு போடவும், பஞ்சமி நிலங்களைப் பறித்தெடுக்கவும் நாம் ஒருங்கிணைவோம்.

## புதை மணல்

பாக்கி உமாநாத்

அதிகாலை தெளியும்
கை நடுக்கம் தொடங்கும்
காலைக் கடனாய்
கட்டிங்குக்கு காசு தேத்தும்
இருகைபற்றி அண்ணாந்துசரிக்க மது
தீயென உள்ளிறங்கி
அலையாய்ப் பரவும்
நிதானம் கூடும் போதே அடுத்த
கட்டிங்குக்காய் மனம்
வேகமாய் கணக்குகள் போடும்
முகமறிந்தோர் யாவரிடமும் யாசிக்கும்
ஏமாறிய நேரமதில் வீட்டில்
திருடும் தொடரும் படையெடுப்பு
கடை ஏகி இரவு
என்ன நடந்த தென்பதே
தெரியாமல் புலரும் புலரும்பொழுது
வழமைபோல் விழிக்கும் போதையில்
தொலைவில் தலைபார்த்து
நட்பும் சுற்றமும் பதறி ஓடும்

தனியனாய்த் தன்னந்தனியனாய்
இன்னும் யாருளர் என
தெருத் தெருவாய்த்திரியும்
கொள்கையும் கோட்பாடும் பேசி
கடைசியில்
"ஒரு முப்பது ரூபா இருக்குமா
தோழர்?" என்க
தன்மானம் தத்துவம் யாவுமே மரணிக்கும்



படிப்பகம்

www.padippakam.com

4

> அறிவுப்பூர்வமான வாதங்களுக்கு எதிராக ஒருவருடைய உள் உணர்வு வேலை செய்கிறது என்றால், அந்த ஒன்று தான் சாதி.

■ சந்திரன்

nalanda1956@yahoo.co.in

# மாறுவேசம்

"நான் இவ்வளவு சொன்ன பிறகும், நீ அந்த பத்து ரூபாயை செலவு செய்ய தயாராய் இல்லை. எனக்கு உன்னுடைய போக்கு விபரீதமாகவே படுகிறது. நீ பகுத்தறிவை மதிப்பவனாக இருந்தால் அந்த பத்து ரூபாயை உடனே எடுத்து 'இந்தாங்க சார்' என்று என்னிடம் தா. அல்லது ஏதாவது ஒரு கடைக்குச் சென்று உடனே செலவு செய், பார்ப்போம்."

எள் சடாரென அந்த பத்து ரூபாய் நோட்டை எடுத்து தம்மிடம் தந்து விடுவான் என்று முகில் எதிர்பார்த்தார். எள்ளைப் பொறுத்தவரையில் முகிலின் சமீப கால எதிர்பார்ப்புகள் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கின்றன. முகில் தோல்வி என்று எதையும் நினைக்க மாட்டார். வெற்றி தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறது என்றே தொடர்ந்து நம்புவார். தாமதத்திற்கு தன்னைத் தவிர மற்ற எல்லோரும் ஒவ்வொரு வகையில் காரணம் என்று எல்லோரிடமும் சொல்வார். 'நான் மட்டும் ஏழையாய் உழைக்கிறேன். மற்ற யாரும் எந்த வேலையும் செய்வதில்லை. எல்லா வேலைகளையும் நான் மட்டுமே செய்ய வேண்டியுள்ளது. யாரும் ஒத்துழைக்க மாட்டேனென்று அடம்பிடிக்கிறார்கள். எல்லா வேலையையும் நான் மட்டுமே ஒண்டியா செஞ்சாலும், எல்லா தப்புகளுக்கும் மத்தவங்க மட்டுமே காரணம்' என்று முகில் உறுதியாக நம்பினார்.

பார்ப்பான் மழை வேண்டி யாகம் செய்வான். தப்பித்தவறி மழை பெய்தால், அதற்குத் தானும், யாகப் பலனும் காரணம் என்று சொல்வான். வழக்கம்போல் மழை பெய்யவில்லையென்றால் 'மன்னன் குற்றம், ஆட்சி சரியில்லை, கலி காலம் பெருகிவிட்டது, பாவம் பெருகி விட்டது, யாரு இப்ப படிக்கிறது யாரு சேவக வேலை செய்யரதுன்னு முறையே இல்லாம பிராமணா கூட சேவக வேலை செய்யறா. படிச்ச பிராமணா நல்ல வேலை இந்த பிரதேசத்தில் கிடைக்கலன்னு வெளி தேசத்திற்கு போறா' என்று ஓர் ஐதீக பிராமணன் பேசும் சராசரி சுய நலப் பேச்சிற்கும், முகிலின் பகுத்தறிவுப் பேச்சிற்கும் உள்நோக்கம் ஒன்றாகவே இருக்கும். பாசானத்தை பாத்திரம் மாத்தினால் அதன் குணம் மாறி விடுமா என்ன? பாப்பான் எப்படி மாறுவான்? பட்டாச்சாரியாக இருந்தாலும், கம்யூனிஸ்டாக இருந்தாலும் அவன் புத்தி ஊரை குறை சொல்லி தன்னை உசத்திக் கத்தானே பார்க்கும். எள்ளுக்கு இதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக புரிய ஆரம்பித்தது.

"சார்... இந்த பத்து ரூபாயை நான் பிடிவாதமா வைத்திருக்கிறது அவசியமில்லன்னு நீங்க எனக்கு தெளிவா புரிய வச்சிட்டீங்க. உங்க விளக்கம் எல்லாம் இந்த பத்து ரூபாயை நான் உடனே செலவு செய்யணும்னு எனக்கு சொல்லுது. ஆனா இந்த பத்து ரூபாயை செலவு செய்ய வேண்டியதில்லைன்னு என்னுடைய உள் உணர்வு என்னை மிக வலிமையாக நம்ப வைக்குது. எல்லா வாதங்களும் அதற்கு எதிராக உள்ளன. ஆனால் எல்லா நம்பிக்கைகளும் அதற்கு ஆதரவாக உள்ளன. எனக்கு உங்களுடைய வாதங்களை விட என்னுடைய உள் உணர்வு தரும் நம்பிக்கை மட்டுமே போதும் சார்."

தன்னுடைய இந்த பதிலால் முகில் கோபப்படுவார் என்று எள் எதிர்பார்த்தான். ஆனால் முகில் சிரித்துக் கொண்டே சொன்னார்,

"எள்... இதற்குப் பெயர்தான் சனாதன தர்மம். அறிவுப் பூர்வமான வாதங்களுக்கு எதிராக ஒருவருடைய உள் உணர்வு வேலை செய்கிறது என்றால், அந்த ஒன்று தான் சாதி. இந்த நாட்டில் எவ்வளவோ பகுத்தறிவு கருத்துக்கள் பேசிய பிறகுகூட, அந்த பகுத்தறிவுவாதிகூட சாதியை நம்புகிறான் என்றால், அதையும் உள் உணர்வு என்று உன்னைப்போல அவனும் நியாயப்படுத்திக் கொண்டுள்ளான் என்றால், நீ அதை அனுமதிக்கத் தயாரா?

எத்தனை பகுத்தறிவுக் கூட்டங்கள், எத்தனை பகுத்தறிவு மாநாடுகள், எத்தனை பகுத்தறிவு புத்தகங்கள் வெளி வந்தும் அதை கூட்டம் கூட்டமாக ஆதரிக்கும் மக்கள், தனிப்பட்ட வகையில் சாதியை - தன் குடும்ப அளவில் - தன்னுடைய சொந்த வகையில் - தன்னுடைய சூழல் காரணமாக - தன் உள்ளம் சொல்கிறது என்ற உன்னுடைய உள் உணர்வு போலவே, வேறு வழியில்லாமல் இதுவரை நம்பி வாழ்ந்து வருகின்றனர். அதை மேம்போக்காக - ஆழமாக ஆய்வு செய்யாமல் சாதி தவறு என்று அழுத்திச் சொல்லும் நீ, உன்னுடைய பத்து ரூபாய் பற்றை மட்டும் ஆழமாக ஆய்வு செய்ய வேண்டும்..."

எள் உஷாரானான். "சார்- அந்த பத்து ரூபாயைப்பற்றி நாளைக்கு காலையில், எனக்கு பணம் தந்தாங்களே அந்த டீச்சர் கிட்டயே நாம ரெண்டு பேரும் நேரில் போய் விசாரிக்கலாம். இங்கிருந்து மூனு மணி நேரம் பஸ் பயணம்தான். விடிய எழுந்திருச்சு பஸ் பிடிச்சா, காலை டிபனுக்கு எங்க டீச்சர் வீட்டிற்குப் போயிடலாம், சார்."

முகில் சிரித்தார். "சரி. போறப்ப பஸ் டிக்கட்டுக்கு நீ அந்த பத்து ரூபாயைத் தர மாட்டே.. ஆனா வரும்



படிப்பகம்

www.padippakam.com

போது அந்த பத்து ரூபாய்ல டிக்கட் எடுக்கற மாதிரி உன்னை மாத்தரேன்னா இல்லையா பாரு. என்னை உன்னுடைய டீச்சர் புரிஞ்சுகிட்டு, உனக்கும் போது மென்ற அளவிற்கு... சரி, சரி. படு... எள். காலையில் பார்ப் போம்.

"டீச்சர் வணக்கம். இவர்தான் என்னுடைய புரப சர். பெயர் டாக்டர் முகில்."

"சார் வணக்கம். உள்ள வாங்க."

சந்திரா டீச்சர் முகிலை வரவேற்றார்.

"எள், சாருக்கு கட்டிலைப் போடு. நான் போய் டீ போடறேன்." டீச்சர் அடுப்பிற்குள் நுழைந்து இரண்டு டீ டம்ளருடன் திரும்பினார்.

"சார்... டீயைக் குடிங்க. எங்க டீச்சர் டீக்கெல்லாம் காசு கேட்க மாட்டாங்க."

"காசு கேட்டா, நான் டீ கிளாசை உடைச்சிட மாட்டேவா?"

எள் அமைதியானான்.

"டீ கிளாசை உடைச்சா, நான் போலீஸ்ல போய் கம்ப்ளெய்ன்ட் கொடுத்திடுவேன்" என்றார் சந்திரா டீச்சர்.

"அய்யய்யோ, கம்ப்ளெய்ன்ட்டை கிளாசை உடைச்சவங்கதான் தரணும்" என்று கூறிக்கொண்டே முகில் எள்ளைப் பார்த்து சத்தம் போட்டு சிரித்தார்.

"சார்... எங்க டீச்சர் நீங்க கிளாசை உடைச்சாக்கூட உங்களை அடிக்க மாட்டாங்க சார்"

சந்திரா டீச்சருக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன இது.. நீங்க பாட்டுக்கு பேசிக்கிட்டே போறீங்க. எனக்கு ஒண்ணுமே புரியல. காலையிலேயே என்னை குழப்பா தீங்க"

"சார்... எங்க டீச்சர் உங்களை குழப்பவாதின்னு சொல்றாங்க..."

"டேய் எள்... என்ன இதெல்லாம். பெரியவங்கன்னு கொஞ்சம்கூட மரியாத இல்லாம..."

"டீச்சர், நான் ஒரு கம்யூனிஸ்ட். நான் எல்லோரையும் தோழர்ன்னுதான் அழைப்பேன். எனக்கு எல்லாமே சமம். எல்லாமே ஒன்னு. நம்ம பாரதியார் சொன்னது போல எல்லாரும் ஓர் நிறை, ஓர் மக்கள். இந்நாட்டு மன்னர்கள்."

"நீங்க கம்யூனிஸ்ட். நீங்க எப்படி பாரதியார் சொன்னார்னு, அதுவும் மன்னர், அது இதுன்னு எப்படி பேச முடியும்" இடைமறித்து கேட்டார் சந்திரா டீச்சர்.

"எல்லாரும் இந்நாட்டு மன்னர்னு சொன்னா, எல்லோருமே சமம்ன்னு அர்த்தம்"

"மன்னர்னு சொன்னா சமமா? அது எப்படி மன்னர்னு சொன்னா ஆள மக்கள் வேண்டாமா? சேவகம் செய்ய பணியாளர்கள் வேண்டாமா?"

"மன்னர்னு சொல்றது ஒரு பொதுவான சொல்"

"அப்ப தோழர்னு சொல்றது என்ன?"

"அதுவும் ஒரு பொதுவான சொல்தான்"

"அப்புறம் எதுக்கு ரெண்டு சொல்?"

"சரிங்க. இப்ப பாரதியாரை விடுங்க. தேவையில்லாம அவரை வேற..."

"நான் பாரதியாரை பிடிச்சு வச்சுக்கிட்டு பேசலங்க. நீங்கதான் பாரதியார் சொன்னாருன்னு சொன்னீங்க.

"நான் பாரதியாரை தேடிப் பிடிச்சது, அவர் பேசினதையெல்லாம் தோழர்களும் பேசணும்னு சொல்ல."

"ஆனால் தோழர்கள் எல்லாரும் பாரதியார் பேசினதையே பேசுறாங்க. எல்லாம் மண்ணுக்கேத்த மார்க்சியம்தான் போங்க." என்றார் சந்திரா டீச்சர்.

முகில் அதிர்ந்தார். எள் ஆச்சரியப்பட்டான். சந்திரா டீச்சர் தொடர்ந்தார்.

"ஊர் உறங்குச்சுன்னா, ஊரா உறங்குது. ஊரில் உள்ள மக்கள்தான் உறங்குராங்க"

"ஆமாம்" என்றார் முகில்.

"என்னைப் பேச விடுங்க... மண்ணுக்கு ஏத்த மார்க்சியம்னு சொல்றீங்க. உயர் சாதிக்காரங்கதான் இந்த மண்ணுல பண-நில பலத்தில் உசந்து இருக்கிறீங்க. அப்ப மண்ணுக்கு ஏத்த மார்க்சியம்னு சொல்றது, மண்ணின் ஆதிக்க மக்களாகிய ஒடுக்குமுறைகளை ஏவும் சாதிகளுக்குத்தானே ஏத்ததாக அமையும்?"

"எப்படிங்க நீங்க இப்படி தப்புத் தப்பா சிந்திக்கிறீங்க" என்றார் முகில்.

"நான் சமீபத்தில் கொல்கத்தா போனேன். அது ஒரு வாங்காளிகள் கம்யூனிஸ்ட் கருத்தரங்கு."

முகில் நெற்றியை குறுக்கி சந்திரா டீச்சர் பேசுவதையே வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். தன்னுடைய டீச்சர்தான் ஜெயிப்பாங்கன்னு நம்பிக்கையோடு எள் சந்திரா டீச்சரை பார்த்துக் கொண்டிருந்தான்.

"அந்த வங்காள கம்யூனிஸ்ட் பேச்சாளர் புரட்சிக்கு ஆதாரமாக பாரதியாரின் யுகப்புரட்சி பாடலை மேற்கோள் காட்டி ஆவேசமாகப் பேசினார்."

"அதில் தப்பென்ன" என்றார் முகில்.

"மண்ணுக்கேத்த மார்க்சியம்னு சொல்றீங்க. ஒரு மார்க்சியவாதி... மன்னிக்கணும்"

"சரி, சொல்லுங்க தோழர்"

"ஒரு மார்க்சியவாதி பார்ப்பனராக இருக்கிறார். அவர் மொழியால் வங்காளி. ஆனால் தமிழ் மொழி கவிஞரான பாரதியாரை அவர் மேற்கோள் காட்டுகிறார். நீங்க சொன்னதைப் போலவே... புரட்சி பற்றி நீங்க பேசுறீங்க. அந்த வங்காள பிராமணர் பேசுகிறார். தமிழ்நாட்டு பிராமணர் பாரதியார் பேசியிருக்கிறார். இதற்கிடையே மண்ணுக்கேத்த மார்க்சியம்னு எல்லாரும் பேசுறாங்க. அப்ப பாரதியாரின் மொழியைக் கடந்து வங்காளத்திற்கு மார்க்சின் புரட்சி போகவில்லை. மொழியைத் தாண்டி பாரதியாரின் பார்ப்பன சாதிதான் போய் இருக்கிறது. ஏன் என்றால் இந்த மண்ணில் சாதி இருக்கிறது. அதை ஏற்றுக் கொண்டவனின் சிந்தனை பாரதியாரைத்தான் ஏற்றுக்கொள்ளும். எங்களையும் ஏற்றுக்கொள்ளும்.



படிப்பகம்

www.padippakam.com

**தச்சூர் தேவாலயம்**

தச்சூர்,
மதுராந்தகம்

சர்ச்சைக்குரிய 'சர்ச்'சை பார்வையிட்டு தலித்துகள் தங்கள் உரிமைக்காக போராடி வந்ததை புதிய கோடாங்கியில் பதிவு செய்திருந்தோம். தொடர்ந்து இவற்றை குறும்படமாக தயாரித்து கத்தோலிக்கர்களின் பிறப்பிடமான ரோம் நகரில் திரையிடப்போவதாகச் சொல்லியிருந்தோம். அதற்கான 'டாகுமெண்டரி' தயாரிக்க சிவகாமி, பெருமாள் (அதேகாம் பின்னகம்), புதுவை கூட்டுக்குரல் பாலா ஆகிய மூவரும் சென்றிருந்தனர். முதற்கட்டமாக தலித்துகளின் தரப்பு மட்டும் பதிவு செய்யப்பட்டது. அடுத்த கட்டமாக தச்சூர் சாதி இந்துக்கள், அரசு அதிகாரிகள் மற்றும் கத்தோலிக்கப் பேராயர்களை சந்தித்து பதிவுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

## 18.9.2005

**தலித் நிலவுரிமை கருத்தரங்கு**

நெசல் - வடுகசாத்து,
திருவண்ணாமலை
மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் வடுகசாத்து கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவராக உள்ள சின்னப்பையன் என்ற வன்னியர், தலித்துகளின் குடிநீர்ப் பிரச்சினைக்காக போராடிய வடுகசாத்து பஞ்சாயத்தின் வார்டு உறுப்பினராகிய முனிசாமி என்னும் தலித்தைத் தாக்கியது சம்பந்தமாக அனிட்ரா அறக்கட்டளையைச் சேர்ந்த இன்பகுமார், முருகேஷ், இந்திய குடியரசு கட்சியைச் சேர்ந்த செந்தில் குமார், ORD வசந்தம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த சத்தியசீலன் ஆகியோர் இணைந்து வடுக சாத்து, நெசல், இரும்பேடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தலித் மக்களுக்கு கருத்தரங்கம் ஒன்றை நடத்தினர்.

வடுகசாத்து பிரச்சினை உண்மையில் நிலவுரிமை பிரச்சினையே என்பதை இன்பகுமார் விளக்க, ORD வசந்தம் சத்தியசீலன் அறிமுக உரையும், செந்தில்குமார் தலைமை உரையும் நிகழ்த்த, கௌதம சன்னாவும், சிவகாமியும் சிறப்புரை ஆற்றினர்.

'ஆதிக்க சாதிகளின் கொட்டத்தை அடக்க தாக்கப்படும்போது மட்டும் துள்ளி பெழும் அனிச்சையான செயல்பாடுகளிலிருந்து மீண்டு, தொடர்ந்த, ஒருங்கிணைந்த திட்டமிட்ட நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். தலித் மக்கள் தங்களது நில உரிமைக்காக உறுதியுடன் அணி திரள வேண்டிய அவசியம் உள்ளது' என சிவகாமியும் சன்னாவும் தங்கள் சிறப்புரையில் கூறினர்.

## 21.9.2005

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம்**

உழவர்கரை,
கடலூர் மாவட்டம்.

திருச்சி, திருவள்ளூர், காஞ்சிபுரம், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, கரூர் மாவட்டங்களிலிருந்தும், புதுவை மாநிலத்திலிருந்தும் வந்த அம்பேத்கர் மன்றம், தலித் மகளிர் சுய உதவிக் குழுக்கள், தலித் அரசியல் அமைப்புகள், இருளர் பாதுகாப்பு சங்கம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 200 பிரதிநிதிகளுக்கு தலித் நில உரிமை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கான ஒருங்கிணைப்பை தலித் நிலவுரிமை மாநிலக் குழு ஒருங்கிணைக்க, அதேகாம் பின்னகம் நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் செய்தது. லீட், அனித்ரா ஆகியவை பயிற்சியாளர்களாகப் பங்கேற்றன. லலிதா, கருப்பன் இ.ஆ.ப. (ஓய்வு), கௌதம சன்னா, திருச்சி சண்முகசுந்தரம், லீட் வேலுச்சாமி, பேரா. கல்விமணி மற்றும் புதிய கோடாங்கி எழுத்தாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 21.9.2005

**நூல் வெளியீடு**

இக்சா மய்யம்,
எழும்பூர், சென்னை

பெரியாரிஸ்ட் சங்கமித்ராவின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா சென்னை இக்சா மய்யத்தில் நடந்தது. பத்மாவதி விவேகானந்தன், மீனா கந்தசாமி, ஆனைமுத்து, விடி ராஜசேகரன் (பெங்களூர்), மருத்துவர் காசிபிச்சை மற்றும் பல எழுத்தாளர்கள் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டனர். வி.டி. ராஜசேகர் (தலித் வாய்ஸ்) சங்கமித்ராவின் 'Therefore folks, It is a holy land' என்ற ஆங்கிலப் புத்தகத்தை வெளியிட்டு தமிழ்நாட்டை பெங்களூர் பாப்பாத்தி ஆள்கிறார் என்று தொடர்ந்து பெரியாரிஸ்டுகள் முன் கேள்விகளை அடுக்கினார் - ஏன் பெரியார் வாழ்ந்த இம்மண்ணில் பார்ப்பனியம் முன்பை விட ஆழமாக வேரூன்றியது, ஏன் சூத்திரர்கள் தலித்துகளை வெறுக்கிறார்கள், ஏன் பெரியாரிஸ்டுகள் தலித்துகளுக்காக எந்த வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை என்று கேட்டு வந்திருந்தவர்கள் மனதில் நெருடலை உண்டாக்கினார். எழுத்தாளர் சிவகாமி சங்கமித்ராவின் 'சங்கமித்ரா' என்ற ஆங்கில காலாண்டிதழை வெளியிட்டு,


படிப்பகம்

www.padippakam.com

ஒடுக்கப்பட்டோர் குரல், சங்கமித்ரா விடையளிக்கிறார், தன் முன்னேற்றம் என்ற அவரின் மூன்று தமிழ் பத்திரிக்கைகளை தொடர்ந்து படித்து வருவதாகவும், அவர் பணியினை பாராட்டியும், அவர் சேவை தொடர வேண்டும் என்றும் வாழ்த்தி பேசினார். 'தேடுங் கள்இப்படிவேலையை' என்ற நூலை ஜெயகிருஷ்ணன் வெளியிட்டார்.

## 22.9.2005

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம்**

போளூர்

திருவண்ணாமலையில் இயங்கி வரும் தலித் சக்திகளை இணைத்து தலித் நில உரிமை கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தார் முருகன். விடியல் கலைக்குழு, புதுவை கூட்டுக்குரல் இவர்களின் கலை நிகழ்ச்சிகளோடு அரங்கு துவங்கியது. சேத்துப்பட்டு, கலசப்பாக்கம், ஆரணி (கிழக்கு), ஆரணி (மேற்கு), வந்தவாசி, துறிஞ்சாபுரம், போளூர், திருவண்ணாமலை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஆண்களும், பெண்கள் சுய உதவிக் குழுக்களுமாக சுமார் 250 பேர் கலந்து கொண்டனர். அதேகாம் பின்னகம் லலிதா அறிமுக உரை ஆற்ற, பெருமாள், இன்பகுமார், வினோத், இறையனார் (தலித் விடுதலை சிறுத்தைகள்), சிவக்குமார், திருப்பதி மற்றும் எழுத்தாளர் சிவகாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். .

## 22.9.2005

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம்**

அத்திமூர், போளூர் தாலுக்கா

இரவு 7 மணியிலிருந்து 9.30 வரை புதுவை கூட்டுக்குரல் மற்றும் விடியல் (அனிட்ரா) கலைக்குழு நிகழ்ச்சிகளுடன் துவங்கியது பிரச்சாரம். முருகன், லலிதா, சிவகாமி ஆகியோர் அத்திமூர் கிராமத்தில் உள்ள 250 ஏக்கர் பஞ்சமி நிலப் பிரச்சினையை மய்யப்படுத்தி பிரச்சாரம் மேற்கொண்டனர்

## 25.9.2005

**தலித் நிலவுரிமை கருத்தரங்கம்**

நெமிலி, அரக்கோணம், வேலூர் மாவட்டம்.

வழக்கறிஞர் மு. வீரராகவன், வழக்கறிஞர் தக்கோலம் ரகு ஆகியோர் ஏற்பாடு செய்த இக்கருத்தரங்கில் இளைஞர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். புதிய கோடாங்கி சார்பாக கலந்து கொண்ட எழுத்தாளர் கௌதம சன்னா இட ஒதுக்கீட்டின் அவசியமும் அச்சுறுத்தலும் என்ற தலைப்பிலும், எழுத்தாளர் கனலி தலித் நிலவுரிமை என்ற தலைப்பிலும், சாதி ஒழிப்புக்காக போராடுவதா? மொழிக்காகப் போராடுவதா என்ற தலைப்பில் மோகன்ராஜ் மற்றும் ரமேஷும் உரையாற்றினர். இக்கூட்டத்தில் நெமிலி பகுதியில் பணியாற்றி வரும் அம்பேத்கர் மன்றங்களும், ராம்கோ நிறுவனத்தில் பணியாற்றி வரும் தலித் தொழிலாளர்களும் திரளாகக் கலந்து கொண்டனர். மாவட்ட அளவிலான நிலவுரிமைக் கூட்டத்தை அக்டோபர் 21-ஆம் தேதி அரக்கோணத்தில் நடத்த முடிவெடுக்கப்பட்டது.

## 27.9.2005

**தலித் வர்த்தகக் கழகம்**

ஹபிபுல்லா காலனி, சென்னை

தலித் வர்த்தகக் கழகத்தின் தலைவர் கருப்பன், செயலாளர் தீப்தி சுகுமார், உறுப்பினர்கள் FR. டேனியல் பிரேம்குமார், பேரா. மேரி ஜான், வழக்கறிஞர் நாகேஸ்வரி ஆகியோர் சென்னையில் கழகத்தின் நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினர். எழுத்தாளர் சிவகாமி ஆலோசனைக் கூட்டத்தில் பங்கு கொண்டார்.

## 28.9.2005

**துரும்பர் எழுச்சி முகாம்**

வந்தவாசி

வந்தவாசி தூய நெஞ்ச ஆண்டவர் திருக்கோயிலில் துரும்பர்களுக்கான எழுச்சி முகாமை சிகரம், சமூகப் பணி ஊக்ககம் நடத்தியது. துரும்பர்களின் மனித மாண்பு, உரிமைகள், பொருளாதார முன்னேற்றம் இவற்றை வலியுறுத்தி நடந்த பயிற்சிப் பட்டறையை Fr. லாரன்ஸ் ஒருங்கிணைத்தார். Fr. செபஸ்டியன், வழக்கறிஞர் சந்ரு, Fr. ஜான் சுரேஷ், பேரா. மாரிமுத்து, களகொத்து, ஜான் பீட்டர் போன்ற பலர் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர். எழுத்தாளர் சிவகாமி தலித் ஒற்றுமையை வலியுறுத்தி சிறப்புரை ஆற்றினார். துரும்பர்கள் உற்சாகம் பெறும் வண்ணம் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

■



படிப்பகம்

www.padippakam.com



# மண்பாரம்

■ சிவகாமி

பதினேழு சிறுகதைகளைக் கொண்ட தொகுதி 'மண்பாரம்' என்ற தலைப்பில், 2004-ஆம் ஆண்டு 'க்ரியா' பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூ.170. இதன் ஆசிரியர் 'கோவேறு கழுதைகள்' 'ஆறுமுகம்' என்ற புகழ்பெற்ற நாவல்களை எழுதிய இமயம்.

எல்லாக் கதைகளும், குயவர் சக்கரத்திலிருந்து அப் போது தான் அறுத்தெடுக்கப்பட்ட, விதம் விதமான பானைகள் போல ஈர நசநசப்புடன், புதுமையாக, அற்புதக் கலையாக விளங்குகின்றன. அவரவர் வாசிப்பிலும் பயன்பாட்டிலும் வெவ்வேறானத் தோற்றங்களைக் கொள்வது தவிர்க்க முடியாதெனினும், பாத்திரப் படைப்புகள் நெஞ்சில் நீங்காத இடம் பிடிப்பவை.

எளிமையாக, அழகின் பேரமைதியுடன் எழுதுவதென்பது மிகவும் இலகுவானதாகப் பார்க்கப்படுகிறது. தத்துவ விசாரணைகள், நிகழின் கூச்சல்கள், கடந்த காலத்தின் துயரங்கள் இவற்றையெல்லாம் சுருக்கமில்லாத வெள்ளைத் தாளாகப் பாவித்து அதிலே உயிரோட்டமுள்ள, நெருடலற்ற, பிசிரற்ற வண்ணக் குழைவு போல் எழுதுவது கலையின்பாற்பட்டது. இந்த எளிமையை அடைவதற்கு ஆசிரியரின் துயர-தூர பயணங்களும், மூழ்கிய ஆழமும், கொள்வன கொண்டு, தள்ளுவன தள்ளி மேற்கொண்ட பிரயாசைகளும் கூட பின் தள்ளப்படுமளவுக்கு மிக எளிமையாக படைக்க முடிந்திருக்கிறது இமயத்தால்.

கதை மாந்தர்கள் சாதிக்கொடுமைக்கு ஆளான நலிந்தவர்கள். அதிலும் குறிப்பாக பெண்கள், சிறுவர்கள். நெல்லுச் சோறு, உருமச் சோறு, கல்யாணச் சாப்பாடு, ஒரு புடிச்ச புடி விளக்குமாறு, காளைமார்க் சுருட்டு, குத்தி வச்ச சோளநொய், கல்லப்பயிறு என்று இன்றைய மதிப்பீடுகளில் இருபது ரூபாய் கூட முழுதாகத் தேறாத சமாச்சாரங்களைக்கொண்டு நேர்த்தியான வலைபின்னி இவற்றை விலை மதிப்பற்ற சித்திரங்களாக்குவது இமையத்துக்கு மட்டுமே சாத்தியம் என்று பிரமிப்பு உண்டாகிறது. விழிகளிலே படரும் ஈரக்கசிவைத் தாண்டி ஆழ்ந்த மௌனத்துள் இட்டுச் செல்கின்றன இக்கதைகள்.

முலைகளை எதிர்பாராத சமயத்தில் கசக்கி மலரின் காதலைத் தீயில் பொசுக்கும் முரட்டு ஆணின் காம சுபாவமாகட்டும், குதிர் சந்தில் நுழைந்துகொண்டு சின்ன விசும்பலுடன் தேம்பியழும் சிறுவனாகட்டும், 'பிரிச'னின் (புருஷன்) அம்மாவை கொல்லாமல் கொன்று அதன் மூலம் பிரிசன் மனதில் ரணகளத்தை உண்டாக்கும் நடுத்தர வர்க்கத்து மனைவியாகட்டும், புலன்களில் நுழைந்து, புலன்களே மொழிகொண்டு பேசுவது போல் நுணுக்கமான உளப்பகுப்பு நடக்கிறது கதைகளுக்குள்! படிக்கும் வாசகரோ, நோகும்/நோகச் செய்யும் இருவேறு பாத்திரப்படைப்புக்குள் சிக்கித் திணறி யார் பக்கமும் சாய முடியாத அவஸ்தைகளுக்காளாகி இந்தச் சூழலை உருவாக்கிய சாதிய சமூகத்தை 'சாண்ட நக்கியூட்டு சமூவமே, நாசமாய்ப்போவ' என்று சபிப்பதைத் தவிர என்ன செய்வார்கள்.

ஆனால், 'மினை' பிரித்து கோடு கிழிக்கிற காட்டுக் காரியை, 'ஊர்க்காலி' மாடுவள மேக்கிற ஈய்யனூரான அடிக்கிற சாதிப் பெயல்களை சில சமயங்களில் இவுங்கதான் என்று அடையாளம் காட்டி, சாட்டைகளை நம் கைகளில் கொடுத்துவிட இமயம் தயங்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்குள்ளே நிலவும் உறவுகளையும், ஆண்டை அடிமை உறவுகளையும், ஆண்டைக்குத் துணை போகின்ற அடிமைகளின் நிலையையும் வெவ்வேறாகப் பிரித்து இனங்காண வாசகரை அனுமதிக்கின்றன இக்கதைகள்.

இறுதிவரை, பசித்திருந்த கிழவி வீட்டில் விரதச் சாப்பாடு நடைபெறும்போது, தன்னை மறந்தே போய் விட்டார்கள் என்பதை அறிந்து, எச்சிலையில் மீந்தவற்றை சாப்பிடுவதாகக் காட்டியிருப்பார் வங்காளச் சிறுகதை எழுத்தாளர் பிரேம்சந்த். இமயத்தின் 'நெல்சோறு' கதையின் முடிவை முன்பிருந்தே ஊகிக்க முடிந்தாலும், முடிவுகளைப் பற்றி கவலையற்ற வாசகர்களுக்கு அந்த முடிவை நோக்கி நகரும் இயல்புகளை கேள்விகளுக்கப்பால் நிறுத்தி விடுவதுதான் இமயத்தின் வெற்றி.

பொன்னம்மா, தான் 'வாய்ந்த' கதையைப் பற்றி உள்ளமும் ஊனும் உருகுமாறு சொல்லிக்கொண்டு போய், இறுதியில் என்ன சாதியோ என்ன சனமோ, காசு மட்டும் இருந்தா கொடுங்க என்று கேட்டு வாங்குவது பலவித கேள்விகளை எழுப்புகிறது.

'இந்தக் குடிகாரனுவோ செஞ்சது கொஞ்ச நஞ்சங் கிறீங்களா, ராத்திரியில வேட்டக்கிப் போயிட்டுத் திரும்பயிலே நெனப்பு எடுத்துக்கிட்டா, மாசத்துல நாலு அஞ்சி நாளு வந்து எங்கூட்டுக் காரரை நவுத்திவுட்டு என் பக்கத்திலே படுத்துக்குவான். பேச்சு சத்தம் கேட்டு எங்கூட்டுக் காரரு என்னான்னு கேப்பாரு. அந்தத் திருட்டுப் பய குள்ளக்கருப்பு வந்திருக்கான்னு சொல்வான். கோயி கூப்புட மட்டும் எங்கிட்ட பேசிக்கிட்டிருந்துட்டுத்தான் போவான்.'

இந்தக் குள்ளக்கருப்பு அவளது தகப்பா அல்லது கோவிலில் சாத்தியிருக்கிற தெய்வமா? 'பொன்னம்மாவின் கதை' என்று விலக்க முடியாமல் பெண்மையின் ஆழத்திற்கு இட்டுச் செல்கின்ற மாயாஜாலம்போல் பிறப்புக்கும் இறப்புக்குமிடையிலான ஊடாட்டம் பரவுகின்றது.

ஒவ்வொரு சிறுகதையிலும் பேசப்பட வேண்டிய விஷயங்கள் ஏராளம். முடிவுக்கு உந்தப்படும் அபாயத்தில், ரயில் சங்கிலியைப் பிடித்திழுக்கும் பயணியின் மனநிலைக்கு இமயம் செல்லவில்லை என்றாலும், முடிவை நோக்கி சிறுசிறு தடுமாற்றங்கள் நிகழ்ந்திருக்கிறது என்பதை ஊகிக்க முடிகிறது.

1980 முதல் தமிழ் இலக்கியத்தில் தொடங்கிய மாற்றங்கள் 2005 வரை தொடர்ந்து வருகின்றது. தமிழ் இலக்கியத்தின் முகமே 'தலித்' என்று சொல்லுமளவுக்கு பல எல்லைகளைத் தொட்டிருக்கும் தலித் இலக்கிய வரலாற்றில் மண்பாரத்திற்கு மதிப்பு மிக்க இடம் உண்டு. ✓


படிப்பகம்

www.padippakam.com

# போதை

க. கலாமோகன், *பாரீஸ்.*

நான் ஓர் பிணத்தைக் கண்டபோது.............

முதல் தடவையாக.

5 வயதாக இருக்கலாம் என நினைக்கின்றேன்.

பால்.

அது ஓர் சடங்காக இருந்தது. அவர் சாவார் எனத் தெரிந்தால் அவரிற்குப் பால் கொடுத்தல்.

அனைத்து உறவுகளும்.

நான் அவரது பேரப்பிள்ளையாக.

அவரது சொந்தப் பெயரோ குறியீட்டுப் பெயரோ இன்றும் எனது தற்காலிகத் தேடல்களிற்குள் அகப் படாமல்.

அவர் ஓர் நீளமான மனிதராக இருந்தார். அவரது நீளத்திற்கு ஏற்ற சவப்பெட்டியை கடைகளில் வாங்க முடியுமா?

எங்கள் குடும்பத்தில் தச்சுவேலை தெரிந்தவர் களும் இருந்தனர். எனது பாட்டனிற்கான சவப்பெட்டி வாங்கப் பட்டதா அல்லது செய்யப்பட்டதா என்பது எனக்குத் தெரியாது.

அம்மாவிடம் கேட்கலாம் என நினைத்தேன்.

அவள் காலமாகி விட்டாள்.

அப்பாவிடம்?

அவரும் காலமாகி விட்டார்.

பாட்டனின் சவப்பெட்டி நீளமானதா குறுகியதா எனும் விசாரணை ஏன் என்னைக் குடைய வேண்டும்?

நொஸ்தால்ஜி?

குடை.

அவள் என்னைக் குடைந்தாள்.

அது ஓர் மழை தினமாக இருந்தது.

நானும் அவளும் குடையில்லாமல் பார்பஸ் வீதி யில் நடந்து கொண்டிருந்தோம்.

நடப்பின் தியானத்தில் எங்களது உதடுகள் காலமாகிப் போயின.

அவள் என் அணைப்பில் விலகித் தூர நடந்தாள்.

“நில்!” நான் கத்தினேன்.

அவள் ஓடினாள்.

நான் அவளைத் துரத்தினேன்.

துரத்தினேன் அவளை நான்.

தப்பு.

இது மொழியா?

துரத்தினேன் நான் அவளைத்.

லக்கணப் பிழைகளில் என்னால் எனது ஓடத்தை ஓட்ட முடியும்.

நான் ஓட்டினேன்.

ஓடம் தள்ளாடியது. அதற்குப் போதையா?

எனக்கு விக்கல் வந்தது.

நான் அவளிடம் தண்ணீருக்காகக் கெஞ்சினேன்.

அவள் எனக்குப் பால் தந்தாள்.

இரவில் அவளது உடல் மறைந்து முலைகளில் இருந்து பால் ஒழுகியது.

நான் குடித்தேன்.

எனது பாட்டன் மயக்கத்தில் இருந்து குடித்த அந்தப் பாலும் இந்தப் பாலும் ஒன்றா?

குடத்தை உடைக்கின்றேன்.

நிலத்தை ஈரமாக்குகின்றது பால்.

முலைகளையும் உடைக்கின்றேன்.

பால் எனது தலைக்குள்.

பாலின் நிறம் கறுப்பாகவும் வெள்ளையாகவும்.

போதை.

இல்லை.

தைபோவா?

பால் நிலத்தில் நான் ஓர் சின்னக் கவிதை எழுதினேன்.

அது எங்கே?

ஒருவேளை அது ஓர் போதைக் கிணறுள்.

ஆழம்.

கிணறு.

பால்.

நான் நிலத்தின் குழந்தை. ■



படிப்பகம்

www.padippakam.com

கண்டிப்பாக அம்பேத்கரை மட்டும் ஏற்றுக் கொள்ளாது. இதுதான் மண்ணுக்கேத்த மார்க்சியம் செஞ்ச செயல்''

''தோழர்... நீங்கள் அம்பேத்கரை உங்கள் சொந்த சாதின்னு தூக்கிப் பேசறீங்க...''

''ஏங்க மொழி தெரியாத வங்காளக்காரர் பாரதி யாரின் பாடல்களில் புரட்சியைப் பார்க்கும்போது, இந்த மக்களுக்காக அரசியலை வகுத்துத் தந்த அம்பேத் கரை நாங்கள் பேசக் கூடாதா?''

''நீங்கள் அம்பேத்கரின் எல்லா செயலையும் ஆய்வு செய்திருக்கிறீர்களா''

டீச்சர் சிரித்தார்.

''நீங்கள் பாரதியாரின் ஒரே ஒரு செயலையாவது ஆய்வு செய்து இருக்கிறீர்களா?''

''பாரதியாரின் கவிதைகள் வீர வரிகள். மிகவும் முற்போக்கானவை. உதாரணத்திற்கு,

சந்திர மண்டலத்தை கண்டு தெளிவோம் - உயர்
சந்தி தெரு பெருக்கும் சாத்திரம் கற்போம்'

என்று அறிவியலையும், துப்புரவுத் தொழிலையும் சமமாக பாவித்து எழுதியவர் பாரதியார்.''

டீச்சர் சிரித்தார். ''பார்ப்பாரெல்லாம் சந்திர மண்டலத்து விஞ்ஞானம் படிக்கணும். எங்களை மாதிரி உள்ள பறப்பசங்க எல்லாம் தெரு பெருக்கணும். நாங்க தெரு பெருக்கும் சாத்திரம் படிக்கலன்னா, நீங்க நிம்மதியா சந்திர மண்டலத்து அறிவியல் படிக்க முடியாது. நாங்க ளும் உங்க படிப்புக்கு பங்கு கேட்டு வந்துடுவோம். நீங்க ஒருபோதும் எங்களுக்கு ஒதுக்கியுள்ள பெருக்குற தொழிலில் பங்கு கேட்டு வரப்போறதில்ல.''

''தோழர்... நீங்க வரட்டு சிந்தனாவாதம் பேசுறீங்க. துப்புறவு தொழிலை - அதை செய்பவர்களை உதாசீனப் படுத்துற மாதிரி பேசுறீங்க...''

''சார்... முகில் சார்... இங்க கவனியுங்க. பாரதியார் அப்படிச் சொன்னார். ஆனால் அம்பேத்கர் இந்தியாவில் உள்ள எல்லா பயன்படு வேலை, படிப்பு வசதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பங்கு வாங்கித் தந்தார். இன்னிக்கு நான் ஒரு டீச்சரா, எள் ஒரு கல்லூரி மாண வனா இருக்கிறோமின்னா, அதற்கு அம்பேத்கரின் உழைப்பு மட்டுமே காரணம். இட ஒதுக்கீடு என்ற ஒன்றை அம்பேத்கர் வழிவகை செய்யலன்னா நாட்டிலே சாதி முறை கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருக்காது.''

முகில் சலித்துப் போனார்.

''இட ஒதுக்கீடு என்பதனால் பல திறமையான மாணவர்கட்கு வேலை கிடைக்காமல், வெளிநாடு சென்று வேலை செய்கிறார்கள். இருந்தும் இட ஒதுக் கீட்டை நாங்க ஏத்துக்குறோம். ஆனால் இட ஒதுக்கீட் டால் பக்க விளைவுகள் உண்டு என்பதை நீங்களும், உங்கள் அம்பேத்கர்வாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.''

''இட ஒதுக்கீடு காரணமாக பாதிக்கப்படும் ஆதிக்க சாதி இளைஞர்கள் வேலை தேடி ஏன் அமெரிக்கா விற்கும், இங்கிலாந்திற்கும் மட்டும் செல்கின்றனர்? அரேபியாவிற்குச் சென்று அங்கு வியர்வை சிந்த ஏதாவது வேலை செய்யலாமே?''

''வேலைன்னா நல்ல வேலை வேண்டும். அதனால் தான் கல்ஃப் நாடுகளுக்குச் செல்வதில்லை''

''உங்களுக்கு வேலை வேண்டுமென்றால் நாடுகளிலே யும் உயர்வு பார்க்கிறீர்கள். ஆனால் எங்களை மட்டும் தொழிலில் மிகவும் தாழ்வு பார்த்து நிர்பந்திக்கிறீர்கள். ஏசி அறை, உடல் நோகாத, சட்டை மடிப்பு கலையாத வேலை தரும் நாடுகளுக்கு மட்டும் நீங்கள் செல்வது நியாயம். அதே நேரத்தில் இந்த மண்ணின் பூர்வ குடிகள் மட்டும் கைகள் கொப்பளிக்கும் வரை கல் உடைக்கும் வேலை, செருப்பு தைத்தல், துப்புறவு தொழில் செய்தல் போன்ற வேலை செய்தாலும் அதுவும் தொழில்தானே என்ற தத்துவம். இது மண்ணுக்கேத்த மார்க்சியம் என் றால் என்னைப் பொறுத்தவரைக்கும் இது ஆதிக்க சாதி களுக்கு ஏற்ற ஏமாற்று வேலை என்பேன்'' என்றார் சந்திரா டீச்சர்.

முகில் ஓங்கி சிரித்தார்.

''டேய் எள்.. நான் இதுவரை உன்னுடைய ஊருக்கு... தப்பு தப்பு... காலனிக்கு வந்தது... இங்கு வந்திருப்பது... பத்து ரூபாயை நீ பத்திரமாக வைத்திருப்பது...அதை ஒப்பிட்டு நான் பேசியது... எல்லாவற்றையும் உன் டீச்சரிடம் சொல்'' என்றார்.

எள் ஒன்று விடாமல் டீச்சரிடம் விவரித்தான். சந்திரா டீச்சர் முகிலை மிகவும் ஏளனமாகப் பார்த்தார். எள்ளையும் ஊன்றிப் பார்த்தார்.

''சாதியின் மீதுள்ள இந்துக்களின் பற்றும், எள் ளுக்கு அவனின் டீச்சர் தந்த பத்து ரூபாயின் மீதுள்ள பற்றும் ஒன்று என்று நீங்கள் சொல்கிறீர்கள். உங்களின் புரட்சி உரையைக் கேட்டு விட்டு எள் அந்த பத்து ரூபாயை உங்களிடம் தந்திருந்தால் எள்ளை முற்போக் கானவன் என்று ஏற்றுக் கொண்டிருப்பீர்கள். அப்படித் தானே?''

''அப்படியில்லை. எள் அந்த பத்து ரூபாயை செலவு செய்ய முன்வந்திருந்தால், எள் ஒரு முற்போக்கு மனோபாவம் உள்ளவன் என்று எனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும்.''

முகிலின் அந்த வார்த்தைகளுக்கு சந்திரா டீச்சரின் பதிலை எள்ளை விட முகில் அதிக ஆர்வமாக எதிர் பார்த்தார்.

''முகில் சார்... இங்க கவனியுங்க. உங்க அம்மா தொலைஞ்சு போயிட்டாங்க. நீங்க ரெண்டு நாளா தேடித் தேடி மிகவும் சோர்ந்து போயிடுறீங்க. அப்ப நம்ம எள் அவன் அம்மாவுடன் வருகிறான். அதப் பார்த்து உங்கம்மா கிடைச்சுட்டதா சந்தோஷப்படுவீங்களா?''

''இது என்ன முட்டாள்தனம்'' என்றார் முகில்.

''என்னுடைய பையன் கொலை செஞ்சிட்டான். அவனை போலீஸ் தேடிக்கிட்டு இருக்குது. ஆள் தலை மறைவாயிட்டான். நான் என்னுடைய பையன் மேல் அன்பு வைத்திருப்பதுபோலவே நீங்க உங்க பையன் மீது அன்பு வைத்திருக்கிறீர்கள். அதனால் உங்களுடைய மகனை போலீஸ் கைது செய்ய வேண்டும் என்று நான் கோரினால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்?''

''உங்களுடைய கேள்விகள் எல்லாமே பைத்தியக் காரத்தனமாகவே உள்ளன.''


படிப்பகம்

www.padippakam.com

■■■■

**இடஒதுக்கீடு காரணமாக பாதிக்கப்படும் ஆதிக்க சாதி இளைஞர்கள் வேலை தேடி ஏன் அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்கும் மட்டும் செல்கின்றனர்? அரேபியாவிற்குச் சென்று அங்கு வியர்வை சிந்த ஏதாவது வேலை செய்யலாமே?**

■■■■

சந்திரா டீச்சர் தொடர்ந்தார்.

"சாதி இந்துக்கள் சாதியின் மீது கொண்டுள்ளது பற்று."

"எள் அந்த பத்து ரூபாய் மீது கொண்டதும் பற்று" - இது முகில்.

"இரண்டும் பற்று வகையைச் சேர்ந்தது. அதில் ஐயம் இல்லை. ஆனால் அவை இரண்டும் ஒன்றல்லவே" - சந்திரா டீச்சர்.

"எனக்குப் புரியவில்லை" என்றார் முகில்.

"ஆதிக்க சாதி மக்களின் சாதிப் பற்றிற்கு எள் அந்த பத்து ரூபாயைத் தந்து விட்டால், அதாவது எள் தன்னுடைய பற்றை விட்டுவிட்டால், சாதி ஒழிந்து விடுமா?"

"அது எப்படி ஒழியும்?"

"எள்ளின் பற்று நீங்கினாலும், உங்கள் சாதியின் பற்று நீங்காது எனும்போது, எள் ஏன் அந்த பத்து ரூபாயை செலவு செய்ய வேண்டும்?"

"நான் எள் அந்த பணத்தை செலவு செய்தால் சாதி ஒழிந்து விடும் என்று கூறவில்லையே? மேலும் சாதியின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பற்று, எள்ளின் பத்து ரூபாய் பற்று போலத்தான் என்றுதானே கூறினேன்!"

"அதுபோலத்தானே தவிர இது அது அல்லவே"

"ஆமாம்"

"பின்னர் உங்கள் சாதி ஒழிய பத்து ரூபாயை ஏன் கொண்டு வருகிறீர்கள். இந்த பத்து ரூபாயைத் தந்தால் சாதி ஒழியும் என்றால், அந்த பணத்தை எள் கண்டிப்பாக தந்திருப்பான். ஆனால் நீங்கள், உங்கள் சாதி அபிமானத்தை நியாயப்படுத்த எள்ளின் தனிப்பட்ட ஒரு செயலைக்கூட கொச்சைப்படுத்தத் தயாராய் இருந்தீர்கள். உங்களின் மாபெரும் தவறை மறைப்பதற்கு மற்றவர்களின் நியாயமான மகிழ்ச்சியை கொன்று விடாதீர்கள். உங்களின் குற்றம் சாட்டும் பண்பு, உங்களின் இயலாமையைக் காட்டுகிறது.

நீங்கள் உங்கள் தாயை நேசிக்கிறீர்கள். அதில் எத்தகைய தவறும் இல்லை. நீங்கள் சாதியை நேசித்தால் அது மாபெரும் தவறு. நீங்கள் உங்கள் தாயின் புகைப்படத்தை புனிதமாக நம்புகிறீர்கள். அதில் எவ்வித தவறும் இல்லை. எள் அந்த பத்து ரூபாய் பணத்தை என்னுடைய அன்பின் அடையாளமாக, குரு மரியாதையாக நேசிக்கிறான். அதில் என்ன தவறு இருக்க முடியும்?

தன்னுடைய தரப்பு நியாயத்தைக்கூட சரியாக எடுத்துச் சொல்ல முடியாமல் ஒடுக்கப்பட்ட மக்கள் உள்ளனர். அவர்களை குற்றப்படுத்தி உங்கள் சாதிக்கு நியாயம் கற்பிக்காதீர்கள்.

நீங்கள் சென்னைக்குப் போய் இருக்கிறீர்களா?"

"ம்..." என்றார் முகில்.

"சென்னையில் மிகவும் பணக்கார மக்கள் வசிக்கும் பகுதிகளை கொஞ்சம் சொல்லுங்கள்."

"மைலாப்பூர், அண்ணா நகர், மந்தவெளி... இன்னும் பல"

"நான் ஒரு உள் அரங்கு கருத்தரங்கம் நடத்த சென்னையில் துரைப்பாக்கம் கண்ணகி நகருக்கு ஒரு முறை சென்றேன். அங்கு அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 200 சதுர அடியில் அடுக்கு மாடி குடியிருப்பு வீடு தந்துள்ளது."

"இது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு தந்த உதவி தானே?"

"இவர்கள் இதற்கு முன்னர் 30 வருடங்கள் மைலாப்பூரில், மந்தைவெளியில், அண்ணா நகரில், சென்னை கோட்டைப் பகுதியில் பட்டா இல்லாமல் வாழ்ந்து வந்தவர்கள். இவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு கண்ணகி நகர், துரைப்பாக்கத்தில் வீடுகள் தரப்பட்டுள்ளன. இதே மைலாப்பூரில் பார்ப்பனர்கள் பட்டாவுடன் வாழ்கின்றனர்."

"ஆமாம். வாழ நிலப்பட்டா தேவைதானே?"

"கண்ணகி நகர் மக்கள் புறம்போக்கு நிலத்தில் 30 ஆண்டுகள் நகரின் மையப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள். பட்டா அரசு தருகிறது. பட்டாவுடன் வாழ்ந்தவர்களை அரசை ஏற்றுக்கொண்ட 'அரசின் கைக்கூலி' என்று கூறலாமா? பட்டா நிலத்தில் வாழும் இவர்கள் இறக்குமதி லைசென்ஸ் வாங்கி ரஷ்யாவிடமிருந்து வெள்ளரிக்காய் இறக்குமதி செய்கிறார்கள். இவர்களை நீங்கள் விட்டுவிட்டீர்கள். அந்த வெள்ளரிக்காயை வயிற்றுப் பிழைப்பிற்காக விற்று அதில் சோறு தின்னும் ஏழையை கைக்கூலி என்கிறீர்கள்.

சொகுசு வீட்டிற்காக, காருக்காக, ஆடம்பர வாழ்க்கைக்காக அரசிடம் விலை போகும் உங்க சாதிக்காரங்கதான் அரசின் ஒட்டு மொத்த கைக்கூலிகள். இவர்கள் கூலிக்காக திரியாமல், மக்களுக்காக உழைச்சா அதுக்கு நீங்க என்ன செய்ய முடியும்னு யோசிக்கிறதை விட்டு விட்டு.."

எள் பூரித்துப் போனான். "சரியாச் சொன்னீங்க டீச்சர்" என்று கத்தினான்.

"என்னடா அங்கே சத்தம். கனவு கண்டு ஏதேதோ கத்துரான் பார்" என்று குரல் தந்தார் முகில்.

■



படிப்பகம்

www.padippakam.com



## 4.9.2005

**நிலவுரிமைக் கருத்தரங்கம்**

பாண்டிச்சேரி

பெண்கள் பகுத்தறிவு இயக்கமும், தலித் கூட்டமைப்பும் இணைந்து பாண்டிச் சேரியில் நிலவுரிமை கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்திருந்தது. அதேகாம் பின்னகம் லலிதா, இன்பகுமார், கௌதம சன்னா, எழுத்தாளர் சோபகன், கவிஞர் ப்ரதிபா ஜெயச்சந்திரன், வினோத், வழக்கறிஞர் லூசி, புதுவை சட்டமன்ற உறுப்பினர் நீலகங்காதரன், பெண்கள் பகுத்தறிவு இயக்கம் (பாண்டிச்சேரி) தலைவி சுகந்தி மற்றும் எழுத்தாளர் சிவகாமி ஆகியோர் பங்கேற்றனர். புதுவை மற்றும் தமிழ்நாட்டிலிருந்து சுமார் 100 பேர் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். தென்னிந்திய தலித் எழுத்தாளர் மற்றும் கலைஞர் பேரவை சமீபத்தில் நடத்திய 'கலைவழி தலித் விடுதலை' என்ற பயிற்சிப் பட்டறை மூல மாக உருவாக்கிய தலித் நிலவுரிமை பற்றிய இசைச்சித்திரம் அவ்வமயம் அரங்கேற்றப் பட்டது.

## 4.9.2005

**பொதுப் பிரச்சனைக்கான ஆலோசனைக் கூட்டம்**

கோட்டக்குப்பம் காலனி, விழுப்புரம் மாவட்டம்

கோட்டக்குப்பத்தில் தொடர்ந்து முப்பது வருடங்களாக அரசின் தரிசு நிலத்தில் குடிசைகள் போட்டு வாழ்ந்து வருகின்றனர் தலித் மக்கள். அதே நிலத்தை மாற்று சாதியினர் ஆக்கிரமித்து பாதை மறுத்து வருவதைத் தொடர்ந்து, வழக்கறிஞர் லூசி மற்றும் வழக்கறிஞர் ராஜலிங்கம் தலித் மக்களை ஒருங்கிணைத்து ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்திற்கு பட்டா பெறுவதற்கும், பாதைக்கு ஏற்பாடு செய்யவும் ஆலோசனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். புதிய கோடாங்கி குழுவினர் அங்கு சென்று அம்மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து தலித் மக்கள் உரிமை பெற திட்டம் வகுத்தனர்.

## 7.9.2005

**தலித் நிலவுரிமை விழிப்புணர்வு முகாம்**

செம்பட்டு, திருச்சி மாவட்டம்

திருச்சி புறநகர்ப் பகுதி செம்பட்டு. இங்கு பஞ்சமி நிலங்கள் 12 ஏக்கர் அளவில் ஆதிக்க சாதியினர் வசம் இருப்பதை அறிந்த திருச்சி P.K. சண்முகசுந்தரம் அங்கு நிலவுரிமை விழிப்புணர்வு முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தார். எழுத்தாளர் சிவகாமி, லீட் ராதா, வேலுச்சாமி ஆகியோர் அங்கு சென்று பஞ்சமி நிலங்களைப் பார்வையிட்டு செம்பட்டு தலித் குடியிருப்பில் மக்களோடு கலந்துரையாடினர். கழிப்பிட வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி, மின்சார வசதி இவையெதுவுமில்லாமல், இடிந்து விழும் நிலையில் உள்ள மண் குடிசைகளில் புதிய கற்கால மக்கள்போல் தலித்துகள் வாழ்ந்து வருகின்றனர். அங்குள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையில் கூலிகளாகப் பணியாற்றுகின்றனர். இவ்வளவு சிரமங்களிலும் அப்பகுதியில் சிலர் படித்திருக்கின்றனர். அவர்களுக்கு எவ்வித வேலை வாய்ப்பும் கிடைக்கவில்லை. அம்மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அம்மக்களையே தயார் செய்யும் பணியில் புதிய கோடாங்கி குழுவினர் ஈடுபட்டனர்.

## 7.9.2005

**தலித் நிலவுரிமை விழிப்புணர்வு**

புதுநகர், திருச்சி

இரவு சுமார் பத்து மணியளவில் திருச்சி புதுநகர் தலித் குடியிருப்பை அடைந்தனர் பி.கே. சண்முகசுந்தரம், ராதா, வேலுச்சாமி மற்றும் எழுத்தாளர் சிவகாமி ஆகியோர். நரசப்பிள்ளை என்ற சாதி இந்துவுக்கு சொந்தமான நிலத்தில் கடந்த 75 வருடங்களாக புதுநகரைச் சேர்ந்த 250 குடும்பங்கள் வசித்து வருகின்றன. நரசப்பிள்ளையின் வாரிசுகள் சென்ட் ஒன்று ரூ.15,000/- தந்தால்தான் பட்டா தருவோம் என்று மிரட்டுகிறார்கள் என்றனர் பகுதி மக்கள். இவ்வளவு காலம் குடியிருந்தபின், குடியிருப்பாளருக்கே அது சொந்தமாகும். இதை மாவட்ட நில நிர்வகத்தினரிடம் கோரிக்கையாக முன்வைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

**8.9.2005**

**நில மீட்பு ஆலோசனைக் கூட்டம்**

கோவில் எசனை கிராமம், பெரம்பலூர் மாவட்டம்

கோவில் எசனை கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கென நில எடுப்பு செய்து அவர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்பு மனைகளில் மாற்று சமூகத்தினர் அடாவடியாக ஆக்கிரமணம் செய்ததோடு பாதையும் விட மறுத்து வந்துள்ளனர். இதை மாவட்ட நிர்வாகம் கடந்த 25 ஆண்டுகளாக அனுமதித்து வந்துள்ளது. மக்கள் பலமுறை நிர்வாகத்திடம் முறையீடு செய்தும் நீதி வழங்கப்படவில்லை. அந்நிலத்தை மீட்டெடுக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**9.9.2005**

**இளையபெருமாளுக்கு அஞ்சலி**

காட்டுமன்னார்கோவில், கடலூர் மாவட்டம்.

தலித் மக்களுக்காக கடந்த நாற்பத்து ஐந்து ஆண்டுகளாக உழைத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியின் (தமிழ்நாடு) முன்னாள் தலைவருமான இளையபெருமாள் அவர்களின் பூதவுடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செய்தனர் புதிய கோடாங்கி குழுவினர்.

**9.9.2005**

**அம்பேத்கர் படத்திறப்பும், நிலவுரிமை கருத்தரங்கும்.**

திட்டக்குடி, கடலூர் மாவட்டம்.

அசோகசுந்தரம், முருகன் ஆகிய SC/ST ஊழியர் சங்கத் தலைவர்கள் ஏற்பாடு செய்திருந்த தலித் நிலவுரிமை கருத்தரங்கில் அம்பேத்கர் உருவப்படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார் எழுத்தாளர் சிவகாமி. பள்ளி மாணவர்களும், திட்டக்குடியைச் சேர்ந்த தலித் ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். பள்ளி ஆசிரியர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். பி.கே. சண்முகசுந்தரம், லீட் வேலுச்சாமி, அர்ச்சுனன் ஆகிய பலர் உரையாற்றினர்.

**10.9.2005**

**லூயிஸ் சித்தார்த் - சித்திராதேவி திருமணம்**

திருச்சி

பறையர்-பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த மணமக்களின் காதல் திருமணம் பவுத்த முறைப்படி நடந்தது. எழுத்தாளர் சிவகாமி தலைமையேற்றார். அருள்மேரி உலகநாதன் வாழ்த்துரை வழங்க, பிக்கு போதி-தம்மா திருமணத்தை நடத்தி வைத்தார். SFI (Dalit Students' Federation of India) என்ற மாணவர் அமைப்பு வழக்கறிஞர் லூயிஸ் சித்தார்த் அவர்களால் தொடங்கப் பெற்று வலுவாக இயங்கி வருகிறது. அவ்வியக்கத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவ, மாண வியர் சுமார் நானூறு பேர் திருமணத்திற்கு வந்திருந்தனர்.

**10.9.2005**

**மினர்வா அனைத்துக் கல்லூரி மாணவியர் விடுதி**

சீஸ்டோ YRC விடுதி, திருச்சி

இந்த பெயர்களில் ஐந்து விடுதிகள் தலித் மாணவ-மாணவியர் செல்வராஜ், கந்தசாமி, தங்கசாமி, லூயிஸ் சித்தார்த் போன்றவர்களால் நடத்தப்படுகின்றன. இந்த ஐந்து விடுதிகளையும் பார்வையிட்டு மாலை 6 மணி முதல் 9 மணி வரை மாணவர்களுடன் கலந்துரையாடினர் புதிய கோடாங்கி குழுவினர். தலித் மாணவ-மாணவியர் தலித் மக்களின் சேவையில் ஆர்வம் கொண்டுள்ளனர். அவர்களுக்கு தொடர்ந்து பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டது.

**16.9.2005**

தலித்துகளுக்கு அனுமதி மறுத்து, பூட்டியிருந்த தேவாலயத்தில் ரெட்டியார்கள் மட்டும் திருட்டுத்தனமாக பூசை நடத்துவதாகக் கேள்விப்பட்டு, தச்சூர் சென்று,



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி - பதில்

■ முனிமா

**ஏன் சூறாவளிகளுக்கு கத்ரீனா, ரீட்டா என்று பெண்கள் பெயரையே வைத்திருக்கிறார்கள்?**

- மங்கை, சின்னசெம்மேடு.

உலகத்தையே பெண் என்று பெயர் சூட்டியதால் இருக்குமோ? ஆமாம், சூரியனை ஏன் ஆண் பாலால் அழைக்கிறார்கள்? சூரியனைச் சுற்றி வருவதால் பூமியைப் பெண் என்று அழைக்கிறார்களோ? இந்தப் பெயரிடல்களில் பெண்கள் சம்பந்தப்படவில்லை என்பதையே இவை காட்டு கின்றன.

**அண்ணா பல்கலைக் கழகம் மாணவிகள் மேற்கத்திய உடைகளை அணிந்து வர தடை விதித்திருப்பது எந்த வகை யில் நியாயம்?**

- ஆர்லின், சென்னை.

சமீபத்தில் ஒரு வாரப்பத்திரிக்கை த்ரிஷா, ஜோதிகா, நயன்தாரா போன்ற நடிகைகளிடம் இதுபற்றி கருத்து கேட்டபோது ஏறக்குறைய எல்லா நடிகைகளும் பல்கலைக்கழக வளாகத்தில் புடவை அணிவதுதான் சிறப்பு என்று கருத்து கூறியிருக்கிறார்கள். சானியா மிர்ஸா கவர்ச்சியான உடையணிந்து டென்னிஸ் விளை யாடுவதற்கு முஸ்லிம் வகுப்பில் சில பிரிவினர் எதிர்ப்பு தெரிவித் திருக்கின்றனர். அவரவர்க்கு வசதியான, விருப்பமான உடை களை அணிந்து படிப்பிலும் விளையாட்டிலும் ஈடுபடும் பெண் களை, அவர்கள் அணிந்திருக்கும் உடைகளிலேயே நிலைத்திருக் கச் செய்து திசை திருப்புகிறது இவர்களின் நடவடிக்கைகள். உடை கள் வெறும் உடைகளல்ல. அவைகளையும் பெண்களைக் கட்டுப்படுத்தும் ஆயுதங்களாக மாற்ற நினைக் கிறது ஆணாதிக்க உலகம்.

**பெண்களுக்கு 33% ஒதுக்கீடு முதலில் வரட்டும்; தலித் பெண்களுக்கு அதில் உள் ஒதுக்கீடு என்பது படிப்படியாக கிடைக்க வேண்டிய விஷயம் என்று சில புரட்சி பெண் கவிஞர்கள் பேசுகிறார் கள். அதில் உண்மை இருக்கத்தானே செய்கிறது!**

- கோவிந்தன், செங்கை.

ஆமாம், எவ்வளவோ உண்மைகள் இருக்கின்றன! அப்பெண்கள், தலித் பெண்கள் படிப்படியாக வளர்ச்சி பெறு வதற்காக ஏகப்பட்ட திட்டங்களைத் தீட்டி காத்திருக்கிறார்கள்; இந்த 33 சதவீத ஒதுக்கீடு வருவது மட்டும்தான் குறை! எவ்விதத் திட்டங்களும், முன்னேற்பாடுகளும் அல்லது குறைந்த பட்ச சிந்தனையும் இல்லாத சுயநலவாதிகள் தங்கள் மடியை நிரப்பிக் கொள்வதற்காக, நடக்க வேண்டியதுதானே நடந் தேறும் என்று பேசுவார்கள்! வெட்கமில்லாதவர்கள். அவ்வரி சையில் கவிஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் சேர்ந்து விட்டார்கள். பெண்களெல்லோரும் தலித்துகள்தான் என்று அத்தகையவர்கள் சொல்லி வந்ததின் அர்த்தம் இப் போது புரிந்ததா?

**தேர்தலை நோக்கிய தலித் அரசியல் எப்படியிருக்கிறது?**

- ஜெயப்பிரகாஷ், பம்மல்.

அய்யோ பாவம், சட்டமன்ற உறுப்பினர் பதவிகளுக் காக சீட்டு கேட்டு லோலோவென்று அலையும்படி ஆகிவிட்டது அவர்கள் நிலைமை. சிலர் ஒரு சீட்டு மட்டுமே கிடைத்தால் போதுமானது என்று தங்கள் அளவில் பேரம் பேசிக்கொண் டிருக்க, சிலர் பத்து சீட்டு கிடைத்தால் போதுமானது என்று தாங்கள் சேர்த்து வைத்திருக்கும் கூட்டத்திற்கேற்ப பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பத்து சீட்டு கிடைத்து வெற்றி பெற்று சட்டமன்றம் புகுந்தால் மாற்றங்கள் வந்துவிடும் என்று அவர் களும் நம்பவில்லை, மக்களும் நம்பவில்லை. தலித் மக்க ளின் எதிர்காலம் குறித்து எந்த தெளிவான நிலைப்பாடும், செயல்திட்டமும் இல்லாமல் பேரம் பேசிக் கொண்டிருப்பவர் களுக்கு தலித் மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள் இந்தத் தேர்தலில்.

**மக்கள் முகத்தில் புன்னகை தவழ நான் காரணமாக இருக்க வேண்டும் என்று குடியரசு தலைவர் கலாம் கூறியிருப் பது குறித்து...**

- இளங்கோவன், பெண்ணாடம்.

இப்படிக் கூறியிருப்பதைப் பார்த்து அப்பாவி மக்களும் வாய்விட்டு சிரிக்கத்தான் செய்வார்கள்!


படிப்பகம்

www.padippakam.com

**சூறாவளியால் ஆட்டங்கண்டுள்ள அமெரிக்காவிடமிருந்து படிப்பினைகள் ஏதாவது உண்டா?**

– கார்த்திக், திருப்பூர்.

செப்டம்பர் 11 தாக்குதல் நடந்தபோது தனது எதிரியை அழிக்க கங்கணம் கட்டிய அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் ஈராக் போன்ற நாடுகளை சூறாவளிபோல் தாக்கி அழித்தது. தனது விஞ்ஞான முன்னேற்றங்கள் அனைத்தையும் தன்னை உலகத்தின் போலீஸாக காட்டிக் கொள்வதிலேயே செலவழித்தது. ஆனால் இயற்கைச் சீற்றங்களின் முன்னால் பாதுகாப்பற்ற நாடாகவே அமெரிக்கா விளங்கி வருகிறது என்பது அடுத்தடுத்த சூறாவளிகளால் அம்பலமாகியுள்ளது. ஆகையால் சதாம் உசேன் தலையிலுள்ள நரைத்த முடியின் மீது கவனம் செலுத்துவதைத் தவிர்த்து, விஞ்ஞான முன்னேற்றங்களை உலக நாடுகளோடு பகிர்ந்து கொண்டு தன்னையும் பிறரையும் உய்விக்கும் முயற்சியில் இனியாவது இறங்க வேண்டும் அமெரிக்கா. இந்தப் படிப்பினையை அமெரிக்க மக்களும், அவர்கள் தேர்ந்தெடுத்த அதிபர் புஷ்ஷும் விளங்கிக் கொண்டால் சரி.



**தனது ஆட்சியில் சொந்த மச்சான்கள் அடித்த கொட்டத்தை அடக்க வேண்டிய லல்லு பிரசாத் யாதவ், அவர்கள் பவர் சென்டர் என்றால் நான் தெர்மல் ஸ்டேஷன், வேண்டும்போது ஸ்விட்ச் ஆஃப் செய்து விடுவேன் என்று கூறியிருக்கிறாரே, இது எந்த வகையில் தவறை சரிப்படுத்தும்?**

– குமாரவள்ளி, பாளையங்கோட்டை

இங்கே மட்டும் என்ன வாழுதாம்? மகன் அன்புமணி பவர் சென்டர் என்றால், அவரது அப்பா தெர்மல் ஸ்டேஷன்! மகன் ஸ்டாலினும், பேரன் தயாநிதியும் பவர் சென்டர் என்றால், கருணாநிதி தெர்மல் ஸ்டேஷன்! சசிகலா அன்ட் கோ பவர் சென்டர் என்றால், ஜெயலலிதா தெர்மல் ஸ்டேஷன்! பவர் சென்டர்கள் தவறிழைத்தால் தெர்மல் ஸ்டேஷனை ஸ்விட்ச் ஆஃப் செய்து விடுவேன் என்று லல்லு கூறினாலும், உண்மையில் என்ன நடக்கிறது? பவர் சென்டர்கள் குறித்து விமரிசனம் எழும்போதெல்லாம், தெர்மல் ஸ்டேஷன்கள் அவைகளுக்கு மேலும் உயிரூட்டுகின்றன. மாறாக அவர்களை கண்டித்ததாக சரித்திரமே இல்லை.

**விஜயகாந்த் பதவிக்கு வந்தால் நல்லது நடக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.**

– ராஜமன்னார், விழுப்புரம்.

ஆமாம். நாயக்கர்களின் பொற்கால சகாப்தம் துவக்கம் பெறும்! ஏ..தாழ்ந்த தமிழகமே என்று ஒப்பாரி வைக்கும் நிலைக்குச் செல்வார்கள் மக்கள். தேவர் ஆட்சி, வன்னியர் அரசியல் இவற்றிற்கு ஈடுகொடுக்கும் வகையில் நாயக்கர் எழுச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதைத்தான் விஜயகாந்த் என்னும் புதுச்சரக்கு வெளிப்படுத்துகிறது. விரைவில் கவுண்டர்களும் தங்கள் சாதி உணர்வை வெளிப்படுத்துவார்கள்.

**அயோத்திதாசர், ரெட்டமலை சீனிவாசன், எம்.சி. ராஜா போன்றவர்களுக்குப் பிறகு தலித் அரசியலில் வெற்றிடம் ஏற்பட்டது எதனால்?**

– புல்லையன், ஆரணி.

இதற்கு மிக முக்கியமான காரணங்கள் இரண்டு. முதல் காரணம், திராவிட இயக்கம் என்ற பிற்பட்ட சாதிகளின் கூட்டியக்கம். இது தலித் இயக்கங்களின் கருத்துக்களைத் தனதாக்கிக் கொண்டு அவர்களை இருட்டடிப்பு செய்தது.

இரண்டாவது, கல்வி ஆளுமை, சீரிய சிந்தனை என்ற தளங்களிலிருந்து நழுவி, தேர்தல் பாதையைத் தேர்ந்தெடுத்து தமது மக்களையே சுரண்ட ஆரம்பித்த தலைவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

■ கோ. ரகுபதி

# அம்பட்டன் - அன்றைய மருத்துவர்

தமிழ்ச் சமூகத்தில் முடிவெட்டுதல் சவரம் செய்தல் ஆகிய பணிகளைச் செய்பவர்கள் யார்? என்றதொரு கேள்வியைக் கேட்டால் உடனடியாக நாவிதன், அம்பட்டன் என்று பதில் வரும். சரி, அடுத்த கேள்விகளை நாம் இப்படி கேட்போம். மனித சமூகம் தான் தோன்றிய திலிருந்தே முடிவெட்டிக்கொண்டும், முகச்சவரம் செய்து கொண்டும்தான் வாழ்ந்ததா? தமிழ்ச் சமூகத்தினர் எந்தக் காலத்திலிருந்து முடிவெட்டிக் கொள்ளவும் சவரம் செய்து கொள்ளவும் ஆரம்பித்தனர்? தமிழ்ச் சமூகத்தினர் ஏதோ ஒரு கால கட்டத்தில்தான் முடி வெட்டிக் கொள்ளவும் சவரம் செய்யவும் ஆரம்பித்தனர் என்றால், அதற்கு முன்னர் இன்று அப்பணியைச் செய்து வரும் நாவிதர்களும், அம்பட்டர்களும் என்ன வேலை செய்தனர்? இதற்கான பதில்களைத் தேடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### முடிவெட்டுதல் தமிழ்ப் பண்பாடல்ல

தமிழ்ச் சமூக அமைப்பில் நாவிதர்களின்/அம்பட்டர்களின் சமூகப் பொருளாதார பின்னணியை அடிப்படையாகக்கொண்டு அறிஞர்கள் பலரும் அவர்களைக் குறித்து பதிவு செய்துள்ளனர். இதில் எட்கர் தர்ட்சன், நெல்சன், ராமசுவாமி சாஸ்திரி, மனோகரன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் அனைவரும் "அம்பட்டர்கள் எனப்படுவோர் தமிழ்ச் சமூகத்தில் 'சவரம்' செய்யும் பிரிவினர்" என்று கூறியுள்ளனர். மேலும் அவர்கள், அம்பட்டர்கள் 'மருத்துவத் தொழிலும்' செய்தனர் என்று பதிவு செய்துள்ளனர். 'மருத்துவத் தொழில்', 'மருத்துவத் தொழிலும்' என்ற வார்த்தைகளுக்கு இடையில் பெருத்த வேறுபாடுகள் இருப்பதினை நாம் கவனிக்க வேண்டும். 'மருத்துவத் தொழிலும்' என்று கூறுவதானது அத் தொழிலினை இரண்டாம் நிலைக்குத் தள்ளுவதாகும். மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் நாவிதர்களின் முதன்மைத் தொழிலாக சவரம் செய்தலையும், மருத்துவம் செய்ததினை இரண்டாம் நிலையிலும் வைத்துப் பார்த்தனர். இவர்களிலிருந்து வேறுபட்டு, தொ. பரமசிவன், பக்தவத்சல பாரதி ஆகியோர் "தமிழகத்தில் பார்ப்பனர்களின் வருகைக்கு முன்னர் நாவிதர்களுக்கு சமூகத்தில் சடங்கு செய்வதில் முக்கியப் பங்கிருந்ததாக" மட்டுமே பதிவு செய்துள்ளனர். மேலும் தொ. பரமசிவன் நாவிதர்களை 'மருத்துவர்கள் (முடிதிருத்துவோர்)' என்று அடையாளப்படுத்தியுள்ளார் (துரும்பர் எழுச்சி மலர், பக்.66). இந்த அறிஞர்களின் எழுத்துகளிலிருந்து, மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில்களைத் தேடுவது இயலாது. எனவே வரலாற்றைப் புரட்டி உண்மைகளைக் காண முயற்சிப்போம்.

வி. கனகசபை எழுதிய 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' என்ற நூலில் தமிழர்களிடத்தில் தலைமுடியினை கத்தரித்துக் கொள்ளும் பண்பாடு இருந்ததில்லை என்கிறார். அதற்கு அவர் "தூய தனித் தமிழரிடையே... அவர்கள் தலைமயிரை வெட்டுவதில்லை. அதை இயற்கை வளர்ச்சியளவுக்கே வளரவிட்டனர். அல்லது ஒரு புறமாக அதில் ஒரு பெரிய முடியிட்டுக் கட்டினர். இந்தத் தலையின் முடியைக் கட்ட உயர் வகுப்பினர் பளபளப்பான நீலமணிகள் கோத்த நிறமார்ந்த இழைகளைப் பயன்படுத்தினர்" என்று விளக்கம் தருகிறார். மேலும் "பார்ப்பனர்கள் தம் தலைமயிரைக் குறுகக் கத்தரித்தனர். ஆனால் தலையுச்சியில் ஒரு குடுமியை விட்டு வைத்தனர். ஒரு தமிழ்ப் புலவர் குதிரையின் தலையில் உள்ள குறுமயிர்க்குப் பார்ப்பன இளைஞர் தலைமயிரை உவமை கூறியுள்ளார்" என்கிறார். மயிலை சீனி. வேங்கிடசாமி தலைமுடியினை கத்திரித்துக் கொள்ளும் வழக்கம் இல்லை என்பதற்கு கொடுத்துள்ள விளக்கங்களை இங்கு காண்போம்.

> "காம்பறத் தலைசிரைத்(து) உன கடைத்தலையிருந்து
> வாழும்
> சோம்பரை உகத்தி போலும் சூழ்பனல்
> அரங்கத்தானே"

என்பது தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருமாலை 38-ஆம் பாசுரம். இதில் 'தலை சிரைத்து' என்பதற்கு பெரியவாச்சான் பிள்ளை "தலைமயிராகிறது தான் அபிமான வேரதுவிறே கோமுற்றவர் (?) தண்டிக்குமிடத்தில் தலையைச் சிரைக்கிறது" என்று வியாக்கியானம் அளிக்கிறார்.

வி. கனகசபை, மயிலை சீனி. வேங்கிடசாமி ஆகியோர் தமிழ்ச் சமூகத்தினரிடையே முடிவெட்டிக் கொள்கின்ற பண்பாடு இருந்திருக்கவில்லை என்பதினை மிகத் தெளிவாக நிறுவியுள்ளனர். எனவே இதற்கு மேல் அதனை விளக்க வேண்டிய அவசியம் நமக்கு இல்லை.

### முகச்சவரம் பார்ப்பனியமாக்கலின் விளைவு

இனி தமிழர்களிடத்தில் முகச்சவரம் செய்து கொள்ளும் வழமை இருந்ததா? என்பதினை நோக்குவோம். நமக்கு முகச் சவரம் குறித்த வரலாற்றுக் குறிப்புகள் குறிப்பிடத் தகுந்த அளவுக்குக் கிடைக்கவில்லை. எனினும் 'பார்ப்பனியமாக்கலை' மேற்கொண்ட சாதிகள் முகச்சவரம் செய்யும் பண்பாட்டினை புதிதாகக் கடைப்பிடித்துள்ளனர். குறிப்பாக, தமிழகத்தில் கம்மாளர் சாதியினர் தங்களின் சமூக மேல்நிலையாக்கத்தின் போது அவர்கள் பார்ப்பனர்களைப்போல் முகச்சவரம் செய்ததாக பேட் என்னும் ஆங்கிலேயர் குறிப்பிட்டுள்ளார். முகச்சவரம் குறித்த பதிவு இது ஒன்று மட்டுமே நம்மிடம் இருப்பினும், அது வலுவான ஆதாரமாகும். அதாவது, சமூகக் கட்டமைப்பில் பார்ப்பனர்களுக்குச் சமமாக தானும் வளர வேண்டும் என்று கருதிய சாதிகள் பார்ப்பனர்களின் பண்பாடுகளைப் பின்பற்றின. அதில் ஒன்றுதான் கம்மாளர்கள் முகச்சவரம் செய்து கொண்டது. மேலும் ஹட்டன், மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது எடுத்த புகைப்படங்களை அந்நூலில் இணைத்துள்ளார். இதில் காணப்படும் ஆண்களின் புகைப்படங்களில் பலரும் தலைமயிரும் முகச்சவரமும் செய்திருக்க

www.padippakam.com

வில்லை. (இன்றும் பழங்குடியினர்களாக வாழும், குறிப்பாக நரிக்குறவர்களிடையே தலைமயிரை வெட்டுதல் மற்றும் முகம் மழித்தலை அரிதாகவே காண்கிறோம்.) ஹட்டன் சாதி குறித்து எழுதிய தனது மற்றொரு நூலில், தாழ்த்தப்பட்ட மக்களில் ஆண்கள் முடி வெட்டிக் கொள்ளக் கூடாது என்று ராமநாதபுரம் கள்ளர்கள் 1930-களில் தடைவிதித்ததாக பதிவு செய்துள்ளார். இந்த வரலாற்று ஆவணங்களிலிருந்து நாம் தமிழ்ச் சமூகத்தினர் ஆரம்பக் காலங்களில் முடிவெட்டியதோ, சவரம் செய்ததோ கிடையாது என்பதினை அறியலாம்.

ஆனால் பார்ப்பனர்களும், ராமநாதபுரம் கள்ளர்களும் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றனர். இது ஏன்? என்ற கேள்வி இங்கு எழுகிறது. பார்ப்பனர்களின் பல பண்பாட்டு நடவடிக்கைகள் அவர்களைப் பிறரிடமிருந்து வேறுபடுத்துகிறது. அவர்கள் தங்களின் பண்பாடுகளைக் கைவிடுவது அல்லது புதிய பண்பாடுகளை உருவாக்கி அதனைப் பின்பற்றுவது குறித்து பலரும் விவாதித்துள்ளனர். குறிப்பாக அவர்களின் 'புலால்' உண்ணும் பழக்கம் குறித்து டி.என். ஜா 'பசுவின் புனிதம்' என்ற நூலில் பார்ப்பனர்கள் அனைத்து விலங்குகளையும் பலியிட்டு உண்டதையும், பின்னர் சமூக ஆதிக்கத்திற்காக அவ்வுணவுப் பண்பாட்டினை கைவிட்டது குறித்தும் அவர் விவாதித்திருப்பதினை இங்கு நினைவுபடுத்திக் கொள்வோம்.

கனகசபையின் கூற்றிலிருந்து பார்ப்பனர்கள் தமிழ்ச் சமூகத்தின் மீது தங்களின் சமூக மேலாதிக்கத்தினை நிறுவுவதற்காக அவர்கள் தங்களின் தலைமயிரைக் கத்திரித்திருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம். ராமநாதபுரம் பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் கள்ளர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் முடிதிருத்திக் கொள்ளக்கூடாது என்று விதித்த தடை கள்ளர்களின் இரண்டு விதமான நோக்கங்களை வெளிப்படுத்துகிறது. 1) தன்னிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களை வேறுபடுத்திப் பார்ப்பது, 2) தாழ்த்தப்பட்ட மக்கள்மீது பண்பாட்டு ரீதியாக ஆதிக்கம் செலுத்தி அவர்களைத் தங்களுக்குக் கீழானவர்களாகவே வைத்திருப்பது. 1931-இல் இத்தடையினை அவர்கள் விதித்திருப்பது நமக்கு பிறிதொரு வரலாற்றுத் தகவலைத் தருகிறது. அதாவது கள்ளர்கள் 1930-களுக்கு முன்பிருந்துதான் முடிவெட்டிக்கொள்ள ஆரம்பித்துள்ளனர் என்பது இதிலிருந்து வெளிப்படுகிறது. எனவே தமிழ்ச் சமூகத்தில் முடி வெட்டுவதும், முகம் மழிப்பதும் மிகப் பழங்காலத்தில் இருந்திருக்கவில்லை என்பது தெளிவாகிறது. அவர்கள் எப்போது அப்பண்பாட்டினை கடைப்பிடித்தனர் என்பதினைச் சரியாக வரையறுத்துக் கூற முடியவில்லை என்றாலும்கூட, பார்ப்பனர், கள்ளர், கம்மாளர் ஆகிய சாதிகளின் தன்னிலிருந்து பிறரை வேறுபடுத்தல், தன்னை உயர்ந்தவனாகக் காட்டிக்கொள்ளுதல் மற்றும் பார்ப்பனியமயமாக்கல் செயல்பாடுகளிலிருந்துதான் முடிவெட்டுதலும், முகம் மழிப்பதும் தோன்றியிருக்கிறது என்றும், அக்காலத்தில்தான் அப்பணியினைச் செய்வதற்கான சாதிகளும் 'உருவாக்கப்பட்டிருக்கின்றன' என்றும் வரையறுக்கலாம். எனவே நாவிதர், அம்பட்டர் என்றழைக்கப்படும் மக்கள் பிரிவினரின் பரம்பரைத் தொழில் முடிதிருத்துதல், சவரம் செய்தல் என்று மேல்நாட்டு அறிஞர்களும், இந்திய அறிஞர்களும் அடையாளப்படுத்தியிருப்பது அறிந்தோ அறியாமலோ நடந்த மிகப்பெரும் வரலாற்றுப் பிழையாகும். எனவே இனி நாம் இவ்வரலாற்றுப் பிழையினை நேர் செய்வோம்.

■■

***மக்களுக்கு உண்டாகும் நோய்களை நாங்கள் அதிக பொருட்செலவின்றி மிக எளிமையாக குணப்படுத்தி வந்தோம். ஆனால் ஆன்மீகவாதிகள் மக்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு கடவுள், சாஸ்திரம் என்று கூறி அதற்கு அதிகப் பணமும் மக்களிடமிருந்து வசூலித்தனர்.***

■■

*மருத்துவர் சவரத் தொழிலாளியான கதை*

அம்பட்டர் தோற்றம் குறித்த புராணக் கதை ஒன்று உள்ளது. பார்ப்பன ஆணுக்கும் வைசியப் பெண்ணுக்கும் பிறந்த மகனே 'அம்பஸ்தா' என்று மநு கூறியுள்ளார். ஆனால் களத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது நாவிதர்கள் பலரும் இக்கதையினை அறிந்திருக்கவில்லை. இந்து ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த பெண்களும்-ஆண்களும் இக்கதையினை தெரிந்திருக்கவில்லை. ஆனால் அவர்கள் சவரத் தொழிலுக்குள் திணிக்கப்பட்ட வாய்மொழி வரலாற்றுத் தகவலை கள ஆய்வின்போது பகிர்ந்து கொண்டனர். "மனிதனுக்கு வெட்டுக் காயம் ஏற்பட்டாலோ அல்லது புண் ஏற்பட்டாலோ அந்த வெட்டுக் காயம் அல்லது புண் குணமாவதற்கு அதனைச் சுற்றியிருக்கும் உரோமங்களை அகற்றிவிட்டு பின்னர் அதில் மருந்திட்டு வெகு விரைவாக குணப்படுத்தினோம். இந்த முறை பிற்காலத்தில் எங்களை சவரத் தொழிலுக்குள் தள்ளியது" என்று அவர்கள் கூறினர்.

ஏன் அவர்களை (அம்பட்டர், நாவிதர்) மட்டும் சவரத் தொழிலுக்குள் புகுத்த வேண்டும்? இதற்கான பதிலை சொக்கலிங்கம் (ப.74) கூறிய வாய்மொழி வரலாற்றிலிருந்து அறிந்துகொள்வோம். "எங்களுக்கும் (மருத்துவர்கள்) ஆன்மீகவாதிகளுக்கும் போட்டி அக்காலத்தில் நிலவியது. மக்களுக்கு உண்டாகும் நோய்களை நாங்கள் அதிக பொருட்செலவின்றி மிக எளிமையாக குணப்படுத்தி வந்தோம். ஆனால் ஆன்மீகவாதிகள் மக்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு கடவுள், சாஸ்திரம் என்று கூறி அதற்கு அதிகப் பணமும் மக்களிடமிருந்து வசூலித்தனர். நாங்கள் செய்யும் மருத்துவ முறை ஆன்மீகவாதிகளின் மருத்துவ முறைக்கு நேரெதிராக இருந்ததோடு மட்டுமின்றி, அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்தியது. மக்கள் ஆன்மீகவாதிகளிடம் மருத்துவம் செய்வதினை குறைத்துக்



படிப்பகம்

www.padippakam.com

OO

**எழுதப்பட்ட மற்றும் வாய்மொழி வரலாற்று ஆவணங்களை முன்வைத்து விவாதித்ததிலிருந்து, நாவிதன், அம்பட்டன் என்று அழைக்கப்படும் மக்கள் தமிழ்ச் சமூகத்தில் (உலக அளவிலும்) அன்றைய காலத்தில் மண்சார்ந்த மருத்துவத்தினை மக்களுக்காக பயன்படுத்தினர் .**

OO

கொண்டதே இதற்குக் காரணமாகும். இதனால் ஆன்மீகவாதிகளுக்கு எங்கள் மீது தீராத ஆத்திரம் ஏற்பட்டது. எங்களை ஒழிக்கத் திட்டமிட்டனர். இச்சமயத்தில் அரசன் ஒருவனுக்கு தீராத நோய் ஏற்பட்டது. நாங்கள் மருத்துவம் செய்து வந்தோம். ஆனால் ஆன்மீகவாதிகள் அரசனை சந்தித்து சில மந்திரங்களை உச்சரித்து வந்தால் உங்கள் நோய் குணமாகும் என்றனர். அரசன் அதனையும் செய்தார். எங்களின் சித்த மருந்து மெதுவாக வேலை செய்ய ஆரம்பித்தது. இக்காலத்தில் அவர் மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார். அவரின் நோய் குணமானது. இதற்குக் காரணம் ஆன்மீகவாதிகளின் மந்திரம் தான் என்று நம்பி, ஆன்மீகவாதிகளின் வேண்டுகோளை ஏற்று அரசன் எங்களை (மருத்துவர்கள்) எண்ணெய் பாத்திரத்தில் போட்டு பொசுக்கினான். கழுவிலேற்றிக் கொன்றான்" என்றார் அவர்.

நமக்கு இவ்விடத்தில் அந்த ஆன்மீகவாதிகள் யார்? என்ற கேள்வி எழுவது இயல்பே. தமிழ்ச் சமூகத்தில் சமணர்களை சைவர்களும், வைணவர்களும் இணைந்து கழுவிலேற்றியும், எண்ணெய் பாத்திரத்தில் போட்டும் கொன்றதுவும் வரலாறு. இக்காலத்தில் ஒரு அரசனுக்கு நோய் ஏற்பட்டபோது சொக்கலிங்கம் மேற்கூறிய சம்பவம் அப்போதிருந்த மருத்துவச் சமுதாயத்துக்கு நடந்தது. சமணர்கள் மருத்துவக் கண்டுபிடிப்பிற்கும், அதன் வளர்ச்சிக்கும் அரும்பாடு பட்டனர் என்பதினையும் இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்வோம். இந்த வரலாற்றுத் தகவல்களோடு சொக்கலிங்கம் கூறிய வாய்மொழி வரலாற்றினை ஒப்பிட்டுப் பார்க்கையில் அன்று மருத்துவர்கள் சமண மதத்தில் இணைந்திருந்ததும், மக்களுக்கு வைத்தியம் செய்ததும் வெளிப்படுகிறது. சைவர்களும் வைணவர்களும் இணைந்து சமணர்களை கொடூரமான முறையில் கொன்று குவித்தபோது மருத்துவச் சமூகமும் கொல்லப்பட்டிருப்பதாக் கருதுவோம். இதற்குப் பின்னரே சவரத் தொழில் மருத்துவர்கள் மீது திணிக்கப்பட்டதாக சொக்கலிங்கம் கூறினார். (சமணர்களின் படுகொலையின்போது பவுத்தர்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். அவ்வரலாறு தமிழ்ச் சூழலில் பேசப்படவில்லை. நாவிதச் சமூகத்தைச் சேர்ந்த உபாலி என்பவர் பவுத்தச் சங்கத்திற்கு முன்னணி தலைவராக இருந்திருக்கிறார். எனவே. நாவிதர்கள் (மருத்துவர்கள்) பவுத்தத்தோடும் இணைந்திருக்கலாம்.) நாம் கட்டுரையின் ஆரம்பத்திலிருந்து விவாதித்ததின் அடிப்படையில் நாவிதன், அம்பட்டன் எனப்படும் மக்கட் பிரிவிர் அன்றையக் காலத்தில் அவர்களே மருத்துவர்களாகவும், புதிய புதிய மருத்துவ முறைகளை கண்டு பிடித்தவர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்று கருதலாம்.

**மருத்துவர் - உலக வரலாறு**

உலக அளவில் மருத்துவம் செய்த மக்களே பின்னர் சவரத் தொழிலுக்குள் புகுத்தப்பட்டிருக்கின்றனர். தமிழ்ச் சமூகத்தில் அம்பட்டன், நாவிதன் எனப்படும் மக்களை 'பார்பர்' என்றும் அழைப்பதுண்டு. பார்பர் என்ற சொல் லத்தின் சொல்லான 'பார்பா' என்ற வார்த்தையிலிருந்து உருவானதாகும். இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளில் பாரம்பரிய மருத்துவத்தினைச் செய்து வந்த பார்பர் சமூகத்தினர் அங்கு தோற்று விக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் பேராசிரியர்களாகப் பணியாற்றினர். பின்னர் பிரான்சில் 1743-ஆம் ஆண்டிலும், இங்கிலாந்தில் 1800-ஆம் ஆண்டிலும் அவர்கள் மருத்துவத்துறையிலிருந்து முற்றாக விலக்கப்பட்டனர் என்பது வருத்தத்திற்குரிய வரலாறு. இவர்களைப் பற்றி எழுதிய அறிஞர்களும் 'பார்பர்கள் சவரம் செய்பவர்கள்' என்று தான் பதிவு செய்துள்ளனர். அவர்கள் மருத்துவம் செய்ததினை இரண்டாம் நிலைப்படுத்தியுள்ளனர். மருத்துவர்களை சவரக்காரர்கள் என்று அழைப்பதில் வெள்ளைக்கார மூளையும் இந்திய மூளையும் ஒன்றாகவே செயல்பட்டுள்ளது கேள்விக்குரியதாகவே இருக்கிறது.

**நான்தான் மருத்துவன்**

எழுதப்பட்ட மற்றும் வாய்மொழி வரலாற்று ஆவணங்களை முன்வைத்து விவாதித்ததிலிருந்து நாம் இன்று சவரத் தொழில் செய்யும் நாவிதன், அம்பட்டன் என்று அழைக்கப்படும் மக்கள், தமிழ்ச் சமூகத்தில் (உலக அளவிலும்) அன்றைய காலத்தில் மண்சார்ந்த மருத்துவத்தினை மக்களுக்காக பயன்படுத்தினர் என்று உறுதி செய்யலாம். பண்டைய வரலாற்றறிஞரான டிடி கோசாம்பி '.......போரில் அல்லது நோயில் மூக்கிழந்தோருக்கு மாற்று மூக்குகள் வைத்து செய்யப்பட்ட ஒட்டுறுப்பு அறுவை முறை, சமூகத்தினர் சற்று அருவருப்புடன் நோக்கிய நாவிதரின் கண்டுபிடிப்பே' என்று கூறியுள்ளார். இன்று பல சாதிகளுள் சிலர் சித்த மருத்துவர்களாக இருப்பினும், அம்பட்டன், நாவிதன் என்று கேவலமாக-இழிவாக நடத்தப்படும்-ஒடுக்கப்படும் மக்கள் கூட்டமே அன்று மருத்துவம் செய்தனர். புதிய புதிய மருத்துவ முறைகளைக் கண்டு பிடித்தனர். அவர்களின் பெண்டிரே அன்றைய காலம் முதல் இன்றைய காலத்தில் சுமார் 1960 அல்லது 1970-கள் வரை பிரசவம் பார்த்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே இறுதியாக இன்று அம்பட்டன், நாவிதன் என்று அழைக்கப்படும் சமூகமே 'அன்றைய மருத்துவர்கள்' என்று மீண்டும் உறுதிபடக் கூறுவோம். ◆


படிப்பகம்

www.padippakam.com



சந்திரன்

# கணிதம் நம் உடைமை

The best way to understand the strengths of a philosophy is to attempt to refute it. இந்த வரிகள், தத்துவத்தின் வலிமையை உணர்ந்து கொள்ள அதை மறுதலிக்க முயற்சிப்பதே மிகச் சிறந்த வழி என்ற கருத்தைத் தருகின்றன. கணிதம் பொரும்பான்மையான நிரூபணங்களுக்கு இவ் வகையான வழிமுறையை கைக்கொள்கிறது. இவ்வழி முறைக்கு "contra positive" எனப் பெயர். உண்மையின் எதிர் மறையின் எதிர்மறை உண்மையாகவே இருக்கும். இங்கு உண்மை வெளிப்பட உண்மையும், எதிர்மறையும் - அதன் எதிர்மறையும் மிகுந்த அசல் குணங்களால் கட்டமைக்கப் பட்டிருக்க வேண்டும். பொய் பேசாதே, கொலை செய் யாதே, ...... என்ற பஞ்சசீலத்திற்கும் உண்மை பேசு, அன்பு காட்டு என்ற நேர் கருத்திற்கும் மாறுபாடு தோன்றாமை அங்கு கட்டமைக்கப்படும் பலமிக்க நம்பிக்கைத் தத்துவமே.

நான் சில நேரங்களில் அமெரிக்க உதயத்திற்குக் கூட முரண்வாதம் செய்துள்ளேன். தோன்றிய உண்மை களை என் ஐயம் என்ற பெயரில் மறுதலித்திருக்கிறேன். அதன் பலனாய் மிகச் சிறந்த வகையில் தத்துவத்தின் வலிமையை உணர்ந்து கொண்டுள்ளேன்.

கணங்கள் என்ற சொல் நம் கணிதப் பாடத்தின் துவக்கம். கணங்களை முடிவுறு கணம், முடிவுறா கணம், வெற்று கணம் என்று வகைப்படுத்துகின்றனர். A = {1,2,3,.....} என்பதை முடிவுறு கணமாகவும், B = {1,2,3,4,5} என்பதை முடிவுறு கணமாகவும் கணிதம் வரையறை செய்கிறது. C = {அ, ஆ, இ, .....} என்பது ஒரு முடிவுறு கணமாகும். காரணம் C-யில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை 12. உயிர், எழுத்துக்களின் கணம் என்று விவரணம் செய்யப்பட்டதன் மொத்த எழுத்துக்களின் தொகை 12 என்பதால் இது முடிவுறு கணமாகிறது. இங்கு கணம் என்பதன் வரயறையை காணும்போது D = {2,4,6, ....}, E = {10, 25, 30, .....} என்பன இரண் டும் கணம் என்ற வரையறையை நிறைவு செய்கிறது.

F = {10, 25, 30,.....} என்பது ஒரு கணமல்ல. காரணம் F-இல் உள்ள உறுப்புகளைப் பற்றிய முழுமை யான வரையறை நிறைவடையவில்லை. உதாரணமாக F-இல் 50 என்ற எண் உள்ளதா என்ற கேள்விக்கு, இருக்கும் அல்லது இல்லை என்ற சரியான பதிலை நம்மால் பெற இயலாது. அதாவது ஓர் உறுப்பு அங்கு உண்டா? அல்லது இல்லையா? என்ற வினாவிற்கு நம்மால் விடை தர இயலுமாயின் அது கணம் எனப்படுகிறது. இதன் அடிப் படையில் F ஒரு கணம் அல்ல. இதை கூர்மைப்படுத்தும் போது ஏதுமற்றதும் ஒரு கணம் என்ற வரையறை கிடைக் கிறது. G = { }. இதை வெற்று கணம் என்கிறோம். G-யில் 10 என்ற எண் உண்டா? அல்லது இல்லையா என்ற வினா விற்கு இல்லை என்ற பதிலை நம்மால் தர இயலுகிறது. எனவே G என்பது ஒரு கணம். G-யில் ஒரு உறுப்பு கூட இல்லை. ஆனாலும் அது கணம் எனப்படுகிறது.

G-யில் 5 என்ற உறுப்பு இல்லை, G-யில் 6 என்ற உறுப்பு இல்லை, . . . . . என்ற விவரம் நீண்டுகொண்டே செல்கிறது. G-யின் விவரம் நன்கு வரையறுக்கப்பட்டுள் ளது. G-யில் "உறுப்புகளே இல்லை" என்று விவரம் "இருப்பாய்" உள்ளது.

இருப்பற்ற நிலையும் ஓர் இருப்புதான் என்பது சூன்யவாதத்தின் (Nihilism) வரையறை. வெற்று கணம் என்பது ஏதுமற்ற கணம் என்ற வரையறை சூன்யவாதத் தின் பொருளை விளக்குகிறது. வெற்று கணம் என்பதை ஏதும் அற்ற கணமாக நம்மால் சிந்தனையில் இருத்தி காண இயலுகிறது. இந்த ஏதும் அற்ற நிலையை "இருப்பாக" நம்மால் உணர எளிதாக முடிகிறது. இல்லாத நிலையும் ஓர் இருப்புதான் என்பது சூன்யவாதம்-பவுத்தத்தின் மிக அடிப்படைத் தத்துவம்.

5 + 0 = 5 என்ற விவரணத்தில் 5, +, 0, = என்ற நான்கு குறிகள் பயன்பட்டுள்ளன. 5 என்ற எண் பூஜ்ஜியம் என்ற எண்ணோடு கூட்டப்படும்போது 5 என்னை விடை யாகத் தருகிறது. இங்கு பூஜ்ஜியம் என்ற எண்ணிற்குப் பதிலாக வேறு எந்த எண்ணாக இருந்தாலும் விடை மாறி கிடைத்திருக்கும். (உ-ம்) 5 + 3 = 8. மாறாக பூஜ்ஜியம் என்ற எண் அங்கு செயல்பட்டதால் 5-ஐ விடையாகத் தந்துள்ளது. கூட்டல் என்ற செயலிக்குப் பிறகும் ஓர் எண்ணை திருப்பி தர பூஜ்ஜியத்தால் இயலுகிறது என்றால் பூஜ்ஜியம் அங்கு "இருப்பற்ற நிலையில் தன் இருப்பை வெளிக் கொணர்ந்துள்ளது." பவுத்த தத்துவங்கள், மாரு கோட்பாடு என்று எதையும் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் எப்பொருளும் முழுமையாக அழிவடைவதில்லை என்பதைப் பற்றியே செயல் ஆக்கம் பெற்றுள்ளது.

கடவுள் இல்லை என்ற சொற்றொடர் கூட கடவு ளின் இருப்பை மறைமுகமாக பாதுகாப்பதாக கம்யூனிஸ் டுகள் குறிப்பிடுகின்றனர். பவுத்தத்தில் உண்மை & பொய் என்ற இரண்டு நிலைகளே உள்ளன. பவுத்தம் கடவுள் என்பது பொய் என்கிறது. கடவுள் இல்லையென்றால் அதன் இருப்பு நிலை நியாயப்பட்டுவிடும் என்பதில் புத்தர் தெளிவாக இருந்தார்.

கடவுட்கோட்பாடு உண்மைக்குப் புறம்பானது என்று புத்தர் அறிவித்தார். கடவுட் கோட்பாடு பகுத்தறி விற்கு எதிரானது என்று புத்தர் அறிவித்தார்.

பார்ப்பனியம் மாயாவாதத்தை ஏற்கிறது. இங்கு மாயை என்பது கற்பனைவாதமாக கொள்ளப்படவில்லை. மனிதனின் அறிவில் புலப்படும் உரு, ஒலி, ஒளி, உணர், நாற் றம் என்பன மாயை என பார்ப்பனியம் குறிப்பிடுகிறது.

பவுத்தம் சூன்ய வாதத்தை வலியுறுத்துகிறது. உரு, ஒலி, ஒளி, உணர், நாற்றம் என்பன உண்மை. அவைகளின் சிதைவும், மீள் உருவாக்கமும், மறு மீள் உருவாக்கமும் உயிர்களின் வளர்ச்சி என்பதை பவுத்தம் அடிப்படை யாகக் கொண்டுள்ளது.

மாயாவாதம் கடவுட்கோட்பாட்டை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. சூன்யவாதம் அறிவைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. சூன்யம், சுழி என் பன பூஜ்ஜியத்தைக் குறிக்க பயன்படுத்தும் சொற்கள் என்பதால் சூன்யவாதம் கணிதத்திற்கு கிடைத்த கொடை யாக நவீன இயற்கணிதம் கொள்கிறது.

சுழி, சூன்யவாதம் என்பதனுடன் தொடர்பு கொண் டது என்பது, 0+1=1, 0+2=2, 0+3=3, ...... என்ற வகையில் எண் கள் சுழியின் மீது துவங்கி தொடர்வதை பவுத்தம் அணுகு வதை வருங்கட்டுரையில் காண்போம்.

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# முகத்தில் முகம்

நாவிதன், அம்பட்டன் எனப்படும் சாதியினர் தங்களை தலித்துகளுக்கு மேலான வர்கள் என்று நினைத்த வரலாறுகள் உண்டு. இன்று அச்சாதியில் பல முதியவர்கள் அக் கருத்து தவறு என்று உணர்ந்து வருகின்றனர். இதற்குக் காரணம் இவர்கள் கிராமங்களில் பிற்படுத்தப்பட்ட சாதியினரால் ஒடுக்கப்படு வதே ஆகும்.

சாதி ஒழிப்பு இயக்கத்தில் இவர்கள் தலித்துகளோடு இணைக்கப்பட வேண்டிய வர்கள் என்று கருதுகிறேன். புதிய கோடாங்கி இதழில் வெளியிடுங்கள்.

**- கோ. ரகுபதி, திருநெல்வேலி.**

செப்டம்பர் இதழ் பார்த்தேன். ஈஸ்டர்ராஜின் முகப்பு ஓவியம் அருமை. தலையங்கம் அடுத்த இதழ் முதல் கொண்டு பெண்கள் இயக்கத்திற்காக பக்கங்களை ஒதுக்குவதாக கூறுகிறது. சற்று தாமதமான செயல்பாடு எனினும் வரவேற்கத் தகுந்த முடிவு. கோடாங்கி ஆரம்ப இதழ்கள் ஐந்து தான் நான் படித்தது. பின்னர் நண்பர் ஹரி கிருஷ்ணன் எனக்கு சமீபத்திய இதழ்கள் சில வற்றை வாசிக்கக் கொடுத்து உதவினார். இதழில் களப்பணிகள்தான் சீரிய முயற்சியாக எனக்குப்படுகிறது. இந்த இதழில் ஹரிகிருஷ் ணன் சிறுகதை கூத்து மிக சிறப்பாக வந்திருக் கிறது. ஒரு மிகப் பெரிய நாவலுக்கான விசயங் கள் சிறுகதைக்குள் விரவிக் கிடக்கின்றன. இந்த மாதிரியான கிராமிய நடை ஒழுங்கு வேறு எவருக்கும் வாய்க்கவில்லை என்று தோன்றுகிறது. தனித்துவம்தானே கலைஞர் களை வெளி உலகிற்கு கொண்டு வருகிறது.

கேள்வி பதில் பகுதியில் "தலித்துகள் பறை அடிக்கக் கூடாது" என்ற பிரச்சாரத் தினால் விட்டுவிட்டதாக பிருதிவிராஜன் அதுபற்றி கேட்டிருந்தார். அது சம்பந்தமான கட்டுரை வரும் என முனிமா கூறி விட்டார். எங்கள் பகுதியில் நண்பர் ஒருவர் தம் பகுதி யில் இவ்விதம் கூறி அவர்களும் விட்டு விட் டார்கள். என்றாலும் "இவரிடமே காசி இல் லிங்களே" எனக் கூறி ஒரு பகுதியில் பறை அடிக்க ஒத்துக்கொண்டு சென்று விட்டார் கள். அவர்களுக்கு ஒரு வேலை கூட நம்மால் ஏற்பாடு பண்ணித் தர முடியாத சூழலில், வெறுமனே பேசிக்கொண்டு இருப்பதுகூட தப்புதான் என்கிறார்.

அன்பாதவன் சிறுகதை தொகுப்புக்கு பரிக்கல் சந்திரன் விமர்சனம் விலாவாரியாக இருந்தது. அன்பாதவன் தன் சமூகத்தினுள்ளேயே கருக்களைப் பெற்று சமூகத்தினுள்ளேயே கதை களாக்குவது விளங்குகிறது. முகத்தில் முகம் பகுதி குறுங்கடிதங்களாக இருக்கின்றன. ஓவி யங்களை மேலும் இடம்பெறச் செய்யுங்கள்.

**- வா.மு. கோமு, வாய்ப்பாடி.**

"பூர்வ குடிகள் எப்படி அடிமையா னார்கள்" என்ற நல்லதொரு ஆய்வுக் கட்டுரை யில் சில பிரச்சினைப்பாடுகளுண்டு.

பூர்வீகம், மூலம் origine, மண்ணின் மைந் தர் போன்ற சொல்லாடல்களைக் கையா ளும்போது இதன் எதிர்க் கதையாடல்கள் - கலப்பு, வந்தேறு குடிகள், கள்ளத் தோணிகள், immigre etranger போன்ற நாசி, தேசிய, பாசிச மனோபாவங்களிலிருந்து ஊற்றெடுத்து வரவும் வாய்ப்புண்டு. கத்தியை மேசையிற் குத்திவிட்டுக் கதைப்பதைப்போல உரையாடல் தொடங்கிய வுடனேயே முடிந்தும் விடுகிறது.

இரண்டு நூற்றாண்டுகளான இலங்கை மலையக மக்கள் பிரசாவுரிமையின்றி இன்று வரை அந்நியர்களாக நோக்கப்படுவதும், இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்ட தும், ஆயிரம் ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட யாழ்ப் பாண முஸ்லிம் மக்கள் ஓரிரவில் விரட்டப் பட்டதும் இத்தகைய தாய் மண் - தந்தையர் நாடு பரப்புரை களின் பயங்கர விளைவுகள். தமிழகத்தின் தமிழ்த் தேசியக் கதையாடல்களி லும் (தெலுங்கர்?) இதனைக் காணலாம். கட்டு ரையில் இப்பக்கம் குறித்துக் காட்டப்பட வில்லை.

மேலும் 1492-1992 ஐநூராண்டு நினைவுக ளும் நிகழ்வுகளும் ஒரு 'கலாச்சார' இயக் கம்போல் பாரிஸில் நிகழ்ந்தேறியது மனதிற்கு உவப்பளிப்பதாயில்லை. அதன் கொடூரத்தை யும் எதிர்ப்பையும் போர்க் குணத்தையும் கவன மாகத் தவிர்த்துக்கொண்டது. 1492 பற்றி பேர்த் தோல்ட் பிரெக்ட்(?)-இனுடைய தாகவிருக் கலாம். கலாமோகன் மொழிபெயர்ப்பில் புகலிட சஞ்சிகையில் முன்னர் காணக்கிடைத்தது.

நினைவிலிருந்து எழுதுகிறேன். ஒரு வருக்கு 1492-ஐத் தவிர வேறு எச்சொற்களும் தெரியவில்லை.

உங்களது தற்போதைய முகவரியென்ன?
1492
நீங்கள் தற்போது எங்கு வேலை செய்கிறீர்கள்?
1492
எவ்வளளவு காலமாக இந்த நாட்டில் வசிக்கிறீர்கள்?
1492


படிப்பகம்

www.padippakam.com

உங்களது பிறந்த இடம் என்ன?
1492
தற்போதைய வேலையிடத்திற்கு முன்னர் எங்கு வேலை பார்த்தீர்கள்?
1492
உங்கள் குடும்ப நிலை குழந்தைகள் நிலை?
1492
உங்கள் குடும்ப உறவினர்கள் நண்பர்கள் பிரசாவுரிமை பெற்றுள்ளனரா?
1492
சரி. உங்களுக்கும் பிரசாவுரிமை வழங்கப் படுகிறது.
மேலும் புணரியல் அல்லது புணர்வியல் தொடர்பாக!
'பூர்வக் குடிகள்' என்றெழுதும் வழக்க மில்லை.
பூர்வ குடிகளென்றெழுதித்தான் பழக்கம்.

| | |
|---|---|
| பூர்வ பிறப்பு | பூஞ்சிட்டுக் கன்னங்கள் |
| பூமி தானம்/பூ தானம் | பூமித் தாய் |
| புத்த தம்மம் | புத்தகத் திருட்டு |
| புத்திர பாக்கியம் | கிராமத்துச் சிறுவர்கள் |
| எஸ்.வி. ராஜதுரை | தம்பித்துரை/ |
| வெள்ளைத்துரை | புலியூர்க் கேசிகன் |
| கதா பாத்திரம் | நிலவுரிமைக் கருத்தரங்கு |
| நவீன கவிதை | இலக்கியக் கூட்டமைப்பு |
| முக்கிய செய்திகள் | சிறப்புச் செய்திகள் |

தொடர்ந்து கோடாங்கி கிடைத்து வருகிறது. மிகவும் நன்றி.

**- சுகன், பிரான்ஸ்.**

ஆகஸ்டு இதழில் பேரா. பிரபா. கல்விமணி அவர்களின் ஜூலை 14 உரையாடல் தெள்ளத் தெளிவாக வாசிக்க முடிந்தது. கல்வியின் போராளி என இன்னும் அவரை கூறலாம். கவிஞர் அன்பாதவன் அண்ணன் அவர்களின் அழகு உணர்வுப்பூர்வமான உண்மை மட்டும் அல்ல, நிஜத்தைப் பதிவு செய்த ஒரு அழகுப் பெட்டகம் என தோன்றுகிறது எனக்கு. அரவான் வாக்கை மீண்டும் படிக்க முடிந்தது. தோழி உமா தேவியின் கவிதை ஒருவிதம் பெண்களுக்கெல்லாம் ஒரு தடம். அகவி கவிதை ஒரு போராளியின் பகிரங்க குரல். தாமதமாக புத்தகம் கிடைத்தது. தாமதமாகவே எழுத முடிந்தது. மாதாந்திர பட்டியல் சிறப்பாக உள்ளது.

**- கா. வசந்த கன்னியப்பன்,** அம்மன்குளத்துமேடு.


**தன்னார்வக் குழு பணியாளர்களுக்கான பயிற்சி முகாம்**

நாள் : 19-10-2005
இடம் : ஸ்ரீ ராஜராஜேஸ்வரி திருமண மண்டபம், செட்டித்தெரு, திருவண்ணாமலை

**நிகழ்ச்சி ஏற்பாடு**
**பெருமாள் (சினம்)**

**தொடர்புக்கு**
**94430-39103**



**தலித் நிலவுரிமை கருத்தரங்கம்**

நாள் :
21.10.2005

இடம் : பானாவரம், வேலூர் மாவட்டம்.

**தொடர்பு**
**தமிழ்பாண்டியன்**
**(04177-249289)**


**Published, Printed and owned by Audrey Jannet Joseph, Published from 2/206, Pandian salai, Canalpuram, Chennai - 41.**
**Printed at Sri Lakshmi Printers, 20, Big Street, Anakaputhur- 600070, Editor : AUDREY JENNET JOSEPH**

படிப்பகம்

www.padippakam.com

# ஆண்களே சிந்தியுங்கள்!
# பாவம் ஓரிடம், பழி ஓரிடம்.



என் போன்ற தவறேதும்
செய்யாத பெண்களுக்கு
எச்.ஐ.வி. வருவது மிகவும்
வருந்ததக்க ஒன்று.
இவ்வாறு எச்.ஐ.வி.
வருவதற்கு காரணம்,
சமுதாயத்தில்
விழிப்புணர்வு
இல்லாமையே!

பெரும்பாலும் 80%
ஆண்கள் மூலமாகத்தான்
பெண்களுக்கு எச்.ஐ.வி.
பரவுகிறது.


**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**
**சென்னை 600 008.**

படிப்பகம்

www.padippakam.com


# TNPL COPIER
## FOR HASSLE-FREE COPYING

ISO 9001-2000 ISO 14001




**TNPL VALUEPACK - OFFERS TRUE VALUE FOR MONEY**

- High brightness and opacity
- Dimensional stability and stiffness
- Enhanced electrostatic properties
- Reel cut & packaged using world's best technology
- Indispensable for clear & fast copies
- Offers you absolute copying freedom

Now improved in a new pack




*India's largest paper mill providing the most viable solution for the future generation*

TNPL

**Tamil Nadu Newsprint and Papers Limited**
(A Govt. of Tamil Nadu Enterprise)
67, Mount Road, Guindy, Chennai- 600 032, India Off : 2230 1094 97, 2235 4415 16
Fax : 2235 4614, 2235 0834 Web: tnpl.co.in, E- mail : response@tnpl.co.in


படிப்பகம்